வெளியீடு 29-4-1992 Issued 29-4-1992

377

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

தமிழ்நாடு ஆவணக் ... 24 ஜூலை ...

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, செப்டம்பர் 23, 1991 - தொகுதி 9- எண் 2

**Monday the 23rd September, 1991 - Volume 9 - No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009**

விலை ரு. 3.00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

**23—09—1991**


பக்கங்கள்

இரங்கல் குறிப்புகள்—

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து 381—382

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 382—402

கவன ஈர்ப்பு—

(அ) வேலூரில் உள்ள அனைத்து நீதிமன்றக் கட்டிடங்களும் இடிந்து விடும் நிலையில் உள்ளது குறித்து. 403—407

(ஆ) இராதாபுரம் அணையில் தண்ணீர் திறந்து விடப்படாததால் கருங்குளம், பழவூர், ஆலவுடையாள்புரம், வடக்கன்குளம், இராதாபுரம் போன்ற பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து. 408—411

விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

19-9-91 அன்று கடலுக்கு மீன் பிடிக்க சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் திரும்பாதது குறித்து. 412

மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி—

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.
(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை—
(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்
424—427
491—511

*1. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 412—417
*2. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 417—429
*3. பேராசிரியர் க. பொன்னுசாமி 429—435
*4. திரு. நா.சா. பழனிசாமி 435—438
*5. திரு. க. அர்ச்சுனன் 438—445
*6. திரு. எம். பூராசாமி 445—447


ஆ.2 53-329—1

158377



பக்கங்கள்

*7. திருமதி இலதா பிரியகுமார் 447—450
*8. திரு. எஸ். ஆண்டித்தேவர் 450—454
*9. திரு. செ. ஆறுமுகம் 454—457
*10. திரு. கே.கே. சின்னப்பன் 457—460
11. திரு. எம்.ஜி. சேகர் 460—466
12. திரு. செ.கு. தமிழரசன் 466—470
13. திரு. எஸ். ஜெயக்குமார் 471—473
*14. டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை 474—477
15. திரு. ஜி. பழனிசாமி 477—481, 483—485
16. டாக்டர் தே. குமாரதாஸ் 485—495, 498—500
*17. திரு. வே. தம்புசாமி 503—509
*18. திரு. ச. இராமச்சந்திரன் 509—517
*19. திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் 517—535

(ஈ) கோரிக்கை எண் 27—கதர்-கிராமத் தொழில்கள்.
(உ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்
(ஊ) கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு
536—586, 587

*1. மாண்புமிகு திரு. முகமது ஆசிப் 536—538
*2. திரு. எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ் 538—543
*3. திரு. ஜெ. பாலகங்காதரன் 543—551
*4. திரு. எஸ்.ஆர். ஜெயராமன் 551—556
5. திரு. வ. மு. சுப்பிரமணியம் 556—560
*6. திரு. வி. ரவிச்சந்திரன் 560—563
*7. திரு. மெ. ஆண்டி அம்பலம் 563—568
*8. திரு. டி. சுதர்சனம் 569—576, 584—585

6. தீர்மானம்—
விதி 32-ஐத் தளர்த்தல் 535—536
7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 587—588
8. இடைப்புகள் 589—720

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 7, பிரஜோற்பத்தி — திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991 செப்டம்பர் 23, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். ''

குடிகளைப் பிறர் வருத்தாமல் காத்துத் தானும் வருத்தாமல் காப்பாற்றி அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல் அரசனுடைய தொழில் ஆகும் ; பழி அன்று.

### 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் குறிப்புகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான டாக்டர் கோ. பத்மநாபன் அவர்கள் 2-9-1991 ஆம் நாளன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. சுப்பராயலு அவர்கள் 13-9-1991 ஆம் நாளன்றும் மறைவுற்றதை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கோ. பத்மநாபன் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. சுப்பராயலு அவர்கள் 1952 ஆம் ஆண்டு அனந்தபூர் மாவட்டம், தாட்டத்திரி தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆந்திர மாநிலம் அமையும் வரை, 30-9-1953 வரை பேரவையின் உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 23

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் அமைதியாக இருந்து அஞ்சலி செலுத்தினர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள்.

வினா எண் 61—திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

61—

### இராதாபுரத்தில் குற்றவியல் நீதிமன்றம்.

*57 திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் இராதாபுரத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் (Judicial Magistrate Court) கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுவரை இராதாபுரத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் கொண்டு வர வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராதாபுரம் தொகுதியிலே இதுவரைக்கும் எந்தக் கோர்ட்டுமே இல்லை. நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதற்கு முயற்சி செய்து வந்தேன். நாங்குநேரித் தொகு



1991 செப்டம்பர் 23]

தியைப் பொறுத்த வரைக்கும் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு, சப்-டிவிஷனல் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் என்று மூன்று கோர்ட்டுகள் இருக்கின்றன. ஒரே தொகுதிக்கு இருக்கின்றது. அதனாலே என்னுடைய தொகுதிக்கு, தொகுதியின் தலைநகரான இராதாபுரத்திற்கு ஒரு சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட்டு கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றம் இராதாபுரத்திலே அமைய வேண்டுமானால் ஒன்று அங்கே இருக்கிற வழக்கறிஞர்கள் அது பற்றி ஒரு கோரிக்கையை உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது அரசுக்கோ அனுப்ப வேண்டும். ஆக, இதுவரை வழக்கறிஞர்களோ அல்லது பொதுமக்களோ எந்த விதக் கோரிக்கையையும் உயர்நீதிமன்றத்திற்கோ அல்லது தமிழக அரசுக்கோ எழுதவில்லை. ஆனால், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் போற்றுதற்குரிய ரமணி நல்லதம்பி அவர்கள் அந்தக் கோரிக்கையை இங்கே தெரிவித்திருக்கிற காரணத்தாலே இதையே பொதுமக்கள் கோரிக்கையாக ஏற்றுக் கொண்டு, அந்தப் பகுதியில் விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவர அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-35

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் வாக்குறுதிக்கு நன்றி. அதே சமயத்தில் நெல்லையில் இயங்கிக் கொண்டிருக்கிற உரிமையியல் நீதிமன்றம் அம்பாசமுத்திரத்திற்குச் செல்ல இருப்பதாகத் தெரிகிறது. அப்படிச் செல்கிறபோது என்னுடைய கிராமத்தில் உள்ள கடலோரப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கும், நாங்குநேரி போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கும் நெல்லையில் இருந்து போவதற்கு இன்னும் 60 அல்லது 70 கிலோ மீட்டர் தூரம் ஆகிறது. ஆகவே அது தடுத்து நிறுத்தப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராதாபுரத்தில் அமைவது பற்றிய பிரச்சினை இது. எனவே இன்னொரு இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் பதில் இருக்காது.

வினா எண் 62—திரு. வி. கே. சின்னசாமி, திரு. கு. தங்கமுத்து, திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

வீட்டுமனைப் பட்டா.

62—
*289 திரு. வி. கே. சின்னசாமி,
திரு. கு. தங்கமுத்து,
திருமதி கே. எம். கலைச்செல்வி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் பொது மக்கள் குடியிருப்பதற்கு ஏற்ற இடமாக இருந்தும் பல்லவாரி, குட்டை, ஓடை, வண்டிப்பாதை என்று வருவாய்த்துறையின் பதிவேட்டில் உள்ளதால் வீட்டுமனை பட்டா தரமுடியாத நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேற்படி இடங்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நீர்நிலைப் புறம்போக்குகளிலும், வண்டிப்பாதை போன்றவற்றிலும் ஆக்கிரமங்களை வரன்முறைப்படுத்துவதற்கும், பட்டா வழங்குவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே இருப்பவர்களுடைய நிலைமை கருதி, தேவையினுடைய தன்மையையும் ஆராய்ந்து அதை அவ்வப்போது தளர்த்திக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இதைப் பற்றி ஆராய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி ஒரே ஒரு கேள்வி தான். 3 பேர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும், எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் குறிப்பாக பொதுமக்கள், ஏழைகள், அரிசனங்கள் தான் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். எனவே இது நீண்ட நாளைய ஒரு பிரச்சினை. அந்தப் பகுதிகளிலே





சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் இப்படிப்பட்ட குடியிருப்புகளிலே இருக்கின்ற நிலைமைகளை நேரடியாக ஆய்வு செய்து அந்த இடங்கள் குடியிருப்பதற்கு ஏற்ற இடமாக இருந்தால் அது பல்லவாரியாக இருந்தாலும், ஓடையாக இருந்தாலும் அல்லது வண்டிப்பாதை என்ற இப்படிப்பட்ட அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கிற புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும் அப்படிப்பட்ட இடங்களிலிருந்து வருகின்றவர்களுக்கு இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவோடு பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசு ஆய்வு செய்யும்.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நீர்நிலைப் புறம்போக்குகளை உடனடியாக வரன்முறையோ அல்லது வகைப்பாடோ செய்து தகுதியுள்ளவற்றிற்கு உடனடியாக குடியிருப்புக்கான பட்டா வழங்க அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே இதைப்பற்றி அரசு ஆய்வு செய்யும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். ஆனால் இந்தச் சட்டப் பேரவையில் கூட பேசுகிறபோது பல உறுப்பினர்கள் களம் புறம்போக்கு தேவை என்று இங்கே பேசியிருக்கிறார்கள். பல பேர் மயானப் புறம்போக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இன்னும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். வறட்சிக் காலத்தில் இருக்கிற குட்டைகளை ஆழப்படுத்தவும் புதிதாக குட்டைகள் வெட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது எதற்கு என்றால் நிலத்தடி தண்ணீரை மேலே கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான். ஆக இவைகளை எல்லாம் செய்கிற போது அதில் இருக்கின்ற பொதுமக்களுடைய பொது நன்மை, அதிலே குடி ஏறி இருப்பவர்களுடைய தன்மை, சுற்றுப்புற சூழ்நிலை இவைகளை எல்லாம் அரசு கவனத்தில் வைத்துக் கொண்டு அங்கே குடியிருப்பவர்களைப் பார்க்கவேண்டி இருக்கிறது. எனவே பொதுவாக பொது மக்களுடைய நன்மையையும் பார்க்க வேண்டி இருக்கிறது. நிலத்தடி நீரினுடைய நிலைமைகளையும் பாதுகாக்க வேண்டி இருக்கிறது. எனவே இவைகளையும், பொது மக்களுடைய சமூதாய நலனையும் கருதி ஆய்வு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 23

திருமதி சே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நடமாடும் காவல் தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில்—தமிழ் நாடு முழுவதும் எல்லா தொகுதிகளிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது.— நம்முடைய மக்கள் மிகவும் எதிர்பார்க்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மட்டும் பல கிராமங்களிலும் சரி, நகரப் பகுதிகளிலும் சரி இப்படிப்பட்ட இடங்களில் காலம் காலமாக, பரபபரை, பரம்பரையாக அவர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுச்கு இந்தப் பட்டாவை வழங்கு வதன் மூலம் அவர்கள் அரசு கடன் பெறவும், ஹட் சர்வீஸ் பெறவும் மிகவும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே விரைந்து நம்முடைய சட்டத்தில் விதிவிலக்கு அளித்து இந்த வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிலங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. தேவைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. அதையும் கணக்கில் வைத்துக்கொள்ள வேண் டும். அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி ஆங்காங்கே அரசு நிலங்கள் இருக்கிறபோது அவர் களுக்கு பட்டா இல்லாததால் அவர்களுக்கு அதை வைத்து கடன் வாங்குவதற்கும், அதை வைத்து கடன் வாங்கி வீடு கட்டுவதற் கும் முடியாத நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள்.

முற்பகல் 9-40

அதையும் மனதிலே வைத்துக்கொண்டு எந்தெந்த இடங் களில் இருக்கின்ற நிலங்கள் ஆக்கிரமிப்பாக இருந்தாலும், அரசுப் புறம்போக்காக இருந்தாலும் சரி, வாய்க்கால் புறம்போக்காக இருந்தாலும் சரி, அது பொதுமக்களுடைய நலனைப் பாதிக் காது இருந்தால் அதை எல்லாம் விரைவிலே பட்டா போடு வதற்கு, பட்டா போட்டுக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரி, கட்டை வண்டிப்பாதை என்றெல்லாம் இருக்கின்றவைகளை பட்டா செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய் கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்



1991 செப்டம்பர் 23]

றார்கள். ஆனால் அதற்கிடையிலே கண்மாய்ப் புறம்போக்கு எல்லாம் இருக்கிறது. இவைகள் அனைத்தையும் நத்தம் புறம் போக்காக மாற்றித்தான் நாங்கள் பட்டா செய்து கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இன்னும் ஆண்டாண்டுக் காலமாக, பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்புகள் இருந்தாலும் கூட, நத்தம் புறம்போக்காக ஆக்கித்தான் பட்டா வழங்க முடியும் என்று சொல்கின்றார்கள். இல்லாவிட்டால் முடியாது என்று சொல்கின்றார்கள். அடங்கல், சிட்டா இவை கள் எல்லாம் இன்னும் பழைய கணக்கிலே கண்மாய் புறம் போக்கு என்று தான் இருக்கின்றன. இவைகளை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாய்ப் புறம்போக்காக இருந்தாலும் சரி, ஏரிப் புறம்போக்காக இருந்தாலும் சரி, நான் முதலிலே குறிப்பிட்டபடி அதனுடைய சூழ்நிலையைப் பொறுத்து தற்போது எப்படி சூழ்நிலை, கண்மாய் புறம்போக்காக இருக் கிறதா அல்லது கண்மாய் ஆகவே இருக்கிறதா? இப்போதைய சூழ்நிலையைப் பார்த்து அதற்கு ஏற்றபடி நடவடிக்கை எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்டையே இல்லாத, குட்டைப் புறம்போக்கு அல் லது தண்ணீரையே பார்க்காத ஓடைகள், அது மாதிரி 40, ஆண்டுகளாகக் கூட தண்ணீரே இல்லாத இடங்களை உடனடியாக மாற்றி வீட்டு மனைப் பட்டா வழங்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்ன பதிலி லேயே இதற்குப் பதில் இருக்கிறது. அது குட்டைப் புறம் போக்காக இருந்தாலும், வாய்க்கால் புறம்போக்காக இருந் தாலும், அது இப்போது இருக்கின்ற தன்மையைப் பொறுத்து இருக்கிறது என்கின்ற போது அது இப்போது இருக்கிற தன்மை குட்டையாக இல்லாவிட்டால் அது தன்மையில்லை என்று அர்த் தம். வாய்க்கால் புறம்போக்காக இருந்தால் தண்ணீர் இல்லை என்றால் வாய்க்கால் புறம்போக்கு இல்லை என்று அர்த்தம். இப்போதைய தன்மை, என்னுடைய பதிலிலேயே ''இப்போது உள்ள தன்மை'' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கால்வாய்ப் புறம்போக்கு, கண்மாய் புறம்போக்கு போன்றவைகள் இப்போது இருக்கின்ற தன்மைக்கு ஏற்ப மாற்றிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மதுரையிலே ஏறத்தாழ 7 கண்மாய்கள் வீட்டடிகளாக மாற்றப்பட்டன. குறிப்பாக பெரிய கண்மாய், விமான நிலையத்திற்குப் போகும்போது வில்லாபுரம் கண்மாய் ஹவுசிங் போர்ட்டுக்கு கொடுக்கப்பட்டு விட்டது. வீட்டு மனைப் பிரித்துக் கொடுக்கிறார்கள். அதற்கு வலக்காலிலே 150 வீடுகள் இருக்கின்றன. கால்வாய்ப் புறம்போக்கு கொடுக்க முடியாது என்று தாசில்தார்கள் இந்தச் சட்டத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை மறுபடியும் ரீகிளாசிபை செய்தாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்மைபற்றி சொன்னார்கள். அவர்கள் வாய்க்கால் புறம்போக்கு என்று சொன்னால் நாங்கள் கொடுக்கமுடியாது என்று மாவட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். அதை ரிகிளாசிபை பண்ணி, கண்மாய் என்று இல்லாதபோது அதற்கு வரத்துக் கால்வாய் என்று எங்கே இருக்கிறது? அரசு எடுத்து கொண்டோம். ஆகவே அதை மறுபரிசீலனை செய்து அங்கே இருக்கிற இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம் பூராவும் நான் நேரடியாகப் பார்த்த இடம் தான். எனக்கு ஒன்றும் புதிது அல்ல அது. அதையெல்லாம் எப்படியெப்படி செய்யவேண்டும் என்பதை நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பேசி தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓடைப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, வண்டிப் பாதையிலே இவற்றிலே பட்டா செய்து கொடுக்க முடியாது என்ற சூழ்நிலையில் ஒரு சிலர் அந்தந்த கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற கிராம அதிகாரிகளை வைத்து பி—மெமோ புக் செய்து தங்களுடைய அனுபவத்தில் இருப்பதாக, அதிலே சுற்றிலும் வேலி போட்டு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு பி—மெமோ புக் செய்து அதற்கு ஒரு தொகையை வசூலித்துக் கொண்டு, அவர்களை அனுபவஸ்தர்களாக ஆக்கிவிட்டுவிடுகிறார்கள். இதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவையின் முன் உள்ள கேள்வியே அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு தளர்த்தப்பட்டு பட்டா கொடுக்கப்படுமா என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்பது அவைகள் அகற்றப்படுமா என்று அகற்றப்படுமா என்ற கேள்விக்கு தனிக் கேள்விப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்டைப் புறம்போக்கு போன்றவற்றுக்கு பட்டா கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். நகர்ப் பகுதிகளிலே 20, 30 ஆண்டுக் காலமாக புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு அந்தப் பகுதிகளிலேயே பட்டா போட்டு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப் புறங்களில் இருக்கிற அரசு புறம்போக்குகள் எல்லாம் மிக விலை உயர்ந்த நிலங்களாகும் அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கின்றவர்களை, அவர்களுடைய தன்மையை அதாவது ஏழ்மையை மனதில் வைத்துக் கொண்டு பட்டா வழங்குவது பற்றி அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்டை, ஓடை, மந்தை போன்ற புறம்போக்குகளை எல்லாம் கடந்த ஆட்சிக் காலத்தில் பட்டா செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டதற்கு, இவைகளை ''கிளாசிபிக்கேசன்'' செய்து மாற்ற வேண்டும். நீண்ட நெடுங்காலமாக இவைகள் எல்லாம் ரெவின்யூ ரெக்கார்டில் குட்டை, ஓடை என்று இருக்கின்றன. இவைகளை எல்லாம் மாற்ற உடனடியாக ஆவன செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் 2 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லாவற்றையும் சீக்கிரமாகவும், விவரமாகவும் செய்ய வேண்டுமென்று உத்தேசித்துக் கொண்டிருப்பதன் காரணமாக பல்வேறு துறை அதிகாரிகளை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நகரப் பேருந்து இல்லாத நகரங்களுக்கு மினி டவுன் பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறையுள்ளம் கொண்ட தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் கேட்கின்ற பல்வேறு கோரிக்கைகள் ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு சிறப்பான முறையில் நிறைவேற்றித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 65. திரு. செ. ரகுபதி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

65—

குண்டாற்றின் குறுக்கே பாலம்.

*338 திரு. செ. ரகுபதி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா கூடலூர் கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே கூடலூர்-பளுவினிப் பட்டி இடையே பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டாற்றில் பாலம் அமைப்பதன் மூலமாக 6 கிராமங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலனடைகிறார்கள். காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை இருபதாம் நூற்றாண்டினுடைய இணையற்ற தலைவி, நம்முடைய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே அமைப்பதற்கு இது போன்ற இணைப்புப் பாலங்





கள் மிகவும் அவசியமான ஒன்றாகும். பேருந்துகளைப் பார்க்காத கிராமங்களுக்குப் பேருந்துகள் கிடைக்க இப்படிப்பட்ட பாலங்கள் அமைத்துத் தர வேண்டியது அவசியமாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பாலத்தை அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பாலம் பெருமநாடு, குன்னையூர் சாலையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய கூடலூர் ஊராட்சி மன்றச் சாலையினுடைய முடிவிலே அமைந்திருக்கிற இடமாகும். அந்த இடத்திலே ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலே 60 மீட்டர் நீளத்திற்கு அந்தப் பாலம் கட்டப்பட வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ 7,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு அந்தப் பாலம் கட்டினால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்னது, இந்த ஆண்டு பார்ட்-2 ஸ்கீமிலே அல்லது மற்ற நிலைகளிலே அந்த மதிப்பீடு சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தாலே சொன்னேன். இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சாலைகளும், பாலங்களும் கட்டப்பட வேண்டுமென்று நிலை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பாலத்தை அடுத்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்வதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66. திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

66

நாமக்கல் புறவழிச்சாலை.

*1735 திரு. எஸ். அன்பழகன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாமக்கல் பகுதியில் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த புறவழிச்சாலை (By pass Road) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் பகுதியில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பைபாஸ் சாலை அமைக்க மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எவ்வளவு செலவில் தயாரிக்கப்படும் என்பதையும், எவ்வளவு தூரம் போட இருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் என்பது 1991—92 ஆம் ஆண்டு மைய அரசுடைய பிரிலிமினரி அப்ருவலுக்கு அனுப்பப்பட்டு கொள்கையளவில் மைய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக நில ஆர்ஜிதப் பணிகளுக்காக இன்றைக்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பீடு போட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறோம். அந்த நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட ஒப்புதலை மைய அரசு கொடுத்ததற்குப் பிறகுதான் இந்தத் திட்டத்தினுடைய உண்மையான மதிப்பீடு தயார் செய்யப்படும். ஆகவே இப்போது இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக ரூ. 50 லட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மைய அரசு ஒப்புதல் கொடுத்தவுடனேயே அந்த சாலைக்கான மதிப்பீடு தயார் செய்யப்படும். அதற்கான மதிப்பீடு என்ன என்பதை பின்னர் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன் : லாரி தொழில் அதிகமாக புழக்கமாக இருக்கிற நாமக்கல் பகுதியில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால் இந்தத் திட்டம் மிகவும் அவசியமாகிறது. எனவே மத்திய அரசுடன் பேசி இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த அரசு வந்தவுடனேயே இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இன்றைக்கு உடனடியாக நில ஆர்ஜிதம் சம்பந்தமாக 50 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்





பட்டு ஒப்புதலுக்காக அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே புரட்சித் தலைவி அரசு எவ்வளவு தூரம் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே உடனடியாக முயற்சிகள் இதில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பரந்தாமன்

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற வழிச் சாலைகள் அமைக்கும் போது, குறிப்பிட்ட காலத்திற்கு அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்ற காலக் கெடு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக புறவழிச்சாலை என்று மட்டும் அல்ல, எந்த வேலையை அரசு எடுத்துக் கொண்டாலும் அதற்கு என்று ஒரு கால நிர்ணயத்தை வைத்துக் கொண்டுதான் அந்த வேலையைச் செய்கிறோம். ஆகவே எந்த வேலைக்கும் கால நிர்ணயம் என்பது ஏற்கனவே இருக்கிற நடைமுறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

67

இரால் மீன் வளர்த்தல்.

*1375 டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆழியார் அணைக்கட்டு அருகில் மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இரால் மீன் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

ஆழியார் நீர்த்தேக்கம் மற்றும் அருகில் உள்ள நிலத்து அடிநீர் அமிலத்தன்மை சற்றுக் கூடுதலாக உள்ளதால், அங்கு நந்நீர் இரால் வளர்ப்பு அமைப்பது இலாபகரமாக இராது என தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினரால் கருதப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் ஆழியாறு மீன் வளர்ப்பு மையத்தில் மீன் வளர்ப்பதில் சில குறைபாடுகள் இருப்பதையும், மீன் விற்பனையில் சில முறைகேடுகள் இருப்பதையும் அரசு அறியுமா? அவற்றை அரசு பரிசீலித்து நல்ல முறையில் இயங்க ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் மலையிலிருந்து வருகின்ற அருவிகளின் ஓரத்தில் ஸ்டெப் பை ஸ்டெப்-ஆக மீன் தொட்டிகளைக் கட்டி அதன் மூலம் மீன் குஞ்சு முதல் பெரிய மீன்கள் வரை பலவகையான மீன்களை வளர்த்து, மீன் காட்சியகம் அமைத்தால் மீன்களை விற்பனை செய்யலாம்; அதோடு மட்டுமல்லாமல் மீன் காட்சியகத்தைப் பார்வையிட அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். எனவே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்படுத்தி அனைத்து உதவிகளையும் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இதற்கான விடை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆழியாறு அணைக் கட்டு பற்றியது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இறால் மீன் பற்றியதுதான். இராமநாதபுரம் மாவட்டத்தில் இறால் மீன் வளர்ப்பு என்பது மிக முக்கியமான ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. மாண்பு



மிகு அமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதியில் இறால் மீன் வளர்ப்பதற்கான என்னென்ன திட்டங்கள் வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான தனிக் கேள்வி போட்டால் அரசு பதில் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் காவிரி. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. துணை வினா அந்த மாதிரி வராது.

குறுகிய கால வினா எண். 1. திரு. எஸ். டேனியல்ராஜ். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

### சிதம்பரனார் மாவட்டத்திற்கு நீதிமன்றங்கள்

கு.கா. 1 —

* 3561 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதியதாக அமைக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடியில் மாவட்ட சிவில், கிரிமினல் நீதிமன்றங்கள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலியில் தற்போது செயல்பட்டு வருகின்ற கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தை தூத்துக்குடிக்கு மாற்றி சிதம்பரனார் மாவட்டத்திற்காக மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1991-ஆம் ஆண்டு சனவரித் திங்கள், 18-ம் நாள் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை தூத்துக்குடியில் அமைக்கும் நேர்வு உயர்நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்திலுள்ளது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட பின்பு 19—9—1986

எல்லாம் அழைத்துப் பேசியது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி பேசி நடவடிக்கைகளை விரைவு படுத்த வேண்டுமென்று அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதும் தெரியும். ஆகவே, இரண்டாண்டுகளுக்கு முன்னாலே போவதைவிட இன்றைக்கு நீங்கள் வந்தால், அவைகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே, இன்றுள்ள நிலைமைகளைப் பற்றி யோசித்து கேள்வி கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. டி. சுதர்சனம்.

<u>திரு. டி. சுதர்சனம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும், அதன் புறநகர் பகுதிகளிலும் பட்டா கொடுக்கக் கூடாது என்று விதி இருக்கிறது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் அங்கே வாழ்கின்ற மக்களுக்கு குடி தண்ணீர் வசதியும், சாலை வசதியும் செய்து கொடுத்திருக்கிறார்கள். இடையிலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அப்படி மின்சாரம் வழங்குவதற்கு ' தடையில்லா சான்றிதழ் ' கொடுக்கக் கூடாது என்று ஜி. ஓ. போட்டது. அது நீக்கப்படுமா ? அந்த ஏழைகளுக்கு பட்டாவுக்கு பதில் ' தடையில்லா சான்றிதழ் ' வழங்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வ. சத்தியமூர்த்தி.

<u>திரு. வ. சத்தியமூர்த்தி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குடியிருக்கின்ற இடங்களுக்கு " நிலவகை காரணமாக " பட்டா கிடைக்காத பட்சத்தில் அதை கொடுக்க அரசு முன்வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை வரவேற்கின்ற அதேநேரத்தில் இப்படி ஒவ்வொரு குக்கிராமத்தில் இருந்தும் மக்கள் அரசை அணுக முடியாத காரணத்தால் உடனடியாக இதற்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை மூலம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் அல்லது மாவட்ட வருவாய்அலுவலர் மூலம் பல ஆண்டுகளாக குடியிருக்கின்ற " நில வகை காரணமாக " நிலத்தை வகைப்படுத்தி மாற்ற வேண்டியதன் காரணமாக நிலுவையிலுள்ள கோப்புகளை எல்லாம் கேட்டு, பெற்று இதற்கு ஒரு உத்தரவு வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் அவையில் தெரிவித்தபடி புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு இவைகளை எல்லாம் விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எல்லா துறையினரையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதே பதிலை தான் மீண்டும் சொல்வேன். இவைகளை எல்லாம் விரைவுபடுத்த வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அதிகாரி இவர்களுக்கு எல்லாம் அறிவுரை செய்யப்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.

<u>திருமதி டி. சக்குபாய் தேவராஜ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கோயில் சொத்துக்கள் அதிகமாக இருப்பதால், அதற்கு ரோடு வசதியும், மின்சார வசதியும்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது சில புறம்போக்குகளை பட்டா போட்டுக் கொடுப்பது பற்றியது. கோயில்கள் எல்லாம் இதிலே வராது.

வினா எண் 63. <u>டாக்டர்(திருமதி) மு. சீனியம்மாள்:</u> மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்....

63—

<u>அவிநாசியில் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.</u>

*1241 <u>டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்:</u>
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசியில் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவிநாசியில் ஏற்கெனவே ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1954 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, விவசாயிகளின் நலனுக்காக நன்கு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை கொடுத்து இயங்கிக் கொண்டிருக்கின்ற கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி தாலுகா, பழங்கரை கிராமத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கம், இன்னும் தனியார் நிலத்தில் இருப்பதால், அதை அரசுக்குச் சொந்தம் ஆக்கி, விவசாய பெருங்குடி மக்களுக்கு பயன்படுகின்ற வகையில் உறுதிபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தச் சங்கத்தைப் பற்றிய தகவல்கள் என்னிடம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய விவசாயக் கடன்கள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகள் போன்றவற்றை குறித்த நேரத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்க உரிய நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவினாசி கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் அது பணியாற்றிக் கொண்டிருக்கிறது. வேளாண் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்று விவசாயிகளுக்கு உதவி செய்து வருகிறது. இடுபொருள்கள் விற்பனையிலும் நல்லபடி வியாபாரம் நடந்து கொண்டு வருகிறது. குடிமைப் பொருள் மற்றும் இதர பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சரக்கு ஈட்டுக் கடனும் நல்ல அளவுக்கு வழங்கியிருக்கிறது. இலாபமும் ஈட்டி இருக்கிறது. மொத்தத்தில் இந்த அவினாசி கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



64—

மலைப்பகுதிகளுக்கு சிறிய பேருந்துகள்.

*1073 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதியில் மலைப்பகுதிகளுக்கு சிறிய பேருந்துகள் (Mini Buses) விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 10 சதவீதம் டீசல் தட்டுப்பாடு காரணமாக இப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த பல வண்டிகள் நின்று போயிருக்கிற இந்த நிலைமையில் இப்படிப்பட்ட மினி பஸ்கள் அவசியம். மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் இவை தேவைப்படுகிறது. ஆகவே நஷ்டம் ஏற்படுத்தாத ஆல்வின் நிசான், ரோட்மாஸ்டர் போன்ற கம்பெனிகளின் மினி பஸ்களை விட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தனியார்கள் யாராவது முன்வந்தால் இந்த மலைப் பகுதிகளில் இது போன்ற மினிபஸ்களை இயக்க அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நகரப் பேருந்து இல்லாத நகரங்களுக்கு மினி டவுன் பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறையுள்ளம் கொண்ட தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் கேட்கின்ற பல்வேறு கோரிக்கைகள் ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு சிறப்பான முறையில் நிறைவேற்றித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 65. திரு. செ. ரகுபதி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

65—

குண்டாற்றின் குறுக்கே பாலம்.

*338 திரு. செ. ரகுபதி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா கூடலூர் கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே கூடலூர்-பளுவினிப் பட்டி இடையே பாலம் அமைக்குப் திட்டப் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டாற்றில் பாலம் அமைப்பதன் மூலமாக 6 கிராமங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலனடைகிறார்கள். காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை இருபதாம் நூற்றாண்டினுடைய இணையற்ற தலைவி, நம்முடைய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே அமைப்பதற்கு இது போன்ற இணைப்புப் பாலம்



ஆனால், என்னுடைய தொகுதியிலே தண்ணீர் தலை வைக்கும்பொழுது அது தவறுதலாக என்னென்னமோ நடந்து போய்விட்டது. அது குறித்துதான் நான் அமைச்சரிடத்திலே அடிக்கடி சென்று பேசினேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்பு பற்றி நீங்கள் அமைச்சரிடத்திலே பேசவேண்டும். இப்போது கவன ஈர்ப்பில் கேள்வி.

திருமதி ரமணி நல்லதம்பி : அதில் ஏதோ குழப்பம் ஏற்பட்டதால்தான் நான் சொல்ல வருகிறேன். அந்த மூன்று குளங்களுக்கு தண்ணீர் விட்டால்தான் அங்குள்ள குடிநீர் பிரச்சினை தீரும் என்று அவர்கள் கூட 25 ஆம் தேதி போராட்டம் நடத்தவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புத்தந்தருவை பகுதியிலே, பேச்சிப்பாறை தண்ணீரை இராதாபுரம் தாலுக்காவிற்கு தந்தது உண்மை. அதற்கு அமைச்சருக்கு நன்றி கூறி இதற்கும் உடனே ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தந்தருவை கால்வாய் பகுதி வேறு என்பதும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற இந்தப் பகுதி வேறு என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பகுதியிலே நாங்கள் 12-6-1991 அன்றிலிருந்து தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறோம். சிலயிடங்களில் கடைமடை பகுதியாக இருக்கின்ற நேரத்திலே தண்ணீர் வந்து சேர்வதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகின்ற நேரத்திலே என்னுடைய கவனத்திற்கு, பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு இடங்களிலே இந்தமாதிரி பிரச்சினையைக் கொண்டு வருகிறார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே உடனடியாக இந்த அரசு அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அந்த கடைமடைப் பகுதிகளுக்கும் தண்ணீர் விடவேண்டுமென்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். ஏற்கெனவே இந்தப் பகுதிக்கு தண்ணீர் விட்டிருப்பதாக அவர்கள் கூறியிருக்கின்ற அந்த 4 கிராமங்களில் இருக்கின்ற பகுதிகளுக்கும் தண்ணீர் விட்டிருப்பதாக அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீர் விடவில்லை என்று சொன்னால், அதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏற்கெனவே அந்தப் பகுதிக்கு தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தப் பகுதிக்கு தண்ணீர் தேவைப்படுகின்றது என்று சொல்லுகிறபோது உடனடியாக அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தினாலே மீண்டும் அந்தப் பகுதிக்கு விடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று மாவட்டத்திலே ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று, அதற்கு அதிகார வரம்பெல்லாம் வரையறுக்கப்பட்டது. பின்பு அது காலதாமதம் ஆன காரணத்தால், தூத்துக்குடியில் இருக்கிற வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம், போராட்டம் ஆகியவற்றில் ஈடுபட்டதன் விளைவாக 18—1—1991-ஆம் தேதியன்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு பணியாளர்கள் நியமனம், சம்பளம் எல்லாம் வரையறுக்கப்பட்டு, பட்ஜெட்டை எதிர்பார்க்காமல் வைப்புத் தொகையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அப்பொழுது, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தினுடைய,.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. டேனியல்ராஜ், கேள்வி குறுகியகால வினா. 'டைரக்ட்'-ஆகக் கேள்விக்கு வரலாம்.

<u>திரு. எஸ். டேனியல்ராஜ் :</u> நெல்லை - கட்டபொம்மன் மாவட்டத்தினுடைய மாவட்ட நீதிபதி திரு. ஜெயராமன் அவர்கள் தற்போது இயங்கிக்கொண்டு இருக்கிற நீதிமன்ற கட்டிட வளாகத்திலேயே இந்த நீதிமன்ற கட்டிடத்தை ஆரம்பிக்கலாம் என்று அரசுக்கு ஒரு பரிந்துரை அனுப்பினார்கள். ஆனால் இந்த ஆணையிலே ஏதோ பழைய கட்டிடம்.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. டேனியல்ராஜ், நீங்கள் கேள்விக்கு வாருங்கள். நீங்கள் 'கரெக்ட்'-ஆக என்ன துணைக் கேள்வி என்பதைக் கேளுங்கள். அமைச்சர் ஒரு பதில் வழங்கி இருக்கிறார்கள். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

<u>திரு. எஸ். டேனியல்ராஜ் :</u> பழைய கட்டிடத்திலேயே இந்த நீதிமன்றத்தை ஆரம்பிக்கலாம் என்று அவர்கள் அறிவுரை வழங்கி, அந்த பழைய கட்டிடம் ஏற்கெனவே பாழடைந்த கட்டிடம் என்றும், அது லாயக்கற்றது என்றும், தடை செய்யப்பட்ட காரணத்தினால் புதிய நீதிமன்றக் கட்டிடத்தினுடைய வளாகத்திலேயே இதை அமைக்க வேண்டுமென்று நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்தார்கள். அதை ஏற்று அரசு இப்போது மாவட்ட நீதிமன்றத்தை உடனே அமைப்பதற்கு ஒரு நாளை அறிவிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய



கட்டளையின்படி தூத்துக்குடியில் அதுவும் எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள்.

முற்பகல் 10-05

வ.உ.சி. அவர்கள் பெயரால் ஒரு மாவட்டம் அமைவது மட்டுமல்ல. நீதிமன்றமும் அங்கே அமைய வேண்டும். ஒன்று ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட், இரண்டாவது ஜுடிஷியல் டிஸ்ட்ரிக்ட். மாவட்டத்தினுடைய தலைநகரம் அங்கே இருக்க வேண்டும். அந்த மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் குறிப்பாக தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றங்கள், செஷன்ஸ் கோர்ட் இருக்க வேண்டுமென்று அன்றைக்கே விரும்பினார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் கட்டளைக்கிணங்க கடந்த 17—9—1991 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களிடத்தில் தொடர்புகொணடு, அங்கே இருக்கிற நிர்வாக அதிகாரி—ரெஜிஸ்ட்ராரை அழைத்து, இங்கேயிருக்கிற ஹோம் செகரட்டரி, பைனான்ஸ் செகரட்டரி ஆகிய இந்த நீதிமன்றம் அமைப்பதற்குரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அழைத்து என்னுடைய அறையில் 17—9—1991-ஆம் நாள், ஒரு ஏழு நாட்களுக்கு முன்பு கூடி கலந்துபேசி இரண்டு மணி நேரம் பேசி, நீதிமன்றம் என்ன சொல்கிறது, அரசு என்ன சொல்கிறது, எப்படி விரைவில் தூத்துக்குடியில் நீதிமன்றம் வரவேண்டுமென்பதற்கு தீர்க்கமான முடிவை எடுத்திருக்கிறோம்.

இரண்டைக் கேட்டார்கள். ஒன்று கட்டிடம், இரண்டாவது ஸ்டாப்-பணியாளர்கள். இந்த இரண்டில் ஒரு சுமூகமான முடிவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய கட்டளையின்படி, நிதிச் செயலாளர், உள்துறை செயலாளர், சட்ட அமைச்சர் ஆகிய நாங்கள் மூன்று பேரும் நீதிமன்றத்திற்கு சொல்லி இன்றைக்கு அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாக ஏறத்தாழ நான்கு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் தொடரும் செலவு—ஆண்டு தோறும் நான்கு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் ரூபாய் ஆகிறது. அதையும் ஏற்றுக்கொண்டு, நிதிச்செயலாளர் ஏற்றுக்கொண்டு, உள்துறை செயலாளர் ஏற்றுக்கொண்டு, உயர்நீதிமன்றத்தினுடைய சார்பாக ரெஜிஸ்ட்ரார் ஏற்றுக்கொண்டு நல்ல முடிவு ஏற்பட்டுள்ளது. ஆகவே, கட்டிடப் பிரச்சினையும் தீர்ந்தது. ஸ்டாப் பிரச்சினையும் தீர்ந்தது. விரைவில் வ.உ.சி. மாவட்டத்தில், தூத்துக்குடியில் இந்த நீதிமன்றங்கள் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தூத்துக்குடி கோர்ட்களில் ஒன்பது ஆண்டுகளாக வழக்கறிஞராக இருக்கிறேன். வழக்கறிஞர்களும், பொதுமக்களும் செஷன்ஸ் கோர்ட்டுக்கு திருநெல்வேலிக்கு அலைவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஏற்கனவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இந்த கோர்ட்டுக்கான புதிய கட்டிடம் அனைத்தையும் கட்டுவதற்கு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் அரசு பப்ளிக் பிராசிகியூட்டரைக் கூட நியமனம் செய்து, அப்படியிருந்தும், இன்னும் சில நீதிபதிகளும், ஸ்டாப்பும் நியமனம் செய்தால் மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடியில் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இந்த ஆண்டாவது சுப்ரீம் கோர்ட்டில் பெர்மிஷன் பெற்று, தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அரசு 17-ஆம் தேதி ஸ்டாப் பிரச்சினையை முடித்து விட்டது. பில்டிங் பிரச்சினையை முடித்து விட்டது. கட்டிடப் பிரச்சினையை முடித்துவிட்டது. ஆகவே, அரசு ஆணையிட இருக்கிறது. ஒன்றிரண்டு நாட்களில் அரசு ஆணையிடும். ஆணையிட்ட பிறகு அது தூத்துக்குடியில் இயங்கும். இதற்கு சுப்ரீம் கோர்ட்டிற்கோ மற்றக் கோர்ட்டிற்கோ செல்லத் தேவையில்லை. இதில் அரசே மாண்புமிகு புரட்சித்தலைவியே முடிவெடுக்கலாம். எடுத்து விட்டார். சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடியில் நீதி மன்றங்கள் விரைவில், வெகுவிரைவில் அமைய அரசு ஆணையிட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி





றார்கள். ஆனால் அதற்கிடையிலே கண்மாய்ப் புறம்போக்கு எல்லாம் இருக்கிறது. இவைகள் அனைத்தையும் நத்தம் புறம்போக்காக மாற்றித்தான் நாங்கள் பட்டா செய்து கொடுக்க முடியும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இன்னும் ஆண்டாண்டுக் காலமாக, பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்புகள் இருந்தாலும் கூட, நத்தம் புறம்போக்காக ஆக்கித்தான் பட்டா வழங்க முடியும் என்று சொல்கின்றார்கள். இல்லாவிட்டால் முடியாது என்று சொல்கின்றார்கள். அடங்கல், சிட்டா இவைகள் எல்லாம் இன்னும் பழைய கணக்கிலே கண்மாய் புறம்போக்கு என்று தான் இருக்கின்றன. இவைகளை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்மாய்ப் புறம்போக்காக இருந்தாலும் சரி, ஏரிப் புறம்போக்காக இருந்தாலும் சரி, நான் முதலிலே குறிப்பிட்டபடி அதனுடைய சூழ்நிலையைப் பொறுத்து தற்போது எப்படி சூழ்நிலை, கண்மாய் புறம்போக்காக இருக்கிறதா அல்லது கண்மாய் ஆகவே இருக்கிறதா? இப்போதைய சூழ்நிலையைப் பார்த்து அதற்கு ஏற்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குட்டையே இல்லாத, குட்டைப் புறம்போக்கு அல்லது தண்ணீரையே பார்க்காத ஓடைகள், அது மாதிரி 40, ஆண்டுகளாகக் கூட தண்ணீரே இல்லாத இடங்களை உடனடியாக மாற்றி வீட்டு மனைப் பட்டா வழங்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்ன பதிலிலேயே இதற்குப் பதில் இருக்கிறது. அது குட்டைப் புறம்போக்காக இருந்தாலும், வாய்க்கால் புறம்போக்காக இருந்தாலும், அது இப்போது இருக்கின்ற தன்மையைப் பொறுத்து இருக்கிறது என்கின்ற போது அது இப்போது இருக்கிற தன்மை குட்டையாக இல்லாவிட்டால் அது தன்மையில்லை என்று அர்த்தம். வாய்க்கால் புறம்போக்காக இருந்தால் தண்ணீர் இல்லை என்றால் வாய்க்கால் புறம்போக்கு இல்லை என்று அர்த்தம். இப்போதைய தன்மை, என்னுடைய பதிலிலேயே ''இப்போது உள்ள தன்மை'' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

### 19-9-1991 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் திரும்பாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமேஸ்வரம் மீனவர்கள் காணாமல் போயிருப்பது பற்றிய பிரச்சினை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையின் விதி 110-ன் கீழ் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதியை நான் கொடுத்திருக்கிறேன்.

முற்பகல் 10-20

இது பற்றி என்னுடைய கவனத்திற்கு திரு. கே. ஆர். இராமசாமி, திரு. ஆண்டித் தேவர் அவர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-9-1991 மாலை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்கள் படகுகளில் 5 படகுகள் திரும்பவில்லை என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது. இந்த 5 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 24 மீனவர்கள் இன்னும் திரும்பவில்லை. அவர்களை இலங்கை கடற்படையோ அல்லது இந்திய கடற்படையோ பிடித்து வைத்திருக்கலாம் என்று ராமேஸ்வரம் பகுதி மீனவர் சங்கத்தினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். காணாமல் போன மீனவர்களையும், படகுகளையும் உடனே தேடிக் கண்டு பிடிக்க இந்திய கடற்படையின் ஹெலிகாப்டர் உதவி நாடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரை இது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத்துறை.

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-92 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானிய கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வைத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாநில ஆயத்தீர்வை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 6,95,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 649 திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அயல் நாட்டு மதுபானக் கடைகளில் திருட்டுத்தனமாக உடைத்து விற்பதைத் தவிர்த்து, பகிரங்கமாக் பார் நடத்த அனுமதிப்பது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :—

''ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானிய கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,95,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 645, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''ஆயத்தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,95,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 15 காவல் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காவல்துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 241,52,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 693. திரு. சி. ஞானசேகரன்.

THIRU C. GNANASEKARAN : Mr. Speaker Sir, To discuss the need to increase the strength of Police constables in all Police stations, I move—That the allotment of Rs. 241,52,14,000 under demand No. 15—Police be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 658. திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் வட்டம் வைப்பூர் என்ற கிராமத்தில் அதைச் சுற்றியுள்ள மக்களின் பாதுகாப்புக்காக புறக் காவல் நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''காவல் துறைற் பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,52,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 656. டாக்டர் தே. குமரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,52,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 680. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள காவலர்கள் குடியிருப்பு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேலும் வசதிகள் இல்லாமல் இருப்பதால் புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,52,14,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 16. தீயணைப்புப் பணிகள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 19,29,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 716. திரு. மெ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நத்தம் தொகுதியில் நத்தம் நகரில் தீயணைப்பு நிலையம் அமைத்து பல ஆண்டுகளாகியும் இன்னமும் கட்டிடம் இன்றி கீற்றுக் கொட்டகையில் இயங்கும் நிலையிலிருப்பது குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,29,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு போவைக் கலைவர் : வெட்டுத் தீர்மானம்

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் நகரத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டுவதன் அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,29,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 710. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 19,29,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 717. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் வாடகை கட்டிடத்தில் இருப்பதால் தீயணைப்பு துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தீயணைப்புத் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,29,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானிய கோரிக்கைகளான மாநில ஆயத் தீர்வை, காவல் மற்றும் தீயணைப்புப் பணிகள்



என்ற தலைப்புகளின் இத் கொள்கை விளக்க குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-25

அதிலே தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பு
களை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி
அதை இந்த அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என
கேட்டுக் கொள்கிறேன். ** இந்த கொள்கை விளக்கக்
குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய
கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்
டுக் கொள்கிறேன். இறுதியில் உறுப்பினர்களின் கருத்துக்
களுக்கு என்னுடைய பதிலுரைகளையும், அரசு எடுக்க கருதி
யுள்ள சில முக்கிய முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன்
எனக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மிக முக்கிய
மான மானியக் கோரிக்கையாக இருக்கிற காரணத்தினாலும்,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய துறையாக இருக்
கின்ற காரணத்தினாலும், ஏறத்தாழ எல்லா கட்சிகளிலே
யும் 18 உறுப்பினர்கள் வரையிலே இதிலே பேச விருப்பம்
தெரிவித்திருக்கிறார்கள். முக்கியமான மானியக் கோரிக்கை
என்ற காரணத்தினாலே அவர்களை இதிலிருந்து விடுவிக்க
வும் முடியவில்லை. இதைக் கருத்திலே கொண்டு ஒவ்வொரு
உறுப்பினரும் 7 நிமிடத்தில் தங்களுடைய பேச்சுக்களை
முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
விவாதத்தைத் தொடங்கி வைக்கிற திரு. பீட்டர் அல்போன்ஸ்
அவர்களுக்கு மட்டும் 10 நிமிடம் கொடுக்கப்படுகிறது.
எதிர்க் கட்சித் தலைவர் விவாதத்தை முடித்து வைக்கிறார்.
அவருக்கும் நேரத்தைக் கொடுக்க வேண்டும். எனவே,
அவை எல்லாவற்றையும் மனதிலே வைத்துக்கொண்டு உறுப்
பினர்கள் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். முதலில் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான காவல்
துறையினுடைய மானியக் கோரிக்கையின் மீது இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்துக்கொண்டு இந்த விவா
தத்திலே உரையாற்றுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு
நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

---

**589 முதல் 683 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 செப்டம்பர் 23

**1859ஆம் ஆண்டு** பிறந்து இன்றைய தினம் **1991 ஆம்
ஆண்டு** வரையில் 137 ஆண்டுகள் சரித்திரம் உள்ள ஒரு துறை
காவல்துறை. இந்தத் துறையினுடைய பரிணாம வளர்ச்சியை
137 ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
அமைப்பில், உருவத்தில், சாதனைகளில், கருவிகளில்,
எண்ணிக்கையில், திறமையில் இந்தத் துறை ஒரு மிக பிரம்
மாண்டமான வளர்ச்சியை பெற்றிருப்பதையும் நாங்கள்
சிந்தித்துப் பார்க்கிறோம்.

தமிழ்ச் சமுதாயம் பிறந்து வளர்ந்த நாட்களில் நமக்கு
வரலாறு என்ற ஒன்று எழுதப்பட்ட காலத்திலிருந்தே காவல்
என்கிற ஒரு அமைப்பு இந்த தமிழ்ச் சமுதாயத்திற்கு பழக்
கப்பட்டது. குடிகாவல் என்கிற பெயரில் சத்தியத்திற்கும்
நியாயத்திற்கும் கட்டுப்பட்டு காவல் காத்த காலம் அந்தக்
காலம். பாளையக்காரர்களின் ஆட்சி வந்த பின்னால்
அந்த குடி காவல் தேசக் காவலாக மாறியது. தேசக்காவ
லாக மாறிய பின்பு மக்களை சட்ட ரீதியாக நிர்பந்திப்பதற்
காக உருவாக்கப்பட்டிருக்கின்ற காவல் அமைப்பு மக்களை
சிறுமைப் படுத்தி, சின்னாபின்னமாக்கப் பயன்படுத்தப்பட்
டது என்பது தமிழக காவல் வரலாறுகளிலே ஒரு கொடுமை
யான அத்தியாயம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்த நாட்டினை அடிமை செய்த
போதிலும் சில நல்ல பயனான காரியங்களை நமக்கு விட்டுச்
சென்றதிலே ஒன்று இந்த காவல்துறை. அதனுடைய தோற்
றம், அமைப்பு, செயல் விதிகள் ஆகியவற்றை முறைப்படுத்தி
அதனை ஒரு அங்கீகாரம் பெற்ற ஒரு காவல் அமைப்பாக
மாற்றியது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் என்றாலும் அந்த
ஏகாதிபத்ய ஆட்சியினுடைய காட்டாட்சி தர்பாரை
நியாயப்படுத்துகின்ற ஒரு ஏஜன்சியாகவே அந்த காவல்
துறை அமைப்பு பயன்பட்டு வந்தது. சுதந்திரத்திற்குப் பின்
னால் எல்லா துறைகளுக்கும் ஒரு புதிய பார்வை வந்தது
போல் காவல் துறைக்கும் ஒரு புதிய தோற்றத்தினை தர
முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒரு எதேச்சாதிகார அர
சின் அதிகார துரைத்தனத்திற்கு வால் பிடித்தவர்கள் சமு
தாய மக்களை இம்சிப்பதற்காக ராட்சஸ அதிகாரங்களை
கையிலே வைத்திருந்த இவர்களை மாற்றி ஜனநாயக பூங்
காவின் சமாதான காவலர்களாக மாற்றுவது அவ்வளவு
சாதாரணமான வேலையாக அமையவில்லை. ஆனால்
தொடர்ந்து நடந்த மாற்றங்கள், ஆட்சிகள், ஆட்சியாளர்களின்
பார்வைகளில் ஏற்பட்ட மாறுபாடுகள், அப்பழுக்கில்லாத
அரசியல் தலைவர்கள், அற்புதமான அதிகாரிகள் ஆகியோ
ரின் பெரு முயற்சி காரணமாக இந்தத் துறையிலே சில மாற்
றங்களை நாம் காண முடிந்தது. சுதந்திர இந்தியாவில் தமிழ்



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நாட்டின் காவல்துறை வரலாற்றினை இரண்டாகப் பிரிக்கும்
ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எப்படி உலகத்தின் வரலாற்றை
சரித்திர வல்லுநர்கள் கிருஸ்து பிறப்பதற்கு முன்பு, கிருஸ்து
பிறப்பதற்கு பின்பு என்று மாற்றினார்களோ அதுபோல
தமிழக காவல்துறையினுடைய வரலாறு அமரர் ராஜீவ்
காந்தியினுடைய கொலைக்கு முன், அமரர் ராஜீவ் காந்தி
யினுடைய கொலைக்குப் பின் என்று இரண்டாகப் பிரித்து
பகுப்பாய்ந்தால் நாம் சில உண்மைகளை உணர முடியும்.
அந்த பெரிய கொலை, அந்த ஜனநாயக படுகொலை தமிழ
கத்து மக்கள் மத்தியிலே ஒரு ஆழமான கேள்வியை எழுப்பி
விட்டது. ஒரு கேள்வி அல்ல. ஓராயிரம் கேள்விகள். அமைதிப்
பூங்காவாக திகழ்ந்த தமிழகத்தில் நடந்த இந்தச் சம்பவம் தமிழ
கத்து மக்கள் முன் வைத்த ஒவ்வொரு கேள்வியிலே முக்கியமான
கேள்வி தமிழகத்திலே காவல்துறை என்கிற ஒரு அமைப்பு இருந்
ததா என்ற ஒரு கேள்வியை எழுப்பியது.

முற்பகல் 10-30

ஸ்காட்லாந்து போலீசாருக்கு இணையான போலீஸ் என்று நாம்
மார் தட்டிக்கொண்டிருந்த தமிழக காவல் துறை குண்டு சத்தம்
கேட்டவுடன் விழுந்து அடித்து ஓடுகின்ற சில கள்ளக்
குதிரைகளை வைத்துக் கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகம்
அந்தக் கொலைக்குப் பின்னர் தான் தெரிய வந்தது.

அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் சில அரசியல்
நிர்பந்தங்களால் எழுதப்பட்ட ஒரு ராஜினாமா கடிதத்தை அவர்
கள் வீட்டிலே எந்த மூலையில் இருக்கிறது என்பதை தேடி
கண்டுபிடித்து அந்தக் கடிதத்தை திருடி சபாநாயகர் வீட்டுக்குச்
சென்று ஒப்படைத்து அரசியல் சூறாவளியைக் கிளப்ப நினைப்
பதற்கு தயாராக இருந்த காவல் துறையினுடைய உளவுத்
துறை இந்த தேசத்தினுடைய ஒப்பற்றத் தலைவன், 80 கோடி
மக்களுடைய நெஞ்சில் நிரந்தரமாக ஆண்ட முடி சூடா இளவர
சன், எங்கள் லட்சியக் கனவின் கதாநாயகன் உயிர் இந்த மண்
ணில் முடியப் போகிறது என்ற செய்தி இந்த அரசுக்கு தெரிய
முடியாத அளவுக்கு இந்த உளவுத் துறை பலவீனமாக இருந்தது
என்பதை அந்தக் கொலைக்குப் பின்னர் நாங்கள் தெரிந்து
கொண்டோம்.

காக்கிச் சட்டையின் கண்ணியத்தில் மிடுக்காகப் பணியாற்றிய
தமிழக காவல் துறையின் அதிகாரிகள் பதவிக்காக, பதவியின்
சுகத்திற்காக தரம் கெட்ட அரசியல்வாதிகளின் ஏவல் கேட்
கும் அடியாட்களாக மாறிவிட்டார்கள் என்பது கூட ராஜீவ்
காந்தி கொலைக்குப் பின்னர் நாங்கள் தெரிந்த ஒரு செய்தி.
தமிழக மக்கள் விழித்துக் கொண்டார்கள். ஒரு வரலாற்று
நாயகனை வாழ்த்திப் பழக்கப்பட்ட தமிழக மக்கள் இந்த மிருக
வெறி ... சிந்தித்துப் பார்த்

தார்கள். காக்க வேண்டிய கடமை யாருக்கு? காவல் செய்ய வேண்டிய பொறுப்பு யாருக்கு? கடமையில் தவறியவர்களுக்குப் பாடம் கற்பிக்க ஒரு தீர்க்கமான முடிவை அவர்கள் முடிவோடு எடுத்துக் கொண்டார்கள். வாக்குப் பெட்டிகளில் வாக்குகளை அள்ளி நிரப்பினார்கள். ஒரு ஆட்சி மாற்றம் வந்தது. இந்த ஆட்சி மாற்றத்திற்கு யார் காரணம்? இந்த ஆட்சி மாற்றம் என்னென்ன அடிப்படையைத் தெரிவிக்கிறது என்று சொன்னால் இது தமிழக காவல் துறையின் மேல் தமிழக மக்கள் நிறைவேற்றிய கண்டன தீர்மானம்தான் இந்த ஆட்சி மாற்றத் தீர்மானம். ஒரு காவல் துறையை அனாவசியமாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து செயல் இழக்க வைத்ததன் விளைவாகத் தான் அன்று இளங்கோவடிகள் பாடினார்களே 'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆவது' என்பதைப்போல கடமையினைக் காவல் துறை செய்ய தவறியதால் இந்த நாட்டு மக்கள் எடுத்துக் காட்டிய முடிவு தான் தேர்தல் முடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அழைக்கின்றபோதே சொன்னீர்கள், இது ஒரு முக்கியமான துறை என்று. நான் அதைவிட ஒரு படி அதிகம் செல்கிறேன். தமிழகத்தினுடைய சரித்திரத்திலே ஒவ்வொரு முதலமைச்சரையும் பார்க்கிறோம். மூதறிஞர் ராஜாஜி அவர்களைப் பார்க்கிறோம். அவர்கள் என்ன பணி செய்தார்கள் என்று பார்க்கிறோம். நிர்வாக சீர்திருத்தங்களைச் செய்தார்கள். அரசு நிர்வாக ஆட்சி முறைகளில் மாற்றங்களைக் கண்டார்கள். எங்கள் அன்புத் தலைவர், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்தார்கள்; கிராமங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் எல்லாம் இன்று அவர்களுக்கு நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். தமிழ் மொழிக்கும், தமிழ் மொழி தந்த இன உணர்வுக்கும் சிறப்பு தந்து இந்த ஆட்சிப் பீடத்திலே தனது காலடிச் சுவடுகளை விட்டுச் சென்றார்கள். அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தார்கள்; சத்துணவுத் தந்து ஏழை எளிய மக்களின் நலன் காக்கின்ற வழியில் தன்னுடைய முத்திரையைப் பதித்துச் சென்றார்கள். நான் கேட்கிறேன் நமது முதலமைச்சரை நீங்கள் செய்கின்ற பணி, காவல் துறையில் நீங்கள் பதித்துச் செல்கின்ற தடம்தான் உங்கள் எதிர்க்கால சரித்திரத்திலே உங்களுடைய வெற்றியை நிர்ணயிக்கப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழக மக்கள் உங்களிடமிருந்து மிகப் பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறார்கள் என்று கூட நான் சொல்ல மாட்டேன். ஏறிவிட்ட விலைவாசியை ஒரே நாளில் கீழே கொண்டு வாருங்கள் என்று யாரும் சொல்லவில்லை. தமிழகம் முழுவதும் செல்கின்ற ஆறுகளில் எல்லாம் அணைகளைக் கட்டி, பாலங்களைக்



கட்டி, சாலைகளைக் கொண்டு வாருங்கள் என்று கேட்கவில்லை. தமிழக மக்கள் மூன்று காரியங்களைத் தான் உங்களிடமிருந்து எதிர்ப்பார்க்கிறார்கள். ஒன்று, இந்த போராளிகளின் பயங்கரத்தில் மூழ்கி இருக்கின்ற இந்த தமிழகத்தை நீங்கள் காப்பாற்றித் தரவேண்டும்; இரண்டு, மது என்கின்ற அரக்கனிடம் சிக்கி சிதறி கொண்டிருக்கின்ற தாய்மார்களை காப்பாற்றித்தர வேண்டும்; மூன்று ஜாதி மத போராட்டங்களை ஊக்குவித்து வன்முறை அரசியலுக்கு வழி தேடிக்கொண்டிருக்கின்ற மூன்றாம் தர அரசியல்வாதிகளுடைய முதுகெலும்பை உடைத்து மீண்டும் தமிழகம் ஒரு அமைதிப் பூங்கா என்கிற உண்மையை நிலைநிறுத்தித் தரவேண்டும். இந்த மூன்று காரியங்களைத் தான் தமிழக மக்கள் உங்களிடமிருந்து இன்று எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்க்கின்ற மூன்று காரியங்களும் தமிழக காவல்துறையை அடிப்படையாகக் கொண்டது. எனவே இந்த காவல் துறை வெற்றி பெற்றால் உங்களுடைய ஆட்சி வெற்றி பெறுகிறது. இந்த காவல் துறை தவறு செய்தால் அந்தக் களங்கம் உங்கள் மேல் வருகிறது. எனவேதான் நாங்கள் சொல்கிறோம். இந்த பெரிய பூதம்
It is a very good servant, but a bad master.

இதைக் கையாளுகின்ற பணி, இதை நீங்கள் வைத்துக்கொண்டு செய்கின்ற பணிகள்தான் எதிர்காலத்திலே உங்களது சரித்திரத்தை, உங்களது வரலாற்றை, உங்களுடைய வரலாற்று வெற்றியை நிர்ணயிக்கப்போகிறது. அதை நீங்கள் பார்க்க வேண்டும்.

சமீபகாலமாக தமிழக காவல் துறையை ஒரு பெரிய நோய் பிடித்து இருக்கிறது. அது என்ன நோய் என்று சொன்னால், அரசியல் நோய். எப்படி ஒவ்வொரு கட்சியிலும் மாணவர்கள் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி என்று இருக்கிறதோ அதைப்போல காவல் துறைக்குள்ளும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு அணி இருக்கிறது. இந்த அணிகள் தமிழக அரசியலைக் குழப்புவதோடு மட்டுமல்லாமல் தமிழக நிர்வாகத்தில் புரையோடிப் போன புண்ணை செய்த பெருமை இதற்கு உண்டு. இதற்கு சாதாரண மருந்துகளால் குணப்படுத்திவிட முடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இது உங்கள் கைகளால் ஒரு அறுவை சிகிச்சை செய்துதான் குணப்படுத்த முடியும். I have to appreciate you. You have made a good beginnin .It is a good beginning for a great end.

இந்த நல்ல ஆரம்பம் கடைசி வரை இருக்க வேண்டும் என்று உங்களை நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 செப்டம்பர் 23

முற்பகல் 10-35

ஏனென்று சொன்னால், நான் கூட ரெயிலிலே வரும்போது சொன்னேன். ஒரு அதிகாரி என்னுடன் வந்தார்.

Now people have started feeling the presence of the Police, காவல்துறை என்று ஒன்று இருக்கிறது என்பதையே இப்போது தான் மக்கள் உணர்வதற்கு ஆரம்பித்து இருக்கிறார்கள். கடந்த கால மானியக் கோரிக்கைகளிலே நாங்களெல்லாம் நடத்திய விவாதங்களைப் பார்க்கின்றபோது, இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக உட்கார்ந்திருக்கிற மாண்புமிகு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் ஆணித்தரமான தகவல்களை இந்த மாமன்றத்திலே கொடுத்தபோதெல்லாம் சொன்னார்கள் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று; அவர்கள் அங்கே இராஜாக்களாக இருக்கிறார்கள், அவர்கள் வரவேண்டிய அவசியம் என்ன என்று கேட்டார்கள்; அவர்கள் வந்து இங்கே என்ன செய்யப்போகிறார்கள் என்று கேட்டார்கள். ஆயுதத் தொழிற்சாலை நடக்கிறது என்று சொன்னோம்; ஆயிரமாயிரம் கடத்தல் பொருட்களை பதுக்கி வைத்து இருக்கிறார்கள் என்று சொன்னோம்; ஒவ்வொரு இடத்திலும் முகாமிட்டு, ஒரு பெரிய தீவிரவாதக் கும்பல் இந்தியாவின் சரித்திரத்தையே உருக்குலைக்க நினைக்கிறார்கள் என்று இந்த மாமன்றத்திலே சொல்கின்றபோதெல்லாம் அவர்கள் சவால் விட்டார்கள். அரசியலுக்காகப் பேசுகின்றீர்கள், புள்ளி விவரங்களோடு பேசுங்கள் என்று எங்களிடத்திலே பதிலுக்குச் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் யாருடைய உயிரைக் கொடுக்கக் கூடாதோ, யாருடைய உயிர் இந்த நாட்டினுடைய மிக விலைமதிப்பற்ற உயிராக இருந்ததோ அந்த உயிரைக் கொடுத்துத்தான் நாங்கள் சொன்ன தகவல்களையெல்லாம் உண்மை என்று சொல்லக்கூடிய, நிரூபிக்கக்கூடிய அளவுக்கு இன்றையதினம் நாங்கள் தள்ளப்பட்டு இருக்கிறோம். எனவேதான் நான் சொல்கிறேன், முன்பு அன்னை இந்திராகாந்தி அவர்கள் பஞ்சாப் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது, இராணுவத்தை பொற்கோயிலுக்கு அனுப்புகின்றபோது ஒரு வார்த்தை சொல்லி கையெழுத்திட்டார்கள். "I have signed my death warrant" என்று சொல்லி கையெழுத்திட்டார்கள். மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன், you have also signed the death warrant. தீவிரவாத இயக்கத்தின் மேல் என்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று முடிவு செய்தீர்களோ, போராளிகளினுடைய முதுகெலும்பை ஒடித்துப்போடுவது என்று நினைத்தீர்களோ, அவர்களுடைய நிலையான நிழல் கரங்களையெல்லாம் உடைத்து எரித்தீர்களோ அன்றையதினமே நீங்கள் உங்களுடைய மரண சாசனத்திலே கையெழுத்து போட்டு விட்டீர்கள். உங்கள் உயிரைப் பாது



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

காக்கவேண்டியது, உங்களுடைய பாதுகாப்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆதரவு தரவேண்டியது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய கடமை. அதனால் தான் உங்களைப் பாராட்டுகிறோம். சிலபேர் எங்களைச் சொல்கிறார்கள். துண்டு சீட்டுகளுக்காகப் பாராட்டுகிறீர்கள்; காரியம் நடத்த வேண்டுமென்று பாராட்டுகிறீர்கள் என்று சொல்கிறார்கள். அல்ல அல்ல; ஒருநாளும் அல்ல. இந்த தேசம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் பாராட்டுகிறோம். இன்றைய தினம் புலி வேட்டைக்குப் புறப்பட்டு இருக்கின்றீர்கள்; புலி வேட்டைக்குப் புறப்பட்டு இருக்கின்ற உங்களுடைய கவனம் திசை திரும்பிவிடக்கூடாது என்பதற்காக உங்களுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். உங்கள் கவனம் திசை திரும்பிவிட்டால் நாடு சின்னாபின்னமாகிவிடும். எங்களுக்கு எங்கள் கட்சியைவிட நாடு பெரிது என்ற காரணத்தினால் இன்றைய தினம் காவல்துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற நீங்கள், உங்களுடைய கவனம் திரும்பி விடக் கூடாது என்பதற்காக உங்களிடம் கவனமாக இருக்கிறோம். அதைத்தான் நான் சொல்கிறேன்.

இந்தக் காவல்துறை ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அதிலும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு சில மாற்றங்களைக் கோடிட்டு காட்ட ஆசைப்படுகிறேன். இன்று 7, 8 ஐ.ஜி.க்கள் இருக்கிறார்கள். இன்று 7, 8 ஐ.ஜி.க்கள் இருந்த இடத்தில் அந்தக் காலத்தில் ஒரே ஒரு ஐ.ஜி. இருந்து தமிழகக் காவல் துறையை நிர்வாகம் பார்த்த காவல்துறை. இந்தக் காவல் துறை இந்த 7, 8 ஐ.ஜி.க்கள் இருப்பதால் என்ன ஆகிறது என்று சொன்னால், ஒரு I.G. occupies the chair of law and order. அது ஒரு மியூசிகல் சேர் மாதிரி. இங்கே ஆட்சி மாற்றம் நடக்கின்றபோதெல்லாம் இந்த சேரைச் சுற்றிச் சுற்றி மற்ற 7, 8 ஐ.ஜிக்களும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியும் பதவியிலே இருக்கின்றபோது, ஒரு முறையாவது அந்த நாற்காலியிலே அமர்ந்துவிட வேண்டும் என்கிற அந்த வேகம், அவர்களை அரசியல்வாதிகள் முன்னால் கூனிக்குறுகி நிற்க வைக்கிறது. இதை நீங்கள் கவனிக்க வேண்டும். இதை, தகுதியான அதிகாரிகள் தங்களுடைய தகுதியின் அடிப்படைக் காரணமாக, சேவையின் காரணமாக, அவர்கள் வைத்திருக்கின்ற அப்பழுக்கற்ற கண்ணியமான காவல்துறைத்தனத்தின் காரணமாக, அந்த நாற்காலியைப்பிடிக்க முடியும் என்கிற உண்மையினை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். அப்படி நீங்கள் நிரூபித்துக்காட்டினால்தான், உண்மையிலேயே அவர்களிடமிருந்து பொதுமக்கள் அப்பழுக்கற்ற சேவையைப் பெற முடியும். அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே போலீஸ்காரர்களை, சாதாரண போலீஸ்காரர்களை வேலை நியமனம் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்கள். அமரர்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 செப்டம்பர் 23

எம்.ஜி.ஆர். அவர்கள் பிறப்பித்த உத்தரவு என்ற காரணத்திற்காக அவர்களை கடந்த ஆட்சி வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு வந்த ஆளுநர் ஆட்சி, இரண்டு பேட்ச்; அதாவது இரண்டு குரூப்புகளை எடுத்தார்கள். மீதமுள்ளவர்கள் அப்படியே இருக்கிறார்கள். இதேபோல, திராவிட முன்னேற்றக் கழக காலத்திலே வேலைக்குச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் என்றும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அண்ணா தி.மு.க. என்று சொன்னால், இனிமேல் இதற்கு தமிழக காவல்துறை என்று எப்படி பெயர் வைக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் கேள்வியை மன்றத்தில் உள்ள அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மன்றத்திலே நான் காவல்துறையை மட்டும் குற்றம் சொல்லவில்லை. இந்தச் சீர்கேட்டிற்குக் காரணம். நம்முடைய ஜாதி, இந்த அரசியல்வாதிகளுடைய ஜாதி எப்படியும் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நாற்காலியை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்கிற பேராசையான அரசியல்வாதி, அந்த பேராசையான அரசியல்வாதியினுடைய உத்தரவுகளுக்கு கைக்கட்டி ஏற்றுச்செல்லக் கூடிய பெரிய போலீஸ் அதிகாரி. Is an unholy alliance இந்தப் பாவ கூட்டுதான் இந்தத் துறை இவ்வளவு சீர்கெட்டுப் போனதற்கு காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சி செய்ய வேண்டுமென்கிற துடிப்பு உள்ளவர்கள், புரட்சி செய்தே ஆவேன் என்கிற சபதம் ஏற்றிருக்கிற நீங்கள் உங்கள் ஆட்சிக் காலத்திலே இதை மாற்றிக் காட்ட வேண்டும். சாதாரணக் காவலர்கள், வாரம் முழுவதும் நாளொன்றுக்கு 24 மணி நேரமும், நல்ல நாள், பெருநாள்கூட இல்லாமல், ஒரு கூலித் தொழிலாளிக்கு இருக்கின்ற பணிப் பாதுகாப்புகூட இல்லாமல் சேவை செய்துகொண்டு இருக்கிறார்கள். அதிலே, சிலபேரைப் பார்த்தால். They are all frustrated நான் ஒரு நல்ல சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்தேன். நான் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பிக்கின்றபொழுது அவரைப்போல ஒரு யோக்கியமான சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததேயில்லை. 4, 5 ஆண்டுகள் கழித்து பார்க்கின்றபொழுது, அவரை மாதிரி ஒரு கரப்டட் ஆபிசர் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாறியிருந்தார். ஏன் இவ்வாறு என்று கேட்டேன், அவர் சொன்னார்; சார், யோக்கியனாக இருந்து என்ன பயன் என்று கேட்டார். நல்லவனாக இருந்து எனக்கு என்ன பலன் என்று கேட்டார். கோடிக்கணக்காக, சம்பாத்தியம் பண்ணியவர்களும் அதே சப்- இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள், நான் நியாயமாக, உண்மையாக நடந்து நானும் இந்த சப் இன்ஸ்பெக்டராகவே இருக்கிறேன் என்று சொன்னார்.



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

முற்பகல் 10-40

எங்களுக்கு என்ன பலன் என்று கேட்கிறபொழுதுதான், நான் முதலமைச்சரவர்களுக்கு ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

நல்ல கண்ணியமான போலீஸ்காரர், அவர் சாதாரண போலீஸ்காரராக இருந்தாலும், சப்-இன்ஸ்பெக்டராக இருந்தாலும், இன்ஸ்பெக்டராக இருந்தாலும், அவர்கள் கண்ணியமாகச் சேவை செய்து There is no dereliction of duty there is no corruption and is there is sincerity of service. என்று இருந்தால் அவர்கள் பதவி முடிகின்றபொழுது அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை கொடுக்க வேண்டும். இது ஒன்றும் பெரிய காரியம் அல்ல, தகுதிக்குத் தகுந்தாற்போல் பிரித்துக் கொள்ளலாம். ஒரு டி.எஸ்.பி. லெவலுக்கு ஒரு இலட்சம் என்று இருந்தால் இன்ஸ்பெக்டருக்கு 50,000 ரூபாய், சப்-இன்ஸ்பெக்டருக்கு 25,000 ரூபாய், கான்ஸ்டபிளுக்கு 25,000 ரூபாய் என்று இருந்தால் அவர்கள் வஞ்சகம் இல்லாமல் வேலை பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கு வரும்.

இதைப்போல, நான் இன்னும் இரண்டு மூன்று மணித் துளிகள் பேச அருள்கூர்ந்து நமது சபாநாயகர் அவர்கள் எனக்குத் தருவார்கள் என்று சொன்னால் சில விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

1973-லே போலீஸ் கமிஷன் ஆய்வு அறிக்கை கொடுத்தது. அந்த போலீஸ் கமிஷன் அளித்த ஆய்வு அறிக்கையிலே, They have recommended that there should be no direct recruitment. நேரடியாக டி.எஸ்.பி.க்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், ஐ.பி.எஸ். அதிகாரிகள் நிறைய பேர் இருக்கின்றபொழுது, ஏ.எஸ்.பி., டி.எஸ்.பி., போன்ற பதவிகளை அவர்களையே நிர்வகிக்கச் சொல்லி விட்டு, ஒரு சாதாரண சப்-இன்ஸ்பெக்டர் தன்னுடைய தகுதியாலும், முயற்சியாலும் வெகு விரைவாக மேலிடத்திற்கு வர முடியும் என்ற ஒரு எண்ணம் அவர்களுக்கு வருகின்ற அளவிலே All D. S. Ps. should be posted from promotion cadres.

அதைப்போல, பட்டதாரிகளான போலீஸ்காரர்கள் நல்ல திறமையாக உழைப்பார்கள் என்பதால் அவர்களும் அந்தப் பதவியினுடைய அடிப்படைக்கு வேகமாக வளர முடியும் என்ற நிலைமைகளை அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கருத்தை நாம் கொடுப்போம் என்று சொன்னால், அந்தக் காவல் துறை நாம் நினைக்கின்ற அளவிற்கு வேலை செய்கின்ற காவல் துறையாக இருக்கும்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1991 செப்டம்பர் 23

ஆந்திராவிலும், நமது மத்திய—சென்ட்ரல் கவர்ன்மெண்டிலும் உள்துறை செயலாளர் அவர்கள் ஒரு ஐ.பி.எஸ். ஆபீசராக இருந்து இருக்கின்றார்கள். ஒரு சீனியர் ஐ.பி.எஸ். ஆபீசர். அதற்காக நான் இப்பொழுதுள்ள உள்துறை செயலாளர் மேல் மாறுபட்ட கருத்து ஒன்றையும் சொல்லவில்லை. அவர்கள் ஒரு மிகத் திறமையான ஐ.ஏ.எஸ். அதிகாரி, இந்தத் தமிழ்நாடு பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய அளவிற்கு. நான் மொத்தத்தில் ஒரு மாற்றத்தைச் சொல்கிறேன். ஒரு சீனியர் ஐ. பி. எஸ். ஆபீசர். as additional secretary of the Home Department in addition to the Principal Home Secretary இருந்தார்கள் என்று சொன்னால் அந்தத் துறையினுடைய நெளிவு சுளிவுகளை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்வதற்குத் தோதுவாக இருக்கும்.

நேரம் அதிகமாகி விட்டதால் முதலமைச்சரவர்களுக்குக் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக இரண்டு கோரிக்கைகளை வைக்க நான் ஆசைப்படுகிறேன். இந்தக் கோரிக்கைகளை அவர்கள் ஏற்க வேண்டும்.

எங்களது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரிலே ஒரு இரயில்வே நிலையத்திற்குப் பெயர் சூட்டவேண்டுமென்று 45,000 பேர்—நாங்கள் ஜெயிலிலுக்குச் சென்றோம். மறைமலைநகர் இரயில்வே நிலையத்தைப் பெருந்தலைவர் காமராஜருடைய இரயில்வே நிலையம் என்று மாற்றுவதற்காக நாங்கள் போராடி சிறைச்சாலைகளைத்தான் நிரப்ப முடிந்ததேயொழிய அந்த ஆட்சியிலே பெருந்தலைவர் காமராஜருடைய பெயரை மீண்டும் அந்த இரயில்வே நிலையத்திற்கு வைக்க முடியவில்லை. நான் ஒன்று கேட்கிறேன். ஒன்று, இந்த 45,000 பேர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் இன்னும் நிலுவையிலே இருக்கின்றன. 45,000 காங்கிரஸ் தொண்டர்கள் இன்னும் நீதிமன்றங்களின் நெடிய படிகளில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை நீங்கள் தயவு செய்து வாபஸ் வாங்க வேண்டும். எங்கள் போராட்டம் நியாயமான போராட்டம் என்று அங்கீகரிக்கக் கூடிய அளவிலே மீண்டும் அந்த இரயில்வே நிலையத்திற்கு மறைமலைநகர் பெருந்தலைவர் காமராஜர் இரயில்வே நிலையம் என்கிற பெயரை நீங்கள் வைக்க வேண்டும்.

அதைப்போல, அமரர் இராஜிவ்காந்தி அவர்கள் கொலையுண்ட பிறகு தமிழகத்திலே தேர்தல் பிரச்சாரம் சூடாக இருந்த நேரம், அந்த நேரத்திலே தேர்தல் பணிகளை முடக்க வேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்து வழக்கறிஞர்களே ஒவ்வொரு ஊருக்கும் வந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள், காங்கிரஸ் தொண்டர்கள் மேல் தொடுத்த வழக்குகளிலே ஏறத்தாழ தமிழகம் எங்கிலும் நான்கு



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

இலட்சம் தொண்டர்கள்—இந்த இரண்டு கட்சிகளையும் சார்ந்தவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். அவர்கள் நிறைய பேர்களுக்கு இன்னும் கண்டிஷன் பெயில்கூட இன்னும் மாறவில்லை. போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் பொய் வழக்குகள். இரண்டு சோடா பாட்டில்கள் உடைந்த இடத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் நஷ்டயீடு என்று போட்டார்கள். அப்படிப் போடப்பட்ட வழக்குகளெல்லாம் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்றன. எங்கள் தலைவர்கள் மீது உள்ள வழக்குகளை நீங்கள் வாபஸ் வாங்கி இருக்கின்றீர்கள். எங்கள் தலைவர்களுக்கு நீங்கள் காட்டிய கருணையை இந்தப் பேரியக்கத்தின் தொண்டர்களுக்கும் நீங்கள் காட்ட வேண்டுமென்று நான் கேட்கிறேன். நியாயமான கோரிக்கையை வைக்கிறேன். பொய் வழக்கு என்பதால், சட்டத்திற்குப் புறம்பாக, அரசியல் எண்ணத்தோடு போடப்பட்ட வழக்குகள் என்பதால் இந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவதன் மூலம் ஏறத்தாழ நான்கு இலட்சம் அப்பாவிகள், காங்கிரஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற உண்மையை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று.......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர்.

<u>மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தலைவர்களின் மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டோம்; ஆனால் தொண்டர்கள் மீது உள்ள வழக்குகளை வாபஸ் பெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல். எல்லோரையும் சமமாக நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய லட்சியம், கொள்கை. ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே, இப்படி மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்ட வகையில், சில காரணங்களுக்காக பொய் வழக்குகள் சுமத்தப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீதும், காங்கிரஸ் தொண்டர்கள் மீதும் என்னென்ன பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றனவோ அத்தனை வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும் என்று காவல்துறைத் தலைவருக்கு ஏற்கெனவே கூறிவிட்டேன்.

முற்பகல் 10-45

ஆணையிட்டு விட்டேன். இன்னும் சில வழக்குகள் இருக்கின்றன என்றால், அவை பற்றிய சரியான விவரங்கள் தெரியவில்லை என்றே தெரிகிறது. எனவே, உங்கள் மூலமாக இந்த அவையில்

இருக்கிற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தொகுதியிலுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீதோ, அல்லது காங்கிரஸ் தொண்டர்கள் மீதோ, இப்படி ஏதாவது பொய் வழக்குகள் சுமத்தப்பட்டு, இன்னும் வாபஸ் பெறாத நிலையில் நிலுவையில் இருக்குமேயானால், அந்த விவரங்களை விவரமாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் உடனடியாக அந்த வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லத்தான் அவ்வாறு சொன்னேன். அதாவது, அரசியல் ரீதியாகப் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குவதிலே, அவர்கள் தைரியமாக வந்திருக்கிறார்கள். ஒரு சில வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு விட்டன. மீதமுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதற்காகத்தான்—அவர்களுடைய பெயர்களைச் சொன்னால், தவறுதலாக இருக்கும் என்பதால்—இதைக் கோடிட்டுக் காண்பித்தேன். நான் முதலமைச்சருக்கு, அந்த அப்பாவி காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களின் சார்பாக எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் போல......(மணியடிக்கப்பெற்றது)......ஒரு நிமிடம் முடித்து விடுகிறேன்.

காவல் துறையைச் சேர்ந்தவர்கள்—இவர்களுக்கு, ''எக்ஸ்-சர்வீஸ்மென் ''—முன்னாள் இராணுவ வீரர்களுக்கு என்ன பலன்கள் இருக்கின்றனவோ, அந்தப் பலன்களில் ஒரு 60 விழுக்காடாவது, '' எக்ஸ்-போலீஸ்மென் ''— முன்னாள் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கலாம். முன்பெல்லாம், காவல் துறை '' ரிஸ்க் '' இல்லாத காவல் துறையாக இருந்தது. ஆனால், இப்போது—அன்றைய தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் மெடல் வழங்கிப் பேசுகிறபோது, விழாவிலே சொன்னார்கள். '' தினசரி காலையிலே போலீஸ்காரர் வேலைக்குப் போய்விட்டுத் திரும்புகிற வரையில், உங்கள் உயிருக்குப் பயந்து கொண்டு, உங்கள் மனைவிமார்கள் வேதனையால் துடிப்பது எனக்குத் தெரிகிறது '' என்று சொன்னார்கள். அந்த உணர்வுகளிலே நானும் பங்கு கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு risk involved இன்றைக்கு போலீஸ் டிபார்ட்மென்டில் வந்துவிட்டது. அந்த ''ரிஸ்கை'' எடுத்துக் கொள்கிற அளவுக்கு அவர்களுக்கு மீண்டும் நாம் '' இன்செண்டிவ் '' தருகின்ற வகையிலேதான், அந்தக் காவல் துறையினர் பயனுள்ள வேலைகளைச் செய்ய முடியும். தமிழகக் காவல் துறையினர் கையிலே இருக்கிற



துப்பாக்கி என்பது, அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் அணிவகுப்பு நடக்கிறபோது மட்டும் மாற்றிப் பிடித்து, ''சல்யூட்'' அடிப்பதற்காக அல்ல. சட்டம், ஒழுங்கைக் கெடுக்கிறவர்கள் மீது சமூக விரோதிகள் மீது தேசப் பாதுகாப்பில் குறை ஏற்படுத்துகிற மூன்றாம் தர அரசியல் வாதிகளை அந்தத் துப்பாக்கிகள் சுடும் என்கிற உரிமையினை நீங்கள் நிரூபிக்க வேண்டும். தமிழகக் காவல்காரன் கையிலே இருக்கிற சாதாரண லத்தி, கச்சத்திலே இருக்கிக் கொண்டு மேல் அதிகாரிகளைப் பார்த்து, '' சல்யூட் '' அடிப்பதற்காக மட்டுமல்ல; அந்தத் தடி குற்றவாளிகளை, சமூக விரோதிகளை, கள்ளச் சாராயக்காரர்களைப் பாய்ந்து தாக்கும் தடி என்றே நீங்கள் நிரூபிக்க வேண்டும். அந்த இரண்டுப் பணிகளும், நீங்கள் எடுத்துக் கொள்கிற பணிகள்; மிகப் பெரிய மகத்தான பணிகள். அந்தப் பணியிலே நீங்கள் உங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றுகிறீர்கள் என்பதை ஒவ்வொரு தமிழனும் அறிந்திருக்கிறான். எனவே, இந்த மாபெரும் கடமையை நிறைவேற்றுவதற்கு, வரலாற்றுப் புகழ் மிக்க சபதம் ஏற்றிருக்கிற நீங்கள்— இன்னும் அழகான வார்த்தைகளில் சொல்கிறேன். மங்கம்மாளின் சரித்திரம் மங்கிவிடவில்லை என்பதை தமிழகம் உலகிற்கு நிரூபிக்கின்ற வகையிலே, நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டு you have made a good beginning இந்த அவைக்கும் நிச்சயமான புதிய சரித்திரத்தை எழுதி முடிக்கிற அளவுக்கு, அடுத்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே நாங்கள் பேசுகிறபோது உங்களை முழுக்க, முழுக்கப் பாராட்டி, தமிழக மக்கள் சார்பில் நன்றி சொல்கிற ஒரு பேச்சாக இருக்கவேண்டும் என்கிற எண்ணத்தினை வெளியிட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேராசிரியர் க. பொன்னுசாமி.

*<u>பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் முறையாகவும், சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த அவையின் துணைத் தலைவராகவும் நியமித்து, பணியாற்ற கட்டளையிட்டிருக்கிற எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது பணிவான நன்றியைச் சமர்ப்பித்து, எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இங்கே பேசுகிற வாய்ப்பளித்திருக்கிற உங்களுக்குப் எனது நன்றியைக் கூறி, உரையைத் தொடங்குகிறேன்.

காவல் துறை மானியத்தின் மீது, என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க நினைக்கிறபோது, ஒரு திருக்குறளை சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1991 செப்டம்பர் 23

'' குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் ''.

என்று வள்ளுவர் சொல்கிறார். குடிமக்களுக்குத் துன்பம் வராமல் பாதுகாப்பதும், சமுதாயத்தில் காணப்படுகிற குற்றங்களைக் களைந்து, ஒழித்து தண்டித்து நிறுத்துவதும் மன்னனது கடமை இதனால் ஏற்படும் பழி ஏதுமில்லை என்கிறார்.

இப்பணியினை அரசு நிறைவேற்றுகிற காலத்தில் அதற்கு உறுதுணையாக இருந்து இடையூறுகளைத் தடுப்பது, இந்தக் காவல்துறைதான். காவல்துறையைப் பற்றி பாராட்டிச் சொல்ல வேண்டுமானால் ஒரு குறளை நான சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

'' புறந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து ''

ஆதரிப்பவர்கள், பாதுகாப்பவர்கள் கண்களிலே நீர்ப்பெருக்கு ஏற்படுகின்ற வகையிலே ஒருவன் சாவைச் சந்திக்கிறான் என்று சொன்னால், அந்தச் சாவை அவன் இரந்து பெற்று சந்திக்கலாம் என்று வள்ளுவர் சொல்கிறான்.

முற்பகல் 10-50

செஞ்சோற்றுக் கடன் தீர்க்கின்ற அளவில் காவல்துறை இன்று தமிழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணுகிறபோது, அனைத்துத் தரப்பு மக்களும் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மானியக் கோரிக்கையிலே நான் ஒரு சில முத்துக்களைப் பார்க்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசால் கலைக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மீண்டும் தொடங்க முடிவு எடுத்திருப்பதையும், நடப்பு நிதியாண்டிலே அவர்களுக்கு ஆயிரம் வீடுகள் கட்டித்தருவதற்கு முயற்சி எடுத்திருப்பதையும், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கும் தனி நபர் அல்லது அரசியல் கட்சிகளிடமிருந்து சேதத் தொகையை வசூலிக்கச் சட்டம் கொண்டு வர இருப்பதையும், சிதம்பரனார் மாவட்டம் புதியம்புத்தூரில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையில் புதிய காவல்நிலையம் அமைக்க இருப்பதையும், தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் இருபது இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையில் தகவல் தொடர்புக் கூடம் அமைக்க இருப்பதையும் மக்கள் மன்றம் பாராட்டுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 23] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

தமிழகத்திலே இருக்கிற காவல்துறையைப் பொறுத்தவரை
888 மக்களுக்கு ஒரு காவலர் என்ற அடிப்படையிலே அது இயங்
கிக்கொண்டிருக்கிறது. நகரங்களிலே கல்கத்தாவிலே 268
பேருக்கு ஒருவர், டில்லியிலே 342 பேருக்கு ஒருவர், ஹைதரா
பாத்திலே 384 பேருக்கு ஒருவர், பம்பாயிலே 399 பேருக்கு
ஒருவர் சென்னையிலே 459 பேருக்கு ஒருவர் என்ற வகையிலே
அது கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்களது பணி பளுவினை
கருத்திற் கொண்டு, காவலர்களது எண்ணிக்கையை அதிகரித்து,
இவர்களது பணியைச் சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது காலத்தில்
நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் கடந்த திராவிட
முன்னேற்றக் கழக அரசால், பல வழிகளில் பழி வாங்கப்பட்
டுள்ளார்கள். அவர்களது தகுதிக்கான பருவம் நீட்டிக்கப்பட்
டிருக்கிறது. மாவட்டம் விட்டு, மாவட்டம் மாற்றப்பட்டு, பழி
வாங்கப்பட்டிருக்கிறார்கள். மனசாட்சி உள்ள அதிகாரிகள்
இவர்களது தகுதிகாண் பருவத்தை நீட்டிப்பதை ஆறு மாதம்
வேண்டாம் மூன்று மாதம் போதும் என்று சொன்னபோதும் கூட,
சென்னையிலே இருக்கிற உயர்மட்ட அதிகாரிகள் ஏற்றுக் கொள்
ளாத சூழ்நிலையிலே பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அரசு
இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

உதவி ஆய்வாளர்கள் எண்ணிக்கையில் எழுபது விழுக்காடு
நேரிடையாக நியமனம் செய்யப்பட வேண்டுமென்பது விதி இருப்
பதாக அறிகிறேன். ஆனால், தமிழ்நாட்டிலுள்ள 4,660 உதவி
ஆய்வாளர்கள் பதவியில் சுமார் 1,000 பேர்கள் மட்டுமே நேரடி
நியமனம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இடை நிலையில்
பட்டம் பெற்ற அதிகாரிகள் அதிகம் இல்லாத நிலைமை ஏற்
பட்டால் நாளடைவில் காவல் துறையின் தரம் குறைய வாய்ப்
புள்ளது என்பதைக் கருத்திற் கொண்டு, உதவி ஆய்வாளர்களை
அதிக அளவில் நேரிடையாக நியமனம் செய்ய அரசு முன்வர
வேண்டும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் துறைப் படைக்கும், மாவட்டக்
காவல் துறைக்கும் தனித்தனியே காவலர்கள் தேர்வு செய்யப்
படுகிறார்கள். மாவட்டக் காவல் துறைக்குத் தேர்வு செய்யப்
படுகின்றவர்கள் சில நாட்கள் சேமப் படையிலே armed Reserve
இல் பணியாற்றி, பின் லோகல் போலீஸ் பணிக்கு நியமனம் செய்
யப்படுகிறார்கள். ஆனால், சிறப்புக் காவல் துறையைப்
பொறுத்த வரையில், பல ஆண்டுகள் அங்கே பணியாற்றி அதற்
குப் பின்னாலே சேமப் படைக்கு வந்து அங்கே பல ஆண்டுகள்
பணியாற்றி அதற்குப் பின்னாலே உள்ளூர் காவல் துறைக்கு வர
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இது அவர்களிடத்திலே ஒரு

மனச்சோர்வை ஏற்படுத்துகிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவலர்கள் மட்டத்தில் ஒரே முறையில் தேர்வு செய்து, சிறப்புப் படை காவல், பின்னால் சேமப்படை, அதற்குப் பின்னாலே இரயில்வே போலீஸ், அதற்குப் பின்னாலே லோகல் போலீஸ் என்று அவர்கள் படிப்படியாக வருவது சிறப்பாக அமையும் என்பதை இங்கே ஆலோசனையாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகக் காவல் துறையினர் தமது பணிகளை மிகவும் செவ்வனே ஆற்றி வருகின்றனர் என்பதை நாடு இன்று போற்றுகிறது. மறைந்த முன்னால் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் கொலை வழக்கிலே கூட, மேற்கு தஞ்சை மாவட்டத்திலே கைது செய்யப்பட்ட ஒரு விடுதலைப் புலி மூலமாகத் தான் இவ்வழக்கின் முதல் பெண் எதிரியின் முகவரியும், தொலைபேசியில் எண்ணும் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் மூலமாகக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேதான் எதிரிகளைப் பிடிக்க முடிந்தது என்பதை எண்ணுகிறபோது, மேற்கு தஞ்சை மாவட்டக் காவல் துறையினர், பாராட்டப் பட வேண்டும்.

3—5—1990 அன்று இதே அவையிலே தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை நடைபெற்றது. அதிலே ஆய்வுரையிலே 101-வது பத்தியில் வேண்டுமென்றே திட்டமிட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கின்ற வகையிலும், பொதுமக்கள் மத்தியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கும் மரியாதையைக் குறைக்கும் எண்ணத்தோடும் கருத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்தன. எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நாங்கள் இதை எதிர்த்தோம். முன்னால் திராவிட முன்னேற்றக் கழக முதல்வர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆய்வு உரையிலிருந்தும் நீக்க மறுத்துவிட்டார்கள். ஆனால், 20—3—1968லே இந்த அவையிலே நடந்த ஒன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பூந்தாழங்குடியிலே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிலே ஒருவர் இறந்ததும், ஒருவர் காயமுற்றதும் ஆய்வுரையில் வருகிறது. அதிலே விவசாயிகள் சிலர் ' தாக்கினார்கள் ' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உடனே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கருத்தை எதிர்த்து, நீதிமன்றத்திலே ஒன்று இருக்கும்போது இங்கே ஆய்வுரையிலே குறிப்பிடுவது நீதி விசாரணையைத் தடுக்கிற வகையிலே அமையாதா, சப்ஜுடீஸ் ஆகாதா என்று கேட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள்



பெருந்தன்மையோடு அதை ஏற்றுக்கொண்டு ஆய்வுரையைத் திருத்தி " ஒரு வழக்கு போடப்பட்டிருக்கிறது " என்பதோடு அது இருக்கட்டும் என்று முடித்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட நல்ல பாரம்பரியத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே ஏற்படுத்தியிருக்கிறபோது, அண்ணா வழியில் வந்ததாகக் காட்டிக்கொண்ட அரசு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வேண்டுமென்றே களங்கப்படுத்துகிற வகையில் ஒரு குறிப்பை இங்கே தந்திருந்தது என்பதை வருத்தத்தோடு இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியைப் பொறுத்தவரையில் தீவிரமான கண்காணிப்பு வேண்டும் என்பதை யாருமே மறுக்க முடியாது. தமிழ்நாட்டின் எல்லைப்புறம் பாதுகாக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தால்தான் மிகப் பெரிய தேசியத் தலைவரை இன்று நாம் இழந்திருக்கிறோம். இரண்டாண்டு காலமாக தமிழகத்தை இருண்ட கால ஆட்சியில் வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு தீவிரவாதிகளுக்கு கதவைத் திறந்துவிட்டு விட்டது. திறமையான காவல் துறையின் கைகளைக் கட்டிப்போட்டு வைத்திருந்தது. ஆகவே சட்டம் ஒழுங்குக்கு சமாதி கட்டிவிட்டது. ஆயுதக் கலாச்சாரத்திற்கு அனுமதி கொடுத்துவிட்டது. இதன் விளைவாகத்தான் பல வன்முறைகள் இங்கே நடந்தேறி இருக்கின்றன. இன்னும் பல தலைவர்களுக்கும் குறி வைக்கப்பட்டிருக்கிறது என்று செய்திகள் நாளும் வெளி வந்துகொண்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் முன்கூட்டியே அறிந்துதான்.

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். "

என்ற அளவில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்றும், எதிரிகளைச் சந்திக்கிற அளவில் காவல் துறையை மேம்படுத்த வேண்டுமென்றும் மத்திய அரசினிடத்தில் 60 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு வெறும் 10 கோடி மட்டுமே அனுமதி வழங்கி இருக்கிறது என்று செய்திகள் வந்திருக்கின்றன. இது " யானைப் பசிக்குச் சோளப் பொறி " என்பது போல்தான் அமையும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு நிதியுதவி வழங்கிட வேண்டும். புரட்சித் தலைவி அவர்கள் கோரிய நிதி

தமிழ்நாட்டுக்குத்தானே என்ற எண்ணத்தை மத்திய அரசு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையிலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் கடலோரப் பகுதியையும் எல்லையையும் பாதுகாக்க வேண்டியது இந்தியப் பேரரசின் தேசிய கடமைகளில் ஒன்று. மத்திய அரசு மற்ற மாநிலங்களில் எல்லாம் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக என்று செலவிடுகிறது. ஆனால் தமிழ்நாட்டுக்கு மட்டும் மாற்றாந் தாய் மனப்பான்மை காட்டுவது சரியாக இருக்காது என்பதை அவர்களே உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். தமிழ் நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகாமல் தமிழ் நாட்டின் எல்லையைப் பாதுகாப்பது என்பது இந்தியாவைப் பாதுகாப்பது என்ற கருத்தின் அடிப்படையில் அவர்கள் நிதியுதவி வழங்க வேண்டும். அப்படி மத்திய அரசு நிதியுதவி வழங்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதியுதவி கிடைக்கவில்லை என்றால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தயங்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களால் தான் இன்று தமிழகம், அதிகார எல்லை மீறல்களிலிருந்தும், பழிவாங்கும் நடவடிக்கைகளிலிருந்தும் மீண்டு இருக்கிறது. எனவே, தங்களது பாதுகாப்பு அரசின் தலையாய கடமையாக இருக்க வேண்டும் என்பதில் ஒருவேறு கருத்துக்கள் யாருக்கும் இருக்க முடியாது. மத்திய அரசிடம் மீண்டும் நிதி கேட்டு நீங்கள் கடிதம் எழுதுங்கள். மத்திய அரசு தர வேண்டும். காவல் துறையை நவீனப்படுத்துவதோடு 'நேஷனல் செக்யூரிட்டி கார்ட்ஸ்' ஒன்றை இந்திய அரசு வைத்து இருப்பதைப்போல் தமிழ்நாட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பாதுகாப்பதற்காக 'ஸ்டேட் செக்யூரிட்டி கார்ட்ஸ்' என்ற படை ஒன்றை நீங்கள் உடனடியாக நிறுவிட வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மத்திய அரசு நிதியுதவி தர மறுக்குமேயானால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் கவலைப்பட தேவையே இல்லை, உங்கள் கட்டளை ஒன்று போதும். தமிழகத்தின் தாய்மார்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களும் தங்களுக்குத் தேவையான நிதியை உங்களது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எப்படியும் தங்களது பாதுகாப்புக்கென தனியாக ஒரு 'ஸ்டேட் செக்யூரிட்டி கார்ட்ஸ்' அமைக்கப்பட்டே தீர வேண்டும். புரட்சித் தலைவி அவர்களால் தான் தமிழகம் இன்று வாழ்ந்து





கொண்டிருக்கிறது. நான் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன்: கடலுள் மாய்ந்த பாண்டியன் இளம்பெருவழுதி சொல்கிறான்.

'' உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே. ''

இப்படிப்பட்டவர் இருப்பதால்தான் உலகம் இருக்கிறது என்று சொல்கிறார். அப்படிப்பட்ட பண்பு நலன்கள் நிறைந்த மாண்பு மிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்று முதல்வராக இருக்கின்ற காரணத்தால்தான் தமிழகம் தமிழகமாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை, புரட்சித் தலைவி அவர்களை பாதுகாக்கின்ற முழு பொறுப்பையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் காவல் படையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு நிதியை முழுமையாகக் கொடுத்து இந்தியாவின் பாதுகாப்புக் கருதி, தமிழகத்தின் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றியினைச் சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. நா. சா. பழனிசாமி.

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது உழைப்பாளர் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை முன் வைப்பதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறை தன்னுடைய திரமிக்க பணியின் காரணமாகவும், துப்பறிவதிலே சிறந்த திறமையின் காரணமாக வும், இங்கிலாந்திலே உள்ள ஸ்காட்லேண்ட் யார்ட் போலீசுக்கு

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 23

ஒப்பர்க அவர்கள் பேசப்பட்டு வந்தார்கள். அப்படிப்பட்ட சிறந்த காவல் துறை இடையிலே மது விலக்கைச் சரியான முறையிலே அமல்படுத்தத் தவறி, சாராயம் காய்ச்சுபவர்கள் கள்ளக் கடத்தல் செய்பவர்கள் போன்றவர்களுடைய தொடர்புகள் ஒரு சிலருக்கு ஏற்பட்டு காவல் துறைக்கு கலங்கம் வந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றப் பிறகு இன்று காவல் துறைக்கு ஒரு புதிய உத்வேகம் ஏற்படுத்தப்பட்டு இன்று காவல் துறையினர் புதிய புதிய குற்றங்களை, மிகப்பெரிய குற்றவாளிகளை எல்லாம் கண்டுபிடித்து இன்று அவர்களைத் தண்டிக்கின்ற நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள். இன்று கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற மிகப் பெரிய சாராய மன்னர்கள் எல்லாம் இன்று காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு அந்த கள்ளச் சாராயம் இன்று பூண்டோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தை விடுதலைப் புலிகளுடைய வேட்டைக் காடாக இருந்த தமிழகத்தை இன்று மீண்டும் தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறி மக்களுக்குச் சரியான பாதுகாப்புக் கிடைக்கின்ற ஒரு நிலை புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் வாழ்த்துகிறோம், வரவேற்கிறோம். ஆனால் இன்னும் காவல்துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களை காவல் துறையினுடைய பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் நாட்டு மக்களுக்காகச் செய்யவேண்டும்.

இன்று கிராமப் பகுதியிலே காவல்துறையினுடைய உதவிக்கு திருட்டுக் குற்றங்கள், இன்னும் பல்வேறு குற்றங்களுக்கு ஏழையெளிய மக்கள், காவல் துறையில் சப்-இன்ஸ்பெக்டர்களை போலீஸ்-காவல் நிலையங்களிலே சென்று சந்திக்கின்றபோது ஒரு ஆடுமாடு, கோழிக்குஞ்சு திருட்டுப் போனாலுங்கூட அதற்குக்கூட கார் எடுத்துக்கொண்டு வாருங்கள், நாங்கள் வருகிறோம் என்று சொல்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஒரு சிறிய பொருளை, 100 ரூபாய் 200 ரூபாய் பொருளை இழந்தவன் அந்த பொருள்களைக் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறபோது அவர்களை கார் எடுத்து வாருங்கள் என்று சொல்கிற காவல்துறையினர் இன்னும் கிராமங்களிலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சின்னத் திருட்டுக்களை எல்லாம் காவல் நிலையத்திலே சென்று அங்கே திருட்டு போய்விட்டது என்று சொல்வதற்குக்கூட கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் அஞ்சுகின்ற நிலை இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும்.



1991 செப்டம்பர் 23] [திரு. நா. சா. பழனிசாமி]

அதோடு காவல் துறையினரால் தொடுக்கப்படுகின்ற வழக்குகள் அவை குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு வருகின்ற போது மிகக் கால இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. அதனால் ஏழையெளிய மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் நேரடியாக அந்த சாட்சியத்தை சொல்வதற்கு நீதிமன்றங்களுக்கு அந்த வழக்குகள் விசாரணைக்கு வருகிற நேரத்திலே அவர்கள் அந்த சம்பவத்தை நடந்ததை அவர்கள் மறந்துவிட்டு அவர்கள் சரியான முறையிலே சாட்சி சொல்லப்படாததனால் பல உண்மையான குற்றங்கள் எல்லாம் தண்டிக்கப்படாமல் விடுதலை செய்யப்படுகிறது.

பிற்பகல் 11-05

நீதிமன்றத்திலே இருக்கின்ற 'Benefit of doubt goes to the culprit' என்று சொல்லுகின்ற சந்தேகத்தின் பலன் குற்றவாளிக்கு சாதகமாக அமைகின்றது என்ற முறையில், நல்ல சாட்சிகள் சொல்ல முடியாத காரணத்தாலேயே பல வழக்குகள் விடுதலை செய்யப்படுகின்றன. ஆகவே, வழக்குகள் மிகக் காலதாமதம் ஆவதை குறைக்க வேண்டும். நீதிமன்றங்களிலும் வழக்குகள் நிறைய காலமாக விடப்படுவதினால் நிறைய பேர் நீதிமன்றங்களின் நெடிய படிகளில் நடந்து இதற்கு நிறைய செலவழித்து நீதியை எளிதில் பெறமுடியாத சூழ்நிலை இன்றைக் குஏழையெளிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'Justice delayed is Justice denied' என்று சொல்வார்கள். காலதாமதமாக கிடைக்கின்ற நீதி, நீதியே கிடைக்காததற்கு சமமாக அமைந்துவிடுகிறது. நீதி பெறுவதற்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. எனவே, இலவச சட்ட ஆலோசகர்களாக, நிறைய பேரை, நல்லவர்களைப்போட்டு ஏழை யெளிய மக்களுக்கு இலவசமாக நீதி கிடைப்பதற்கு, ஏழையெளிய மக்களுக்காகவே இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இலவச சட்ட ஆலோசகர்களை, மிக நல்ல வழக்கறிஞர்களாகப் பார்த்து அமர்த்தி ஏழையெளிய மக்கள் தங்களுடைய வழக்குகளை நடத்துவதற்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நம்முடைய தமிழகத்திலே சந்தனக் கடத்தல் வழக்கிலே தொடர்புள்ள வீரப்பனை இவ்வளவு காலமாகியும் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடந்த ஆண்டிலே அவர்களை எல்லாம் பிடிக்க முடியாமல் அந்த ஆட்சிக் காலத்திலே அவனை விட்டுவிட்டார்கள். புரட்சித் தலைவியினுடைய அரசு விடுதலைப் புலிகளை எல்லாம் வீரத்தோடு அடக்கிய அரசு இந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பன் இன்னும் பிடிபடாமல

[திரு. நா. சா. பழனிசாமி] [1991 செப்டம்பர் 23

இருப்பதும், இன்றும் சந்தன மரக்கடத்தலை தொடர்ந்து நடத்திக்கொண்டிருப்பதையும் தொடர்ந்து கண்காணித்து காவல் துறையை நல்ல முறையில் பயன்படுத்தி அவனை பிடிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கோவை மாவட்டத்தில் ஒரு சிறு சம்பவம். அதில் 13 சிறைக் குற்றவாளிகள், அவர்கள் 33 திருட்டு வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள். 250 பவுன் நகைக்குமேல் அவர்கள் கொள்ளையடித்திருக்கிறார்கள். 2 லட்சத்திற்குமேல் அவர்கள் பணத்தை கொள்ளையடித்திருக்கிறார்கள். ஆப்படிப் பட்ட பெரிய குற்றவாளிகளை கோவை மத்திய சிறையிலே யிருந்து உடுமலைப்பேட்டை நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் காவல் நிலையத்திற்கு கொண்டு வரும் நேரத்திலே, சரியான முறையில் அவர்களுக்கு பந்தோபஸ்து கொடுத்துக் கொண்டு வராமல், 7 காவலர்களை வைத்து, இந்த 13 குற்றவாளிகளைக் கொண்டு வந்ததால், அவர்களுக்கு யாரோ சிலர் உதவி செய்து, பஸ்ஸிலே வருகிறபோது அவர்கள் தப்பித்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் துறையினருடைய துப்பாக்கியை கூட எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அதிலே ஒரு துப்பாக்கியிலே குண்டு இல்லையென்று சொல்லப்படுகிறது. காவல் துறையினர் பாதுகாப்பாக கைதிகளை, அதுவும் கடுமையான திருட்டு குற்றவாளி கைதிகளை அழைத்துச் செல்கிறபோது துப்பாக்கியில் குண்டு இல்லாமல் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தக் குற்றவாளி கைதிகள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரியாமல் கூட அழைத்துச் சென்றிருக்கிறார்கள். மீண்டும் தப்பித்து ஓடிய அந்த குற்றவாளிகள் ஏற்கெனவே அங்கேயுள்ள பல காட்டு சாலைகள் விவசாயிகள் தன்னம் தனியாக பண்ணை வைத்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட வீடுகளில் புகுந்து, தாய்மார்களை கற்பழித்து, கொலை செய்து, கொள்ளையடித்துச்சென்றவர்கள். அவிநாசி போன்ற இடங்களிலே, அவர்கள் தான் இப்போதும் தப்பித்து சென்றிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மீண்டும் இப்போது தப்பித்து சென்ற இந்த குற்றவாளிகள் திருட்டு சம்பவத்தை நடத்துவதாக காவல் துறையினருடைய பத்திரிகை செய்தி அண்மையில் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. எனவே, திருட்டுக் குற்றவாளிகளை பிடித்து, முக மூடி அணிந்திருக்கின்ற அந்த கொள்ளையர்களைப்பிடித்து, தண்டித்து மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென கேட்டு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

*திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்



1991 செப்டம்பர் 23] [திரு. க. அர்ச்சுனன்]

பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற காவல் துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவியின் காலில் விழுந்து வணங்குவதையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் அவரை தெய்வமாக கருதுவதையும் சில அரசியல் தலைவர்களும், சில பத்திரிகைகளும் செய்தியாக போட்டு, கிண்டல் பண்ணி அண்மையில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காரணத்தினால் நாங்கள் வணங்கவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருக்கின்ற காரணத்தினால், பல்வேறு பொறுப்புகளை, பதவிகளைக் கொடுத்திருக்கிற காரணத்தினால் அவர்களை நாங்கள் வணங்கவில்லை என்பதை நான் இங்கே தெரியப்படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கிய கட்சியையும், அடிமட்டத் தொண்டர்களையும் காப்பாற்றுவதற்காக தாய் தந்தையர் நிலையில் இருந்து சேர்த்து வைத்திருக்கிற சொத்து சுகங்களை எல்லாம் இன்றைக்கு இந்த இயக்கத்திற்காகச் செலவிட்டிருக்கிறாரே, கட்சியைக் காப்பாற்றி இருக்கிறாரே, அதற்காக வணங்குகிறோம். இந்தச் சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது சில துர்ச்சாதனக் கூட்டத்தால் அவர்கள் பழி வாங்கப்பட்ட போதிலும் தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக வீர சபதம் எடுத்துக்கொண்டு, இன்றைக்கு இந்த இயக்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாரே அதற்காக வணங்குகிறோம். அதுமட்டுமல்ல, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற காலகட்டத்தில் ஏ.கே. 47 துப்பாக்கிக்கு மத்தியிலும் வெடி குண்டுகளுக்கு மத்தியிலும் தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக நான் இருக்கிறேன் என்று சொல்லி, இயக்கத்தை வழி நடத்திச் சென்று கொண்டிருக்கிறார்களே அதற்காக நாங்கள் வணங்குகிறோம். இன்னும் சொல்லப்போனால் ஒரு தன்னலமற்ற தலைவியாக அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். திருமண வீட்டுக்குச் சென்றால் தாலி எடுத்துக் கொடுப்பதற்கு, மாலை மாற்றிக் கொடுப்பதற்கு 2,000, 3,000 ரூபாய் என்று ரேட் பேசிக் கொண்டிருக்கும் தலைவர்கள் வாழும் இந்த நாட்டில் புரட்சித் தலைவி அவர்கள் திருமண வீடுகளுக்குச் செல்லும்போது தன்னுடைய சொந்த செலவிலே அவர்களுக்குப் பரிசளித்துக் கொண்டு வருகிறார்களே அதற்காக நாங்கள் வணங்குகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு ஒரு

[திரு. க. அர்ச்சுனன்] [1991 செப்டம்பர் 23

சக்தி எதிர்காலத்தில் நடைபெறுவதை யூகிக்கக்கூடிய திறன், வேண்டியவர்களைக் காப்பதோடு, வேண்டாதவர்களையும் மன்னித்து ஆட்கொள்ளும் தாயுள்ளம் என்பது சாதாரண நபருக்கு இல்லாத அப்பாற்பட்ட ஒரு சக்தி அவர்களுக்கு இருப்பதால் நாங்கள் வணங்குகிறோம். இஸ்லாமியர்களுக்கு நபிகள் நாயகம், கிருத்துவர்களுக்கு ஏசுபிரான், பௌத்தர்களுக்கு புத்தபிரான், இந்துக்களுக்கு தமிழ்க் கடவுள் முருகன். எங்களுக்கு தன்னலமற்ற தியாகச் சுடர் புரட்சித் தலைவி அவர்கள் தான் தெய்வம் என்று சொல்லி, விவாதத்தைத் தொடங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறை அதிகாரியாக சிறிது காலம் பணியாற்றிய காரணத்தால் எனக்குக் கொஞ்சம் கூடுதலான நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். வளமான மொழிக்கு எப்படி இலக்கணம் இன்றியமையாதது என்று கருதுகிறோமோ அதைப் போல ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்குக் காவல் துறை தான் முக்கியமானது என்பதை ஒரு ஆங்கில அறிஞன் குறிப்பிடுகிறான். அதனால்தான் போலீஸ் என்று பெயரிட்டார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. போலீசாகப் பணியாற்றுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்னென்ன என்று சொன்னால், 'போலீஸ்' என்ற ஆங்கில வார்த்தையில் வருகிற 6 எழுத்துக்கள் P.O.L.I.C.E. என்பதற்கு P for politness, O for obedience L for loyality, I for integrity, C for courtesy, E for efficiency என்ற முறையில் இந்த 6 தகுதிகளும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள்தான் போலீசாக இருக்க வேண்டுமென்று நினைத்து, 'போலீஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி. அதைப்போலத்தான் காவல் துறையும். இவர்கள் செய்யும் நல்ல காரியத்தை யாரும் பாராட்டுவதில்லை. ஆனால் ஒரு கெட்ட காரியம் நடைபெற்று விடுமானால் அரசுக்கும் கெட்ட பெயர், ஆட்சிக்கும் கெட்ட பெயர் ஏற்படுத்துகிறது. எனவேதான் காவல் துறையைப் பொறுத்த வரையில் முள்ளின்மேல் இட்ட சேலையைப்போல இந்தத் துறையைக் கையாள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துறையின் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானமேயில்லை. ஆனால் ஒவ்வொரு துறையினுடைய வருமானத்திற்கு இத்துறையின் செயல்திறன்தான் உறுதுணையாக இருக்கிறதென்பதை நான் சொல்லியாக வேண்டும்.

புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று சட்டம் ஒழுங்கைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளார்கள் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மை. நிம்மதியாகப் பெண்கள் நடமாட முடிகிறது. வழிப்பறி, கொலை, கொள்ளை குறைந்திருக்கிறது. விடுதலைப் புலிகளின் கொட்டத்தை புரட்சித்



1991 செப்டம்பர் 23] [திரு. க. அர்ச்சுனன்]

தலைவி அவர்கள் அடக்கியிருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே வாலாட்ட முடியாத விடுதலைப் புலிகள் இன்றைக்கு அண்டை மாநிலங்களுக்கு ஓடி ஒளிந்துகொண்டிருக்கும் நிலைமையைப் பார்க்கும் போது, சிறப்பான நிர்வாகம் இங்கே அமைந்திருக்கிறது என்பதையும், காவல் துறையிலே புதிய அதிகாரிகள் பொறுப்பேற்று, சட்டம் ஒழுங்கைச் சீர்படுத்தும் முறையிலே சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உங்களுடைய கவனத்திற்கு, அவையின் கவனத்திற்கு மிக முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். தற்போது முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் என்ற ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார்கள். இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராக ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு எதிராக உள்நோக்கத்தோடு இதை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமானால் கருணாநிதி வீட்டு மறுமலர்ச்சி மன்றம் என்று அமைத்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் காவல் துறை இங்கே உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இதற்கு அஞ்சல் வழிக் கல்வியாம், கல்லூரியாம் இதற்கு டைரக்டர் யார் தெரியுமா? மைத்துனர் மாறன். தி.மு.க.வில் வேறு ஆள் கிடைக்கவில்லை போல இருக்கிறது. அதனால்தான் தி.மு.க.வே கருணாநிதி வீட்டுச் சொத்து என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அண்ணாவின் கொள்கையை புரட்சித் தலைவி அவர்கள் ஏற்று, அந்தக் கொள்கை வழி நடக்கிறார்கள். ஆனால் கருணாநிதி அவர்கள் திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் என்ற பெயரில் நாட்டைப் பிளவுபடுத்தி, இனத் துவேஷத்தை உருவாக்கி, வன்முறையைத் தூண்டிவிட்டு, புரட்சித் தலைவி அவர்களை வீழ்த்தி விடலாம் என்று திட்டமிட்டுதான் இந்த மாமன்றத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

குட்டையைக் குழப்பி அதிலே மீனைப் பிடிக்க விரும்புகிறார்கள், ஜனநாயகத்தின் மீது அவருக்கு எள்ளளவுக்குக் கூட நம்பிக்கை இல்லை. திராவிட மறுமலர்ச்சி மாமன்றம் மூலம் பார்ப்பனீயம் திராவிடம் என்ற பிரச்சாரத்தை ஆரம்பித்து விஷ விதையை தூவிவிட்டு இருக்கிறார்கள். அண்மையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இதைப்பற்றி பேசப்பட்டிருக்கிறது. பார்ப்பனீயம் பற்றி அங்கே பேசப்பட்டிருக்கிறது. இன துவேஷம் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவர் ஆட்சியில் இருக்கும் போது மட்டும் பார்ப்பனர்கள் தேவை. குகன் போன்ற ஆலோச

கர்கள் தேவை. எனக்கு ஆலோசகர்களாக பார்ப்பனர்கள் தான் இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆட்சியை விட்டு இறங்கியவுடன் பார்ப்பனீயம் என்று சொல்லி இன துவேஷத்தை உருவாக்கி இந்த நாட்டை வன்முறைக் காடாக ஆக்கி, ஒரு இனத்தையே அழிக்கக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட இந்த அஞ்சல் கல்வியின் மூலமாக அவருடைய அடிமட்டத் தொண்டர்களுக்கு, பேச்சாளர்களுக்கு இவைகளை யெல்லாம் சொல்லிக் கொடுத்து, அவர்கள் எல்லாம் கிராமங்களிலே தெருக்களிலே பேசுகிறபோது, பார்ப்பனர்களை இழிவுபடுத்தி, பார்ப்பனீயம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது என்று சொல்லி அங்கே இன துவேஷத்தை உருவாக்கி இந்த வன்முறைக் காடாக ஆக்கி இறுதியாக புரட்சித் தலைவி அவர்களால் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க முடியவில்லை என்று சொல்லி ஆட்சியை வீழ்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க சூழ்ச்சி நடைபெறுகிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே, இதை உன்னிப்பாக கவனித்து தேவைப்பட்டால் இப்படிப்பட்ட வன்முறையை இன்றைக்குக் கையில் எடுத்துக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் ஏன் தி.மு.க. வையே தடை செய்யக்கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன். தேவைப்படுமானால் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். அன்றையதினம் நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஒரு வால் போஸ்டரை சம்பந்தப்படுத்தி எஸ்.டி.எஸ். அவர்களுடன் என்று கருதுகிறேன், நீங்கள் கைது செய்யப்பட்டு, கன்டிஷன் பெயிலில் சேலத்திற்கு வந்திருக்கிறீர்கள். அன்றைக்கு சின்ன சின்ன விஷயத்திற்கெல்லாம் கைது செய்கிற நிலைமை இருக்கிறபோது இப்படிப்பட்ட வன்முறையை ஜாதி துவேஷத்தை ஏற்படுத்தி, நாட்டை பிளவு படுத்தும் அளவுக்கு அந்த காரியத்தில் ஈடுபட்டிருக்கிற அவர்களை கைது செய்தால் என்ன? இந்த நாடு பிளவு பட்டு விடுமா? இந்த பூமி இரண்டாக வெடித்தா விடும்? தமிழகம் அழிந்தா விடும்? இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காக, தமிழ்ச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக, இந்திய ஒருமைப்பாட்டின் உறுதியை நிலை நிறுத்துவதற்காக இப்படிப்பட்ட தேச விரோத சக்திகளை கைது செய்வதில் தவறே இல்லைஎன்பதைக் கூறவிரும்புகிறேன்.

இன்றைக்கு அம்மா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு சட்டம் ஒழுங்கு எவ்வளவு சீராக அமைந்திருக்கிறது என்பதை சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. கடலோரப் பகுதிகள் எல்லாம் இன்றைக்கு நமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது. காவல் துறையினர் அவர்களுடைய கடமையை ஒழுங்காகச் செய்ய





அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்—தன்னிச்சையாக. காவல் துறையை அரசியல்வாதிகளின் கைப்பாவையாக நாம் ஆக்கிவிடவில்லை. திறமையான காவல்துறை அதிகாரிகள் இன்றைக்கு டி.ஜி.பி. யின் தலைமையிலே சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதே நேரத்தில் இன்னொன்றையும் நாம் பார்க்கவேண்டும். காவல்துறை அதிகாரிகள் இதைச் சற்று யோசித்து இன்டெலிஜன்ஸ் பிரிவை இன்னும் சற்று சீர்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரபாகரன் அங்கேயிருந்து ஒயர்லெஸ்சில் இங்கேயிருக்கிற விடுதலைப் புலிகளுக்கு செய்தி அனுப்புகிறாராம். அந்தச் செய்தியில் இங்கேயிருக்கிற விடுதலைப் புலிகள் எல்லாம் திரும்பி வந்துவிடுங்கள் என்று சொன்னாராம். அதை நமது காவல்துறையினர் இன்டெர்செப்ட் செய்ததாம். இதை நம்பக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பிரபாகரனுடைய மோடஸ் ஆப்பரேண்டி என்ன என்று சொன்னால், பின்வாங்குவதைப்போல் பின் வாங்கி அட்டாக் செய்வதுதான் அவர்கள் தொழில். பல்வேறு சம்பவங்களில் நாம் பார்த்து இருக்கிறோம்.

இந்த செய்தியை நீங்கள் நம்பக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அம்மாவுக்கு கறுப்பு பூனைப்படையினர் காவல் இருக்கிறது. இருந்தாலும் இப்படிப்பட்ட போக்கு காட்டி வன்முறைச் சம்பவம் நடக்கும் என்றே நான் அஞ்சுகிறேன். பிரபாகரன் அண்மையில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலே இன்னொரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். ராஜீவ்காந்தி கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவு காலத்திற்குப் பிறகு எப்படிப்பட்ட ஞானோதயம்? எப்படிப்பட்ட அறிவிப்பு பாருங்கள். அது மட்டுமல்ல, எங்களுக்கு இன்னமும் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆதரவாளர்கள் வியாபித்திருக்கிறார்கள் என்று சொன்னது, விடுதலைப் புலிகள் மட்டும் வியாபித்திருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை, தி.மு.க. வினரையும் சேர்த்துதான் அவருடைய ஆட்கள் என்று சொல்லியிருப்பதாக நான் கருதுகிறேன் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, காவல்துறை இந்த விஷயத்தையும் உஷாராக கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கருணாநிதியைப் பொறுத்த வரையில் ஜனநாயக ரீதியாக மக்களைச் சந்திக்க முடியவில்லை. ஜனநாயகத்தில் அவருக்கு நம்பிக்கையில்லை. அவருக்குக் கை வந்த கலையான வன்முறையை இன்றைக்கு ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் ஒருபடி மேலே போய்

சொல்ல வேண்டுமென்றால், சிவராசன் உயிரோடு பிடிபடாமல் போன பிறகு.... (மணியடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 நிமிடங்கள் ஆகிவிட்டது.

திரு. க. அர்ச்சுனன் : புரட்சித் தலைவியின் செல்வாக்கை அசைக்க முடியவில்லை. புரட்சித் தலைவியின் செல்வாக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதைக் கண்டு அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இன்றைக்கு சிவராசனுடைய அந்தச் செயலை அவர் பொறுப்பேற்றுக் கொண்டு அந்தக் காரியத்திலே ஈடுபட்டு இருக்கிறார் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நக்சலைட்களினுடைய பிரிவுகளான ஆர். ஓய். எல்., ஆர்.ஓய்.எஃப்., ராடிகல் யூத் லீக், ரெவல்யூஷனரி யூத் ஃபிரன்ட், தமிழ் சாவுனிஸ்ட்—இப்படிப்பட்ட தீவிரவாத இயக்கங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் நக்சலைட்களினுடைய கொள்கைகளிலிருந்து பின் வாங்கி, அவர்கள் நக்சலைட்களினுடைய கொள்கைகளை எல்லாம் விட்டுவிட்டு, இன்றைக்கு தனி ஈழம் அமைய வேண்டுமென்று, அம்பாசமுத்திரம், அம்பத்தூர், மதுரை, வேலூர், பண்ருட்டி, திருநெல்வேலி—அங்கெல்லாம் அவர்கள் மாநாடு போடுவதற்கு உண்டான காரியத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். திடீரென்று இந்த மாநாடுகள் போட வேண்டிய அவசியம் எங்கே வந்தது? இவர்களுக்கு நிதி ஆதாரத்தை யார் ஏற்படுத்தித் தந்தது? இவர்களைத் தூண்டிவிட்டது யார்? இதை நாம் யோசித்தாக வேண்டும். இதற்கு கலைஞர் கருணாநிதி அவர்கள் குவித்து வைத்து இருக்கிற, கொள்ளை அடித்து வைத்து இருக்கிற பணத்தை வைத்து இவர்களை ஊக்குவித்து, இந்த மாநாடுகளுக்கு போஸ்டர்களை அடித்து, அவர்களைத் தூண்டிவிட்டு வன்முறையை தூண்டி இருக்கிறார்கள் என்பதனை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். எனவே தான் இந்த நக்சலைட் பிரிவுகள் தனி ஈழத்துக்கு ஆதரவு, இங்கே தனித் தமிழ்நாடு வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தி, இவர்கள் மூலம் சட்ட ஒழுங்கை சீர் குலைக்கிற காரியத்தை கலைஞர் கருணாநிதி மறைமுகமாக ஏற்பாடு செய்து இருக்கிறார்கள் என்பதனை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதுவும் என்ன சொல்கிறார்கள் என்றால், ராஜீவ் காந்தியை கொலை செய்தது சரிதான் என்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். ராஜீவ்காந்தி அவர்கள் சிந்திய இரத்தம் இந்த மண்ணிலே காயும் முன்னே



அவர் கொலை செய்யப்பட்டது சரி தான் என்று சொல்லி இப்படி தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே அவர்கள் மாநாடு போட்டுப் பேசுவதை ஏற்க முடியுமா? எனவே கருணாநிதி தான் தி.மு.க.-வை தனது குடும்பக் கட்சியாக வைத்துக் கொண்டு, கொலை வெறிக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன் (மணி அடிக்கப்பெற்றது).

தனி ஈழம் வேண்டுமென்று சொல்லி தி.மு.க.-வினுடைய தலைமை செயற் குழுவிலே விவாதிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே தனி ஈழம் அமைந்தால், இங்கே இந்தியாவுக்கு எதிராக இங்கிருந்து தி.மு.க.-வினரில் ஒருசிலரை இப்படிப்பட்ட வன்முறைக் கும்பலைக் கொண்டுபோய் தனி ஈழத்திலே பயிற்சி பெற்று, அங்கிருந்து இந்தியாவுக்கு எதிராக இந்தியாவினுடைய பிரிவினையைத் தூண்டுகிற வகையில் போராடி தனித் தமிழ்நாடு உருவாக்கி, தனி ஈழமும் தனித் தமிழ்நாடும் சேர்ந்து தமிழர்கள் ஆளக்கூடிய ஒரு பகுதியை உருவாக்குவதற்கு உண்டான திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்பதனை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன. சுதந்திரக் காற்றை அங்கே போய் சுவாசிப்பார்களாம். இதிலே காவல் துறை உன்னிப்பாக இருந்து இதை முளையிலேயே கிள்ள வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆந்திர நக்சலைட்களுக்கும் இவர்களுக்கும் ஏ.கே. 47 துப்பாக்கி பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்து காவல் துறை செயலாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். பூராசாமி.

திரு. க. அர்ச்சுனன் : இன்னும் கொஞ்சம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும்.

*திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அவையிலே அமர்ந்து பேசுவதற்கு வாய்ப்பும் வசதியும் அளித்த எங்கள் குல தெய்வம் தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த பூம்புகார் தொகுதிவாழ் பெருமக்களுக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பூம்புகார் தொகுதியில், பூம்புகாரிலே ஐம்பெரும் காப்பியங்கள் உண்டு. அதில் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை என்ற ஐம்பெரும் காப்பியங்கள்

[திரு. எம். பூராசாமி] [1991 செப்டம்பர் 23

உருவாவதற்கு இந்த பூம்புகார் தொகுதிதான் காரணம். பூம்புகார் தொகுதியின் வளமான அந்த நாள் உருவாக வேண்டும். நமக்காக காவிரி நீரைத் தந்தது, நமது அன்பு தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள். அந்த காவிரி புகும் இடம் தான் காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார். அந்த பூம்புகாருக்கு காவிரித் தண்ணீர் பாய்வதற்கு நல்ல பல திட்டங்களைத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பூம்புகாரிலே ஒரு நல்ல கப்பல் தளம் ஏற்படுத்த வேண்டும். தரங்கம்பாடியிலேயும் கப்பல் தளம் ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பூம்புகார் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒன்றாக சந்தித்த இடம். அவர்கள் பல பிரச்சினைகளை உருவாக்கி, அந்த பூம்புகார் தொகுதியிலே இந்திர விழா கண்டார்கள்.

முற்பகல் 11-25

சித்ரா பௌர்ணமி என்ற விழாவை தமிழ் நாட்டின் முதல் விழாவாக, இந்திர விழாவாக கொண்டாடினார்கள். அந்த இந்திர விழாவில், சித்திரா பௌர்ணமி முழுநிலா விழாவில் நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் கலந்து கொண்டு, அங்கு முன்பு பண்டைய காலத்தில் கொண்டாடப் பட்டதைப் போல, இப்போதும் கொண்டாடும் வகையில் செய்து சிறப்பிக்க வேண்டுமென்று இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அள்ளி அள்ளிக் கொடுத்தது அமுத சுரபி. சிலப்பதிகாரத்தில் மணிமேகலை என்ற பெண் அள்ளி அள்ளி கொடுத்தாள் பூம்புகாரில். தமிழ்நாட்டில் அரசு என்ற அமுதசுரப்பியை வைத்துக் கொண்டு அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு அள்ளி அள்ளி கொடுக்க வேண்டும். அரசு என்ற அமுதசுரபியை வைத்துக்கொண்டு அள்ளி அள்ளி கொடுக்கும் நம் புரட்சித் தலைவியை நான் மணிமேகலை என்று அழைக்க விருப்பப்படுகிறேன்.

அதைப்போல காவிரி நீரை இன்றைக்கு தமிழக மக்கள் பருகும் அளவுக்கு காவிரி நீரைக் கொண்டு வந்த நம்முடைய தலைவியை நான் கங்காதேவி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல தமிழக மக்கள் அனைவரும் கட்டாயமாகக் கல்வி கற்கவேண்டுமென்று கல்விக்கு கணக்கற்ற கோடிகளை இன்றைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிற நம்முடைய தானைத் தலைவி புரட்சித்தலைவி அவர்களை நான் கலைவாணி என்று அழைக்க விருப்பப்படுகிறேன்.



1991 செப்டம்பர் 23] [திரு. எம். பூராசாமி]

இன்றைக்கு தமிழக சட்டமன்றத்தில் நல்லதொரு மானியக் கோரிக்கையில்— போலீஸ் துறையில் பேச அனுமதித்து இருக்கிறீர்கள். காவல் துறை நல்லமுறையில் பணியாற்ற வேண்டும், அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்ய வேண்டுமென்று, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இத்துறையை நவீனப்படுத்தி இருக்கிறார்கள். இத்துறையை நவீனப்படுத்துகிற திட்டங்களையெல்லாம் நாம் வரவேற்றுக் கொண்டிருக்கிறோம். இது என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால் இன்னும் சிலவற்றை கூற விரும்புகிறேன்.

எங்கள் பூம்புகார் பகுதியில் தரங்கம்பாடி என்ற ஊர் இருக்கிறது. அங்கே கிடைக்கும் ஓசோன் காற்று உலகப் புகழ் பெற்றது. இந்தியாவில் எங்கும் வீசாத ஓசோன் காற்று இங்கு வீசுவதால், சுகாதாரத்திற்கு ஏற்ற அந்தக் காற்று சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இருக்கிறது. எனவே, தரங்கம்பாடி தொகுதியை சுற்றுலா தலமாக்க வேண்டும். அதைப்போல பல எண்ணற்ற சோழர் காலத்து கோவில்கள் பூம்புகார் தொகுதியில் இருக்கின்றன. அந்தக் கோவில்களை, சிறப்பு நிதியைக் கொண்டு நல்ல பல திட்டங்களை வகுத்து புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இந்த அவையில் பேச அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி இலதா பிரியகுமார்.

***Tmt. Latha Priyakumar :** Honourable Speaker Sir, I begin my maiden speech today in this August house, which has a rich tradition of more than half a century, by paying homage to the illustrious leaders of our State who had sacrificed their lives to the cause of Independence. I speak with mixed feelings ; the grief and sorrow of having lost one of the greatest sons of India, Honourable Shri Rajiv Gandhi on the soils of Tamil Nadu still lingers on. It is an irreparable loss. He was halfway to realising the dreams and goals of our illustrious and revolutionary leaders Shri Jawaharlal Nehru and Smt. Indira Gandhi. He was one who had the interests of the Nation, the downtrodden, the poor and the women uppermost in his mind. He was the leading light of the youth of India. I owe my entry into this Assembly to him, as it was he who had spotted me, my work and given me this opportunity. My respectful and reverential homage to him. I take this opportunity to thank the electorate of Arakkonam for reposing confidence in me.

[Tmt. Latha Priyakumar] [1991 செப்டம்பர் 23

முற்பகல் 11-30

At the outset, I offer my congratulations to our esteemed Chief Minister Puratchi Talaivi for the unique composition of the present Assembly. The House owes to her, for having achieved this massive mandate, from the people of Tamil Nadu, to usher in a period of peace and prosperity and to have an accelerated growth in all spheres —Agricultural. Industrial and social thus bringing about revolutionary economic growth in Tamil Nadu. We in the opposition assure her of our unstinting co-operation in bringing about the desired revolutionary changes. This mandate has been a case of justice delayed but not denied. Every step I took in the scorching sun during my padayatra in April 1989 leading 150 men and women from Tiruttani to Raj Bhavan to demand justice by dismissing the DMK Government for attacking the leader of the Opposition and the present C.M. in this very house, has been amply rewarded. The police force in Tamil Nadu should be a model one, with an image of being a friend and guide to the common man. This image unfortunately is available only in small measures in recent times. We hope under the changed circumstances, this image of the police will also improve. Apart from taking great care at the induction stage and giving them proper orientation and training, it is very necessary to give the Police Force periodical training briefing and may I say, brain washing to make them aware not only of their responsibilities and duties, but their behaviour towards the public. especially the poorer and the downtrodden sections and instil a strict sense of work ethics and discipline They have a special responsibility towards the protection of civil rights and eradication of untouchability and atrocities committed against Scheduled Castes. It is shameful and painful that even after 45 years of independence this most uncivilised act still prevails in our country. It is the police force who should act fair and with tact to bring the culprits to book. I would like to mention that after communal riots in recent times the cases registered one community have been withdrawn while the cases against the harijans are still pending. I appeal to the Chief Minister to help these people. It would indeed be good if the police could take preventive steps to avoid such ugly situations.

The population is growing at a very fast rate. Today's population of the State is 5-1/2 crores. The police are called upon to perform multi-dimentuonal functions. Therefore the strength of the police force should be proportionately increased to keep pace with the requirements. Roughly, we have one police person for nearly 900 people which is most inadequate. The morale of the Police



1991 செப்டம்பர் 23] [Tmt. Latha Priyakumar]

force needs to be toned up and modernised immediately by giving them the state of the art communication network systems, weapons, equipments and vehicles. Regular refresher courses as well as public relations are of paramount importance with a view to the growing threat of terrorism, narcotice and smuggling. I take this opportunity to congratulate the Honourable Chief Minister on coming down heavily as promised during the elections on the LTTE activities in our State and also on closing down the cheap liquor outlets as well as the illicit liquor racket. By this, she has endeared herself to the hardepressed women of our State.

Women being the most under privileged section of our society is amply demonstrated in comparing the percentage of women at the Head Constable level and above, where their representation is viritually non-existent. Out of 4,500 Sub-Inspectors, there are only 108 women Sub-Inspectors. Out of 6,000 Head Constables, there are only 100 women Head Constables in our State. In view of the rising trend in the crimes against women, particular attention need to be paid in this regard. The strength of the women police office should be increased and proper training given to them to deal will these problems. Women police in civil dress could be deployed sensitive areas like bus stands, shopping complexes, near Women. colleges, and schools to prevent ugly situations from developing Promotion avenues for women police should be created. With the. present stress on the education for women, in a widespread manner, I am sure it should be possible to recruit women with proper motivation.

முற்பகல் 11-35

With increased avenues of promotion, a number of motivated and talented young women would be attracted to the Police force. Women Traffic Wardens should be deployed to bring about traffic discipline which is very necessary today. If only traffic is disciplined, more than 30 per cent of the searce fuel could be saved.

I congratulate the Hon. Chief Minister for reviving the Tamil Nadu Police Housing Corporation which was wound up by the previous Government. Housing, though provided, is still inadequate. Apart from taking part in the normal Housing programmes, I suggest that a revolving fund of Rs. 10 crores could be provided for giving housing loans ot construct their own houses.

[Tmt. Latha Priyakumar] [1991 செப்டம்பர் 23

It is very heartening to note that our Hon. Chief Minister, after taking over, has given freedom to the Police force to work independently without fear or favour within the norms. This is a right step. while boosting the morale, with proper encouragement like providing incentives, increaments and promotion opportunities, the Police force in Tamil Nadu could bring about the needed revolution in an effective, revolutionary manner.

I would like to bring to the notice of the House the case of a Sub-Inspector who was on escort duty to the then Minister, Thiru Veerapandi Arumugam and who was involved in an accident. I think the Hon. Member, Thirumathi Ramani Nallathambi, mentioned about this while speaking on the Social Welfare Demand. The Sub-Inspector has been lying in hospital in a coma stage for the past three years. I would appeal to the Hon. Chief Minister to examine whether, apart from the medical facilities, some further medical aids could be given to him and monetary benefits could be given to his family.

With these words, I thank you, Hon. Speaker, for giving me this opportunity to express my views. Thank you.

Hon. Speaker : Thank you. திரு. எஸ். ஆண்டித்தேவர்

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடக்கின்ற போலீஸ் மானியக் கோரிக்கையிலே அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் கலந்துகொண்டு எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். காவல் துறை தமிழகத்திலே தலைசிறந்த—ஒரு பணியைச் செய்கின்ற இலாக்காவாக தொடர்ந்து இருந்திருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுவதிலே, சுதந்திரத்திற்குப் பின்னால் தமிழக போலீஸ் ஸ்காட்லாண்ட் போலீசுக்குச் சமமானவர்கள் என்று சொல்லுவதைவிட இந்தியாவில் இருக்கிற அத்தனை மாநிலங்களிலும் தமிழக காவல் துறையைச் சார்ந்தவர்கள் தலைசிறந்தவர்கள். சட்டம்—ஒழுங்கை காப்பாற்றும் பணியையும், கூற்றம் நிகழ்வதற்கு முன்னதாகவே தடுக்கும் பணியையும், குற்றம் நிகழ்ந்த பின்பும் உடனடியாகக் கண்டுபிடிக்கும் பணியையும் செய்கின்ற ஒரு இலாக்காவாக தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது.



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைய தினம் சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது. குற்றங்கள், அநேகமாக திருட்டுக் குற்றங்கள், ஆண்டுதோறும் புள்ளி விவரத்தைப் பார்த்தால், மிகக் குறைந்திருக்கிறது. இந்த அளவிற்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிற, சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுகிற காவல் துறையினர், சென்ற இரண்டாண்டுக் காலமாக அந்தப் பணியை அவர்கள் செய்யத் தயாராக இருந்தாலும்கூட அவர்களுடைய கைகள் கட்டப்பட்டிருந்தன என்பதை நடந்த நிகழ்ச்சிகளை வைத்து நாம் தெரிந்துகொள்ளலாம். தேர்தல் நேரத்திலேகூட, நாமெல்லாம் சொல்லுகிறபோது காவல் துறையினர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களாகப் பணியாற்றுகிறார்கள் என்று சொன்னோம். அது மட்டுமல்ல. நடந்த நிகழ்வுகளை, நிகழ்ச்சிகளைக் கண்டுபிடிக்க முடிந்தாலும் அவர்களை அந்த வேலையைச் செய்ய விடாமல் தடுத்தார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது. உதாரணமாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்திலே, கோடம்பாக்கத்திலே மாலை ஏழேகால் மணிக்கு பத்மநாபன் அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். ஏழரை மணிக்கெல்லாம் அன்றைக்கிருந்த கமிஷனர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்ற செய்தியைப் பார்த்தோம். சென்றதோடு மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இருக்கிற போலீஸ் அலர்ட் செய்யப்பட்டது என்றும் சொன்னார்கள். அன்று நடந்த அந்த நிகழ்ச்சி என்ன? வெள்ளை மாருதி வேனில் செல்லுகிறார்கள் என்ற தகவல் கிடைக்கிறது. செல்லுகின்றவர்கள் தாம்பரத்தின் பக்கத்திலே இருக்கிற 2 போலீஸ்காரர்களை அடித்துவிட்டுச் செல்கிறார்கள். விழுப்புரத்திற்குப் பக்கத்திலே செல்லுகின்ற போது, வேறொரு தனியார் மாருதி காரிலே சென்றவர்களை இறக்கிவிட்டு, அதையும் எடுத்துக்கொண்டு, வேதாரண்யம் வரை சென்று, அங்கே கோழி சமையல் செய்து சாப்பிட்டு விட்டுச் சென்றார்கள் என்ற செய்தியை யாரும் மறுக்க முடியாது. ஏன் அதைச் சொல்கிறேன் என்று சொன்னால், நமது காவல்துறை அவர்களைப் பிடிக்க முடியாமல் இல்லை. பிடிக்கவிடாமல் செய்தார்கள் என்ற உண்மையினைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-40

அதேபோல், ராமநாதபுரத்திலே ஒரு போலீஸ் காவலரை யுட் சுட்டுவிட்டு, இன்னொருவர் படுத்திருந்தவரைச் சுட்டு விடும். திருவாடானை வரை சென்று, அதே வழியாகத் திரும்பி

மதுரை வரை சென்றிருக்கிறார்கள். காவல்துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் பக்கத்திலே சென்ற போது, அவர்கள் ஏ. கே. 47-ஐக் காட்டி, உன் உயிரைக் காப்பாற்றிக் கொள் என்று சொன்னவுடன், அவர், அந்தக் காருக்குக் கீழே படுத்துக் கொண்டார். தன்னைத் தப்பிக்கச் செய்து கொண்டார் என்ற செய்தியைப் படித்தோம். அன்றைக்கு இருந்த காவல் துறை அவர்களைப் பிடிக்க முடியாமல் இல்லை. அதே காவலர்கள் தான் இன்றும் இருக்கிறார்கள். காவல்துறை பெரிய அதிகாரிகளும் இருக்கிறார்கள். புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, தமிழகத்திலே இருக்கிற ஆயுத கலாச்சாரத்தை ஒழித்துவிடுவேன். போராளிகளைத் தமிழகத்திலிருந்து அனுப்ப வேண்டும். இங்கேயிருக்கிற பெரிய பெரிய தலைவர்களுக்கு எல்லாம் மிரட்டல் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இருபதாம் நூற்றாண்டுக்கு இந்தியாவை வழி நடத்திச் செல்வார் என்று நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் கொலைக்குப் பின்னால், புரட்சித் தலைவி; தமிழகத்திலே பெண் முதலமைச்சர் என்று சொன்னாலும், தன் உயிரையும் குறி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னாலும் அதையும் பொருட்படுத்தாமல் அவர்களை ஒழித்துக் கட்டியே தீருவேன் என்ற நடவடிக்கையில் இறங்கினார்கள். புரட்சித் தலைவி அந்த நடவடிக்கையில் இறங்கினார்கள். இன்றைக்கு வெற்றி கண்டிருக்கிறார்கள். அவர்கள் பெங்களூர் போன்ற மற்ற மாநிலங்களுக்கு ஓடியிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தலைவியினுடைய வார்த்தையை ஏற்று, தமிழக போலீஸ் தனது கடமையை உண்மையாகச் செய்திருக்கிறது. அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைக்கு தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், உரிமையை அளித்ததினால், அவர்கள் துணிவோடு செய்ய முடிந்தது.

இரண்டு ஆண்டுகளாக, தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொன்னால், தமிழக பெரிய போலீஸ் அதிகாரிகள் தன்னிச்சையாக இயங்க முடியவில்லை. உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். மைலாப்பூரிலே 12 போராளிகள் தங்கியிருக்கிறார்கள் என்ற செய்தி போலீசுக்குத் தெரிகிறது. தமிழக அரசு உத்தரவிடுகிறது. அவர்களை அரஸ்ட் செய்யுங்கள் என்று சொன்னால், 10 நிமிடத்திலே அன்று பிடித்து இருப்பார்கள். ஒரு அசிஸ்டெண்ட் கூப்பிட்டு, அங்கு போராளிகள் இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு, வாருங்கள், போலீஸ் என்று சொல்லிவிட்டு வா என்று சொன்னவுடன், அங்கு சென்ற அதிகாரி, கதவைத் தட்டி, 12 போராளிகள் இருக்கிறார்கள். நான் அசிஸ்டண்ட் கமிஷனர், நீங்கள் இங்கே இருக்கிறீர்களா என்று பார்த்து விட்டு வாச் சொன்னார். பார்த்துவிட்டுப் போகிறேன்



என்றார். அவர்கள், அதற்குப் பிறகு தப்பித்ததற்குப் பின்னர் பழிவாங்கப்பட்டவர் யார், அந்த ஏ.சி. பார்த்துவிட்டு, ஏன் அவர்களைத் தப்பிக்கச் செய்தாய், என்றார்கள். போய் அரஸ்ட் செய்து வா என்று சொல்லியிருந்தால், அதற்குரிய ஸ்ட்ரெங்த்தை எடுத்துக் கொண்டு சென்று, அன்றைக்கு அந்த, 12 போராளிகளைக் கைது செய்திருப்பார். அரசே போய்ப் பார்த்துவிட்டு வா என்றால், இந்தச் செய்தியை சொல்லிவிடு என்கிற அளவிற்கு, அன்றைக்கு போலீஸ் துறையின் கைகள் கட்டப்பட்டு இருந்தன.

சாதாரண ஒரு ஏ. சி. சஸ்பெண்ட் செய்யப்பட்டார், அந்த நடவடிக்கையிலே. அந்த அளவிற்கு அவர்கள் பழி வாங்கப் படுகிறபோது, ஏன் தன் கடமையைச் செய்ய வேண்டும், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர, என்ற எண்ணம் வருகிறது. கடமையைச் செய்கின்ற உணர்வினை அன்றைக்கு இருந்த அரசு போலிசைக் கட்டுப்படுத்தியிருந்ததன் காரணமாகத்தான், இரண்டு ஆண்டுக் காலமாக போலீஸ் துறையிலே என்னைப் பொறுத்தளவிற்கு, இருண்ட காலம், தமிழக போலிசுக்கு இருண்ட காலம் என்றுதான் நான் கருதுகிறேன்.

ஆட்டோ சங்கர் மத்திய சிறையிலிருந்து தப்பித்து விட்டான் என்று சொன்னால், 3 தினங்களுக்குள் வேறு மாநிலத்திலே சென்று அவனைப் பிடிக்கின்ற போலிஸ், திறமை வாய்ந்த போலிஸ் நமது போலிஸ்.

அதேபோல் சட்டம்-ஒழுங்கை எடுத்துக் கொண்டால், நான் வங்க மாநிலத்திலே கரக்பூருக்குச் சென்றிருக்கிறேன்.

முற்பகல் 11-45

இரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டுமென்று சொன்னால், அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் 8 மணிக்கு மேல் இந்த ஊரில் சினிமா கிடையாது. உங்களுக்கு நாங்கள் பாதுகாப்பு கொடுக்க முடியாது. உங்கள் பொருட்களை வேண்டுமானால் ஸ்டேஷனில் வைத்துவிட்டு, தனியாகச் செல்லுங்கள். யாராவது கட்டி வைத்து அடித்தால், உங்களுடைய பாக்கெட்டில் இருக்கின்ற பணத்தை எடுத்துக் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால், பாதுகாப்பு கொடுக்க முடியாது என்று போலீஸ் அதிகாரிகள் சொல்கிறார்கள்.

இன்றைக்கு மதுரையில் ஒரு சம்பவம், என்னவென்று சொன்னால், அது அரசுக்குத் தெரிந்து செய்கிறார்களோ, அல்லது தெரியாமல் செய்கிறார்களோ என்பது எனக்குத் தெரியாது. மதுரைக்கு ஒரு சிறப்பான பெயர் என்னவென்று சொன்னால், தூங்காத மதுரை என்று சொல்வார்கள். மீனாட்சிப் பட்டினம்.

[திரு. செ. ஆறுமுகம்] [1991 செப்டம்பர் 23

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 108.68 கோடி ஒதுக்கி இருப்பதை, இன்றைய தினம் இந்த பற்றாக்குறை நிதியாண்டிலேயும் காவல் துறையினுடைய சிரம மான கஷ்டத்தை எண்ணி 1991–92 ஆம் நடப்பாண்டில் ரூ. 241.53 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11–50

காவல் துறையை நவீனமாக்கும் திட்டத்திற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல காவல் துறையை நவீனப் படுத்தும் திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்க மத்திய அரசிடமிருந்து ரூ. 80.45 கோடியை மாண்பு மிகு முதல்வர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். காவல் துறை யிலே இருக்கிற நீண்ட நெடுநாளைய முக்கிய கோரிக்கைகளை உங்கள் முன்னாலே வைக்க ஆசைப்படுகிறேன். காவல் துறைக்கு 40 சதவீதம் டி.ஏ.வும் பஸ் வாரண்டும் வழங்கப்படுகிறது. அதில் வாரண்டை கழித்த பிறகு எஞ்சிய தொகைதான் டி.ஏ. வாக காவல் துறையினருக்கு கொடுக்கப்படுகிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அவர் களுக்கு பஸ் வாரண்ட் தொகை தனியாகவும், டி.ஏ. தனியாகவும் கொடுத்து அந்தக் காவல் துறையினரை ஊக்கப்படுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன. அது மட்டும் அல்ல நம்முடைய புரட்சித் தலைவர் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலத்தில் அவர்களுக்கு ரேஷன் கொடுத்தார் கள். அது 300 ரூபாய்க்கு ரேஷன் பொருட்கள் வாங்குகிறார்கள் என்றால் அவர்கள் 150 ரூபாய் கொடுக்க வேண்டும், என்று இருந்தது. அதாவது பாதிக்கு பாதி 50 சதவீதம் ரிடக்ஷன் கொடுத்தார்கள். ஆனால் அந்தப் பாவிகள் ஆட்சியிலே ஆயிரம் ரூபாய்க்கு பொருள்கள் வாங்கினால் கூட விலைவாசிகள் ஏறிப் போன நிலையில் அதே 150 ரூபாய்தான் குறைக்கிறார்கள். ஆகவே அந்த 50 சதவீதம் என்ற ரிடக்ஷனை நமது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்ததுபோன்று எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல. காவல் நிலையத்திற்கு பக்கத்தில் வீட்டு வசதி இல்லாமல் காவலர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அவர்கள் ஆங்காங்கே குடியிருப்பதனால் அவர்களை அழைத்து அவசர காலங்களில் ஒன்று சேர்க்க முடியவில்லை. பல இடங் களில் அவர்கள் குடியிருப்பதால் அவசரத் தேவைகளின் போது அவர்களை கூப்பிட முடியவில்லை. ஆகவே காவல் நிலையத் திற்கு அருகாமையிலேயே நல்ல குடியிருப்புகளை அமைத்து அவர்களைக் குடியமர்த்த வேண்டும் என்று எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அது



1991 செப்டம்பர் 23] [திரு. செ. ஆறுமுகம்]

மட்டுமல்ல எங்களை உருவாக்கி இந்த மாமன்றத்திலே உட்கார வைத்து ஆளாக்கிய பெருமை எங்கள் புரட்சித் தலைவிக்கு உண்டு. ஆகவே அப்படி எங்களை உருவாக்கிய எங்கள் புரட்சித் தலைவிக்கு, தாய்க்கு மகன் செய்ய வேண்டிய கடமையாக காவல் துறை செய்கிற பாதுகாப்பு பணியோடு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தப் பணியிலே ஈடுபடுத்திக் கொள்ளும்படி பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன். ஆகவே எங்கள் புரட்சித் தாய் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து இந்த சமுதாயத்திற்கு நல்ல புரட்சிகரமான திட்டங் களை அளிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கே. சின்னப்பன்.

*திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய காவல் துறை மானியக் கோரிக்கையின்கீழ் என்னுடைய கருத்தினை வெளியிட இசைந்தமைக்கு எங்களுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை இம்மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய என் னுடைய தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், தமிழகத் தினுடைய முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறிக் கொண்டு என்னுடைய தொகுதியான ஜெயங்கொண்டம் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதி ஆகவே அதிகமான கலவரங்கள் நிகழ்ந்த பகுதியாகவும் கடந்த காலங்களிலே இருந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நமது மாண்பு மிகு முதல்வர் அவர்கள் கூட தேர்தல் சுற்றுப்பயணம் வர முடியாத ஒரு சூழ்நிலை இருந்த போதுகூட அவர்கள் மிகத் தீவிரமாக எங்கள் பகுதிக்கு வந்து அந்தப் பகுதி மக்களிடத்திலே அறிவுரை வழங்கி வந்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் குரலே மகேசன் குரல் என்ற அண்ணா வின் பொன் மொழிகளுக்கு ஏற்ப தமிழ்நாட்டில் புரட்சித் தலைவி தான் ஒப்பற்ற தலைவி என்று ஒருமித்த குரலாக தங்கள் வாக்குச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுத்து வரலாறு படைத்த உலக மக்கள் ஆட்சி முறையில் உவமை கூற முடியாத நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. வன்முறையினருக்கு இங்கே இடம் இல்லை என்று தங்கள் ஓட்டுச் சீட்டின் மூலம் புரட்சித் தலைவி ஆட்சியை சந்தேகத்திற்கு இடம் இன்றி தேர்ந்தெடுத்த முறை மக்களாட்சி முறையில் தமிழக மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது. யுத்தம் இன்றி ரத்தம் இன்றி காந்தி யடிகள் பெற்ற சுதந்திரத்திற்கு அன்னையின் மௌனப் புரட்சி மூலம் தமிழக மக்கள் அளித்துள்ள தீர்ப்பு ஜனநாயகத்தில்

[திரு. கே. கே. சின்னப்பன்] [1991 செப்டம்பர் 23

ஒரு புதிய பரிமாணமாக அமைந்துள்ளது என்பது குன்றின் மீது விளக்காக அமைந்துள்ளது. தமிழக மக்களின் திறனை உலக மக்கள் மீண்டும் அறிய ஒரு வாய்ப்பினை அளித்த நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் வன்முறையானது இந்திய சுதந்திர வேள்வியில் ரோஜாவின் மைந்தராகத் திகழ்ந்த தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்த நேரு குடும்பத்தின் வாரிசான எங்கள் அன்புத் தலைவர் ராஜீவ் காந்தியின் உயிரைப் பலி கொள்ளும் அளவுக்குச் சென்றதை இந்த நாடும் இந்த மன்றமும் நன்றாக உணரும். அதை அடக்கி, இந்த வன்முறையாளர்கள் ஒடுங்குகின்ற அளவுக்கு மிகத் தீவிரமான நடவடிக்கையினை எடுத்த தமிழகத்தின் முதல்வர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு நாடும் நல்லோரும் இன்றைய தினம் நன்றிக் கடனைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் கட்டுப்படுத்தப்பட்ட வன்முறைகள் மீண்டும் தலை தூக்காமல் இருக்க காவல் துறைகளை விழிப்புடனும் தயார் நிலையிலும் இருப்பதற்காக அத்துறைக்கு இவ்வரசு ரூ. 240 கோடிக்கு மேல் செலவழிக்க உள்ளதை மனமாறப் பாராட்டுகிறேன். எனது தொகுதியான ஜெயங்கொண்டம் தொகுதி அடிக்கடி கலவரம் ஏற்படுகின்ற ஒரு தொகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகம் கடந்த ஒரு சில ஆண்டுகளிலே திறக்கப்பட்டது. அந்த அலுவலகம் இப்போது மூடப்படவிருப்பதாக நான் அறிகிறேன். நான் மெத்த பணிவோடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது அந்த துணை கண்காணிப்பாளர் பதவியை அந்த ஜெயங்கொண்டம் பகுதியிலே நிரந்தரமாக அமைத்து அந்தப் பகுதியிலே ஏற்படுகின்ற ஜாதிக் கலவரங்களை உடனடியாக ஒடுக்குவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் உறுதுணையாக அந்த அலுவலகத்தை நிரந்தரமாக கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், எனது பகுதியிலே மிகவும் பின்தங்கிய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும் எந்த நேரத்திலும் தங்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கின்ற ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், ஆண்டிமடம் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களிலே பணி



1991 செப்டம்பர் 23] [திரு. கே. கே. சின்னப்பன்]

யாற்றக்கூடிய காவல் துறை ஆய்வாளர்கள் இன்றையதினம் இல்லாத நிலையினால் பொது மக்கள் தங்களுடைய குறைகளைச் சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், அங்கே துணை கண்காணிப்பாளர் அலுவலகம் இருந்தாலும், அங்கே இதுவரையில் நிரந்தரமாக எந்த ஒரு துணை கண்காணிப்பாளரும் பணியாற்றாத நிலை இருக்கிறது. அதற்கு காரணம் அந்தப் பகுதியிலே இருக்கின்ற காவல் துறையினருக்கு சரியான குடியிருப்பு வசதிகள் இல்லாததாலும், அவர்களுடைய குழந்தைகள் கல்வி பெறுகின்ற அளவுக்கு அந்தப் பகுதியிலே பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தினாலும் அங்கே தங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே காவல் துறையை நவீனப்படுத்த இருக்கின்ற நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த பின்தங்கிய பகுதியிலே உள்ள காவலர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்தப் பகுதியிலே தீயணைப்பு நிலையம் ஒன்று உள்ளது. அந்தப் பகுதியிலே தீ விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தினாலே அங்கே ஒரு பழைய ஊர்தி மட்டும் இருப்பதால் நல்ல ஊர்தியை எங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அங்கே தீ விபத்து ஏற்படுமேயானால் அரியலூரோ, சிதம்பரமோ அல்லது கும்பகோணமோ செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது, எனவே அந்த தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு புதிய வண்டியை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே பல்வேறு வித மான சர்ச்சைகளும், ஜாதிச் சண்டைகளும் ஏற்படுகின்ற காரணத்தினாலே அந்த பகுதியிலே புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல இளைஞர்களை காவல் துறை அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். அதைக் கருத்தில் கொண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). மாண்புமிகு நம்முடைய முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியின் போது 1987 ஆம் ஆண்டு காவல் துறையிலே நியமிக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, கடந்த ஆட்சி காலத்திலே பல்வேறு தொல்லைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலே பணி நிரந்தரம் செய்யப்படாமல், பல்வேறு நிர்வாக ஆணையின் காரணமாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்

கையினை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பரிவோடு ஏற்று அவர்ளை் பணி நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுச்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கே. சின்னப்பன் : துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புக்குரிய வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் மீதும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்கள் மீதும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தோழர்கள் மீதும் கடந்த கால அரசால் போடப்பட்ட வழக்குகளை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் வாபஸ் பெறுவதாக அறிவித்தார்கள். அவர்களுக்கு உண்மையிலேயே தமிழக மக்களின் சார்பாகவும், எங்கள் சார்பாகவும் உளம் நிறைந்த நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றை நம்முடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

நன்பகல் 12—00

கடந்த தி.மு.க. ஆட்சியில் பேராவூரணி தொகுதியில் உள்ள தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், சுமதி என்ற ஒரு 18 வயது பெண்ணை கற்பழித்ததாக அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு கடந்த கால அரசால் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் ரெஃப்பர் செய்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் இது போன்ற வழக்குகளை உடனடியாக துரிதமான முறையில் மீண்டும் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த அளவுக்கு பேச வாய்ப்புக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். ஜி. சேகர்.

திரு. எம். ஜி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல்துறை மானியத்தின் மீது உரையாற்றுகின்ற நல்வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய





நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசின் சார்பாக அளித்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையின் முதல் வரியிலேயே ;

''அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு''.

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் குறளை விளக்கமாக தந்துள்ளார்கள். நாட்டை ஆளுவதற்கு வேண்டிய இயல்புகளாக, அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவு படாமல் இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றபோது அஞ்சாமையைத் தான் முதன் முதலாக வள்ளுவப் பெருந்தகை வைத்து இருக்கிறார்கள்.

இன்றைக்கு அந்த அஞ்சாமைக்கு அடையாளமாக நம்முடைய இதய தெய்வம், தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த கால தமிழக வரலாறுகளை நாம் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் பிரிவினைவாத சக்திகள், பயங்கரவாத சக்திகள், இந்த சக்திகளின் தூண்டுதலால், விடுதலைப் புலிகளால் அன்றைக்கு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு குறைந்து முற்றும் தமிழ்நாடு சீர்குலைந்து கிடந்தது. அந்த பயங்கர சக்திகளுக்கு சவாலாக; அந்த பிரிவினை சக்திகளுக்கு சவாலாக; பஞ்சாப்பாக மாறவிருந்த, அசாமாக மாறவிருந்த இந்த தமிழகத்தை அந்த பயங்கரவாத சக்திகளுக்கு ஒரு சவாலாக நின்று இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் அமைதியை காப்பாற்றி வருகிறார்கள் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் அந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எதற்கும் துணிந்து நின்று, களத்தில் நின்று அமைதியை நிலைநாட்டி, தமிழ்நாட்டு மக்களின் அமைதியை காப்பாற்றிய அந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நாம் பாராட்டுவது நம்முடைய இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும்.

முன்பு இருந்த தி.மு.க. ஆட்சியில் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த முடியாமல் கருணாநிதி அவர்கள் விடுதலைப் புலிகளோடு இணங்கிப்போனார், அல்லது சமரசமாகப் போனார்; அல்லது சரண் அடைந்துப் போனார். இதுதான் வரலாறு ஆகும். கடந்த வரலாறுகளைப் பார்க்கின்றபோது விடுதலைப் புலிகள் கருணாநிதி அவர்களை ஒரு தீண்டத் தகாதவராக வைத்து இருந்தார்களே ஒழிய விடுதலைப் புலிகளுக்கும் கருணாநிதிக்கும் அன்றைக்கும் சுமூகமான உறவு இருந்தது இல்லை. கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற போராளிகள், ஈழத்தில் இருக்கின்ற அந்த தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக ஒரு பெரும் நிதியைத் திரட்டி

அன்றைக்கு ஈழப்போராளிகள் குழுக்களுக்கு வழங்கினார்கள். அதை நாம் மறந்து விட முடியாது. அவ்வாறு வழங்கிய அந்த நிதியைக்கூட விடுதலைப் புலிகள் பெறாமல் அந்த நிதியை புறக்கணித்ததை நாம் மறந்துவிட முடியாது. அதைப்போல அன்றைக்கு தமிழ் ஈழ இயக்கத்தினுடைய தலைவராக இருந்த திரு. சபாரத்தினம் அவர்களை, அவர்கள் கருணாநிதி அவர்களுக்கு இணக்கமாக இருந்தவர், நெருக்கமாக இருந்தவர், அவர்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்தார்கள் என்ற வரலாற்றை நாம் மறந்து விட முடியாது. எனவே கருணாநிதி அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அன்றைக்கும் என்றைக்கும் சுமூகமான சூழ்நிலை இருந்தது கிடையாது. ஆனால் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு கருணாநிதி அவர்கள் லாலி பாடினார்கள், அல்லது விடுதலைப் புலிகளுக்கு சமரசமாகப் போனார்கள். அல்லது விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்துப் போனார்கள் என்று சொன்னால் தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கின்ற தன்னுடைய ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்கு; தன்னுடைய ஆட்சியில் இருக்கின்ற அந்த பல்வேறு பிரச்சினைகளால் சட்டம் ஒழுங்கு குலைந்து இருக்கிறது. ஆகவே அந்த விடுதலைப் புலிகளை பகைத்துக் கொண்டு அல்லது விடுதலைப் புலிகளை எதிர்த்துக் கொண்டு அவர்களை அடக்க முடியவில்லை, அந்த தைரியம் இல்லை, அந்தத் துணிவு இல்லை; விடுதலைப் புலிகளிடம் சரண் அடைந்து; கருணாநிதி அவர்களுக்குப் பின்னால் சில நாட்களில் இணக்கமாகப் போனார்களே ஒழிய தமிழ் ஈழம் பெற வேண்டும்; அல்லது தமிழ்நாட்டில் இருக்கின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அவர் தன்னுடைய ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள; சொல்லப் போனால் தமிழ் காக்க தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தேன் என்று கதை சொன்ன தன்னுடைய தலையை காப்பாற்றிக் கொள்ள கருணாநிதி அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு இணக்கமாகப் போனார்களே ஒழிய விடுதலைப் புலிகளை ஆதரித்துப் போகவில்லை. ஆனால் இந்த விடுதலைப் புலிகள் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக அடக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்தார்கள். ஆனால் கருணாநிதி ஆட்சியில் விடுதலைப் புலிகள் கருணாநிதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். நாட்டைப் பொறுத்தவரையில் கருணாநிதி ஆட்சியில் கருணாநிதி ஆளவில்லை; விடுதலைப் புலிகள்தான் தமிழ்நாட்டை ஆண்டார்களே ஒழிய; கருணாநிதி அவர்களுக்கு விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்துகின்ற அந்ததிறமை அல்லது ஆண்மை ஒட்டு மொத்தமாக இல்லை. இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற ஒப்பற்றத் தலைவியாக புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகின்றார்கள். அதேபோல, அன்றைக்கு ஈழத் தமிழர்களுக்காக, புரட்சித் தலைவர், இதய தெய்வம் அவர்கள் ஆதரவு கொடுத்தது வேறு. ஆனால் தமிழ் ஈழக் கோரிக்கையை மறந்துவிட்டு ஈழத் தமிழர்களின் நலனை மறந்துவிட்டு, இன்றைக்கு அலைந்து கொண்டிருக்கிற பிரபாகரன் கும்பலினுடைய நிலைமை வேறு. அதேபோல் ஒரு பிரபாகரன் கொல்லப்பட்டால் ஓராயிரம் பிரபாகரன்கள் உருவாவார்கள் என்று புரட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளைப் பாராட்டினார்கள். நாம் மறந்துவிடவில்லை. ஆனால் இன்றைக்கு ராஜீவ்காந்தியை, தன்னுடைய கொள்கைகளை மறந்துவிட்டு, இன்றைக்கு சுயநல அதிகார வெறிகொண்ட பிரபாகரன் கும்பல், ராஜீவ்காந்தி அவர்களைக் கொன்றிருக்கின்ற, இன்றைக்கு இருக்கிற அந்தக் கும்பல் வேறு. எனவே, இன்றைக்கு இருக்கிற விடுதலைப்புலிகள் ராஜீவ்காந்தியைப் பலிகொண்டதோடு மட்டுமல்லாமல் பல்வேறுபட்ட சதித் திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள் என்று செய்திகள் நாள்தோறும் பத்திரிகைகளில் வந்த வண்ணம் உள்ளன. நாம் பத்திரிகைகளிலே பார்க்கின்றோம். புரட்சித் தலைவியைத் தாக்க வேண்டுமென்பதற்காக, பாதாள சாக்கடையிலே பதுங்கியிருந்து திட்டம் தீட்டுகிறார்கள் அல்லது புரட்சித் தலைவியை தாக்க வேண்டுமென்பதற்காக 500 தற்கொலைப் படையினர் தமிழ் நாட்டிலே புகுந்து இருக்கிறார்கள் என்ற செய்திகள் இன்றைக்கு வாரப் பத்திரிகைகளிலும் நாளேடுகளிலும் வந்த வண்ணம் இருக்கின்றன. இந்தச் செய்திகளைப் படிப்பதற்கு நம்முடைய மனம் கூசுகிறது என்று சொன்னாலும்கூட அந்தச் செய்திகளைப் புறக்கணித்துவிடவோ, அந்தச் செய்திகளை பாராமுகமாக இருந்துவிடவோ முடியாது. எனவே இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து இருக்கிறார் என்று சொன்னால், பஞ்சாப்-ஆக, அஸ்ஸாம்-ஆக, பயங்கர பிரிவினைவாத சக்திகளால் அன்றைக்கு நாசப்படுத்திய இந்தத் தமிழ்நாட்டை, தனது உயிரைப் பணயம் வைத்து . . . (மணியடிக்கப்பெற்றது).

பிற்பகல் 12.05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள் எல்லோருக்கும் ஒதுக்கப்பட்டது ஒரே நேரம்தான். தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஜி. சேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வென்ற மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனவே நேரம் கூடுதலாகத்

தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எனவே, புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு புறத்திலே, கள்ளச் சாராயம் ஒழிப்பு என்ற கட்டுவிரியனோடு போராட்டம் ; இன்னொரு புறத்திலே புரட்சித் தலைவி அவர்கள் மதுக்கடைகளை அகற்றியதால் 400 கோடி ரூபாய்க்கு மேலாக வருவாய் இழப்பு என்ற மலைப்பாம்போடு போராட்டம், இதற்கு மேலாக ராஜீவ்காந்தியைக் கொன்ற பயங்கரவாதங்களை ஊக்குவிக்கின்ற கருநாகப்பாம்போடு போராட்டம். எனவே, இந்தச் சவால்களை எதிர்த்து துணிவோடு களத்திலே இருக்கின்றார். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். நான் கடந்த முறை கவர்னர் உரையிலே பேசுகின்ற போது ஒரு கடிதம் வந்தது. கருணாநிதி அவர்களை தாக்கிப் பேசியதால் வந்த அச்சுறுத்தல் கடிதம். அதை நான் பேரவைத் தலைவர் அவர்களுக்குக்கூட காட்டியிருக்கிறேன். அது ஒரு மிரட்டல் கடிதம். கருணாநிதி அவர்களைத் தாக்கி சட்டமன்றத்தில் பேசியதால் ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட நிலைதான் உங்களுக்கும் ஏற்படும் என்றும், புரட்சித் தலைவி அவர்களைத் தாக்கி, இதய தெய்வம், எம். ஜி. ஆர். -ஐத் தாக்கி, ராஜீவ் காந்தியைத் தாக்கி, பயமுறுத்தி எல்லாம் கடிதம் வந்தது. இந்தக் கடிதங்களை நான் எதற்குக் காட்டுகிறேன் என்று சொன்னால், இன்றைக்கு அந்த அளவுக்கு விடுதலைப் புலிகள், தமிழ் நாட்டிலே இருக்கின்ற அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை, புரட்சித் தலைவியினுடைய பின்னால் செல்லுகின்ற நமக்கு எந்த மிரட்டலாக இருந்தாலும் சரி, அதே போன்ற விளைவுகள் இருந்தாலும் சரி தகர்த்து எரிகின்ற மன ஆற்றல் நமக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாவீரன் அலெக்சாண்டர், உலகத்தை தன்னுடைய காலடியில் வென்று காட்டியவன். அவன் கிழக்காசிய நாடுகளை நோக்கி படை நடத்துகிறான். ஆப்கானிஸ்தான் மண்ணிலே போர்க்களம். இறுதியில் அலெக்சாண்டர் வெற்றி பெறுகிறான். ஆனால் அவனுடைய இடுப்பு பகுதியின் முக்கால் பகுதி போரிலே வெட்டப்படுகிறது. உலகப் புகழ் பெற்ற அரண்மனை மருத்துவர்கள் உடன் இருக்கிறார்கள். அலெக்சாண்டருக்கு மருத்துவம் பார்க்கின்றார்கள். ஆனால் உயிர் பிழைப்பான் என்கின்ற நம்பிக்கை இழக்கின்றனர். நெஞ்சழுத்தக்காரன் அலெக்சாண்டர் பிழைத்து எழுகிறான். அதே சம்பவம், அதே வரலாறு நம்முடைய இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு முறை அல்ல இரண்டு முறை ஏற்பட்டது. அந்த அஞ்சாமைக்குச் சொந்தக்காரன், மாவீரன் எம்.ஜி.ஆர். ; ஆனால் அவருடைய அஞ்சாமையை வெல்லுகிற வகையில் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் தமிழ் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சோதனை வந்தது ; வென்றார்கள். ஆனால் புரட்சித் தலைவி



அவர்கள், அவர்கள் வழியே சென்று அந்தச் சோதனைகளைச் சந்திக்கின்ற ஒரு பேராண்மையைப் பெற்று இருக்கின்றார்கள். ஒரு நாள் நம்முடைய தமிழச்சி ஒருத்தி, சீறி வரும் புலியை முறத்தால் அடித்துத் துரத்தினாள் என்பது நாம் இலக்கியத்தில் படித்திருக்கின்ற வரலாறு. ஆனால் தமிழ்நாட்டிலே அமைதியைக் குலைக்கின்ற விடுதலைப் புலிகளை ஒட்டு மொத்தமாக தமிழ் நாட்டை விட்டு வெளியேற்றிய மறத்தமிழச்சியாக, தாய் தமிழாய் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டு ஆக வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 12–10

திரு. எம். ஜி. சேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறையைச் சீர்படுத்த சில கோரிக்கைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாட்டினுடைய காவல் துறையை நவீனப்படுத்த ஒரு அருமையான திட்டத்தைத் தயாரித்து அதை பிரதம அமைச்சகத்திடமும், உள்துறை அமைச்சகத்திடமும் எடுத்துச் சென்று முதன் முதலாக அதனுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள். அதே போன்று, காவல் துறையைப் பொறுத்த வரை, இன்றைக்குக் குறிப்பிடுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதாவது, நம்முடைய தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டு இருக்கின்றோம். காவல் துறையைப் பொறுத்து, மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் நம்முடைய அரசு செயல்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். அதற்கு ஃபிக்ஸிங் யார்ட்ஸ்டிக் என்று ஒரு முறையை வைத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதாவது காவல் நிலையத்துக்கு வருகின்ற புகார்கள் பெரும்பாலும் பதிவுசெய்யப்படவில்லை என்கின்ற குறை இருக்கிறது. எனவே, ஃபிக்ஸிங் யார்ட்ஸ்டிக் மூலமாக 500 புகார்களிலிருந்து 600 புகார்கள் வருமேயானால், ஒரு காவலரையும், ஒரு தலைமைக் காவலரையும், அதற்கு மேலாக வந்தால் ஒரு துணை ஆய்வாளரையும் வைப்பதற்கான ஒரு முறையைக் கொண்டு வர வேண்டும். எனவே, 80 விழுக்காடு காவலர்கள் பதவியில் நுழைந்து ஓய்வு பெறுகின்றபோதும், காவலர்களாகவே ஓய்வு பெறுகின்றார்கள். அதற்கும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதே போன்று, குடியிருப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆயுதப் படை போன்றவைகளில் இருக்கின்ற அவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள காவல் துறை மானியக் கோரிக்கையின் பேரில் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் குறிப்பிட்டுள்ள ஏழு நிமிடங்களுக்குள் என்னுடைய உரையை நிச்சயமாக முடித்துக் கொள்வேன்.

ஒரு அரசுக்கு நல்ல பெயரையோ, கெட்ட பெயரையோ ஈட்டித் தருவது காவல் துறையாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால், பொதுமக்களுடைய உயிர்கள், உடைமைகள், உரிமைகள் இவைகளைப் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு காவல் துறைக்கு இருக்கிறது. பொது மக்களிடையே நேரடியாக அவர்களுடைய பிரச்சினைகளில் சம்பந்தப்படுகின்ற அந்தப் பொறுப்பு காவல் துறைக்கு இருக்கிறது. எனவே, காவல் துறைதான் ஒரு அரசினுடைய நல்ல பெயரையும், கெட்ட பெயரையும் நிர்மாணிப்பது.

இந்தத் துறையைப் பொறுத்த வரையிலும், எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு இப்பொழுது ஒரு கட்டுப்பாட்டுக்குள் இந்தத் துறை காணப்படுவதை நாம் பெருமையோடு குறிப்பிட்டாக வேண்டும். இதற்கு மூலகாரணம், உறுதியான கொள்கைப் பிடிப்பையும், அசைக்க முடியாத மக்கள் நம்பிக்கையையும், துணிச்சலான நடவடிக்கையை மேற்கொள்ளுகின்ற அந்த மனப் பக்குவத்தையும், பாரபட்சமற்ற பொது நோக்கையும் பெற்று இருக்கின்ற நம்முடைய முதல்வரவர்கள் இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றிருப்பதனாலே இன்றைக்குக் காவல் துறையின் பேரிலே பொதுமக்களுக்கு ஒரு நம்பிக்கையே ஏற்படத் தொடங்கி இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கள்ளச் சாராய ஒழிப்பு, விடுதலைப் புலிகளினுடைய ஒடுக்கம், இவைகளிலே இப்பொழுது நம்முடைய காவல் துறையிலே ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியிருக்கிறது.



இங்கே பேசிய பல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கடந்த இரண்டாண்டுக் காலமாக, சட்டமும் ஒழுங்கும் அவர்களுடைய கையிலே எடுத்துக் கொள்ளப்பட்டு, அது அவர்களுடைய விருப்பம் போல நடந்து கொண்டிருந்தது என்றெல்லாம் சொன்னார்கள், அது கடந்த ஆட்சியிலே. இப்பொழுதும் கூட அவர்கள் சட்டம் ஒழுங்கை அவர்களாகவே எடுத்துக் கொள்கிற ஒரு காட்சியை இன்றைக்குக் காலையிலே முரசொலி பத்திரிகையிலே பார்க்க முடியும். அவர்களாகவே அஞ்சல் வழிக் கல்வி என்று ஒரு கல்வியைத் தொடங்கி இருக்கிறார்கள். அதற்கு விளம்பரம் போட்டிருக்கிறார்கள். அந்த விளம்பரத்திலே அவர்கள் சொல்கிறார்கள், பிழைக்க கல்வி பெறுவது என்பது ஒன்று, வாழக் கல்வி பெறுவது வேறொன்று, நாங்கள் வாழ்வதற்குக் கல்வி சொல்லித் தருகிறோம், பிழைப்பதற்கு வேறு சிலர் கல்வி சொல்வார்கள் என்றெல்லாம் அதிலே விளம்பரம் போட்டு, அதற்கு இருநூறு ரூபாய் அஞ்சல் செலவு தந்தால் நாங்கள் இந்தக் கல்வியைச் சொல்லித் தருகிறோம் என்று விளம்பரம் போட்டிருக்கிறார்கள். இது யாருடைய அனுமதியிலே தொடங்கப்பட்டு இருக்கிறது? இதற்கு அரசினுடைய அனுமதியை அவர்கள் பெற்றிருக்கிறார்களா? ஒரு அஞ்சல் வழிக் கல்வி என்பது தாங்களாகவே தொடங்கிக் கொள்வதா? அங்கே பாடத் திட்டம் என்ன? இதை யாரிடமாவது காட்டியிருக்கிறார்களா என்றால் எனக்கு அதிலே நிச்சயமாக நம்பிக்கை உண்டு, அதை யாரிடமும் அவர்கள் காட்டியிருக்க மாட்டார்கள். அனுமதியைப் பெற்றிருக்க மாட்டார்கள். எனவே முதலிலே இதற்குத் தடை செய்ய வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் மூலமாக முதலமைச்சரவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட, நலிந்த மக்களாகிய இவர்கள் காவல் துறையிலே ஒரு புது நம்பிக்கையைப் பெறத் தொடங்கி இருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். கடந்த கால எந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தாலும், காவல் துறையிலே போகிற நிலையானாலும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளானாலும் எண்பது விழுக்காடு நலிந்த மக்களாகவோ அடித்தளத்து மக்களாகவோ, பாமர மக்களாகவோதான் இருப்பார்கள். காரணம், வசதி உள்ளவர்களுக்கும், வேறு பல செல்வாக்கு உள்ளவர்களுக்கும் காவல் துறையிலே எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. அங்கே போனாலும் அதை எளிதாகத் தீர்த்துக்கொள்ள முடிகிற வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது.

பிற்பகல் 12-15

இவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லை. எனவேதான் 80 விழுக்காடு வழக்குகள் இவர்களுடைய வழக்குகளாகவே இருக்கின்றன. இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 23

எனவே, காவல் நிலையத்தில் போகிறபோது, ஒரு சாதாரண மாணவன், படிப்பில்லாதவன், பாமரன், அவனாகவே போய் அங்கே புகார் சொல்கிற அளவுக்கு அந்த காவல் நிலையத்திலே ஒரு நம்பிக்கை வேண்டும். அந்த பரஸ்பர நம்பிக்கையை உருவாக்கினால் தான், ஏழை மக்களுக்கு காவல் நிலையத்தின் பேரிலே ஒரு நம்பிக்கை உருவாகும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்திலே ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே எவ்வளவு வழக்குகளுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஒரு 10 விழுக்காடு கூட தண்டனை கிடைத்திருக்காது. பல வழக்குகள் எப்படியோ பைசல் ஆகி விடுகின்றன. அதற்கான காரணங்களைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இதற்காக ஒரு டி. ஐ. ஜி.-யைப் போடுகிறபோதே, அவர் ஏதோ ஒரு சிறப்பான பணிக்கு போகிறோம் என்ற எண்ணத்தோடு போவதில்லை. ஒரு 'பனிஷ்மென்ட்' ஆகவே தான் அதை நினைத்துக் கொள்கிறார். 'சிவில் ரைட்ஸ் புரொடெக்ஷ்' னுக்குப் போகிற போதே, அது ஒரு ''பனிஷ் மென்ட்'' பதவி என்கிற அளவிலே தான் போகிறார். எனவே தான் அதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமையெல்லாம் வருகிறது. எனவே, அதில் அக்கறை காட்ட வேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் சாதிக் கலவரங்கள் பல பகுதிகளிலே நடந்து கொண்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டினார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளிலே, தென்னாற்காடு மாவட்டத்திலே மட்டும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடிசைகள் கொளுத்தப்பட்டன. தருமபுரி மாவட்டத்திலும் குடிசைகள்—தாழ்த்தப்பட்ட மக்களுடைய குடிசைகள்—கொளுத்தப்பட்டன. அங்கெல்லாம் எல்லா கலவரங்களையும் நான் போய்ப் பார்த்திருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம் என்னவாக இருக்குமென்றால், ஒரு சின்னக் காரணமாகத் தான் இருக்கும். டீ கடையிலே தகராறு இருந்திருக்கும். திரைப்படக் கொட்டகையில் யாராவது ஒரு பெண்மணியைக் கிண்டல் செய்திருப்பார்கள். அதிலே தகராறு வந்திருக்கும். அல்லது, ஏதாவது ஒரு குடும்பத் தகராறிலே, கொடுக்கல் வாங்கலிலே தகராறு இருந்திருக்கும். போலீஸ் நிலையத்திலே புகார் செய்யப்பட்டு இருக்கும். அங்கே ஒரு கேட்பாரற்ற நிலைமை இருந்திருக்குமானால், அதன் பின்னாலே பெரிய கலவரமாக மாறி, சாதிக் கலவரமாக மாறி, ஆயிரக் கணக்கான வீடுகள் கொளுத்தப்பட்டு, பல்வேறு உடைமைகளை இழந்து—இப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவாகும். முதலிலேயே, அது புகைகிற போதே, வேண்டிய நடவடிக்கைகளை காவல்துறை எடுத்திருக்குமேயானால், இப்படிப்பட்ட சாதிக் கலவரங்கள் வந்திருக்காது.



1991 செப்டம்பர் 23] [திரு. செ. கு. தமிழரசன்]

நான் இன்னொன்றையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாதிக் கலவரங்கள் தொடராமல் இருப்பதற்கு, தமிழகத்திலே சமயத் தலைவர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், அரசியலிலே உள்ள மிகப் பெரிய தலைவர்கள் இப்படிப்பட்டவர்களை எல்லாம் உள்ளடக்கிய ஒரு சமுதாயக் குழுவை நியமித்தால், நாம் உடனுக்குடன் அங்கே போய்—காவல்துறை அந்தப் பிரச்சினையை அணுகுகிற விதம் வேறு; சமுதாயத் தலைவர்கள் அணுகுகிற விதம் வேறு—எனவே, அதிலே தீர்வு காண்பதற்கு அங்கே போய் அதற்கு ஒரு நல்ல, ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கமுடியும் என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

நான் வேறொன்றையும் சொல்லவேண்டும்கொஞ்சம் அச்சப்படுவார்கள்—இருந்தாலும் சொல்கிறேன். கள்ளச் சாராயம் முழுக்க முழுக்க ஒழிந்துவிட்டது. இதற்கு புரட்சித் தலைவி அவர்களுக்கு நாம் எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும். இதிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகப் பெரிய '' ரிலீப் ''. அது தகும். ஆனால், சமீப காலத்திலே பிராந்தி, ஒயின் கடைகளிலே, 4 ஆயிரம் விற்றுக் கொண்டிருந்த கடையிலே, 25 ஆயிரம் ரூபாய் ஒரு நாளைக்கு வசூலாகிறது. 20 ஆயிரம், 30 ஆயிரம் ஒரு கடையிலே வசூலாகிறது. அப்படியானால், அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மக்கள் தொகை அதிகரித்து வருகிறது எனலாம். ஏற்கெனவே, தாழ்த்தப்பட்டவன், நலிந்தவன் ஒரு 10 ரூபாய்க்கு கள்ளச் சாராயத்தைக் குடித்துவிட்டு, அதிலே குடும்பத்திலே பிரச்சினை. குடிக்கக் கற்றுக் கொண்டவன், இப்போது 20 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கும் உயர்ந்த ரக மதுவைக் குடிக்கின்ற நிலைமை உருவாகி, அதனால் முழு தொகையும் செலவிடப்பட்டு, குடும்பத்திலே மேலும் பிரச்சினை, அந்த மக்களிடையே வளர்ந்திருக்கிறது. இதை நான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை முழுக்க உணர்ந்தவன் என்பதற்காக இங்கே சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்திலே, 20 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் விற்கிற கடைகளிலே சில தவறுகள்—அதாவது '' எக்ஸைஸ் டயூட்டி '' கட்டாது கடத்தப்பட்ட அயல்நாட்டு மதுக்களை எல்லாம் இந்தக் கடைகளிலே விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஏனென்றால், அவை அங்கீகரிக்கப்பட்ட கடைகள் என்பதனால், அவ்வாறு பல முறைகேடுகள் நடக்கின்றன. எனவே, நான் அன்போடு ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒரு யோசனை இது. ஒருவேளை அரசு முடியுமானால் இங்கே மலிவு விலையிலே ஒரு அயல்நாட்டு மதுவைத் தயாரித்து, குறைந்த விலையிலே ஒரு 10 ரூபாய்க்கு—அப்படி தயாரித்து கூட. .

(குறுக்கீடுகள்).

அந்தக் கடையையும் மூட வேண்டும் என்பதற்கு எனக்கு வேறு பட்ட கருத்து கிடையாது. அதை மூடத்தான் வேண்டும். ஏற் கெனவே, அரசுக்கு ரூபாய் 325 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இழப்புக்கு மேலும், அந்தக் கடையை மூடுவதன் மூலம் ஏராளமான இழப்பு வரும். அது வேறு விஷயம், அப்படி இருக்கிற போது, அந்தக் கடைகளிலே அதிகமான வசூல் நடந்துகொண் டிருக்கிறது. குடிக்கிறவன், 25 ரூபாய்க்கும் 30 ரூபாய்க்கும் குடிக்க முற்பட்டுவிட்டான். எனவே, அந்த ஏழைகளின் தரம், மேலும் வறுமைப் பிடிக்கு போகிறது. அங்கே பல சிக்கல்கள் வருகின்றன என்பதற்காக இதை நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விரைவிலே முடியுங்கள்.

பிற்பகல் 12—20

திரு. செ. கு. தமிழரசன் : பல பகுதிகளிலே துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அம்பேத்கர் பிறந்த நாளிலே ஏப்ரல் 14 ஆம் தேதியில்—கொள்கைக் குறிப்பிலே கூட அதைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். பிறந்த நாள் ஊர்வலத்திலே, நான் தலைமையேற்று போய்க் கொண்டிருந்தபோதே, துப்பாக்கிச் சூடு நடந்து, 3 பேர் அங்கே இறந்தார்கள். அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, அவர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருவோம் என்று சொன்னார்கள், ஆம்பூரிலே— இன்னமும் வேலை தரவில்லை. அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்று துப்பாக்கிச் சூடு நடந்த பல இடங்களிலே பார்த்தால் அந்த இடங்களில் தாழ்த்தப்பட்ட பகுதி மக்கள்தான் அதிகமாக இருந்திருக்கிறார்கள். சமீபத்திலே கூட, பரமக்குடியிலே துப்பாக்கிச் சூடு நடந்தது. இந்த ஆதி திராவிட மக்கள் தவறுத [illegible]ான வழியிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தவறுத லான வழியிலே அவர்கள் போய்விட்டார்கள் என்றாலும், நான் அவர்களுக்கு என்று பரிவோடு கேட்டுக் கொள்கிறேன். இறந்த அந்த மூன்று பேர்களுக்கு நஷ்ட ஈடாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவி அவர்கள் பொறுப் பேற்றிருக்கிற இந்தத் துறையிலே எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. அந்தப் பணி தொடர வாழ்த்தி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு சட்டமன்றப் பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் சாதாரண மாக இருந்த என்னை, சரித்திரப் புகழ் வாய்ந்த வெற்றியில் பங்கு பெறச் செய்து, தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி, அந்த மக்களுக்கு பணியாற்றுகின்ற அரிய வாய்ப்பினை அளித்த எங்களது இதய தெய்வம் புரடசித்தலைவி அவர்களுக்கும், தொகுதி வாழ் மக்களுக்கும் நன்றி தெரிவித்தும், எனது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் வணங்கி என் கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையில், விடுதலை புலிகள் கொட்டத்தை அடக்கி, கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் தர்ம யுத்தத்தில் ஈடுபட்டு, அதில் வெற்றியும் கண்டு, இன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் கீழே சிறப் பாகச் செயலாற்றிக்கொண்டிருக்கும் தமிழகக் காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்காக, என் கன்னி உரையைத் துவங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 188.68 கோடியாக இருந்த ஒதுக்கீட்டினை, 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 241.53 கோடி யாக உயர்த்தியதற்குத் தாயுள்ளம் கொண்ட எனது தலைவியை, மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தத் தருணத்தில் வணங்கிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல்துறைக்குப் புதிய ஒரு காவலரோ, தோட்டாவோ, துப்பாக்கியோ, வாக னமோ கூடுதலாகக் கொடுக்கப்படாத நிலையில், பழைய படைத் தளவாடங்களையும், படைபலத்தையும் வைத்துக் கொண்டு புதிதாகப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தனது மதிநுட்பத்தால், நிர்வாகத் திறமையால் முன்னின்று வழிநடத்தும் நெஞ்சுறுதியும், தமிழகம் எங்கும் நச்சுக்கொடிபோல் படர்ந்து இருந்த சமூக விரோதி களையும், தீவிரவாத சக்திகளையும் விடுதலைப் புலிகளையும் புறமுதுகிட்டு ஓடச் செய்திருப்பது, அதுவும் இந்த உலகம் வியக்கத்தக்க வகையில் மிகக் குறுகிய காலக்கட்டத்தில் அதைச் செய்து முடித்திருப்பதை, இமாலய சாதனையாகக் கூறுவதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

[திரு. எஸ். ஜெயக்குமார்] [1991 செப்டம்பர் 23

காவல்துறை குறுக்கீடுகள் எதுவும் இல்லாமல், ஒரு குறிக் கோளுடன், சுதந்திரமாகச் செயலாற்ற வைத்து, இந்த இமாலய சாதனையை அடையச் செய்த பெருமை எங்களுடைய முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களைத்தான் சாரும் என்பதை இந்த உலகமே ஏற்றுக் கொள்ளும்.

எனக்கு முன் பேசிய சட்டமன்ற உறுப்பினர் கூறினார்கள். திராவிட மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பைக் கருணாநிதி ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த இயக்கம் கலவரத்தை தூண்டுவதற்காக கட்சியிலுள்ள கள்ள சாராயப் பேர்வழிகளையும், விபச்சார விடுதிகளை நடத்து பவர்களையும், கஞ்சா விற்பவர்களையும், தூண்டிவிட்டு, இந்த இனக் கலவரத்தைத் தூண்டுவதற்காகவும், இந்த மறு மலர்ச்சி இயக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கும் கருணாநிதி ஆரம் பித்திருக்கிறார். இதை நாம் சற்று உன்னிப்பாகக் கவனித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதியிலே ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் திரு. பத்மநாபா அவர்கள் கொலை செய்யப்பட்டு, அந்தக் கொலை வழக்கிலே குற்றவாளிகளை ** என்ற எஸ். பி. கைது செய்து அவர்களை அழைத்துக்கொண்டு வரும் சமயத்திலே, அவர்களுக்குத் தொலைபேசி மூலம் ஒரு கால் வருகிறது. தி.மு.க. ஆட்சியின் உள்துறைச் செயலாளராக இருந்த ** அவர்கள் தொலைபேசி மூலம் அவர்களைத் தொடர்பு கொண்டு, அந்தக் குற்றவாளிகளை வெளியே விடும்படி வற்புறுத்தி அவர்களை வெளியேறச் செய்ததாக எல்லோரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டுக்களைக் கூறும்போது, பெயர்களை தயவுசெய்து கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பெயர்கள் அவைக் குறிப் பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1991 செப்டம்பர் 23]

திரு. எஸ். ஜெயக்குமார் : தி.மு.க. ஆட்சியில் உள் துறைச் செயலாளர், அவர்களை வெளியே விடச் சொல்லி இருப்பதாக அறிகிறேன். அதுபற்றி மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் விசாரணை நடத்துமாறு அவர்கள் பொற்பாதங்களில் விழுந்து வேண்டி வணங்குகிறேன்.

பிற்பகல் **12.25**

கடினமான பணிகளில் ஈடுபடும் காவலர்களும், அதிகாரிகளும் வீடு திரும்பினால் அமைதியாக ஓய்வு எடுக்கக்கூடிய நிலையை அவர்களுக்கு உருவாக்கித் தரும் வகையில் எல்லோருக்கும் அவர் கள் பணி செய்யும் இடங்களுக்கு அருகிலேயே வீடு கட்டித் தரும் ஒரு திட்டத்தை நாம் கொண்டு வரவேண்டும். அதேபோல் காவலர் ஒருவருக்கு வீட்டு வாடகைப் படியாக சென்னை போன்ற நகரங்களில், 105 ரூபாயும், சிறிய நகரங்களில் 80 ரூபாயும், மற்ற இடங்களில் 65 ரூபாயும் வழங்கப்படுகிறது. சென்னையில் 105 ரூபாய் கொடுத்து குடிசையில்கூட குடியிருக்க முடியாத நிலை உள்ளது என்பதை இந்த நாடு அறியும். எனவே வீட்டு வாடகைப்படி உண்மை நிலைக்கு ஏற்றதாகவும், நகர்ப்புறங் கள் கிராமப்புறங்களில் இருந்துவரும் வாடகை விகிதாச்சாரங் களை அடிப்படையாகக் கொண்டும் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்கள், சார்பு ஆய்வாளர்கள் ஆகியோருக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. அதற்குமேல் உள்ள அதிகாரிகளுக்கும் சீருடை வழங்கப்படுகின்றன. ஆனால் குற்றப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, தனிப்பிரிவு, பாதுகாப்புப் பிரிவு ஆகிய பிரிவுகளில் பணி யாற்றும் காவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் சீருடையும், சீருடைப் படியும் வழங்கப்படுவதில்லை. பலவிதமான ரகசியப் பணிகளிலும் பாதுகாப்புப் பணிகளிலும் அவர்கள் ஈடுபடும்போது அப்பணிகளுக்குப் பொருத்தமான சிறந்த உடைகளை அணிய வேண்டி உள்ளதால் அவர்களுக்கு சிறப்பு படைக்கான படி வழங்கப்பட வேண்டும் என பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன். அதேபோன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் காவலர் களுக்கு வழங்கப்படும் சாப்பாட்டுப்படி 6 ரூபாயாக உள்ளது. உதவி ஆய்வாளர்களுக்கு $7\frac{1}{2}$ ரூபாயாக உள்ளது. 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது 15–11–1989 ஆம் தேதி யிட்ட அரசாங்கத்தின் உள் துறை ஆணை எண் 2485-ன்படி கிரேட் இரண்டு பி.சி.க்களுக்கு 16 ரூபாயும், கிரேட் ஒன்று பி.சி.க்களுக்கு 20 ரூபாயும் உதவி ஆய்வாளர்களுக்கு 30 ரூபாயும் வழங்கப்பட்டது. இந்த விகிதாச்சாரங்களைக் கணக்கிட்டு சாப்பாட்டுப் படியை உயர்த்தி நமது அரசு நடவடிக்கை எடுக்கு மாறு நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

*டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னாட்டின் இந்திரா, இந்நாட்டின் ஜோன், பொன்னாட்டொளியின் பூரணச் சந்திரன், சிந்தனைச் செல்வி—திராவிடச் செல்வி நத்தமிழ் நாட்டின் நவயுகராணி, பொதுமைக் கொள்கையைப் புரக்கும் வாணி, விண்புகழ் தமிழக மின் விடிவெள்ளி, தன்மனம் குன்றா தலைமகள் வள்ளி, வாழை-மடிந்தும் வழங்கும் குழையை ஏழையைக் காப்பார்-ஈந்தும் தன்னை. நேர்மை வழியில் நிரந்தரச் செல்வி, கூர்மை மழுங்கா குணமுடைச் செல்வி, ஏற்ற பணிகளை இதயத்தில் பேணி மாற்றமாய் நடந்திட மனத்தில் நாணி, உற்றவர்க்குதவிகள் செய்து உயர்ந்திடும் ஏணி, அரசியல் வாழ்வில் எங்கள் எல்லோருக்கும் அன்னையாக, முதல்வராக இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கும் எங்களின் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தூயதாளுக்கு வணக்கம் சொல்லி காவல் துறை மானியக் கோரிக்கை மீது எனது கருத்தைக் கூற விழைகின்றேன்.

காவலர் என்றாலே காவு+அலர் காவலர். அதாவது நாட்டிற்காக தன்னையே அற்பணித்துக் கொண்டவர் என்பது தான் பொருள். அத்தகு காவலர் நல்வாழ்வுக்குப் அத்துறைக்கும் ரூ. 241.53 கோடி அரசு ஒதுக்கி இருப்பது வரவேற்கத் தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும்.

கல்லென்றும் முள்ளென்றும் பாராமல் காடென்றும் மலையென்றும் கலங்காமல், இரவென்றும் பகலென்றும் முணங்காமல் ஓடித்திரிந்து திருடர்களை, கொள்ளையரை, கொலைஞரை கண்டுபிடித்துத் தண்டிக்கச் செய்வதே காவல் துறையாகும். அத்தகு கடமையைச் செய்யுப் காலத்தே இன்னலால், இடையூறுகளால் இறக்க நேரிட்டால் அக்காவலர்களின் குடும்பத்திற்கு ஏற்கனவே அளித்துவரும் பண உதவியை அதிகரித்தும், அத்தோடு அக்குடும்பத்தாருக்கும் தகுந்த பாதுகாப்பையும், வேலை வாய்ப்பையும் வழங்க அரசு முன்வரவேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

தி.மு.க. ஆட்சியிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. தி.மு.க. ஆட்சியிலே தமிழகம் பஞ்சாப்பைப் போல், அஸ்ஸாமைப் போல ஆயுதக் கலாச்சாரம் தலைவிரித்தாடியது. விடுதலைப் புலிகள், ஆயுதம், போதைப் பொருட்கள் பெட்ரோலைக் கடத்தியபோதெல்லாம் தி.மு.க. ஆட்சி கண்டும் காணதாதுபோல் இருந்து வந்தது. பத்மனாபா மற்றும் 16



ஈழத்தமிழர்கள் பட்டப் பகலிலே சென்னை மாநகரிலே சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். சுட்டவர்களைத் தப்பி ஓடவிட்டு விடுதலைப் புலிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தது தி.மு.க. அரசு.

பிற்பகல் 12–30

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சித் காலத்தில் அரசுக்குத் தெரிந்தே விடுதலைப் புலிகள் தவறுகளை செய்து வந்தார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனினும் ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து பின் மனிதனையும் கடித்ததுபோக் இந்தியாவின் தலைசிறந்த ஜனநாயகவாதியான ராஜீவ் காந்தியை மனித வெடி குண்டு மூலம் படுகொலை செய்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியாளர்கள் கொடுத்த தென்பிலேயும், ஊக்கத்திலேயும் தவிர இதற்கு வேறு எந்த காரணமும் சொல்லத் தேவையில்லை. அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் காவல் துறையின் கரங்கள் அதன் கடமைகளை செய்யவிடாமல் கட்டிப் போட்டதுதான் காரணம். எனினும் விடுதலைப் புலிகளின் அதி நவீன ஆயுதக் கலாச்சாரம் புழக்கத்தில் சர்வசாதாரணமாக பயன்படுத்தப்பட்டமையால் நாமும் தமிழக காவல் துறையை அதி நவீனப்படுத்துவதன் காரணமாக, அதற்காக ரூ. 10 கோடி அரசு ஒதுக்கிட்டு இருப்பது பாராட்டுதற்குரியது ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரத்தக் காடாக மாறிக்கொண்டிருந்த தமிழகம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே மீண்டும் அமைதிப் பூங்காவாக தமிழகம் இன்று திகழ்கிறது.

வெளிநாட்டுப் போராளிகள்— தீவிரவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகளால் விரும்பத்தகாத கையில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை ஏற்படுத்தி, குழப்பம் ஏற்படுத்திய குதர்க்க வாதிகளினமீது சட்டம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அமைதியை நிலைநாட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உறுதியான, தெளிவான, திட்பமான நடவடிக்கைகளை இந்திய துணைக் கண்டமே பாராட்டிப் போற்றுகிறது.

31—3—1989 அன்று முந்தைய அரசால் கலைக்கப்பட்ட 'காவலர் வீட்டு வசதித் திட்டத்தை' திருப்பி மறுபடியும் தொடங்கவும் மேலும் அத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் 8 கோடி ரூபாய் செலவில் 1000 வீடுகள் கட்ட உத்தேசித்திருப்பது— மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அவர்கள் காவலர் மேல் கொண்ட அன்பும் பரிவையும் பிரதிபலிக்கிறது.

காவல்துறையை உறுதியான, செயல்திறன் வாய்ந்த ஒரு துறையாக மாற்றுவதற்காக உரியவரை உரியவாறு நியமனம் செய்தல், அவர்களது திறன் மற்றும் சாதனைகளை மேம்படுத்த உரிய பயிற்சி அளித்தல், போதிய நவீன கருவிகள் அளித்தல், போதிய அளவுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல், காவலர் நலம் காக்கும் நோக்கத்துடன் உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் ஆகியவை களை செய்து கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

காவல் துறையினருக்கு ஊக்கமளித்து அவர்களின் திறனையும் செயல்வேகத்தையும் மேம்படுத்தும் பொருட்டு ஊக்க உதவித் தொகைகள் வழங்கியும், ஊதிய உயர்வுகள் கொடுத்தும், திறமையாக செயல்படுவோருக்கு காவல் பதக்கங்களை வழங்கியும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது காவல் துறையினர் பால் உள்ள அன்பையும் பரிவையும் காண்பிக்கிறது.

பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத் தொகையை, அது போன்ற சேதங்களை ஏற்படுத்திய தனி நபர்களிடமிருந்து அல்லது அதுபோன்ற சேதங்களுக்கு காரணமான அரசியல் கட்சிகள் அல்லது ஏனைய நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க இயலும் வகையில் சட்டம் ஒன்று இயற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை எந்த அரசாலும் அறிவிக்கப்படாத புதுமையான புரட்சித் திட்டமாகும்.

அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களினால் இது காரும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிடாத காவல் துறையின் திறமையும் மதிப்பும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ் சீரும்சிறப்புமுள்ள துறையாக திகழும் என்று கூறி தீ அணைப்புத் துறை பற்றி ஒரு சில கருத்துக்களை கூறி முடிக்கிறேன்.

தமிழ்நாடு தீயணைப்புத் துறையை எல்லா வகையிலும் நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறது என்பது பாராட்டுக்குரியது.

25 கிலோ மீட்டர் தூரத்திற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது, துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் அவர் தம் நலம் பேணிக் காக்க குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதும் ஆகும்.





எனது தொகுதியிலுள்ள ஆரல்வாய் மொழியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு முதல்வர் அவர்களின், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களை பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மக்களின் நலம் கருதி நீண்ட நாள் கோரிக்கையான ஒரு பெரிய அரசு தொழிற்சாலை அமைக்கும் எண்ணத்தினைக் கொண்டு ரூ. 400 கோடி செலவில் ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஒப்புதல் அளித்த தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு முதல்வர் தமிழகக் காவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை குமரி மாவட்ட மக்கள் சார்பாக என் பணிவு கலந்த நன்றியினை அவர்கள் பொற்பாதத்தில் சமர்ப்பித்துக் கொண்டு, வாய்ப்பினை தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனி சாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரால் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய மாநில ஆயத் தீர்வை, காவல்துறை, தீயணைப்பு பணிகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தினை சொல்ல நான் முன் வருகிறேன்.

இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்திலே இருக்கக் கூடிய காவல்துறைதான் மிகத் திறமையான, தலைசிறந்த காவல்துறை என்டதனை நான் மறுப்பதற்கில்லை. கடந்த காலங்களில் காவல் துறை குற்றப் புரிந்தவர்களை, கொலை செய்தவர்களை வழிப்பறி, கொள்ளை செய்தவர்களை, கடத்தல் பண்ணக்கூடியவர்களை, அந்தக் காரியங்களில் ஈடு பட்டிருக்கக்கூடிய எந்த ஒரு சமூக விரோதியாக இருந்தாலும் அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய திறமையான ஒரு காவல் துறை இருக்கின்றது என்று சொன்னால் அது அநேகமாக தமிழ்நாட்டினுடைய காவல் துறை என்றுதான் சொல்ல முடியும்.

பிற்பகல் 12—35

ஆனால் அது படிப்படியாக, பல ஆண்டுகாலமாக, காவல் துறைமீது இருந்த, மக்களுக்கு இருக்கக்கூடிய நம்பிக்கை இன்றைக்குக் குறைந்து கொண்டு வந்திருக்கிறது. ஏதோ இன்றோ, நேற்றோ அது குறைந்தது என்று குற்றம் சாட்ட நான் விரும்பவில்லை. கடந்த பல ஆண்டுக் காலமாக காவல்

[திரு. ஜி. பழனிசாமி] [1991 செப்டம்பர் 23

அதேபோன்று தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களைப் பார்க்கிறோம். பல்வேறு இடங்களில் தீண்டாமை ஒழிப்பு. ஆதலால் தீண்டாமை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம் பல இடங்களில் சாதியின் பெயரால் வரக்கூடிய தீமைகள். அந்தத் தீமையால் வரக்கூடிய தீய சக்திகள் ஊடுறவி, இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே இது போன்ற சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. அதற்கு காவல் துறையில், மாவட்டத்திற்கு ஓரிடத்தில் இருந்துகொண்டு செயல்படுகிறார்கள். மனு கொடுத்தால் போதும். மனு கொடுத்தால் என்ன ? எனக்கு லாபம் என்ற அடிப்படையில்தான் இருக்கிறதே தவிர, சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு போடுவதோ அல்லது அவர்களை விசாரிப்பதோ என்ற நிலைமை அந்த அலுவலகத்தில் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அது போன்று மாவட்டத்திற்கு ஒன்று என்று இல்லாமல் இருக்க வேண்டும். தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எனவே தஞ்சை மாவட்டத்தில், கிழக்குத் தஞ்சையில் அது போன்ற அலுவலகத்தை நீங்கள் துவங்குவீர்கள் என்று நினைக்கிறேன். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–40

அதேபோன்று இன்றைய தினத்திலே காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசிடம் 80.45 கோடி ரூபாய் பணம் கேட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற போலீஸ் நவீனப்படுத்தப்பட வேண்டும். நிச்சயமாகப் பல்வேறு துறைகளில் காவல் துறையை நவீனப்படுத்துவதன் மூலமாக அது மக்கள் சேவையாக அமைய முடியும்.

கலால் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தி இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல நடவடிக்கை. ஆனால் இன்றைக்கு சீமைச் சாராயம் விற்கும் பல கடைகளிலே, சாராயத்திலே கலர் கலந்து விற்கப்படுகிறது. இதையும் ஆராய வேண்டும் , நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பாண்டிச்சேரி, கர்நாடகா, ஆந்திராவிலிருந்து பல்வேறு லாரிகள், வேன்கள் மூலம் இன்றைய தினம் சாராயத்தைச் கடத்திக் கொண்டு வந்து, வியாபாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே காங்கிரஸ் கட்சி நண்பர்களெல்லாம் தமிழக அரசை



1991 செப்டம்பர் 23] [திரு. ஜி. பழனிசாமி]

வாழ்த்திப் பேசுகிறார்கள். எனவே அருகிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரக்கூடிய சாராயத்தை, கள்ளை, சீமைச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்நீர்களென்று சொன்னால், அதுகூட உண்மையிலேயே நல்லதாக இருக்கும் அதற்கு ஆலோசனை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : துணைத் தலைவர் அவர்களே ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மற்ற மாநிலங்களைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறார். அங்கே நடக்கிறது என்று சொல்லுகிறார். அவர் கருத்துச் சொல்கிறார். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம். திரு. ஜி. பழனிசாமி அவர்கள்.

திரு. ஜி. பழனிசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருகாமையிலே உள்ள, தமிழகத்தை ஒட்டியுள்ள மாநிலங்களில் இருக்கிறது. கேரளாவில் இருக்கிறது. அங்கேயிருந்து கடத்தப்பட்டு இங்கே வருகிறது. பல்வேறு நண்பர்கள் சொல்லுகிறார்கள். அதனால் சொல்கிறேன். அங்கேயுள்ள காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கள்ளச் சாராயத்தை, கள்ளுக்கடைகளை ஒழிக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால், தமிழகத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இல்லாமல் இருக்க நாமும் முயற்சி எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் தமிழ் நாட்டில் வாழ்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் ஆந்திராவிலும், கர்நாடகாவிலும், பாண்டிச்சேரியிலும் இருக்கின்ற மக்கள், தங்கள் வாழ்நாள் பூராவும் உழைத்து விட்டு, இரவு படுக்கின்றபோது மது அருந்திவிட்டு, ஓய்விற்காகப் படுத்து காலையிலே தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள்.

** ** **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மது விலக்குக் கொள்கையை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லுகிறாரா என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை முழுமையாக மதுவை ரத்து செய்ய வேண்டுமென்பதுதானே தவிர, மற்ற கருத்துகளுக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர வேண்டுமென்றும், அதற்காகப் போடுகிற திட்டங்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியப் பேரரசு மாநில அரசுகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது ஏட்டளவில்தான் இருக்கிறது. அதற்குப் பிறகு எந்த மாநிலத்திலும், எந்த நடவடிக்கையையும் எடுக்க இந்தியப் பேரரசு முயற்சிக்கவில்லை என்பதோடு, காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் மது அதிகமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறதே தவிர குறையவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் பேசுகிறபோது, ** ** சில இடங்களில் பிரச்சினைகள் எழுகிறபோது அவர்களைத்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திருத்துவதற்காக அரசாங்கம் அப்படி நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட அந்தச் சொற்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். திரு. பழனிசாமி அவர்கள் விரைவில் முடிக்கவேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி : ஆகவே, மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று வாதிடுவது நல்லதல்ல. இருந்தாலும் நிலைமை அப்படியிருக்கிறது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகவேதான், பல்வேறு நிகழ்ச்சிகளில் இன்றையதினம் கூட காவல்துறையினர் கண்டுபிடித்து இருக்கிறார்கள். புகார்கள் கொடுக்கப்படுவதில் 50 சதவீதம்தான் அந்த மாதிரி வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது. மற்றவைகளை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் முழு குற்றங்களையும் கண்டுபிடிக்க வேண்டுமென்பது முடியாத காரியம். இருந்தாலும் கண்டுபிடிக்க முடியாத அந்தக் குற்றவாளிகள், மீண்டும் தமிழகத்திலே இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் அவர்களைக் கண்டுபிடிக்க முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல துப்பறியும் நாய்கள் கூட 1,000—1,200 கேஸ்கள் இருந்தால் அதில் 50 சதவீதத்தை, 500—600 கேஸ்களைக் கண்டுபிடித்து விடுகிறது. ஆகவே, மனித ஆற்றலை நாம் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். புகை நுழைய முடியாத இடத்தில் கூட போலீஸ் நுழைந்து விடும் என்கிற அளவுக்கு தமிழக போலீஸ் பற்றிச் சொல்லப்படும். ஆனால் இப்போது 2/3 பங்கு கூட கண்டுபிடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை இருப்பதாக இப்போது இந்த கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் . கொள்ள விரும்புகிறேன். அதே போன்று, காவல் துறையில் உள்ள ஊழியர்களின் சம்பளம், குடியிருப்புகள் போன்றவை. அங்கேயுள்ள குடியிருப்புகள் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டவை. அந்த வீடுகளை இப்போது புதுப்பிப்பதற்காக முதல்வர் அவர்கள் 8 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே அது வரவேற்கப்படவேண்டிய விஷயம். அதே நேரத்தில் அவர்களுக்கு புதிதாக நல்ல வீடுகளையும் கட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதை விட அதிகமாகத் தரவேண்டும். அவர்கள் தப்பு பண்ணாமல் இருப்

பதற்கு அது வாய்ப்பாக இருக்கும். காவல்துறையினர் கள், சாராயம் போன்ற மதுவகைகளைக் குடிக்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எஸ்.ஐ. சஸ்பெண்ட், காய்ச்சப்படுவது குறித்து தகவல் தராவிட்டால் வி.ஏ.ஓ. சஸ்பெண்ட் என்று இருப்பது போல, மது பானங்களைக் குடிக்கும் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்று இருக்கவேண்டும். அப்போதுதான் நல்லதாக இருக்கும். (மணியடிக்கப் பெற்றது.) ஆகவே காவல் துறையைத் தூய்மைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்பு நிலையங்களைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கக்கூடிய கருவிகள் மிகப் பழமையானவை. 1,000 அடி டியூப்கள் போட்டு தண்ணீரைக் கொண்டு வரவேண்டும். அது போன்ற கருவிகள் எல்லாம் மிகப் பழையவை. முறையாகச் செயல்பட முடியாத நிலையில் அவை இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய தீயணைப்பு நிலையம் ஒரு வாடகைக் கட்டிடத்தில்தான் இருக்கிறது. நாங்கள் எல்லாம் பணம் வசூல் செய்து ஒரு அலுவலகத்தைப் பிடித்துக் கொடுத்தோம். அந்த இடத்தில்தான் இப்போது இருக்கிறது. இடம் வாங்க வேண்டுமென்று முயற்சி செய்தோம். ஊர் மக்கள் சார்பாக இடத்தைக் கூட வாங்கி வைத்திருக்கிறோம். அந்த இடத்தில் நல்ல கட்டிடம் கட்டிக் கொடுக்க முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புப் பணியாளர்களுக்கு காவல்துறையினருக்குக் கொடுக்கக் கூடிய சலுகைகளைப் போல இவர்களுக்கும் அளிக்க வேண்டும். அந்தந்த இடத்திலேயே அவர்கள் குடியிருப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தமிழக முதல்வர் அவர்களை அதைச் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். காவல்துறையினருக்கு பெட்ரோல், டீசல் தருவது உயர்த்திக் கொடுக்கவேண்டும். ஏனென்றால் நீங்கள் கொடுக்கக்கூடிய பெட்ரோல் போதவில்லை. சென்ற ஆண்டு 25 லிட்டர் என்று சொன்னால் இப்போது 90 லிட்டர் ஆகிறது. அதை ஒரு எஸ். ஐ. இரண்டு நாட்களில் தீர்த்து விடுகிறார். அதற்குப் பிறகு ஒரு கேசுக்குப் போக வேண்டுமானால் கையிலிருந்து செலவழித்துத்தான் டீசல் வாங்கவேண்டும். பிறகு யாரிடத்திலாவது லஞ்சம் வாங்கவேண்டிய சூழ்நிலைதான் அவர்களுக்கு ஏற்படுகிறதே தவிர, அதைத் தவிர்க்க பெட்ரோல், டீசல் அதிகம் ஒதுக்கித்தரவேண்டும். அதேபோல், ரேஷன் கார்டுகளில் சலுகை அடிப்படையில் பொருட்கள் கொடுக்கப்படுகிறது. இப்போது அங்கே விற்கிற விலை, தனியார் கடைகளில் விற்பதைப் போலத்தான் இருக்கிறது.



ஆகவே அந்த விலையை உயர்த்தி, உண்மையிலேயே சலுகை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள்.

பிற்பகல் 12-50

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய காவல் துறை, மாநில ஆயத் தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உங்கள் முன்னாலே சில கருத்துக்களை நான் பகிர்ந்துகொள்ளலாம் என்று கருதுகிறேன்.

முதலாவதாக காவல் துறையின் குறைபாடு என்கிற வகையில் ஒரு சிலவற்றை என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வாராந்திர ஓய்வுக்கான ஊதியம் ஒரு நாள் சம்பளம் என்ற அடிப்படையில் வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதாவது அவர்களுக்கு ஓய்வு என்று சொன்னால் அன்றைக்கு அவர்கள் பணியாற்றக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்கு இப்போது 10 ரூபாய் வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி, ஒரு நாளைக்கு என்ன ஊதியம் கிடைக்குமோ அதை வழங்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அதை ஒரு கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

அதைப்போல உணவுப்படியாக தற்போது ஒரு நாளைக்கு 6 ரூபாய் என்று இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல இன்னல் படியாக ஒரு மாதத்திற்கு 20 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை 50 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல சீருடைப்படி தற்போது 15 ரூபாய் வழங்கப்படுகிறது. இன்றைக்கு ஒரு ஜோடி துணி வெளுக்க வேண்டுமென்றால் அதற்கு 7 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் படி போதுமானது அல்ல. எனவே இந்தப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல வருடாந்திர சிறு விடுப்பு (சி.எல்.) 12 நாட்களாக இருக்கிறது. ஆனால் மற்ற அரசு ஊழியர்களுக்கு வாரம் இரண்டுநாள் விடுமுறை இருக்கிறது. எனவே காவல்

துறையினருக்கு சிறுவிடுப்பு குறைந்தபட்சம் 20 நாள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல 10 ஆண்டுகள் பணி முடித்த பின்னாலும் பதவி உயர்வு கிடைக் காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல 1979-ல் நியமிக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் களுக்கு இன்னும் பதவி உயர்வு கிடைக்கவில்லை. அதை உங்க ளுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தகுதி அடிப்படையில் அவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவலர் குடியிருப்பில் தண்ணீர் வசதி, மின்சார வசதி, கழிப்பிட வசதி, ரோடு வசதி போன்ற வசதிகள் சரியாக இல்லை என்ற குறைபாடு பெருவாரியாக இருக்கிறது. அவற்றை எல்லாம் பரிவுடன் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காவல் துறையின் மேலதிகாரிகள் காவலர் களின் குறைகளைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று சொல்லு கிறார்கள். காவல் துறையினருடைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான குழுக்களில் இந்தக் காவலர்களை ஒரு உறுப்பின ராகச் சேர்த்தால் அவர்களுடைய குறைபாடுகளை அங்கே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகையால் அவர் களுடைய தகுதி அடிப்படையைப் பார்க்காமல் அவர்களுடைய பணியில் உள்ள சிரமங்களை, குறைபாடுகளைத் தெரிந்துகொள் வதற்கு அவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காவலர்களுக்கு என்று அளிக்கப்பட்டு வந்த ரேஷன் பற்றி கேட்டிருக்கிறார்கள். அதையும் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல காவல் நிலை யங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு இப்போது குடியிருப்பு வசதி பெருவாரியாக இல்லை. அதனால் அவர்களுக்கு சிரமம் இருக் கிறது. அதைப்போல, இப்போது காவல் நிலையங்களில் ஒரு மனுவைக் கொண்டுபோய் கொடுத்தால், மனுவைக்கொடுத்து பாதிக்கப்பட்டவர் நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்கும் போது அங்கிருந்து காவலர்கள் செல்ல முடியவில்லை. மனு கொடுத்தவரையே 100 ரூபாய் அல்லது 200 ரூபாய் கொடுத்து, டாக்சி வாடகை கொடுத்து, அந்த டாக்சியில் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க ஒவ்வொரு காவல் நிலை யத்திற்கும் ஒரு வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல, 1964 ஆம் ஆண்டு நம்முடைய 'விஜிலன்ஸ் அண்ட் ஆண்டி கரப்ஷன்' பிரிவில் ஒரு எஸ்.பி. வைத்து ஆரம்பிக் கப்பட்டது. இன்றைக்கு தமிழ்நாட்டில் அது ஒரு டி.ஜி.பி. அள வுக்கு உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஊழலின் மொத்த உரு வம் இவ்வளவு தூரம் வளர்ந்து வந்திருக்கிறது என்பதை இது காட்டுகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் ஊழல் இன்றைக்கு மலிந்திருக்கிறது என்பதற்கு இது உதாரணமாக இருக்கிறது. ஒரு எஸ்.பி. லெவலில் 1964-ல் ஆரம்பிக்கப்பட்ட பிரிவு இன்றைக்கு டி.ஜி.பி. அளவுக்கு உயர்ந் திருக்கிறது என்று சொன்னால் அது வளர்ந்திருக்கிறது; அதைக் கட்டுப்படுத்த நீங்கள் எப்படி நடவடிக்கை எடுத்தீர்கள்? அத னால் தண்டிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை என்ன? என்பவை போன்ற விவரங்களை நீங்கள் எங்களுக்கு சொன்னால் இந்தத் துறை இன்னும் வளர்வதற்கு எங்களால் ஆன ஒத்துழைப்பைத் தர தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதைப்போல நீங்கள் இங்கே கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட 1989-ல் கொலை, கொள்ளை, திருட்டு —இப்படிப்பட்டவை மொத்தம் 32,923 குற்றங்கள் நடை பெற்றதாகவும் அவற்றிலே 67 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டி ருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 1990 ஆம் ஆண்டு இந்த விகிதாச்சாரத்தைப் பார்த்தால் திருட்டுகளின் எண்ணிக்கை 36,733 என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் கண்டுபிடிக்கப்பட்ட சக்தி, அதாவது எண்ணிக்கை 65 சதவீதம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படி என்றால் நீங்கள் இந்தக் காவல் துறையை கையிலே வைத்து, அதனுடைய குற்றங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று ஆவலோடு இருந்தாலும் கூட அதிகாரிகளுடைய செயல்திறன் போதாமை காரணமாக குற் றங்களைக் கண்டுபிடிக்கின்ற திறன் குறைந்திருக்கிறதா அல் லது அவர்கள் கண்டு பிடிக்க முடியாமல் தட்டிக் கழிக்க வேண் டும் என்பதற்காக அந்தக் குற்றங்கள் கண்டுப்பிடிக்கப்பட முடி யாமல் இருக்கின்றனவா என்பன போன்ற விவரங்கள் எங்களுக் குத் தெரியவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

அதைப்போல இன்னொன்றையும் இங்கே இந்தக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

பிற்பகல் 12—55

1990-ல் தமிழ்நாடு முழுவதும் 9 துப்பாக்கிச் சூடுகள் நடந்த தாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் 1991 ஜூன் மாதத்திற் குப் பிறகு இந்த மூன்று மாத காலத்திற்குள்ளாக நான்கு துப்பாக்

கிச் சூடுகள் நடைபெற்றிருப்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். எதற்கெடுத்தாலும் போலீசார் துப்பாக்கியை எடுப்பது என்று ஆரம்பித்தால், இந்த நாட்டிலே எல்லாம் துப்பாக்கிமயம் ஆகும் என்ற அந்தச் சூழ்நிலைவரக்கூடாது என்பதற்காக அன்றைய நிலையை உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967-லே ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறபோது, ''கூலி உயர்வு கேட்டான் அத்தான்; குண்டடிப்பட்டுச் செத்தான் அத்தான்'' என்று சொல்லி ஒரே குண்டடியை வைத்து ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு மூன்று மாதத்திற்குள்ளாக 4 முறை துப்பாக்கிச் சூடு என்று சொன்னால் அதை நீங்கள் என்கரேஜ் பண்ணுகிறீர்களா? எனவே துப்பாக்கிச் சூட்டை மாக்சிமம் அவாய்ட் பண்ணுகிற விதத்தில் நீங்கள் ஆணையிட வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்த வரைக்கும் இன்னும் ஒரு சில குற்றச்சாட்டுக்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கழிந்த 19 ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் கள்ள நோட்டை வைத்திருந்தார் என்று சொல்லி 1,786 கள்ள நோட்டுக்களைக் கைப்பற்றி, காவல் துறையிலே ஒருவனைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறார்கள். காலையில் கை விலங்கோடு இருந்த அவன் தப்பிவிடுகிறார் என்று சொன்னால் எதற்காக காவல் துறை? குற்றம் செய்தார் என்று சொல்லி காவல் நிலையத்திலே அடைத்து வைக்கப்பட்ட கைதி ஒருவர் காவல் நிலையத்திலிருந்து தப்பி ஓடுகிறார் என்று சொன்னால், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால், உங்களுடைய நிர்வாகத்தில் குளறுபடிகள் வரக்கூடாது என்பதற்காக இதைச் சொல்லுகிறேனே அல்லாமல் குற்றச்சாட்டாக கருதிவிடக்கூடாது.

அதே போல 23-7-1991 அன்று புதுக்கடையில் ஒரு காவல் நிலையத்தில் கைதியாக இருந்த ஜோசப் என்ற நபர் மரணம் அடைகிறார். அதற்கான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்ட நேரத்தில் ஆர்.டி.ஓ. தலைமையின் கீழ் ஒரு விசாரணைக் குழு அங்கே நியமிக்கப்பட்டது. ஆனால் அதே எஸ்.ஐ. அங்கே இருக்கிறபோது, விசாரணை நடத்துகிற நேரத்தில் எப்படி விசாரணை ஒழுங்காக நடைபெற முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். சாட்சி சொல்லப்போகிறவர்கள் அத்தனை பேரும் மிரட்டப்படுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்டச் சூழ்நிலை இருக்கக்கூடாது என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் கேட்டுக்





கொண்டதற்குப் பிறகு ஒரு வாரத்திற்கு முன்பாக அவரை அங்கேயிருந்தது இடமாற்றம் செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே கொலை என்று ஊரே ஒட்டுமொத்தமாகச் சொல்லுகிறபோது, தகுந்த ஆதாரங்களும், சாட்சியங்களும் இருக்கும்போது, விசாரணை ஆரம்பிக்கக் கூடிய நேரத்தில், காவல் நிலையத்தில் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிந்த நேரத்தில் அவரை குறைந்தபட்சம் தற்காலிக வேலை நீக்கமாவது செய்துவிட்டு நீங்கள் விசாரணையைச் செய்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவிற்கு மன ஆறுதலாவது இருக்க முடியும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதே போல கழிந்த 17—9—1991 அன்று குலசேகரம் பகுதியில் செல்வராஜ் என்ற கிறிஸ்தவ போதகர் அடித்துக்கொலை செய்யப்படுகிறார். அவர் அடிப்பட்டு குத்துயிரும் கொலை உயிருமாக இருக்கிற நேரத்தில் அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் கொண்டு செல்லுகிறார்கள், ''ஐயா, மரணம் அடையப் போகிறான்'' என்று. காவல் துறையில் இருக்கக்கூடிய தலைமைக் காவலர் சொல்கிறார், ''எவர் பாதிக்கப்பட்டாரோ அவரே வந்து எனக்கு மனு தந்தால்தான் கேசை எடுப்பேன், இல்லாவிட்டால் முடியாது'' என்று சொல்லி, ஒரு மணி நேரம் கெஞ்சி மன்றாடிய பிறகும் எடுத்துக்கொள்ளாமல், பிறகு தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, அங்கே மரணம் அடையக்கூடிய சூழ்நிலை இருப்பதால் மறுத்துவிட்டப் பிறகு அங்கேயிருந்து திருவனந்தபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அங்கேயிருந்த மருத்துவ அதிகாரிகள் ஒரு மணிநேரத்திற்கு முன்பாக அவரை உயிரோடு அங்கே கொண்டு வந்திருந்தால், அவரைக் காப்பாற்ற முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றிருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே காவல் நிலையத்திலே ஏற்படுகிற இதைப் போன்ற காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல மார்த்தாண்டம் பகுதியில், கள்ளிபாளையம் பகுதியில் ரங்கசாமி என்ற நபர் 28-8-1991 அன்று மரணம் அடைந்திருக்கிறார். அவரைப் பற்றியும் காவல் துறை 'தற்கொலை' என்று சொல்கிறது. ஆனால் தற்கொலைக்கான எவிடென்ஸ் ஒன்றும் இல்லை. அவர் கொலை செய்யப்பட்டார், செருப்புகள் இன்னுமொரு வண்டியில் கிடந்தன என்றெல்லாம் சொல்லப்பட்டு அங்கே பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் இருந்தன, ஒரு டென்ஷன் இருந்தது. அத்தகைய டென்ஷன்களையெல்லாம் அவாய்ட் பண்ண வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 செப்டம்பர் 23

மதுராந்தகத்தில் பாதிக்கப்பட்டு 7 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். என்னிடம் வந்து சொன்னார்கள், நான் போய்ப் பார்த்தேன். அந்த 7 பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்கள் மீதே பிரிவு 370-ன் கீழ் கொலை முயற்சி வழக்கு அவர்களால் போடப்பட்டு, உண்மையான தண்டிக்கப்பட வேண்டியவர் வாதியாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மிகவும் ஏழைப்பட்டக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சாப்பாட்டிற்கே வழியில்லாத குடும்பத்தை சேர்ந்தவர்கள். ஆகவே இவைகளையெல்லாம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதன் காரணம் நீங்கள் அவைகளையெல்லாம் கவனம் செலுத்தி....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. சி. ஞானசேகரன்.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது கொலை முயற்சி வழக்கு 370 செக்ஷன் என்று சொன்னார். அதை 307 என்று மாற்றியமைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் 307 பிரிவைத்தான் சொன்னேன். கொஞ்சம் கோளாறோ என்னமோ தெரியாது. நான் சொன்னது 307 தான். ஆக அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதுபோல, நான் சொன்னது வந்து மதுராந்தகம் பகுதியில் கன்றாசேரி கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பற்றியது. அவர்கள் மேலே 307-ஐ போட்டு, பாதிக்கப்பட்டவன் அடிப்பட்டவன் 7 பேர் ஹாஸ்பிட்டலிலே இருக்கிறார்கள் அவர்கள் மேலே இப்படிப்பட்ட வழக்கை போட்டால் எப்படி சரியாக இருக்க முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை.

அதுபோல, ராதாபுரம் தாலுகாவில் பனக்குடி பகுதியில் அடிக்கடி மோட்டார் பம்புகள் திருட்டு நடக்கிறது. கடந்த 4, 5 வருடங்களாக அவை திருடு போய்க்கொண்டிருக்கின்றன. அது பற்றி அதிகாரிகளிடம் புகார் கொடுக்கிறார்கள். ஆனால், இது வரைக்கும் யாரையும் கண்டுபிடித்ததாகவோ அல்லது அவர்களுக்கு தண்டனை வழங்கியதாகவோ செய்திகள் இல்லை. எனவே அதை உங்களுடைய மேலான கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)



1991 செப்டம்பர் 23]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இப்போதாவது முடியுங்கள். 11 நிமிடங்கள் எடுத்து இருக்கிறீர்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> முடித்து விடுகிறேன். நான் தப்பாகச் சொல்லவில்லை. ** இப்படிப்பட்ட குறைபாடுகளை குற்றச்சாட்டுகளை உங்களுக்கு அதிகம் சொல்ல மாட்டார்கள். ஆகையினால்........

*<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்</u> : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய வார்த்தைகளை நீக்க வேண்டும்.

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : துணைத் தலைவர் அவர்களே....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் மற்ற கட்சி உறுப்பினர்களைக் குறை சொல்லாமல் உங்கள் கருத்துக்களைச் சொல்வது நல்லது.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : I have no problem. எனக்கு என்ன பிரச்சினை அதிலே ? (குறுக்கீடு)

<u>திரு. சி. ஞானசேகரன்</u> : துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து........

<u>டாக்டர் தே. குமாரதாஸ் :</u> எல்லாவற்றையும் வேண்டுமானால் எடுத்து விடுங்கள் சார். எல்லாவற்றையும் வேண்டுமானால் எடுத்து விடுங்கள். நான் வேண்டுமானால் உட்கார்ந்து விடுகிறேன். (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. தொடர்ந்து பேசுங்கள்.

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> : அதுபோல் பத்திரிக்கைகள் மீதும் காவல் துறையினருடைய கண்மூடித்தனமான தாக்குதல் அதிகமாக நடந்து வருகிறது. உதாரணமாக, இரண்டு வாரங்களுக்கு முன்பாக நக்கீரன் பத்திரிக்கை அலுவலகத்தில் 3 தினங்களில் 12 முறை 'டார்ச்சர்' செய்து இருக்கிறார்கள். வெடி குண்டு இருக்கிறது, வெடி குண்டு இருக்கிறது என்று சொல்லி காவல் துறையினர் அங்கே போய் சோதனை போடுகிறோம்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சோதனை போடுகிறோம் என்று சொல்லி 3 தினங்களில் 12 முறை 'டார்ச்சர்' செய்து இருக்கிறார்கள். அதுபோல் இப்போது இந்த மாலை முரசு, அலை ஓசை, நமது எம்.ஜி.ஆர். இப்படிப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் மீது பக்தவச்சலம் அவர்களை (குறுக்கீடு).. ... நமது எம்.ஜி.ஆர். நிருபர் உட்பட பக்தவச்சலம் அவர்களை சந்தித்தார் என்று சொல்லி அவர்கள் மீது வழக்கு போட்டு இருக்கிறார்கள். ஆனால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நமது எம்.ஜி.ஆர்.' யாருடைய பத்திரிக்கை என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி இருக்கும்போது 'நமது எம்.ஜி.ஆர்.' நிருபர் மீது கூட வழக்கு காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார்கள். இதில் இருந்தே இந்த அரசின் காவல் துறை எந்தப் பாரபட்சமும் இல்லாமல் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெளிவாக்கி இருப்பதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிக்கலே அங்கே தான் இருக்கிறது. இந்த 3 பேர்—பக்கிரி, அப்பன், சாந்தாராம், மிஸ்டர் நாராயணன், அவர் தான் 'நமது எம்.ஜி.ஆர்.' நிருபர்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் சாதாரணமாகச் சொல்லுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பெயரைச் சொல்வதிலே தப்பு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுடைய பெயரைச் சொல்வதிலே தப்பு இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது வேறு எங்கேயாவது கொண்டு போய் நிறுத்திவிடும்.

டாக்டர் தே. குமாரதாஸ் ; இவர்கள் மூன்று பேர்களிடமே நீங்கள் விசாரித்துப் பாருங்கள். உங்களுடைய பத்திரிக்கை நிருபரிடம் கூடக் கேளுங்கள். பக்தவத்சலத்தை சந்தித்தீர்களா ? இல்லை என்று சொன்னால் நான் சொன்னதை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். அதை நான் திரும்பப்



பெற்றுக் கொள்வதில் எனக்கு தயக்கம் கிடையாது. ஆனால், உங்களுடைய கட்சியினுடைய அதிகாரப் பூர்வமான பத்திரிக்கை நிருபர் மீது கூட ஒரு தவறான வழக்கைப் போட்டு, அங்கே கமிஷனரிடம் போய் கேட்கிற நேரத்தில் அதற்கு கமிஷனர் சொல்கிறாராம், 'இதை நீங்கள் கோர்ட்டிலே பார்த்துக் கொள்ளுங்கள். என்று, அப்படி என்று சொன்னால், அது என்ன நியாயம் ? உண்மையிலேயே சந்திக்கப்படவில்லை. என்று சொன்னால், கோர்ட்டிலே போய் பார்ப்பது என்று சொன்னால், நீங்கள் சொன்ன உடன் கோர்ட்டிலே போய், சொன்னது எல்லாம் சரி என்று சொல்லி ஒத்துக் கொண்டு வர மாட்டார்கள். எனவே, கோர்ட்டிலே போய் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதை விட பத்திரிக்கை ஜனநாயகத்தை பறிப்பதைக் கொஞ்சம் நான் வன்மையாகக் கண்டிப்பதோடு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனிமேலும் வராத விதத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோல......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி.

டாக்டர் தே. குமாரதாஸ் : முடித்து விடுகிறேன், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் தே. குமாரதாஸ் : இந்த மதுவிலக்கு மாத்திரம் ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைத் தலைவர் இன்னொரு உறுப்பினரை அழைத்து இருக்கிறார். நான் வந்ததற்காக நீங்கள் பேசக்கூடாது. அவர் அழைத்தது அப்படியே இருக்கிறது. அவரைத் தொடர்ந்து தான் நான் வந்து அவையில் அமர்கிறேன். திரு. தம்புசாமி.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து, ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, அது சரியல்ல. திரு. தம்புசாமி. (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் தயவுசெய்து உட்காருங்கள்.

[1991 செப்டம்பர் 23

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, நான் பல வேண்டுகோள் விடுத்து இருக்கிறேன். நான் பேசுகிறபோது நிறைய குறுக்கீடுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடிக்கவும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மலிவு விலையில் அயல் நாட்டு மது என்று விற்றுக்கொண்டு இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த நேரத்திலே மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்தார்கள். அதை நான் நெஞ்சார, மனதாரப் பாராட்டுகிறேன். கருத்து வேறுபாடு கிடையாது.

பிற்பகல் 1-05

எங்களுடைய கொள்கை பூரண மதுவிலக்கு என்று சொல்லி யிருந்தீர்கள். பாராட்டுகள். ஆனால் இப்போது புதியதாக 2,099 கடைகளுக்கு அனுமதி வழங்கியிருப்பதாக உங்களுடைய கொள்கைக் குறிப்பில் கொடுத்திருக்கிறீர்கள் — பிராந்தி கடைகளுக்கு. இவைகளையெல்லாம் செய்கிறபோது ஒரு வேளை நீங்கள் அந்தக் கொள்கையிலிருந்து பின்வாங்கி விடக்கூடாது என்கிற எண்ணத்தோடு மட்டுமல்லாமல், மலிவு விலை அயல் நாட்டு மது தயாரிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாக எங்களுடைய கவனத்திற்கு, காதுகளுக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைய தினம் நாட்டுமக்களின் இதயங்களில் பால் வார்க்கிற விதத்தில் மலிவு விலை அயல்நாட்டு மதுக்கடைகள் திறக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இந்த கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படக்கூடிய வாகனங்களை நீங்கள் திருப்பியே கொடுக்க வேண்டாம். அந்த விதத்தில் ஒரு சட்டத்தைப் போட வேண்டும். அதைப்போல குடித்து விட்டால் அங்கே போனால் 100 ரூபாய் பைன் கட்டிவிட்டு வந்துவிடலாம் என்கிற விதத்தில் சட்டம் இருக்கிறது. அப்படி போலீஸ் பிடித்தால் 100 ரூபாய் பைன் என்கிற எண்ணம் இருக்கிறது. அதை குறைந்த பட்சம் ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனையும், 100 ரூபாய் என்று இருப்பதை ஆயிரக்கணக்கிலும் போடுவதில் தவறில்லை. இப்படிப்பட்ட வன்மையான சட்டங்களை நீங்கள் போடுவதன் மூலம் இந்த மதுவிலக்கை அமல்படுதத முடியும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.



1991 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கருத்தைச் சொல்லி விட்டீர்கள். முடித்துவிடுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அதைப்போல, கோவையில் ஒரு பெரிய சாராய வியாபாரியை — ஈஸ்வரமூர்த்தி என்பவரை பிடித்து இருக்கிறார்கள். எல்லோரும் பாராட்டுகிறார்கள். இப்படிப்பட்ட கொள்ளைக்காரனை, சாராய வியாபாரியை பிடித்து விட்டார்களே, என்று பாராட்டுகிற நேரத்தில், அங்கே பணியாற்றிய காவல்துறை கண்காணிப்பாளர் ஒரு வார காலத்தில் அங்கேயிருந்து மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், நீங்கள் ஆற்றுகிற பணி சிறப்பாக இருந்தாலும் இந்த அரசின் மீது ஒரு தவறான எண்ணம் வருகிறது. இவரை கண்டுபிடித்த காரணத்தால் தான் இந்த எஸ்.பி. மாற்றப்படுகிறார் என்ற ஒரு தவறான எண்ணம் மக்கள் மத்தியில் வருகிறது. அப்படி கண்டுபிடித்தவர்களை பாராட்டுகிற விதத்தில் நீங்கள் பரிசுகள் கொடுத்து, பதக்கங்கள் கொடுத்து என்கரேஜ் பண்ணுவீர்களானால் நாடு முழுவதுமுள்ள இந்தமாதிரியான கள்ளச் சாராய வியாபாரிகளை அழித்து விட முடியும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து இறுதியாக ஒரு கருத்து.

தீயணைப்பு நிலையங்கள் 25 கிலோ மீட்டருக்கு ஒரு நிலையம் என்று கொள்கைக் குறிப்பில் கொடுத்திருக்கிறீர்கள். பாராட்டுகள். ஒன்றுமே இல்லாத நேரத்தில் 25 கிலோ மீட்டருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற செய்தியை நான் பாராட்டுகிறேன். அதை முடிந்தால் 10 கிலோ மீட்டருக்கு ஒன்று என்ற வீதத்தில் முயற்சி செய்து பார்ப்பீர்களானால் சிறப்பாக இருக்கும். இல்லாவிட்டால் தொகுதிக்கு ஒன்று என்று வைத்தாலும் நல்லது. என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தீயணைப்பு நிலையமே இல்லை...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் பேசுகிறபோது பத்திரிகை தர்மத்தைப் பற்றி அவர்கள் இங்கே சில தகவல்களை அளித்தார்கள். குறிப்பாக பத்திரிகைகளில் வருகிற செய்திகள் பற்றியும் தன்னுடைய உணர்வுகளை வெளியிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கூட்டணியைச் சார்ந்த தி.மு.க. அதன் சார்பாக நடத்தப்படுகிற முரசொலி பத்திரிகையில் கடந்த 15ஆம் தேதியிலிருந்து to incite communal violence

ஒரு குறிப்பிட்ட ஜாதியின் மீது பழி சுமத்தி, அதுவும் பொறுப்பு மிக்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன் அவர்கள் 15ஆம் தேதி முதல் தொடர்ந்து, தொய்வு இல்லாமல், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை ஆத்திரமூட்டத்தக்க வகையிலும், அவர்களை சிறுமைப்படுத்தக்கூடிய வகையிலும், அவர்களுக்கு அளித்த அரசியல் சட்டத்தின் உரிமைகளை காபந்து செய்யாத வகையிலும், திட்டமிட்டு செய்து வருகிறார்களே, இதுபற்றி அவர் கூட்டணி கட்சியைச் சார்ந்தவர் என்ற காரணத்தால், இந்த பத்திரிகை தர்மத்தைப் பற்றி அவருடைய கருத்தை இந்த மாமன்றத்தில் தெரிவிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சொல்கிற நேரத்தில் மன்னிக்க வேண்டும். நான் ஒரு பழமொழியை தந்தை பெரியார் அவர்கள் சொன்னதை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். * * * (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்லட்டும்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டு எப்போது மூதறிஞர் இராஜாஜி அவர்களோடு சேர்ந்தோமோ—அதுவும் எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சேர்ந்தார்களோ, அன்றைக்கே பார்ப்பனிய எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு, ஆண்டி-பிராமினிசம் இவைகள் எல்லாம் மாறி, இன்றைக்கு ''ஹியூமனிசம்''—மனித நேயம் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக அன்றைக்கு இருந்தது. பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருக்கிறது. அது வகுப்புவாதக் கொள்கை, அது திராவிட முன்னேற்றக் கழகம் என்று இன்றைக்கு கருணாநிதி தலைமையிலே இருக்கிற அந்த வகுப்பு வாதக் கட்சியினுடைய கொள்கையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்தபோது, ** ** ** ** ** அதனாலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிடர் கழகத்திற்கும் பெருத்த வாக்குவாதங்களும், வாதங்களும் தொடர்ந்து 3, 4 ஆண்டுக்காலம் நடைபெற்றுக் கொண்டிருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். இப்போது தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை பேர்களுமே தமிழர்கள் என்ற கொள்கையைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது இருக்கிற எல்லா வேறுபாடுகளும் போன ஒரு சமுதாயத்தை (குறுக்கீடு), இப்போது தமிழ்நாட்டிலே இருக்கிற அத்தனை பேரும் தமிழர்கள் என்ற கொள்கையை, பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானதற்குப் பிறகு, மக்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றி வருகிறது. அதற்கு மாறான கொள்கையை மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொன்னாலும் சரி, அல்லது அவர்களாலே, ஆதரிக்கப்படுகிற நண்பர் கருணாநிதி சொன்னாலும் சரி, அவருடைய மருமகன் முரசொலி மாறன் சொன்னாலும் சரி, அது மிகவும் தவறானது, அண்ணாவினுடைய கொள்கைக்கு மாறுபாடானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் பெரியாரிடமிருந்து விலகி, புதியதாக அமைப்பை உண்டாக்கிய நேரத்திலே கூட, ஒரு கொள்கை விவாதம் வந்தது. இதனை, திராவிடர் முன்னேற்றக் கழகமாக வைப்பதா, அல்லது திராவிட முன்னேற்றக் கழகமாக வைப்பதா என்ற கருத்து எழுந்தபோது திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று வேண்டாம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று வைத்து, திராவிட என்றால் இந்த திராவிட மண்ணிலே இருப்பவர்கள் அத்தனை பேருமே, திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணையலாம் என்று சொல்லி, வகுப்புவாத அணுகுமுறையைவிட்டு மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டது தான் அண்ணாவினுடைய திராவிட முன்னேற்றக் கழகம். அதனை

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1991 செப்டம்பர் 23

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஓங்கி நிலை நிறுத்தினார். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அந்த வழியிலே நடக்கிறார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் இரண்டு பேரும் மாறி மாறிப் பேசவேண்டாம். நீங்கள் ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : இது முக்கியமானது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**வெறுக்க வேண்டும் என்று சொல்கிற பேச்சே, பாசிச பேச்சாகும். பாசிச கருத்துக்களுக்கு தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, உலகிலே எங்குமே இடம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. விசுவநாதன் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். இதிலே வேறு எதுவும் வேண்டாம்.

திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை இழிவுபடுத்துகின்ற வகையிலே பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் நான் வந்தேன். நான் சொல்லலாம் என்று இருந்தேன். அதற்குள் விவாதம் போய்க்கொண்டே இருந்தது. தயவுசெய்து, தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார் என்று ஒரு வாதத்தை நீங்கள் கிளப்பியிருந்தாலும், அது குறிப்பிட்ட ஒரு சமூகத்தைக் கடுமையாக தாக்குகிற சொற்றொடராக இருக்கிற காரணத்தால், அது அவைக் குறிப்பிலே இருக்கவேண்டியதில்லை. (குறுக்கீடு). இதிலே வேண்டாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இதிலே நான் பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை பொறுத்தவரைக்கும், நான் சார்ந்திருக்கிற ஜனதா தளத்தின் சார்பில் சொல்கிறேன், எங்களுக்கு எந்த ஜாதி, சமயத்தினுடைய கொள்கைகளோ கோட்பாடுகளோ கிடையாது. அதேபோல்.... (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1991 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லது திரு. வே. தம்புசாமி (குறுக்கீடு). அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு). திரு. பீட்டர் அல்போன்ஸ்.

பிற்பகல் 1–15

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாடகளாக ஒரு திட்டமிட்ட பிரச்சாரம், பத்திரிகைகளிலே, மேடைகளிலே திட்டமிட்டு பரப்பி வருகிறார்கள். அதன் ஒரு கட்டம்தான் இன்று நண்பர் குமாரதாஸ் அவர்கள் இந்த அவையிலே சொன்ன வார்த்தைகள். ''ஜாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால் நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில் இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தோர்'' என்றும், 'அந்தணர் என்போர் அறவோர்' என்றும்தான் தமிழ் இலக்கியங்கள் கற்றுத் தந்த பாடமே. நீங்கள் இதை எதற்காகச் சொல்கிறீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஒரு முடிவோடு, திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிற முதலமைச்சரை மிரட்டுவதற்காக நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதை, இந்தப் பேரியக்கம் ஒருநாளும் அனுமதிக்காது. புலி வேட்டைக்குப் புறப்பட்டிருக்கிறார் என்று சொன்னேன். புறப்பட்டிருக்கிற வேளையிலே பக்கத்திலே சலசலப்பை உண்டு பண்ணி, வேட்டைக்காரனைக் கொல்வதற்காக நீங்கள் செய்கின்ற ஒரு சதித் திட்டத்தின் ஒரு அம்சம்தான் உங்களது ** எதிர்ப்புப் பிரச்சாரம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிறபோது, அவர்கள் மத்தியிலே அதிகாரத்திலே பங்குகொண்டவர்கள் அந்த இனத்திலே இல்லை என்று சொல்ல முடியாது. காஞ்சி பெரியவர்களிடம் கனி வாங்கி அதன் மூலமாவது வாக்கு பெற்றுவிடவேண்டுமென்று நீங்கள் நினைக்கவில்லையா என்பதை நீங்கள் நினைவிலே கூரவேண்டும். (குறுக்கீடு) இந்த சதித் திட்டத்தை தமிழக மக்கள் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். அது பதவியிலிருந்து விரட்டுவதற்கு, பதவி நாற்காலியில் அமர்வதற்காக திட்டமிடப்பட்டு செய்த விஷம பிரச்சாரத்தின் இரண்டாவது கட்டத்தை இன்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் இந்த மன்றத்திலே அரங்கேற்றியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அரங்கேற்றவில்லை. அவர் என்னுடைய இயக்கத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்கிறார். (குறுக்கீடு).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் தே. குமாரதாஸ் : கடந்த இடைத் தேர்தலில் நாட்டு மக்கள் அடையாளம் காட்டிவிட்டார்கள். இடைத்தேர்தலின் 4 தொகுதிகளில் 2 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் நாட்டு மக்கள் மிகத் தெளிவாக இப்போது மாறி வருகிறார்கள் என்பதேயாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். மேற்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) இதிலே தயவு செய்து நான் அனுமதிப்பதாக இல்லை. இந்த விவாதத்தை முடித்துவிட்டேன். தயவு செய்து அடுத்த உறுப்பினரைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடு) குமாரதாஸ் அவர்களே, தங்களுக்கு ஓரளவிற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். நீங்களும் பதில் கூறியிருக்கிறீர்கள். இந்த விவாதம் வேண்டாம். நான் இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பிறகு, இந்த விவாதம் வேண்டாம், ஏதோ ஒரு பத்திரிகை குறிப்பைக் காண்பிக்கிறீர்கள். (குறுக்கீடு) அதை என்னிடத்தில் அனுமதி வாங்கியிருக்கிறீர்களா? தயவுசெய்து உட்காருங்கள்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய விவாதம் இதற்காக வேண்டியதில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே வழக்கறிஞர் வி.பி. ராமனை சேர்த்து பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் டாக்டர் ஹண்டே அவர்களை இங்கே அமைச்சராக வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு** தமிழர் என்றெல்லாம் பேசுவது தேவையேயில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட எண்ணங்கள் எங்களுக்குக் கிடையாது. (குறுக்கீடு)

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராமல் தொடங்கப்பெற்ற இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளியை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். ஒரு கருத்தை நம்முடைய ஜனதாதள் உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இதை நீங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கியிருக்கிறீர்கள். ஆனால் இடையிலே ஒரு நீண்ட விவாதத்திற்கு உட்படுத்தப்பட்ட இந்த விஷயத்தில் மாண்புமிகு ஜனதாதள் உறுப்பினருக்கு தெரிவிக்கின்றேன். அல்லது வேறு யாரோ இப்போது பிரச்சினையை கிளப்பி, இதிலே வெற்றிபெற்றுவிடலாமா என்று கனவு கண்டுகொண்டிருக்கிற அவர்களுக்கும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப் அகற்றப் பெற்றது.



158377 -600 00



தெரிவிக்கிறோம். தந்தை பெரியாரும் அவர்களுக்கு அந்தரங்கமாக ஆலோசனை பெற வேண்டிய நேரத்துலே மூதறிஞர் ராஜாஜி அவர்களிடத்திலேதான் சென்று தன்னுடைய முக்கியமான பணி பிரச்சினைகளுக்கு ஆலோசனை கேட்டிருக்கிறார்கள் என்பதையும், அதை அறிஞர் அண்ணா அவர்களே ஒரு மாநாட்டிலே என்ன போய் பேசினீர்கள், எனக்குத் தெரிவியுங்கள் என்று கேட்டார்கள் என்பதையும் இன்னும் இறுதியாக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் நம்மைவிட்டு பிரிந்தபொழுது கடைசி வரை இடுகாடு வரை தந்தை பெரியார் அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டு வந்தார்கள் என்பதும்தான் வரலாறு. இன்றைக்கு காகிதப் புலியை வைத்துக்கொண்டு, தமிழகத்திலே இன்றைக்கு நிகரற்ற ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதனுடைய ஆற்றல் மிக்க தலைவரையும் வீழ்த்தி விடலாம் என்று யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் இருக்கிற இடம் தெரியாமல் இன்னும் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை எங்கேயிருந்தோ ஆரம்பித்துவிட்டு, எங்கெங்கோ போய் விட்டு வருவதன் காரணமாக— பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களோடும், பேரறிஞர் அண்ணா அவர்களோடும் நீண்ட காலமாக இருந்து பழகி, கருத்துக்களை எல்லாம் கேட்டு, அவற்றை பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டிருந்தவன் என்ற முறையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் சொல்லியது மாதிரி அந்தப் பழமொழியை பெரியார் அவர்களே சொன்னதேயில்லை. ஆனால் பெரியார் இயக்கத்தில் இருக்கிற உணர்ச்சி வயப்படுவதில் சில பேர் சொன்னார்கள், எழுதினார்களே தவிர, எந்த ஒரு இடத்திலேயும் பெரியார் அந்தக் கருத்தைச் சொன்னதேயில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய ஆதிக்கம் மற்றவற்றினுடைய அடிப்படையிலே ஈர்த்தது உண்மை. பிறகு மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்லியதற்கிணங்க பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்குகின்றபோது, நாம் குறிப்பிட்ட ஒரு வகுப்பிலே பிறந்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களை எதிர்க்கக்கூடாது. ஏனென்றால் ஒரு ஜாதியிலே ஒருவர் பிறக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவர் அல்ல. அவர் திட்டமிட்டு இன்ன ஜாதியில் தான் பிறக்கவேண்டுமென்று யாரும் திட்டமிட்டு பிறக்கவில்லை.

ஆக பிறந்து விட்டவர்கள் ஜாதி உணர்வோடு இருக்கக் கூடாது. ஆகவே பிறப்பிற்கும் எவ்வுயிர்க்கும் என்ற தன்மைக்கு ஏற்ப அத்தனை பேரும் ஒன்றாக இருக்க வேண்டுமே தவிர, பிறந்ததற்குப் பிறகு தங்களுக்குரிய ஜாதி ஆதிக்கம் அதிகாரம் ஆகியவற்றை கொள்ளக் கூடாது. ஆகவே தான் பார்ப்பனியத்தை எதிர்க்கிறேனே தவிர யாரையும் தனிப்பட்ட முறையில் நான் எதிர்க்கவில்லை என்று சொன்னார். அதே முறையில் தான் அண்ணல் காந்தியடிகள்கூட வெள்ளைக்காரர்களை நான் எதிர்க்கவில்லை ஆனால் வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்தியதைத்தான் நான் எதிர்க்கிறேன் என்று சொன்னார். ஒரு சில காலக் கட்டங்களில் சொல்வது தொடர்ந்து வராது. வெள்ளையனே வெளியேறு என்பது ஒரு காலக் கட்டம் வரையிலும் தான். இன்றைக்கு அண்ணல் காந்தியடிகள் சொன்னாரே என்பதற்காக இந்த நாட்டிலிருந்து இன்றைக்கிருக்கிற வெள்ளைக்காரர்களை எல்லாம் வெளியேற்றுகிற நிலைமை இல்லை. இன்னும் சொல்லப் போனால் வெள்ளைக்காரர்களைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கே வாருங்கள் வந்து தொழில்களை நடத்துங்கள் என்று. சீமைத் துணிகளை எரிக்க வேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள். எரிக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு காலக் கட்டத்திலே ஒரு அவசியத்தை ஒட்டி ஒரு நிலையிலே எடுத்துச் சொன்னாரே தவிர, இன்றைக்கு சிங்கப்பூரிலயிருந்து ஜப்பானிலேயிருந்து வேறு பல நாடுகளிலேயிருந்து வருகிற துணிகளையெல்லாம் எரிக்கின்ற முயற்சியில் யாரும் ஈடுபடுவதில்லை. அந்தக் காலக் கட்டம் மறைந்து விட்டது. பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே எடுத்துச்சொன்னாரே தவிர அவர் மாவூர் சர்மாவினுடைய பங்களாவிலே தான் பெரியாரே இருந்து பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். பெரியாருக்கு வழக்குகளை எல்லாம் நடத்தியவர் ஈரோட்டிலே தண்டபாணி ஐயர் தான் நடத்தினாரே தவிர வேறு யாரும் நடத்தவில்லை. இப்படி பல உதாரணங்கள் சொல்லலாம். இப்போதும் முரசொலி அலுவலகத்திலே 5, 6 பிராமணர்கள் வேலை செய்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களும் சாவி போன்றவர்களுக்கு கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதிலே பிரச்சினை ஒன்றும் இல்லை. அந்தக் கருத்தின் அடிப்படையிலே பரிமாண வளர்ச்சியிலே வளர்ந்து கொண்டு வருகிறது என்பதும் காலத்திற்கு காலம் கருத்துக்கள் மாறிக்கொண்டு வருகின்றன என்பதும் 100 ஆண்டு காலத்திற்கு முன்பு 50 ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்த ஜாதி உணர்வு ஒருவரை ஒருவர் விரோதித்து கொண்டிருந்த நிலைமைகள் எல்லாம் மாறி மாறி இப்போது வந்திருக்கிற சூழ்நிலைக்கு ஏற்பத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த கருத்தினுடைய அடிப்படையிலேதான் அனைத்திந்திய



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடைபெற்று வருகிறதே தவிர அதிலே எந்த மாச்சரியமான பிரச்சினைக்கும் இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிற காவல்துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக ஒரு நிதி பற்றாக்குறை ஏற்பட்டிருந்தபோதிலும், இந்தக் காவல் துறையினுடைய மானியத்திற்காக 241 கோடியே 52 லட்சத்து 14 ஆயிரத்திற்கு மேற்படாத ரூபாயை ஒதுக்கியிருப்பதற்காக வரவேற்கிறேன். அதிலும் இந்தத் துறை முதலமைச்சரின் கையிலே இருப்பது மிகச் சாலச் சிறந்தது வரவேற்கத் தக்கது என்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் காவல் துறையைப் பொறுத்தவரையில் அதனுடைய கொள்கைகள் நடைமுறைகள் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து அதனுடைய கொள்கை நடைமுறை என்பது வசதி படைத்தவர்களுக்காகவே என்கிற நிலை ஒரு காலத்திலே இருந்த சூழ்நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாற்றப்பட்டிருந்தாலும்கூட அது முழுவதுமாக மாற்றப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளும் வகையிலே மாற்றப்படவேண்டும். தமிழ்நாட்டிலே பிறந்த அனைவரும் சமம் என்ற நிலையை அத்துறை ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கிற அனைவரும் சமமானவர்கள் சமத்துவம் ஆனவர்கள் அவர்களுடைய பிரச்சினையிலே எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் செய்யப்படவேண்டும் என்ற உணர்விற்கு காவல் துறையினுடைய நடைமுறைகள் மாற்றப்பட வேண்டும். இன்றைய தினம் கிராமப்புறத்திலே எடுத்தாலும் சரி நகர்ப்புறத்திலே எடுத்தாலும் சரி இரண்டு வித வித்தியாசமான வேறுபாடுகள் இருப்பதை நாம் பார்க்கலாம். சாதாரண ஏழை எளிய மக்கள் கொடுக்கின்ற புகார்களுக்கு எடுக்கின்ற நடவடிக்கைகளையும் வசதியானவர்கள் கொடுக்கின்ற புகார்களுக்கு எடுக்கின்ற நடவடிக்கைகளையும் பார்த்தால் ஒருவேறுபாடு ஒரு வித்தியாசம் இருக்கிறது. அப்படிப்பட்ட வித்தியாசமான நடைமுறைகள் எதிர்காலத்திலே மாற்றப்படவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பொதுவாக தொழிலாளர்கள் பல்வேறு இயக்கங்களை நடத்துகிறார்கள். அவர்கள் அப்படி நடத்துகிறபோது அரசை எதிர்த்தோ அரசினுடைய கொள்கைகளை எதிர்த்தோ

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 23

அவர்கள் நடத்துவதில்லை. இன்றையதினம் நாட்டில் ஏறிவரக் கூடிய விலைவாசியை மையமாக வைத்து தாங்கள் வாழவேண்டும் என்பதற்காக, தங்கள் குடும்பங்கள் வாழவேண்டும் என்பதற்காக அவர்கள் எந்த நிறுவனத்திலே இருக்கிறார்களோ அங்கு அவர்கள் கூலி உயர்வு கேட்டு அதிக சம்பளம் பெறுவதற்காக இயக்கங்கள் நடத்துகிறபோது அப்படிப்பட்ட இயக்கங்களிலே போலீஸ் தலையீடு என்பதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குத்தகை விவசாயிகளுடைய பிரச்சினை வருகிறது அல்லது கூலித் தொழிலாளர்களுடைய பிரச்சினை வருகிறது. அதேபோல விவசாய தொழிலாளியாக இருந்தாலும் விவசாயிகளாக இருந்தாலும் அவர்களுடைய பிரச்சினைகள் வருகிறபோது போலீஸ் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இந்த பிரச்சினைகளில் எல்லாம் தொடர்ந்து தலையீடு இருந்ததால் அதனுடைய விளைவாக பல்வேறு பாதிப்புக்கு மக்களும் நாங்களும்தான் உள்ளாகி நாங்கள் இன்று சட்டமன்றத்திலே வந்து உறுப்பினர்களாகவும் இருக்கிறோம்.

பிற்பகல் 1-25

ஆகவே எதிர்காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நடைமுறை என்பது மாற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கின்ற வகையில் காவல் துறையைப் பொறுத்த வரையில் நியாயமான இயக்கங்கள் நடைபெறுவதற்கு அவர்கள் அனுமதி கேட்கின்றபோது, அந்த அனுமதியைக் கொடுப்பதற்கு காவல்துறை முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக எதிர்காலத்திலே ஏழைகளுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய சூழ்நிலைகளை காவல்துறையிலே ஏற்படுத்த வேண்டும். அது எதிர்காலத்திலே நடைபெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதே நேரத்திலே கொடுக்கின்ற மனுக்களை விரைவாக பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது காலதாமதமாகுமேயானால் அந்த புகார் கொடுத்தவர்களுக்கு, அல்லது புகார் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய தகராறுகள் கடுமையாகி பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையைத்தான் கடந்த கால அனுபவங்களிலே நாம் பார்க்கிறோம். எனவே ஒரு மனு கொடுத்தவுடன் விரைவாகத் தீர்ப்பதற்கு அல்லது இரு தரப்பாரையும் கட்டுப்படுத்துவதற்கு ஒரு துரிதமான நடவடிக்கையை எதிர்காலத்திலே எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறை என்பது ஒரு மிகப் பெரிய துறையாகும். அதுவும் நாட்டினுடைய ஒரு முக்கியமான துறையாகும். அனைவரையும் பாதுகாக்கக்கூடிய ஒரு கேந்திரமான துறை. அந்தத்



1991 செப்டம்பர் 23] [திரு. வே. தம்புசாமி]

துறையில் இருக்கின்ற ஊழியர்களை பாதுகாக்க என்னென்ன முறையான பாதுகாப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு பரிசீலித்து அவர்களுக்குரிய பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டும். இன்றைய தினம் குடியிருப்புகளைப் பார்த்தால் மிகவும் பழமையான குடியிருப்புகள், இன்னமும் பல குடியிருப்புகள் மழை பெய்தால் ஒழுகக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளை மாற்றி ஒரு நல்ல குடியிருப்புகளாக தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய காவல் துறைக்கு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று திருவாரூர் நகரத்தில் இருக்கின்ற டி.எஸ்.பி. அவர்களுக்கு அலுவலகம் கிடையாது. அலுவலகம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே டி. எஸ். பி. அவர்களுக்கு அலுவலகத்தை விரைவாக கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும் ஒரு தனி அலுவலகம் இல்லாமல் ஒரு வட்ட அலுவலகத்தோடு சேர்ந்து செயல்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவருக்கும் ஒரு தனி அலுவலகம் தேவைப்படுகிறது. ஏற்பாடு செய்ய வேண்டும்.

வலிவலம் காவல் நிலையத்திற்கு குடியிருப்பு கட்டுவதற்கும், காவல் நிலையம் கட்டுவதற்கும் இடம் வாங்கப்பட்டு 10 ஆண்டுக்காலம் ஆகிறது. அது அப்படியே கிடக்கிறது. ஆகவே அந்த வலிவலத்திலே சொந்தமாக காவல் நிலையம் கட்டுவதற்கும் குடியிருப்பு கட்டுவதற்கும் அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீவளூர் காவல் நிலையத்திற்கு சொந்த கட்டிடம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு குடியிருப்பு கிடையாது. எங்கெங்கேயோ குடியிருந்துகொண்டு தங்களுடைய பணிகளைச் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

கொரடாச்சேரி காவல் நிலையம் போதுமான இடத்தில் இல்லை. அது ஒரு குறுகிய, ராஜா காலத்தில் இருந்த ஒரு மண்டபத்தில் இருக்கிறது. அதற்கென்று வசதிக்கேற்ப ஒரு காவல்துறை கட்டிடத்தை கட்டுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும்.

திருவாரூர் தாலுக்காவிலே வைப்பூர் என்ற இடத்திலே ஒரு புற காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் அந்த வைப்பூர் கிராமம் அதாவது காரைக்காலுக்கும் அதற்கும் இடையிலே 3, 4 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கே நாகூர் காவல் நிலையம். இதைவிட்டால் திருவாரூர் காவல்

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 23

நிலையம். இங்கே 15 கிலோ மீட்டர், அங்கே ஒரு 15 கிலோ மீட்டர். இதற்கு இடைவெளி முழுமையும் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே காரைக்காலிலிருந்து அதிகமான சாராயம் அந்த வழியாக நாகை தாலுக்காவிற்கும் திருவாரூர் தாலுக்காவிற்கும் கடத்தப்படுவதாக பேசப்படுகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே வைப்பூரிலே ஒரு புற காவல் நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது, அதையும் அறிவித்து அந்த சாராயத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் பசும்பொன் மாவட்டங்களிலே காவல் துறைக்கு என்று கட்டிடங்கள் கட்டப்பட்டு இன்னமும் திறக்கப்படாமல் இருக்கின்றன. அதைத் திறப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று 10 ஆண்டுக்காலமாக அவர்களுக்கு பதவி உயர்வு செய்யப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை இனிமேலாவது தமிழக அரசு பரிசிலனை செய்து அந்த பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்களுக்கு வழங்கக்கூடிய ஒய்வு ஊதியம் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஒரு நாள் சம்பளம் என்ற அடிப்படையிலே எதிர்காலத்திலே ஒய்வு ஊதியம் வழங்கப்பட வேண்டும். காரணம் என்னவென்றால் இரவு பகலாக அவர்கள் 24 மணி நேரம் உழைத்துக்கொண்டிருந்தவர்கள். அவர்களுக்கு அந்த ஒய்வு ஊதியம் அந்த அடிப்படையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

இன்றையதினம் விலைவாசி ஏறியிருக்கிறது. 6 ரூபாயிலே சாப்பிட முடியுமா ? முடியாது. ஆகவே அதை மாற்றி ஒரு நாள் படி என்று அவர்களுக்கு வழங்கக்கூடிய உணவுப்படியை 25 ரூபாய் என்று அரசு நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று இன்னல் படியையும் 50 ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டும். சீருடை படி என்பது மிகக் குறைவு. சலவைக் கூலி உயர்ந்திருக்கிறது. விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆகவே அதனுடைய அடிப்படையில் சீருடை படியையும் 50 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் அவர்களுக்கு வருடாந்திர லீவு 12 நாட்களாக இருக்கிறது. இது மிகவும் குறைவாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).



1991 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது. மிக வேகமாக முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வருடாந்திர லீவை 20 நாட்களாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சீருடை வழங்காமல் இருக்கிறார்கள். தமிழக அரசு அதை விரைவாக வழங்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் வழங்கக் கூடிய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. எதிர்காலத்தில் அரசு பரிசிலித்து அவர்களுக்கு சம்பள உயர்வுக்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு நியாயவிலைக் கடைகளில் சலுகை விலையில் அளிப்பதாக அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல் சாராயத்தைக் கண்டு பிடித்து அதை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிற காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு பரிசுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன. காரணம் அவர்கள் இரவுபகலாக தமிழக அரசு கொண்டு வந்து இருக்கக்கூடிய அந்தச் சட்டத்தை முறையாக அமல்படுத்துவதற்கு, செம்மையாக அமல்படுத்துவதற்கு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் சாராயத்தை கண்டு பிடித்து ஒழித்ததற்கு அரசு ஒரு பரிசு திட்டத்தை அறிவித்து பரிசு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை அதிகாரிகளை திடீர் திடீர் என்று மாற்றுவதால் பல்வேறு வகையான சிரமங்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தை மாற்றுவதால், குழந்தைகள் படிப்பை மாற்றுவதால் இப்படி பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே திடீர் என்று மாற்றம் செய்யாமல் உரிய முறைப்படி மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அதேபோல் காவல் துறையைப் பொறுத்தவரையில் தங்களுக்கு ஏற்படக்கூடிய குறைபாடுகளை தமிழக அரசுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு அல்லது உயர் அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லுவதற்கு எந்த எந்த பணியில் இருக்கிறார்களோ அந்தந்தப் பணிகளின் அளவுக்கான ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கினால் தான் அவர்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துச் சொல்லுவதாக இருந்தாலும் அல்லது உயர் அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லுவதாக இருந்தாலும் அந்த அமைப்பின் மூலம் எடுத்துச் சொல்ல முடியும்.

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 23

அந்த வகையில் தமிழக அரசு அவர்களின் கோரிக்கைகளுக்குத் தகுந்தாற்போல் அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நவீன ஆயுதங்களை வழங்க வேண்டும். ஏன் என்றால் பழைய கால துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு இனிமேல் முடியாது. இன்று அவர்களுக்குத் தண்டனை எது என்றால் அந்தத் துப்பாக்கியை தூக்கிச் செல்வதே அவர்களுக்கு ஒரு தண்டனையாக அமைந்திருக்கிறது. ஆகவே நவீன ஆயுதங்களை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே வேகமாக தொடர்பு கொண்டு அது சாராயப் பிரச்சினையாக இருந்தாலும், அல்லது பல்வேறு சமூகப் பிரச்சினையாக இருந்தாலும், அவர்கள் செல்வதற்கு அரசுக் கடனில் ஒரு டி.வி.எஸ். 50 என்ற அளவுக்கு அவர்களுக்கு வாகனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்பு நிலையத்தைப் பொறுத்தவரையில் 25 கிலோ மீட்டர் அளவுக்கு என்று இப்போது சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி இருந்தால் சில பகுதிகள் கடுமையானப் பாதிப்புக்கு உள்ளாகும். அதை 15 கிலோ மீட்டர் தூரம் என்ற அடிப்படையில் குறைக்க வேண்டும். கீவளூரில் ஒரு துணை தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூரில் ஒரு புதிய தீயணைப்பு நிலையம் கட்டுவதற்கு ஒரு புதிய இடம் கோவில் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திலே ஒரு புதிய கட்டிடம் கட்டி அந்தத் தீயணைப்பு நிலையத்தை மாற்றினால் நன்றாக இருக்கும். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நேரம் 1-33. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கக் கூடிய அந்தத் தீயணைப்பு நிலைய இடம் மிகவும் சிறிய இடம். அவர்கள் அதில் தங்குவதற்கு மட்டுமல்ல. உட்காரக் கூட இடம் இல்லை. அது ஒரு முக்கியமான விஷயம். மருத்துவமனைக்கு செல்கின்ற பாதையில் வண்டியை நிறுத்திக் கொண்டு இடையூறாக இருக்கிறது. அவசரமாக அந்த மருத்துவமனைக்கு வாகனங்கள் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கோவில் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு விரைவாக மாற்றி, புதிய



1991 செப்டம்பர் 23] [திரு. வே. தம்புசாமி]

கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்''.

என்றார் திருவள்ளுவர். ஆகவே, காவல் துறை மானியத்தில் காவல் துறை இயங்குகிற பொழுது மிகுதி எங்கெங்கெல்லாம் காரியமாற்றியிருக்கின்றார்களோ அவற்றை யாகச் சென்று இடித்துக் காட்டுவது இந்த அரசுக்கு நல்லது என்று நான் கருதுகின்றேன்.

முதலாவதாக, மதுவிலக்குக் கொள்கையை முழுவதுமாக நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் இப்போது அன்னிய நாட்டு மதுவகைக் கடைகளிலே மது கிடைக்கிறது என்றும், இந்த டிரக் ஆக்ட்டிலே அரிஷ்டம் என்ற அந்த வகையிலேயும் இந்தப் பொருட்கள் கிடைக்கின்றன என்றும் அறிகின்றேன். ஆகவே, அவற்றை தீவிரப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துகிற செலவினை சரிக்கட்டுவதற்கு மத்திய அரசும் முன் வரவேண்டும். அண்ணல் காந்தியார் போற்றிய நெறி என்பதை இங்கே மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். அரசியல் சட்டத்தின் வழிமுறைகளிலேயும் இடம் பெற்றிருக்கிறது. ஆகையினாலே அந்த இழப்பினை ஈடுக் கட்டுவதற்கு இந்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் அவர்கள் நடந்து கொள்கின்ற விதம், ஆளும் தரப்பிலே ஒருவிதமாகவும் எதிர் தரப்பிலே வேறு விதமாகவும் இருக்கிறது. இந்தப் போக்கினை அவர்கள் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டுவரை சுமார் 20 ஆண்டுகள் ஆளும் தரப்பிலேயிருந்து துப்பாக்கி ஏந்திய காவல் துறையினரின் துப்பாக்கிக்குப் பின்னால் இருந்து பார்த்த

அனுபவம் எனக்கு உண்டு. ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக துப்பாக்கியின் எதிரிலேயிருந்து பார்க்கிற அனுபவம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்றார் அறிஞர் அண்ணா அவர்கள். ஆனால் இந்த 3 ஆண்டுகளாக எனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் ''எதையும் தாங்கும் உடம்பும் வேண்டும்'', என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அத்தகைய அனுபவம் எனக்கு மட்டுமல்ல, எதிர் தரப்பிலே இருக்கிற அனைவருக்குமே ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் காட்டினால் போதும். குறிப்பாக, சட்டமன்றத்தில், சென்ற கூட்டத் தொடரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றின் அடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார்கள். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது என்று அறிந்து அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு மருத்துவர்கள் வந்தார்கள். நாங்களெல்லாம் உண்ணாவிரதப் பந்தலிலே இருக்கின்றோம். அரசாங்க மருத்துவமனை வண்டியிலே மருத்துவர்கள் அவரை ஏற்றிச் செல்கிறபொழுது, ஏனோ தெரியவில்லை, திடீரென்று அங்கே தடியடித் தாக்குதல் நடைபெற்றது. நல்லவேளையாக எனக்குப் பக்கத்திலே இருந்த ஒருவர் மீது அந்த அடி வந்து விழுந்தது. நான் ஒதுங்கிக் கொண்டேன். புகைப்படம் எடுக்க வந்த புகைப்படக்காரர்களும் பத்திரிகை நிருபர்களும்கூட எங்களோடு சேர்ந்து அடி வாங்கினார்கள். அதிலே எனக்கு ஒரு திருப்தி. ஏனென்றால், அவர்களும் இதுபற்றியெல்லாம் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு. நான் இந்த அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புவது, தேவையற்ற முறையில், எவ்வித முகாந்திரமும் இன்றி இப்படி எதற்கெடுத்தாலும் தடியடி நடத்துவதற்கு என்ன காரணம்? இந்த முறையிலேயே கிள்ளியெறியாவிட்டால் வருங்காலத்தில் காவல் துறை மீது எவ்வாறு எதிர் தரப்பினருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நம்பிக்கை பிறக்கும்? இங்கே மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், பரமக்குடி வட்டாரத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சிலை திறக்க நான் சென்றேன். அதைக்கூட, நான் மாட்டிக் கொண்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பகுதியிலே எங்கள் இயக்கத்தைச் சார்ந்த ஜான்பாண்டியன் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சிலையைத் திறக்க டாக்டர் ராமதாஸ் அவர்களைத்தான் அழைத்தார். டாக்டர் அம்பேத்கார் அவர்களைப் பற்றி நீங்கள் நிறைய பேசலாம் என்று சொல்லி என்னை அவர்தான் அங்கே அனுப்பினார். நாங்கள் அந்தச் சிலையைத் திறக்கப் போகிற வழியில், பரமக்குடியில் ஒரு கொடியேற்றும் நிகழ்ச்சி. நாங்கள் இன்னொரு ஊரிலே நிகழ்ச்சி முடிந்து விட்டு இந்த நிகழ்ச்சிக்குப் போகிறோம். எங்கள் கார் வெளிச்சத்திலே தெரிகிறது. துப்பாக்கி ஏந்தி சுட்டுக் கொண்டே காவலர் எங்கள் முன்னே ஓடி வருகிறார். நான் கேட்பதெல்லாம், அங்கே வந்தவர்கள், அந்தக் கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் சட்ட விரோதமாகக்



கூடினார்கள் என்றால், 4 மணியிலேயிருந்து அங்கே இருந்தார்களே, அப்பொழுதே அவர்களைக் கலைத்து இருக்கலாம் அல்லது கைது செய்து இருக்கலாம். நேருக்கு நேராக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. சுந்தரராஜ்

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டிற்கு மன்னிக்கவும். மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கண்ணெதிரிலே நடந்த நிகழ்ச்சிகளை விவரிக்கின்றார். ஆனால் அதற்கு முன்னாலே என்ன நடந்தது என்று மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்கிறேன். அவர்கள் பேசுகிறபொழுது அதைத் தெரிவிப்பார்கள். நான் நடந்தவற்றை மட்டும்தான் சொல்கிறேன். நாங்கள் நேராகப் போகிறபொழுது, நேராகச் சுட்டுக் கொண்டே ஓடி வருகிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. சுந்தரராஜ்:

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர் கண் முன் நடந்ததைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறார். ஆனால், அதற்கு முன்னால் நடந்ததைப் பொறுத்துத்தான் காவல் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மக்களைக் காக்கின்ற அரசாகத்தான் இந்த அரசு விளங்குகிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை அழைத்து வந்து ஒரு சிலர் கூட்டம் போடுகின்றார்கள். இந்தக் கூட்டத்தைக் கட்சி அடிப்படையிலே போடுகிறார்களா அல்லது ஜாதி அடிப்படையிலே போடுகிறார்களா என்ற ஒரு கருத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் இங்கே விவரிக்க வேண்டும். அங்கே, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இந்திய நாட்டின் சட்டத்தை வகுத்த டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு சிலை திறக்கப்படுகிறது. அந்தச் சிலையை, ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்தான் திறக்க ஏற்பாடுகள் செய்கிறார்கள். இந்த அரசுக்கு வேண்டுமென்றே கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை அங்கே உருவாக்கியிருக்கின்றார்கள். ஒரு லாரியில் வரும்பொழுது ஒரு பகுதி மக்களைப் பார்த்து அவர்கள் ஒரு சில வார்த்தைகள் கூறும்

[டாக்டர் ச. சுந்தரராஜ்] [1991 செப்டம்பர் 23

பொழுது அங்கே மோதல்கள் ஏற்படுகின்றன. அந்த மோதல்கள் ஏற்பட இருந்த இடத்தை விட்டுவிட்டு, வேண்டுமென்றே, சட்டத்திற்குப் புறம்பாக நடக்க வேண்டுமென்று அவர்கள் பரமக்குடியில் கூடுகிறார்கள். நான்கு மணிக்கு கூடிய அவர்கள், அந்தக் கூட்டம் கலைந்து செல்வதற்காகக் காவல் துறையும், மாவட்டாட்சித் தலைவரும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் கூட அவர்கள் அங்கே கூட்டத்தைக் கலைக்க முடியாமல் போயிற்று. ஆகவே, கூட்டத்தைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியில் காவல் துறை ஈடுபடும்பொழுது ஒரு சில தவறுகள் நடந்திருக்கின்றன. ஆனால், இந்தக் காவல் துறைக்கு வீடியோ மூலம் அதை இந்தச் சட்டமன்றத்திற்குக் காட்டுகின்ற நிர்ப்பந்தம் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். நான்கூட புகைப்படங்களை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களுக்குக் காண்பிக்க.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி என்னுடைய பதிலுரையின்பொழுது விரிவான விளக்கத்தை அளிக்க இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் தன்னுடைய விளக்கத்தை இத்துடன் நிறுத்திக் கொள்வது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன். சட்ட விரோதமாகக் கூடினாலும்கூட அவர்களை மூன்று மணி நேரம் அங்கே உட்கார வைத்து, நாங்கள் வருகிற நேரமாகப் பார்த்து, அதுவும் எங்களுக்குப் பின்னாலே போலீஸ் வேன் வேறே வருகிறது. அந்த நேரமாகப் பார்த்து, இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதை நான் பார்க்கின்ற பொழுது, காவல் துறையினர் ஒருவேளை இதை வளர விட்டு, மூன்று மணி நேரமாக எல்லோரும் வந்து அளவிறந்த கணக்கிலே சேரும் வகையிலே அதை அனுமதித்து விட்டு, நாங்கள் வருகிற நேரத்திலே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்துவானேன் என்பதை நான் இந்த அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல பல்வேறு, எதிர்பாராத அதிர்ச்சி தரத் தக்க காரியங்கள் நடைபெறுகிற பொழுது மக்கள் கிளர்ச்சிகள் ஏற்படுவது இயற்கை. அது யாரும் தூண்டிவிட்டு நடைபெறுவது அல்ல. அவை தாமாகவே வந்து, தாமாகவே செல்பவை.



1991 செப்டம்பர் 22] [திரு. ச. இராமச்சந்திரன்]

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், எனக்கு நேர்ந்த நிகழ்ச்சி, அதையொட்டி நடந்த சம்பவங்கள், இந்தப் பேரவைக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பேருந்துகள் கொளுத்தப்பட்டன அல்லது கல்லெறி நடந்தன. யார் தவறு செய்தார்களோ, யார் வன்முறையில் ஈடுபட்டார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கட்டும். எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சில ஊர்களில் திடீரென்று முன்னறிவிப்பில்லாமல், காவல் துறையினர் சென்று கண் மூடித்தனமாக அங்கேயிருக்கின்ற தாய்மார்களைத் தாக்குவது, அங்கேயிருக்கின்ற சாமான்களை உடைத்தெறிவது, அங்கேயிருக்கின்ற பெட்டியை அடிப்பது, வாயிற்படியை இடிப்பது, இன்னும் தாறுமாறாக ஏசுவது, இதையெல்லாம் செய்வது என்ன நியாயம் என்பதை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள்தான் விளக்க வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால், சில ஊர்களில் கோழியைப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள். ஆட்டைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். இப்படியெல்லாம்... (குறுக்கீடு).

பிற்பகல் 1–45

திரு. வ. சத்தியமூர்த்தி : 'அலிகேஷன்ஸ்.' — ஆகவே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை; இல்லை. குறைகளைச் சொல்லத்தான் எதிர்கட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பொதுவாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன்: இவைகளெல்லாம் நாளை நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். நானே இருந்தும் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியபோது, என்னென்ன நடந்தது என்பதை போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்து, நானும் பார்த்திருக்கிறேன்.

ஆகையினாலே, சம்பந்தம் இல்லாமல் யார், யார் குற்றம் புரிந்தார்களோ, யார் யார் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று—குற்றம் புரிந்தவர்கள் மீது—கருதுகிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கட்டும். அதைப் பற்றி கொஞ்சம்கூட எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், சம்பந்தம் இல்லாதவர்கள், இன்னும் சொல்லப் போனால், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களைக் கூட பிடித்து, அவர்கள் மீது வழக்குப் போட்டு, இங்கிருந்து நாகர்கோவில் அல்லது கன்னியாகுமரிக்கு, கண்டிஷன் பெயிலிலே அனுப்பி விடுகிறார்கள். நான் கேட்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 23

கிறேன். இதுதான் ஒரு அரசாங்கத்திற்கு இலக்கணமா; முறையா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, ஒரு அரசில், சிறுபான்மை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். பெரும்பான்மையான மக்கள் அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். சிறுபான்மை மக்கள் என்று வருகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களை நம்புகிற வகையில் காவல் துறை இயங்குகிறதா? அதேபோல், சிறுபான்மை சமுதாயத்தைச்சேர்ந்த முஸ்லீம்களானாலும், கிறிஸ்தவர்களானாலும், அவர்கள் நம்புகிற வகையில் அரசாங்கம் செயல்படுகிறதா என்பதை காவல் துறை மிக முக்கியமாக கவனிக்கக் வேண்டியது. 'Minority needs safeguards; safeguards from majority'. ஆகவே, பெரும்பான்மையையும், சிறுபான்மையையும் பார்க்கிறபோது, சிறுபான்மையை ஒரு கண்ணோட்டத்தோடு, ஒரு கனிவோடு பார்க்க வேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு உண்டு. அண்மைக் காலமாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் .... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் 1–47 ஆகிறது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் ஒன்றுமே பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றிரண்டு நிமிடங்களில் முடிக்க வேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன்: குறிப்பாக, கோவை பகுதியிலே கடந்த மூன்று ஆண்டுகளாகவே நாம் எல்லாம் கவலைப்படத்தக்க அளவுக்கு மதக் கலவரம் உருவாகி வருகிறது. அதை இன்றைக்குப் போய் திடீரென்று யார் என்று பார்த்து, நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது. 1987 ஆம் ஆண்டிலே இருந்து, இந்துக்களிடையேயும், முஸ்லீம்களுக்கிடையேயும் ஒரு கலவரம் வளர்ந்து வருகிறது. அங்கேயுள்ள முஸ்லீம்களை இந்துக்கள் கொல்வதும், இந்துக்களை முஸ்லீம்கள் கொல்வதும் இந்து முன்னணி என்றும், 'ஜிஹாத்' என்றும் இப்படியெல்லாம் வளர்ந்த வண்ணம் இருக்கிறது. அவற்றைப் பார்த்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்



1991 செப்டம்பர் 23] [திரு. ச. இராமச்சந்திரன்]

போல, அந்த இரு தரப்பாரும் நம்பிக்கை கொள்கிற வகையில் யார் தவறு செய்தாலும், அந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும், அதற்குரிய நடவடிக்கையை உடனுக்குடன் எடுக்க வேண்டும். அப்போதுதான், இந்த அரசாங்கத்தின் மீது சிறுபான்மை மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன், நேரம் கருதி, குறிப்பாக இன்றைய தினம், நம்முடைய மாபெரும் தலைவர் மாண்புமிகு முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களை, தமிழ் மண்ணில் நாம் இழந்திருக்கிறோம். அது சம்பந்தமாக தமிழ் நாடு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. மறைந்த பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் ஒரு உலகப் பெருந்தலைவர். அதுமட்டுமல்ல; உலக விவகாரங்களிலே ஈடுபட்டவர்; அதுவும் குறிப்பாக வளைகுடாப் போரிலே இருந்து அனைத்து உலக விஷயங்களிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ஆகவே, அவருடைய கொலையிலே ஒரு குறுகிய வட்டத்தோடு நாம் நின்றுவிடக் கூடாது. யார் யார் அதன் பின்னணியிலே இருக்கிறார்கள் என்பதை இந்திய அரசும், இந்திய அரசோடு சேர்ந்து இந்த அரசும் நிச்சயமாக கண்டுபிடிக்கிற கடமையினை மேற்கொள்ள வேண்டும். அந்த வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது. ஆகவே, அது பற்றி நான் அதிகமாக விளக்கங்கள் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில், நாம் இந்தப் பிரச்சினையையும், இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழ் மக்களுடைய உரிமைப் பிரச்சினையையும் போட்டு குழப்பக் கூடாது. இலங்கை அரசியல் நிலைமையைப் பார்க்கிறபோது, இலங்கை அரசாங்கத்திலே ஆளுங்கட்சி நிற்குமா; அல்லது, எதிர்க்கட்சி நிற்குமா; அரசியல் சட்டமே நிற்குமா; இவையெல்லாம் மாறி, அங்கு ஒருவேளை இராணுவ ஆட்சியே வருமா என்றெல்லாம் சூழ்நிலை வளர்ந்த வண்ணம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அங்கேயுள்ள தமிழ் சிறுபான்மை மக்களுக்கு எத்தகைய பாதுகாப்பைப் பெற்றுத் தரப் போகிறோம்?

பிற்பகல் 1–50

எத்தகைய உரிமையைப் பெற்றுத் தரப்போகிறோம்? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்? ஆளும் கட்சி தரப்பிலே தேர்தல் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது, கௌரவமான புதிய ஒப்பந்தம் ஒன்று போட வேண்டுமென்று. ஆகவே, அந்தப் பிரச்சினையையும், இந்தப் பிரச்சினையையும் போட்டுக் குழப்பிக் கொள்வதனால், ஒரு தெளிவான நிலையை இந்தப் பிரச்சினையில் எடுக்க முடியாது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 23

அங்கே உள்ள இலங்கைத் தமிழர்களுக்குரிய பாதுகாப் பைப் பெற்றுத் தர வேண்டியது கடமையாகும். அதே நேரத்தில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆனாலும் சரி, இன்னும் மற்ற அரசியல் தலைவர் ஆனாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் முழுப் பாதுகாப்புத் தரப்பட வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் வன்முறையைக் கட்டாயம் நாம் நீக்க வேண்டும். அதற்கு ஒரு கட்சியல்ல; இரு கட்சியல்ல ; அனைத்துக் கட்சிகளுமே கூடி, ஜனநாயக முறையில் நம்பிக்கையுள்ள அத்தனை பேருமே கூடி, அத்தகைய முடிவை மேற்கொண்டால் அமைதியை உருவாக்க முடியும். எல்லோரும் சேர்ந்து ஆற்ற வேண்டிய பணி அது. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து நன்றாக விவாதிப்பதற்கு ; தேவைப்பட்டால், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட் டத்தைக் கூட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் ஒரு தெளிவான நிலையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று—தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கை, அமைதியை நிலை நாட்டுவது. இன்னொன்று, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அணுகு முறை. மூன்றாவது இலங்கைத் தமிழர்களுடைய உரிமை. இந்த மூன்று பிரச்சினைகளையும் தனித்தனியே அணுகும் வகையில் ஒரு நிலையை மேற்கொண்டு, ஒத்த கருத்து உருவாவதற்கு அத்தகைய கூட்டத்தை அவர்கள் கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, ஒரு கருத்து உலவுகிறது. பத்திரிக்கையாளர்களைக் கைது செய் கிறார்கள். மிரட்டுகிறார்கள். குமுதம் பத்திரிகை அந்த மாதிரி ஆயிற்று. அடுத்து தராசு பத்திரிகை, அதற்குட் பிறகு நக்கீரன் பத்திரிகை. நான் கேட்கின்றேன். பத்திரிகை களில் எழுதிவிட்டால் நாட்டு மக்கள் நம்பி விடுவதில்லை நாம் இங்கே பேசிவிடுவதால் மக்கள் அதையெல்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. நம்மைவிட, நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். ஒருவரைப் பற்றி பத்திரிகை யில் எழுதிவிடுவதனாலேயே நாட்டுமக்கள் ஏற்றுக் கொள்கிறார் கள் என்று நாம் நம்மை ஏமாற்றிக் கொள்ள வேண்டியதில்லை எதை வேண்டுமானாலும் எழுதட்டும். ஆனால் அது அவ ருடைய தன்மானத்தைப் பாதிக்காத அளவிலே. யாரைப்பற்றி எழுதுகிறோமோ அவர்களுடைய தன்மானத்தைப் பாதிக்கா அளவிலே தனிப்பட்ட முறையில், அவர்களுடைய தனி வாழ் கையைப் பாதிக்காத வகையில் எழுதிக் கொண்டிருக்கி உரிமையை, பேச்சு உரிமையை தருவதில் எந்தவிதமான தயக்கமும் காட்ட வேண்டியதில்லை. இந்த நாட்டு மக்கள் எல்லாவற்றையும் நன்றாக உணர்ந்துதான் இருக்கிறார்கள் ஒருவர் எழுதிவிடுவதினாலேயே, ஒருவர் நம்பி விடுவதினா



1991 செப்டம்பர் 23] [திரு. ச. இராமச்சந்திரன்]

லேயே அதையெல்லாம் ஏற்றுக் கொண்டு அப்படியே நம்பிவிடக் கூடிய மக்கள் தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாட்டினுடைய வரலாற்றை அறிந்தவர்களுக்கு அது நன்கு தெரியும். ஆகை யினாலே, பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. பேச் சுரிமை மறுக்கப்படுகிறது என்ற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமையும் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு.

ஒரு கருத்து நிலவுகிறது (மணியடிக்கப் பெற்றது)......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. அவர்கள் பேச வேண்டும்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறார்கள். அதை வர வேற்கிறோம்.

ஆனால் ஒரு குறை இருக்கிறது. ஒருவேளை அவருக்குச் சகிப்புத் தன்மை குறைவோ என்று பொதுவாக ஒரு கருத்து இருக்கிறது. 'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்' என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். செவி கைக்கும் அளவுக்குக் கூட சொன்னால் அதையும் பொறுத் துக் கொள்ளக்கூடிய அரசன் என்று திருவள்ளுவர் சொல்லி யிருக்கிறார். அத்தகைய தன்மையைப் பெறவேண்டுமென்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய துறை களின் மானியக் கோரிக்கைகளின் மீது எதிர்க்கட்சியின் சார் பில் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதமளிக்கும் முக்கியமான பொறுப்பைக் காவல்துறை ஏற்றுக் கொண்டுள் ளது. மாநில அரசாங்கத்தின் முதுகெலும்பாகத் திகழ வது காவல்துறை தான். காவல்துறை செயல்படத் தவறி னால், மாநில அரசாங்கமே செயல்படத் தவறி விட்டதாகக் கருதப்படுகிறது. எனவேதான் இந்தத் துறையை முதலமைச

[திரு. எஸ். ஆர், பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

சராகப் பொறுப்பு வகிப்பவர்களே பெரும்பாலும் கையில் வைத்
திருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இதற்கு
முன்பு இருந்ததைவிட இப்போது முற்றிலும் மாறுபட்ட
நிலையில் காவல்துறையின் பணி அமைந்திருக்கிறது.
சட்டம் ஒழுங்கைக் காப்பது மட்டுமல்ல, தேசத்தின் தெற்
குப் பகுதியில் உள்ள கடல் எல்லையைக் காக்கும் முக்கிய
மான பணியும் மாநில அரசின் கடமையாக ஏற்கப்பட்
டிருக்கிறது. நீண்ட காலத்திற்கு முன்னர் இந்தப் பணியை
இராமநாதபுரம் மன்னர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.
அதனால் அவர்கள் 'சேது காவலர்கள்' என்று குறிப்பிடப்பட்
டார்கள்.

பிற்பகல் 1-55

கச்சத் தீவு அப்போதுதான் அவர்களுடைய ஆளுகையில்
இருந்ததாகக் கூறப்படுகிறது. வெள்ளையர் ஆட்சி அகன்ற
தற்குப் பிறகு அந்தப் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளின்
கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் பாது
காப்புக் கருதி வடக்கு, வடகிழக்கு, வட மேற்கு எல்லை
களில் பாதுகாப்புக்காகச் செலவிடப்படும் தொகையில் ஒரு
சிறிதளவு கூட தெற்கு எல்லைப் பாதுகாப்புக்காக ஒதுக்கப்
படவில்லை. மற்ற எல்லைகளில் அதிகமாகச் செலவு
செய்தும் எல்லையைத் தாண்டிச் சென்று அன்னிய நாடு
களில் பயிற்சி பெற்று இங்கே ஊடுருவியிருக்கின்ற பயங்கர
வாதிகளின் அட்டூழியங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
அஸ்ஸாம், காஷ்மீர், பஞ்சாப் போன்ற மாநிலங்களில்
மக்களின் இயல்பான வாழ்வே குலைந்து போய்விட்டது.

ஆந்திராவில் நக்ஸலைட்டுகளின் தொல்லை தாங்க முடிய
வில்லை. இத்தகைய பயங்கரவாதிகளை ஊக்குவித்து,
உற்சாகமூட்டுகிற பிரிவினைவாத சக்திகளை, அஸ்ஸாம்,
ஆந்திரா போன்ற மாநிலங்களில் மக்கள் நிராகரித்துவிட்டார்
கள். கொள்கை ரீதியாக இத்தகைய பிரிவினை வாத சக்தி
களுடன் உறவு வைத்துக் கொண்டுள்ள தி.மு.க. அரசால்
தமிழகத்திலே பயங்கரவாத மற்றும் பிரிவினை வாத சக்திகள்
மிக வேகமாக ஊடுருவவும், வளரவும் வாய்ப்பு ஏற்பட்
டது. அதன் விளைவாக நம்முடைய ஒப்பற்ற தலைவர்
ராஜீவ் காந்தியையும் நம்மிடத்திலே அடைக்கலமாக
வந்திருந்த பத்மநாபாவையும் அவருடைய மற்ற இ.பி.
ஆர்.எல்.ஃஎப். குழுவைச் சேர்ந்த போராளிகளையும் பலி
கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழகத்தில் ஆயுத
கலாச்சாரம் பரவி பயங்கரவாதம் பெருகி தேச விரோத
நடவடிக்கைகள் உச்ச கட்டத்தை எட்டியபோதும் இந்த
மாநில மக்களின் உணர்வை மதித்தும், தேசத்தின் பாது
காப்பைக் கருதியும் மத்தியில் இருந்த சந்திரசேகர் அரசு



1991 செப்டம்பர் 23] [திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

தலையிட்டது. மத்திய அரசின் அந்த நியாயமான தலை
யீட்டுக்கு இன்றைய முதல்வர் அவர்களும், காங்கிரஸ் கட்சி
யின் தலைவர் ராஜீவ் காந்தியும்தான் காரணம் என்று
புகார் கூறப்பட்டது. அவர்களுடைய தூண்டுதலால் தான்
மாநில அரசு கலைக்கப்பட்டது என்றும் அவ்வாறு கலைத்தது
நியாயம்தானா என்ற கேள்வி தி.மு.க. தலைவராலும்
தேசிய முன்னணியாலும் தமிழக வாக்காளர்களின் முன்னால்
வைக்கப்பட்டது. அதற்கு முன்னாலே நாடாளுமன்றமும்,
சென்னை உயர்நீதிமன்றமும் கலைத்தது நியாயம்தான் என்
பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்டன. அத்தகைய
சூழ்நிலையில்தான் தலைவர் ராஜீவ் காந்தி அநியாயமாகப்
படுகொலை செய்யப்பட்டார். இதனால் ஆவேசமுற்ற
மக்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில்
தேர்தலில் தீர்ப்பு வழங்கினார்கள். மக்கள் தங்களு
டைய பேராதரவை ஜனநாயக முற்போக்கு கட்சியினருக்கு
வழங்கினார்கள். இந்தப் பின்னணியில் வரலாறு காணாத
வெற்றி பெற்று, முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும்
முதலமைச்சர் காவல் துறைக்கும் பொறுப்பேற்றிருக்கிறார்.
இருந்தாலும் ராஜீவ் காந்தியைப் போலவே அவருடைய
உயிருக்கும் ஆபத்து விளைவிக்கும் அபாயம் நீங்கவில்லை.

தேசத்தின் தெற்கு எல்லையைக் காப்பதிலும் பயங்கர
வாத சக்திகளை ஒடுக்குவதிலும் முனைப்புக் காட்டிவரும்
முதலமைச்சருக்குப் பாதுகாப்புக் கொடுத்து வரும் பொறுப்
பையும் மத்திய சர்க்கார் ஏற்றிருக்கிறது. அவருக்கு சிறப்புப் பாது
காப்பு அளிக்கும் ஏற்பாட்டை குறை கூறுபவர்களும்
இருக்கிறார்கள். அதேபோன்றுதான் தலைவர் ராஜீவ்
காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பையும் அன்றும் குறை கூறி
னார்கள். 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இண்டியா'
என்ற பத்திரிகை முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட மத்திய
அரசின் பாதுகாப்பு, சிறப்பு பாதுகாப்பைப் பற்றிக் கேலி
யாகக் கூட எழுதி இருந்தது. மாநிலத்தில் காவல் பொறுப்பை
ஏற்றுள்ள, காவல் துறையைத் தன்பொறுப்பில் வைத்
துள்ள முதலமைச்சர் தன்னுடைய பாதுகாப்புக்காக மத்திய
அரசின் சிறப்புக் காவல் படையை வைத்து இருக்கலாமா
என்றும் கேள்வி கேட்டிருந்தது. ஆனால் பாராளுமன்றமும்,
தமிழக சட்டமன்றமும் முதலமைச்சருடைய பாதுகாப்
புக்காக மத்திய அரசு முழுப் பொறுப்பு ஏற்கவேண்டும்
என்ற அடிப்படையில் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்
தன. அதை அப்படியே ஏற்றுக்கொண்டு பிரதமரும்
உள்துறை அமைச்சரும் உறுதி அளித்திருக்கிறார்கள். மக்களின்
பேராதரவைப் பெற்ற நமது முதலமைச்சருக்கே இந்த
நிலை என்றால் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை எந்த
அளவுக்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை நாம்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் காவல் துறையைச் சீராக்கும் பணி முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. காவல் துறையை நவீனப்படுத்தவும், தெற்கு எல்லையைத் திறம்படக் காக்கவும், மத்திய அரசும் உரிய பொறுப்பினை ஏற்க வேண்டும் எனவும், அதற்கேற்ற நிதி ஒதுக்கத்தைச் செய்ய வேண்டும் எனவும் மத்திய அரசை வற்புறுத்தி முதலமைச்சர் அவர்கள் குரல் எழுப்பி இருக்கிறார்கள். இத்தகைய கோரிக்கையை முதன்முறையாக வைத்த முதலாவது தமிழக முதலமைச்சர் என்ற பெயரையும் அவர்கள் பெற்றுவிட்டார்கள். இந்திய இராணுவத்தை ஆக்கிரமிப்புப் படை என்றும் கற்பழிப்புப் படை என்றும் இழிமொழிகள் பொழிந்த நிலைமை மாறி அந்த தேச பக்த இராணுவத்தின் சேவையைக் கோரிப் பெற்றதன் மூலம் நம்முடைய முதலமைச்சர் ஒரு முழுமையான தேசியவாதி என்பதையும், தேசப்பற்று மிக்கவர் என்பதையும் உலகுக்கு உணர்த்தி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

புதிதாகத் தோன்றியுள்ள சவால்களைச் சந்திக்கும் வகையில் தமிழக காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு என்று தனியாக ஒரு திட்டத்தைத் தயாரித்து அதைத் தானே நேரடியாக எடுத்துச் சென்று மத்திய உள்துறை அமைச்சரையும், பிரதமரையும் சந்தித்துப் பேசி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய முதலாவது முதலமைச்சர் என்ற பெருமையையும் நமது முதலமைச்சர் பெற்றுவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் அவருடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு கூடுதலான நிதியுதவி அளிப்பதற்கு மத்திய அரசு உடனடியாக முன் வந்திருக்கிறது.

நம்முடைய முதல்வரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல் துறை மக்களின் உயிரையும், உடமையையும் பாதுகாக்கும், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும், தனிப்பட்ட யாருடைய விருப்பு, வெறுப்புகளையும், நிறைவேற்றுகிற ஏவல் படையாக நிச்சயமாக இது இருக்காது.

பிற்பகல் 2-00

அரசியல் குறுக்கீடுகளும் படிப்படியாக அகற்றப்படும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. நேர்மையாகவும், திறமையாகவும் செயலாற்றக்கூடிய நல்ல அதிகாரிகளை முக்கியமான பொறுப்புகளில் போட்டிருப்பதால் இந்த நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் மீண்டும் உறுதிபடுத்தப் விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

சென்ற கூட்டத் தொடரில் பேசும்போது இந்த நியமனங்களை வரவேற்று முதலமைச்சரைப் பாராட்டியிருக்கிறேன். இன்று அந்த பாராட்டு சரியானது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் மேல்நிலையிலே உள்ள அதிகாரிகள் பலரும் நேர்மையாகவும், திறமையானவர்களாகவும் இருந்துவிட்டால் மட்டும் காவல்துறையில் புரையோடிப்போய் உள்ள குறைகளையெல்லாம் தீர்த்துவிடமுடியாது. மேல் அதிகாரிகள் கூறினாலும் அதை ஏற்று நடவடிக்கையில் ஈடுபடும் போக்கில் கீழ் மட்டத்தில் ஒரு தேக்க நிலை காணப்படுகிறது. சமூக விரோதிகளோடு கீழ்நிலை அதிகாரிகளுக்கு உள்ள தொடர்பும், மாமூல் வாங்குவதும் நிலைத்துவிட்ட பழக்கமாக மாறிவிட்டதாலும் இந்தச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே காவலர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பதில் தாராளமாக இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடைய கடமையை நிறைவேற்றுவதில் கண்டிப்பு இருக்க வேண்டும். குற்றவாளிகளை பிடிக்க மறுப்பதும், வழக்குகளைப் பதிவு செய்யாமல் தவிர்ப்பதும் கடமையை செய்யாமல் தவறுவதும் சர்வ சாதாரணமாக மாறி விட்டது. இங்கே பேசுகின்ற நேரத்தில் நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்தார்கள். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற மாநகரங்களுக்கு எவ்வளவு பேர்களுக்கு ஒரு போலீஸ்காரர் என்று சொன்னார்கள்.

அதேபோல வளர்ச்சி அடைந்த நாடுகள் என்று எடுத்துக்கொண்டால், பிரான்ஸ் 273 பேர்களுக்கு ஒரு காவல்காரர், போலீஸ்காரர். பழைய புள்ளிவிவரம். மேற்கு ஜெர்மனி 315-க்கு ஒருவர் இருக்கிறார். இத்தாலி, 327 பேருக்கு ஒருவர். யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா. அமெரிக்காவிலே 354 பேருக்கு ஒருவர். பிரிட்டன் 395-க்கு ஒன்று. ஜப்பான் 555-க்கு ஒன்று. இவைகள் எல்லாம் முன்னேறிய நாடுகள். வளர்ச்சியடைந்த நாடுகள். துப்பறியும் துறை மிகவும் திறமையாக செயல்படுகின்ற நாடுகள் இந்த நாடுகள். இந்த நாடுகளிலே நினைத்த நேரத்திலே எந்த இடத்திற்கும் போவதற்கான சாலை வசதிகள் உண்டு. அந்த நாடுகளிலேயே இவ்வளவு அதிகமான போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில், தமிழ்நாட்டில் 1981 மக்கள் கணக்கு எடுப்பின்படி 1520 பேருக்குத்தான் ஒரு போலீஸ்காரர் இருக்கிறார். அன்றைய மக்கள் தொகை 4,82,97,456-க்கு போலீஸ் 31,724. இதிலே ஆயுதப் படை சேரவில்லை. ஆயுதப் படை அந்த கணக்கிலே வராது. இதுபோல வேறு நாடுகளிலே இருக்கின்ற போலீசுக்கும் நம்முடைய போலீசுக்கும் பலத்த வேறுபாடு இருக்கிறது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

In England Policemen is called Bobby Loved like a Baby because of their conduct. Here in India, in Tamil Nadu Police is yet to be loved by anyone, the Police is seen as a relic of the British Raj.

அங்கே இங்கிலாந்திலே போலீஸ்காரர்களை 'பாபி' என்று அழைக்கிறார்கள். குழந்தையைப் போல அன்போடு நேசிக்கிறார்கள். நம் நாட்டிலே அவர்களை நேசிக்காதது மட்டுமல்ல, இன்னும் நாம் அவர்களை விரும்புவதில்லை. காரணம் காலனி ஆதிக்கத்தின் சின்னமாக நாம் அவர்களை இன்னமும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமை கள் எல்லாம் மாறவேண்டும். இன்னும் காவல்காரர்கள் மீது, போலீஸ்காரர்கள் மீது நாம் குற்றம் சுமத்துகிற நிலைமைதான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு யாரும் பாராட்டுத் தெரிவிக்கின்ற நிலைமை நம் நாட்டிலே வர வில்லை. அந்த நிலைமை வரவேண்டும்.

இதிலே இருக்கின்ற போலீஸ்காரர்களை நேர்ந்தெடுக் கிற முறை, தேர்வு செய்கின்ற முறை இவைகளை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும். அபோதுதான் நம்நாட்டுப் போலீஸ்காரர்களும் நம்முடைய நாட்டு மக்களாலே விரும்பப் படுகின்ற நிலை ஏற்படும். 'புரோசீசர் ஆப் தி செலக்ஷன்'. தேர்வு செய்யப்படுகின்ற முறை. ராணுவத்தில் பின்பற்று கிற முறையை இங்கேயும் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 'பிராப்பர் வெரிபிகேஷன்' நடைபெறவேண்டும். போலீசுக்கு தேர்வு செய்வதில், திறமை யானவர்கள், தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வகை யில் தேர்வுகள் அமைய வேண்டும். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்சிக்காரர்கள் பெருமளவுக்கு நுழைக்கப்பட் டார்கள். இதனால் காவல் துறை அன்றைய ஆளுங் கட்சியின் ஏவல் துறையாக செயல்பட நேரிட்டது.

ஆட்டோ சங்கருடைய சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து பெருமளவில் சம்பாதித்த ஒரு டி.எஸ்.பி.யும் ஒரு எஸ்.ஐ.யும் தி.மு.க. பிரமுகர்களுக்கு மிகவும் வேண்டியவர்களாகவும் உறவினர் களாகவும் இருந்ததை நாம் பார்த்தோம்.

அடுத்தபடியாக 'கன்டென்ட்ஸ் ஆப் தி டிரெயினிங்'. அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி நவீன காலத்திற்கு ஏற்ற தாக இருக்கவேண்டும். சமுதாயத்திலே ஏற்பட்டுள்ள மாற் றத்தைச் கருத்தில் கொண்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அதே போல "எர்ரர்ஸ் இன் பிளேஸ்மென்ட்ஸ்". அவர்களுக்கு கொடுக்கப்படும் இடம், எந்த இடத்திலே



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

பணியாற்றினால் அவர்களுடைய பணி சிறப்பாக அமையு மோ அங்கேதான் அவர்களை அனுப்ப வேண்டுமே தவிர வேறு இடங்களுக்கு அவர்களை அனுப்பக்கூடாது. "A Square peg should not be put into a round hole."

52 வயது 53 வயதிற்கு மேலாகிவிட்டால் இயன்ற வரை யில் அவர்களை சொந்த மாவட்டத்திலே பணியாற்ற அனுமதிக்கவேண்டும்.

பிற்பகல் 2-05

Lack of guidance முறையான வழி காட்டுதல் இல்லாமை. Failure to appreciate good works and rewards. அவர்களு டைய நல்ல பணிக்குரிய பாராட்டும் வெகுமதியும் கிடைக் காத நிலை. Tormenting punishment procedures laid out by British Raj unaltered by independence. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட அதே தண்டனை முறைகள் இன்னும் தொடர்ந்து வருகின்ற நிலை பரிதாபத்திற்குரிய நிலை. இதை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும்.

Middle Level Officers இடைநிலை அதிகாரிகளுக்கு தற் காலத்திற்கேற்ற முன்னேறிய பயிற்சிகள் அளிக்கப்படாத நிலை இன்னும் இருந்து வருகிறது. காலத்திற்கேற்ற பயிற்சி அதிகாரிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். பணியில் அமர்ந்த பிற கும் அவ்வப்போது குறுகியக் காலப் பயிற்சி அளிக்க வேண்டும். உதாரணமாக, பொது மக்களோடு தொடர்பு கொள்வது மாறிக் கொண்டு வருகிறது. பப்ளிக் ரிலேஷன்ஸ், பொது மக்களோடு தொடர்பு கொள்வது பற்றிய பயிற்சி Man Management Social Security Schemes சமுதாய பாதுகாப்புத் திட்டங்கள், Consumer protection and safety courses. நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய பயிற்சி, Social interaction சமுதாயத்தில் பல்வேறு தரப்பினரோடு பழகுவது எப்படி என்பது பற்றிய பயிற்சி தர வேண்டும்.

கடைசியாக, இங்கே பலரும் எடுத்துப் பேசினார்கள். புரமோஷன், பதவி உயர்வு கிடைப்பதில்லையென்ற மனக் குறை காவல் துறையிலே பெரும்பாலான கீழ் நிலையிலே இருப்பவர்களுக்கு, இடையிலே இருக்கிற அதிகாரிகளுக்கு மற்றும் மேல் அதிகாரிகளுக்கு அந்தக் குறை இருக்கிறது. அந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். பதவி உயர்வு நல்ல முறையில் கடமை உணர்வோடு, சீரிய முறையில் பணியாற்று பவர்களுக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்.

[திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

காவலர் நிலையிலிருந்து எஸ்.பி. வரை, குரூப் 1, டி.என்.பி.
எஸ்.சி. யில் எழுதி எஸ்.பி. ஆக வருகின்றவர்கள் வரை அவர்
களுக்கு பதவி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்க
வேண்டும். ஆல் இண்டியா சர்வீசில் பதவி உயர்வுகளுக்கு
கால நிர்ணயம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மாநில சர்வீசில்
வரவில்லை. 15 ஆண்டுக் காலம் இன்ஸ்பெக்டர்களாக பணி
புரிபவர்கள் இருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலம், 12
ஆண்டுக் காலம் சப்-இன்ஸ்பெக்டர்களாக பணிபுரிபவர்கள்
இருக்கிறார்கள். இன்றைய தினம் ஒரு செய்தி வந்திருக்கிறது.
25 ஆண்டுக் காலம் ஆகியும்கூட பதவி உயர்வு பெறாத
அலுவலர்கள் இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இன்னும்
250 பேர் பதவி உயர்வு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்
கிறார்கள். 10 ஆண்டுக் காலம் பணியாற்றிய பிறகு ஒட்டு
மொத்தமாக— n masse—ஆக பதவி உயர்வு பெறு
கிறார்கள். 10 ஆண்டுக் காலம் முடிந்த உடன் பதவி உயர்வு
பெறாமல் நிறைய பேர் பணியாற்றுகிறார்கள். இது எல்லாம்
நிச்சயம் மாற வேண்டும்.

அதுபோல, தமிழ்நாடு போலீஸ் கேடரைச் சேர்ந்த உயர்
அதிகாரிகளுக்கு உரிய நேரத்தில் ஐ.பி.எஸ். கன்பர்மண்ட், அங்கீ
காரம் கொடுக்க வேண்டும். சிறந்த அனுபவமும், தேர்ச்சியும்
பெற்றவர்களுக்கு அதற்குரிய அங்கீகாரம் கிடைக்க
வேண்டும். புதிதாக தேர்வுபெறும் அனுபவமற்ற இளைஞர்கள்
அனுபவம் உள்ளவர்களை பின்னுக்குத் தள்ள அனுமதிக்கக்
கூடாது. Wrcıg Asses m ıt pɛlicy cf Officers and cor sidering
gɾ·d aıd bad alive. அதிகாரிகளைப் பற்றிய தவறான
கணிப்பு, அதிகாரிகளுடைய செயல் திறனைப் பற்றி விருப்பு
வெறுப்பற்ற நிலையில் கணிக்க வேண்டும். திறமையற்ற தவறான
அதிகாரிகளை நல்ல அதிகாரிகளோடு ஒரே தட்டில் எடை
போடக் கூடாது.

Scial slackress and neglect shown to the Officers cf the law-
rfcrcı g agɾrcy காவல் துறையைச் சார்ந்தவர்கள் மக்களின்
உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பவர்கள்.
24 மணி நேரமும் பணியில் இருப்பதாகக் கருதப்படுபவர்கள்.
அவர்களை 8 மணி நேரம் பணியாற்றும் இதர இலாகா பணி
யாளர்களோடு ஒன்றாக எடை போடக் கூடாது. அவர்களிடத்
திலே உள்ள, அவர் தம் பிரச்சினைகளைப் பரிவோடு பரி
சீலிக்க வேண்டும். பணிச் சுமையும், பொறுப்பும் அதிகம்
இருந்தும் அதற்கு ஏற்ற ஊதியமும், சலுகைகளும் வழங்கப்
படவில்லையென்ற எண்ணம் அவர்களிடத்தில் பரவலாக
இருந்துகொண்டிருக்கிறது.



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதேபோல காலையிலே ஆட்டோ சங்கர் விவாகாரத்
தைப் பற்றி பலரும் இங்கே சொன்னார்கள். சமுதாய விரோதி
யாக இருந்து பல கொலைக் குற்றங்களைச் செய்த ஆட்டோ
சங்கர் ஒரு நாள் திடீரென்று சிறையிலிருந்து தப்பிவிட்
டார். இவனுக்கு பலர் சலுகைக் காட்டியிருக்கிறார்கள்.
நல்லமுறையில் அவனோடு உறவாடியிருக்கிறார்கள். வெளியிலே
இருந்த போலீஸ் அதிகாரிகள் பலரோடு அவனுக்குத்
தொடர்பு உண்டு. திடீரென்று சிறையிலிருந்து தப்பிக்
கிறான். 6 கொலைகளைச் செய்த ஒருவன் சிறையிலிருந்து
தப்பிக்கிறான். பலருடைய உதவி இல்லாமல் இப்படி ஒரு
வன் தப்பித்திருக்க முடியாது. எனவே, இந்தப் பேரவையிலே
நான் இந்தப் பிரச்சினையை அன்றைக்கு எழுப்பினேன்.
எழுப்பியபோது யார் யார் இவனுக்குத் துணையாக இருந்
தார்கள், அதைக் கண்டுபிடிக்க வேண்டும், அதற்கு என்று
ஒரு விசாரணைக் குழு, கமிஷன் போட வேண்டுமென்று
கேட்டுக்கொண்டேன். அன்றே கமிஷன் போடுவதாக
முதலமைச்சர் அறிவித்தார். அறிவித்ததற்கேற்ப ஒரு கமிஷனும்
போடப்பட்டது. ஆனால் எனக்குக் கிடைத்தத் தகவல்படி
அந்தக் கமிஷனுடைய பரிந்துரை உரிய நேரத்திலே சமர்ப்
பிக்கப்படவில்லையென்று சொல்கிறார்கள். உரிய நேரத்தில்
கமிஷனுடைய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தி
னாலே உரிய நேரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்
படவில்லையென்று சொல்கிறார்கள். குற்றப்பத்திரிகை உரிய
நேரத்தில் தாக்கல் செய்யப்படாத காரணத்தினாலே குற்ற
வாளிகள் அத்தனை பேரையும் ஜாமீனில் விடுதலை செய்து
விட்டார்கள். அந்த ஆட்டோ சங்கரையும்கூட அப்போது
வழக்கிலே ஜாமீனில் விட்டார்கள். ஆனாலும் இன்றைய
தினம் அவன் உள்ளே இருக்கிறான் என்றால், he is a
condemned prisoner. ஆகவே அவன் வெளியே வர முடியாது.
அதனால்தான் உள்ளே இருக்கிறானே தவிர அந்தக் குறிப்பிட்ட
வழக்கிலே அவனுக்கும் ஜாமீன் கிடைத்திருக்கிறது. இந்த
நிலைமைகள் எல்லாம் மாற வேண்டும். அந்த என்கொயரி
கமிஷனுடைய ரிப்போர்ட் என்ன ஆயிற்று? அதிலே கமிஷ
னுடைய கண்டுபிடிப்பு என்ன? யார் யார் மீது குற்றம் என்று
சொல்லியிருக்கிறார்கள்? அதன் அடிப்படையில் என்ன நட
வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அல்லது என்ன நடவடிக்கை
எடுக்கப்படப் போகிறது? அதிகாரிகள் யார் யார் எல்லாம் சம
பந்தப்பட்டிருக்கிறார்கள் போன்ற விஷயங்கள் எல்லாம் நிச்சய
மாக வெளியே வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2.10

அன்றையதினம் குறிப்பாக 2 பேர்கள் அவருக்கு மிகவும்
உதவிகரமாக இருந்ததாக நான் இந்த அவையிலே பேசினேன்.
ஒரு டி.எஸ். பி., ஒரு எஸ்.ஐ. அந்த டி.எஸ்.பி. ஆட்டோ

சங்கர் தப்பிக்கின்ற நேரத்தில் எங்கே இருக்கிறார் என்று சொன்னால், போலீஸ் ட்ரெயினிங் காலேஜில் அவர் பெரிய பயிற்சியாளராக இருக்கிறார். நான் கேட்டேன், அங்கே ஆட்டோ சங்கர் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் அவன்மீது முறையாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் ஆகவில்லை. அதற்குள்ளாகவே அவர் போலீஸ் பயிற்சிக் கல்லூரிக்குப் போவாரானால், அவரிடத்திலே பயிற்சி பெறுகின்ற போலீஸ்காரர்கள் எப்படி இருப்பார்கள் என்று கேட்டேன். அன்றைய தினம், அன்றைய முதலமைச்சர் என்னிடத்திலே சொன்னார், என்னுடைய கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு அவனை அங்கே போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். இன்றைய தினம் அவர் எங்கே இருக்கிறார்? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது? அவர் இன்னும் நல்ல பதவியில் இருக்கிறாரா அல்லது அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அவருடன் சேர்ந்து படுபாதகச் செயல்களுக்கு உடந்தையாக இருந்த சப்-இன்ஸ்பெக்டர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் தற்போது காமராஜர் மாவட்டத்தில் கீழராஜகுலராமன் என்ற முக்கியமான ஊரில் சட்டம் ஒழுங்கு எஸ்.ஐ.யாகப் போடப்பட்டிருக்கிறார். அங்கும் அவருடைய அட்டகாசம் தாங்க முடியவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அவரைப் பாதுகாக்கும் முக்கிய புள்ளிகள் யார் என்பதை முதலமைச்சரவர்கள் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக விரோதிகளுக்கு எதிராக மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசியல் சாயம் பூசிக் கொண்டு, அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுதல், இடங்களை ஆக்கிரமித்துக் கொள்ளுதல் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவர்களை ஒடுக்குவதற்கு குண்டர்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது. மீண்டும் தி.மு.க. ஆட்சியில் சமூக விரோதிகள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டார்கள். மாறாக எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதற்காக அந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. உண்மையில் இத்தகைய குற்றங்களைச் செய்தவர்கள் அரசாங்கத்தின் ஆதரவோடு உலா வந்தார்கள். எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியின்போது அ.தி.மு.க. பெயரைச் சொல்லிக் கொண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதே நபர்கள் தி.மு.க. ஆட்சியில் தங்கள் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார்கள். இன்றும் அத்தகைய நபர்கள் காவல் துறை அதிகாரிகளை மிரட்டியும், பொய்யான ஆவணங்களை உருவாக்கியும், ஒரு சில உயர் மட்டத்தில்





உள்ளவர்களுடைய பெயர்களைப் பயன்படுத்தியும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் — நான் இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை — அமைச்சர்களுடைய பெயரை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அது அந்த அமைச்சருக்கே கூடத் தெரியாது. அவர்கள் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி, குறிப்பிட்ட அதிகாரிகளிடத்தில் இங்கே இருந்து அவர் சார்பிலே ஒருவர் பேசுவதாகப் பேசிய, மிரட்டிய சம்பவங்கள் எல்லாம் இருக்கின்றன. வேண்டுமென்றே இந்த அரசாங்கத்திற்கு அவப் பெயர் உண்டாக்க முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அது பற்றிய விவரங்களை முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்க இருக்கிறேன். எனவே விவரங்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த சில நாட்களாக கோவையைச் சுற்றி முகமூடிக் கொள்ளை நடப்பதாகச் செய்திகள் வருகின்றன. கோவை நகரத்திலே, கோவையைச் சுற்றி, கோவை மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளில் முகமூடிக் கொள்ளைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யார் இதைச் செய்கிறார்கள்? மக்கள் மத்தியில் பெருத்த பீதி நிலவுகிறது. நம்முடைய ஊருக்கு வரப் போகிறான், இந்த ஊருக்கு வரப்போகிறான், அந்த ஊருக்கு வரப் போகிறான் என்றெல்லாம் பீதி நிலவிக் கொண்டிருக் கிறது. அங்கே, போலீஸ் காவலிலே இருந்த சிலர் தப்பிவிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அவர்கள்தான் இதற்கெல்லாம் காரணம் என்று பரவலாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. அதுமட்டுமல்ல, அவர்கள் வேண்டுமென்றே தப்பிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வதந்தியும், பேச்சும் மக்கள் மத்தியிலே பரவலாக இருக்கிறது. அப்படி தப்பிச் சென்ற ஒருவன் ஒரு கிராமத்திற்குச் செல்கிறான். சாளையூர் என்ற கிராமத்திற்குப் போகிறான். அங்கே உள்ள மக்கள் பிடித்து விட்டார்கள். ஏன் அங்கே போகிறான் என்றால், அவனைப் பிடித்துக் கொடுத்தவர்கள் அந்தக் கிராமத்திலே இருக்கிறார்கள். பெயர் வேண்டுமானாலும் சொல்ல முடியும். ஒரு விவசாயி பிடித்துக் கொடுத்தார். அவரைத் தாக்க வருவதாக நினைத்து, அவனைப் பிடித்து, பொது மக்கள் போலீசாரிடம் ஒப்படைத்தால், போலீசாருடைய நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஏன் பிடித்தீர்கள் என்ற போக்கிலே இவர்களைக் கேட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஆனால் இன்றைய தினம் அவன் பாதுகாப்பிலே இருக்கிறான். அவனை உள்ளே வைத்திருக்கிறார்கள். அதைப் போல மற்றவர்களை உடனடியாகப் பிடிக்க வேண்டும். மக்கள் மத்தியிலே உள்ள பீதியைப் போக்க வேண்டுமென்று பணிவன்போடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

முடிந்தால் அதற்கென்று தனியாக ஒரு படை அமைத்தாவது
உடனடியாக இந்தப் பேர்வழிகளைப் பிடிக்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை நகரில் பல திருட்டுகள் நடக்கின்றன.
வாகனங்கள் களவு போகின்றன. கார்கள், லாரிகள் பல திருடு
போயிருக்கின்றன. இன்னும் குற்றவாளிகள் பிடிக்கப்படவில்லை.

பிற்பகல் 2-15

வாகனங்கள் காணாமல் போய்விடுகின்றன. கார்கள் லாரி
கள் திருடுபோகின்றன. ஜூலை மாதம் 17-ந்தேதி இந்த
சென்னை நகரத்தில் லாரி ஒன்று காணாமல் போய்விட்டது.
லாரி காணாமல் போனது தெரிந்த 15—20 நிமிடங்களுக்குள்
புகார் தாக்கல் செய்திருக்கிறார். சைதாப்பேட்டை காவல்
நிலையத்தில் புகார் தாக்கல் செய்திருக்கிறார். நான்கைந்து
நாட்களுக்குப் பிறகு எனக்குத் தகவல் வந்தது. நானும் கமிஷன
ரிடத்தில் பேசினேன். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்
என்று அவரும் சொன்னார். அதற்குள் புகார் கொடுத்தவர்
17ந்தேதி புகார் கொடுத்தேன். 18ந் தேதி தான் எப்.ஐ.ஆர்.
போட்டிருக்கிறார்கள் என்றார். நான் அதையும் சொன்னேன்.
முன்தினம் அவர்கள் ரிஜிஸ்டர் செய்திருக்கமாட்டார்கள். ஆகவே
மறுநாள் செய்திருப்பார்கள் வேண்டுமானால் அதற்காக நட
வடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். கேஸ் முக்கியமா
லாரி முக்கியமா என்றால், லாரிதான் முக்கியம் என்றேன். அந்த
லாரியை வைத்துக் கொண்டுதான் அவர் ஜீவனம் செய்கிறார்,
ஆகவே லாரி கிடைத்தால் போதும் என்றேன். ஆனால் உண்மை
என்ன? எப்.ஐ.ஆர். என்பது The Information which sets the
Police machinery in action. The previous day
போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எந்த நட
வடிக்கையிலும் ஈடுபடவில்லை என்பதுதான் பொருள். அவர்
போலீஸ் ஸ்டேஷனில் இருக்கும்போது வேறு ஒரு நபர் அங்கே
புகார் தாக்கல் செய்ய வருகிறார். லாரியின் எண்ணை கேட்ட
தற்குப்பிறகு அந்த லாரி தாம்பரம் நோக்கிச் சென்று கொண்டிருக்
கிறது என்று ஸ்டேஷனுக்கு வந்தவர் சொல்கிறார். ஆனால் நட
வடிக்கை எடுக்கப்படாதது மட்டுமல்ல கமிஷனர் எனக்கு உறுதி
யளித்தாலும் கூட கீழே இருப்பவர்கள் எந்த அளவுக்கு அவருடன்
ஒத்துழைக்கிறார்கள் என்று தெரியவில்லை. பிறகு அதற்காக தனி
யாக தனிபடை அமைக்கப்பட்டு, இன்றுவரையிலும் எந்தவிதமான
தகவலும் இல்லை. அதேபோல பல லாரிகள் காணாமல் போயிருக்
கின்றன என்று என்னிடத்தில் தகவல் இருக்கிறது. நான் அதை
யும் முதல்வர் அவர்களிடம் தர இருக்கிறேன். அதேபோல் பாது



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

காப்பு அளிப்பது பற்றிய-பிரச்சினையை நண்பர்கள் இங்கே சொன்னார்கள். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கிறார் மத்திய அரசின் அறிவுரைப்படி அவருக்கு தி.மு.க. அரசு பாதுகாப்பு அளித்தது ஆனால் அங்கே வந்த காவலர்கள் பயந்திருந்தார்கள். ஏதோ பெயருக்குத்தான் காவல் துறையினர் வந்து நின்றார்களே தவிர முகத்திலே பார்த்தால் தைரியம் இல்லை. காரணம் அவர்களுடைய ஆயுதம் பழமையானவை. எதிரியிடம் இருப்பது நவீனமானவை. ஒரு நிமிடத்தில் பல ரவுண்ட்கள் சுடக்கூடிய ஆயுதங்களுடன் அவர்கள் வருவார்கள் என்றார்கள். ஆகவே தைரியம் இல்லை. அவர்களைக் கேட்டால் என்ன சொன்னார்கள் என்றால், உங்களையும் எங்களால் பாதுகாக்க முடியாது, எங்களையும் எங்களால் தற்காத்துக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். பிறகு காவலுக்கு வந்தவர்களை ஆறுதல் சொல்லி தேற்ற வேண்டியநிலை நண்பருக்கு ஏற்பட்டது. அந்த நிலையை மாற்றி காவல்துறையை நவீனப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பயங்கரவாதமும் வன்முறைக் கலாச்சாரமும் பரவிவிட்ட இன்றைய சூழ்நிலையில் காவல்துறையின் பணி மிகவும் கடுமையானது. ஆயுதக் கலாச்சாரமும் பரவிவிட்டது. மதுவிலக்கை அமல்செய்வது என்ற கடுமையான பணியை மேற்கொண்டிருக்கும்இன்றைய காலகட்டத்தில் சாராய சாம்ராஜ்யத்தை நடத்துபவர்களாலும், சமூகவிரோத சக்திகளாலும் காவல்துறையினுடைய பாதுகாப்புக்கு பெரும் அபாயம் ஏற்படக்கூடிய சூழல் உருவாகியிருக்கிறது. தங்களைப் பற்றியும் தங்களுடைய குடும்பத்தைப் பற்றியும் கவலைப்படாமல் கடமையாற்ற வேண்டிய கட்டாயம் காவலர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் பஞ்சாப் மாநிலத்தில் தங்கள் கடமையைத் தவறாமல் செய்த தலைமைக் காவலரையும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், குழந்தைகள் 7 பேரையும் பயங்கரவாதிகள் கொலை செய்து பூண்டோடு அழித்துவிட்டார்கள். இது மற்ற காவல்துறையினர் தங்களுடைய பணிகளைச் செய்யவிடாமல் அச்சுறுத்தும் நோக்கத்தோடு செய்யப்பட்ட குற்றமாகும். அத்தகைய செயல் அரசாங்கத்திற்கு பகிரங்கமாக விடப்பட்டிக்கும் சவாலும் எச்சரிக்கையுமாகும். இத்தகைய சூழ்நிலைகளை மனதில் கொண்டு நமது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரித்து மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் அளிக்கும் காவல் பணியை மேம்படுத்துவதும், அவர்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதும் அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அந்த அடிப்படையில் நமது முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பெரிதும் வரவேற்கத்தக்கவை. சென்ற ஜூலை மாதம் பெண்ணாகரத்தில் இந்தியன் வங்கியை காவல் காத்துக் கொண்டிருந்தவர்களை துப்பாக்கியால் சுட்டு கொள்ளையடிக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் தைரியமாக அந்தக் கொள்ளைக் கும்பலை எதிர்த்து நின்று. அவர்களின் செயலை முறியடிக்கும் பணியில் ஈடுபட்ட

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

அந்த வங்கிக்குக் காவல் சென்ற காவலர் தன் உயிரையே துறக்கும் நிலை ஏற்பட்டது. இருந்தாலும் பொதுமக்களின் சொத்தான வங்கியின் பணம் கொள்ளை போகாமல் தடுத்து நிறுத்தப்பட்டது. அந்த அரிய பணியில் ஈடுபட்ட அந்தக் காவலரைப் பாராட்டி அவருடைய துணைவியாரை நேரடியாக வரவழைத்து முதலமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் ரூபாயை தன் கையாலேயே வழங்கி பெருமைப் படுத்தினார்கள். முதலமைச்சரின் அந்தச் செயலை பல்லாயிரக்கணக்கான காவல் துறையினர் உள்ளங்களும் இல்லங்களும் பாராட்டி நன்றியைத் தெரிவித்துக் கொண்டன. காலத்தால் முதலமைச்சர் செய்த உதவி காவல்துறையினரின் குடும்பங்கள் என்றுமே மறக்க முடியாதது. இத்தகைய நிகழ்ச்சியின் மூலம் முதலமைச்சர் அவர்கள் காவல்துறையினரின் உள்ளங்களில் நீங்காது நிலைத்து விட்டார்.

பிற்பகல் 2—20

இந்த சந்தர்ப்பத்திலே காவல் துறையினரின் ஒன்றிரண்டு பிரச்சினைகளை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். முதலாவது பிரச்சினை காவலர்களின் குடியிருப்பு. ஒவ்வொரு காவல் நிலையம் அமைக்கப்படும்போதும் காவல் துறையினருக்கு குடியிருப்புகளை அமைப்பது முதலாவது நடவடிக்கையாகக் கொள்ள வேண்டும். மேலும் காவலர்களின் குடியிருப்பு ஒரே இடத்தில் அமைக்கப்படுவதன் மூலம் அவர்களுடைய பாதுகாப்புக்கும் நல்ல உறவுக்கும் உத்தரவாதம் அளிக்கிறது. அவசரத் தேவை ஏற்படுகிறபோது எல்லாக் காவலர்களையும் உடனடியாகத் திரட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே காவலர்கள் அச்சமின்றி தங்கள் குடும்பங்களின் பாதுகாப்பு பற்றிய கவலை இல்லாமல் பணியில் ஈடுபடுவதற்கு காவலர்கள் குடியிருப்புகளை அமைப்பதை முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும்.

அதே போல வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகளை உருவாக்கும்போது, பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றிற்குத் தனியாக இடம் ஒதுக்குவதைப் போன்று காவல் நிலையங்கள் அமைப்பதற்கும் இடங்களை தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும். பொதுப்பணித்துறை போன்ற மற்றத் துறைகளிலே திட்டப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு முன்பே தங்கும் விடுதிகளைத்தான் முதலிலே கட்டுகிறார்கள். உதாரணமாக வீராணம் திட்டத்தை மேற்கொண்டபோது திண்டிவனத்தில் முதலிலே அமைக்கப்பட்டது விருந்தினர் மாளிகைதான். 'வீராணம் இல்லம்' என்று அழைக்கப்படுகிற அந்த விருந்தினர் மாளிகை இன்னும் இருக்கிறது. ஆனால் வீராணம் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. ஆனால் காவல் துறையில் மாத்திரம் வாடகைக் கட்டிடத்திலே காவல் நிலையங்களை அவசரம் அவசரமாக அமைக்கிறோம். காவலர்களின் குடியிருப்புகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மொத்தம் 40, 42 சதவீதம்



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

காவலர்களுக்கு குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. மீதமுள்ள காவலர்களுக்கும் குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பதை முன்னுரிமைத் திட்டமாகச் செயல்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழாவது நிதியாணைக் குழு ரூபாய் 7 கோடியை நமக்கு ஒதுக்கியது. அதைத் தொடர்ந்து மேலும் நமக்குத் தேவையான தொகையை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நான் வலியுறுத்துகிறேன். அதிகம் செலவாகாது. இடம் நம்மிடம் இருக்கிறது. மூன்று மாடி, நான்கு மாடி கட்டிடங்களாகக் கட்டலாம். பல இடங்களிலே கட்டப்பட்ட காவலர்களின் குடியிருப்புகள் இன்னும் திறக்கப்படாமல் இருப்பதாக எனக்கு நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம், காமராஜ் மாவட்டம், பசும்பொன் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில், சிவகங்கையிலேயும், இராமநாதபுரத்திலேயும் கட்டியிருக்கிற வீடுகள் இன்றுவரை காவலர்களால் குடிபோகாமல் இருக்கின்றன. சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் பல கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட வீடுகளிலும், விருதுநகரில் கட்டப்பட்ட வீடுகளிலும் இன்னும் குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். ஓராண்டுக் காலத்திற்கு மேலாகி இருக்கின்றன. இவைகளையெல்லாம் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிகிறேன்.

செங்கற்பட்டிலே இரண்டு காவலர் குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எல்லாம் வெளியேறிவிட்டார்கள். அவைகள் இன்னும் செப்பனிடப்படவில்லை.

இரண்டாவது முக்கியமான விஷயம் பயணப்படி. பயணப்படியைப் பொறுத்த வரையில் சம்பளத்தில் 40 சதவீதத்திற்கு மேல் போகக் கூடாது என்று உச்சவரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. காவலர்கள் பயணம் செய்யும்போது பஸ்களில் வாரண்ட் பெற்றுக் கொண்டு பயணம் செய்கிறார்கள். அந்த வாரண்ட்டுக்குள்ள தொகையை பயணப்படியாகக் கணக்கிட்டு கழித்துவிடுகிறார்கள். இதனால் பெரும்பாலான காவலர்களுக்கு பயணப்படி வாங்க முடியாமல் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி குறைந்தபட்சம் காவலர்கள், தலைமைக் காவலர்களுக்காவது வாரண்ட்டுக்குள்ள தொகையைக் கழிக்காமல் பணமாகக் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். காவலர்கள் ஓய்வு பெறும்போது, வைப்புத் தொகை
பென்ஷன் ஆகியவை ஓய்வு பெறும் நாளிலேயே அவர்களுக்குக்
கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தகப்பனார் சர்வீஸில்
இருக்கும்போது இறந்தால் அவருடைய பிள்ளைகளுக்கு முன்னுரி
மைத் தரப்பட வேண்டும். தேர்தல் காலங்களில் அதிகப்படி
யாக படி கொடுக்க வேண்டும். "ஃபீடிங் அலவன்ஸ்"
போன்றவற்றில் கொஞ்சம் தாராளமாக இருக்க வேண்டும்.
தரிசு நிலப் பட்டா வழங்குவதில் எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்குக்
கொடுப்பதைப் போலவே காவல் துறையில் பணியாற்றுபவர்
களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
காவலர்கள் குடியிருப்புகளில் இருந்து மருத்துவ சிகிச்சைக்குப்
போக வேண்டுமென்றால் எந்தவிதமான வசதியும் இன்றி மிகவும்
சிரமப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேன் வசதி
செய்துக் கொடுக்க வேண்டும் என்று பணிவன் போடுகேட்டுக்
கொள்கிறேன்.

பத்மநாபா உள்ளிட்ட 14 பேர் கொலை வழக்கில் குற்றம்
சாட்டப்பட்ட நபர்களுக்குச் சில முன்னாள் தி.மு.க. அமைச்சர்
களுடைய நேர்முக உதவியாளர்கள் ஜாமீன் கொடுத்திருக்கிறார்
கள். அமைச்சர்களின் அரசாங்க இல்லங்களின் முகவரியை
அவர்கள் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஜாமீனில்
வெளியே வந்த அந்தக் குற்றவாளிகள் தலைமறைவாகி விட்டார்
கள். தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுத்ததாக இன்று
வரை தெரியவில்லை.

அதேபோல ராஜீவ் காந்தியினுடைய படுகொலை சம்பந்தப்
பட்ட சிவராசன் ஏற்கனவே ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருக்
கிறான். திருட்டுத்தனமாகப் பொருட்களைக் கடத்தி வந்து,
சென்னை விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரி
களால் தடுத்து நிறுத்தப்பட்டபோது அவர்களை சுட்டு
விட்டு சிவராசன் தப்பி ஓடியிருக்கிறான். ஆனால் சுங்கத் துறை
அதிகாரிகள் அவனை விரட்டிப் பிடித்து நம்முடைய
காவல் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவன்
மீது கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டு சிறை
யில் அடைக்கப்பட்டான். செங்கற்பட்டு சீப் ஜுடீஷியல்
மாஜிஸ்ட்ரேட் அவனை ஜாமீனில் விட அன்றைய தினம் மறுத்து
விட்டார். அதன் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் சிவ
ராசன் அப்பீல் செய்திருக்கிறான். அவனுக்கு வக்கீல் வைக்
கவும், ஜாமீன் கொடுக்கவும் அன்றைக்குத் தி.மு.க. அரசாங்கத்
தில் உள்ள பெரும் புள்ளிகள் உதவி இருக்கிறார்கள். ஜாமீனில்
வெளியே வந்த சிவராசன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாமல் தலை
மறைவாகிவிட்டான். அவனைக் கைது செய்வதற்குப் பதிலாக
அவன் மீது போடப்பட்டிருந்த வழக்கை தி.மு.க. அரசு



திரும்பப் பெற்றிருக்கிறது. இதிலே பெருத்த அக்கறை காட்
டியவர் அன்றைய தினம் உள்துறை செயலாளராக இருந்தவர்
என்று கூறப்படுகிறது. தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு
மத்திய சுங்கத் துறை எதிர்ப்பு தெரிவித்திருப்பதாகவும் கூறப்
படுகிறது. இது பற்றிய முழு விவரங்களையும் ஆராய்ந்து
உண்மை நிலைமையை இந்த மன்றத்திற்கு வைக்குமாறு
முதலமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே போல அகதிகள் முகாம் என்ற பெயரில் இன்னும்
தமிழகத்திலே விடுதலைப் புலிகள் இருந்து கொண்டிருக்கிறார்
கள் என்பதை நான் இங்கே எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.
குறிப்பாக பட்டுக்கோட்டை வட்டாரத்தில் செந்தலைப்
பட்டணம், அம்மணிசத்திரம், பொம்முக்காடு, கீழ்த் தோட்டம்,
ஏரி குளக்கரை என்ற 5 அகதிகள் முகாம்கள் இருக்கின்றன.

பிற்பகல் 2-25

செந்தலைப்பட்டணம் அகதிகள் முகாமில் மட்டும் 645 பேர்
அடங்கிய 124 குடும்பங்கள் இருக்கின்றன. அம்மணிசத்திரத்
தில் 719 பேர் கொண்ட 218 குடும்பங்கள் மற்றும் ஒல்லுக்காடு,
கீழத்தோட்டம், ஏரிக்குளக்கரை ஆகிய முகாம்களில் 100 குடும்
பங்களைச் சேர்ந்த 325 பேர் இருக்கிறார்கள். இந்த முகாம்
களில் உள்ள அகதிகள் என்று சொல்லப்படுபவர்கள் பெரும்
பாலோர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.
கடற்கரைக்கு மிகவும் அருகாமையில் உள்ள பகுதியாக இருக்கின்ற
காரணத்தினாலே அவர்கள் கள்ளக் கடத்திலிலே அங்கே ஈடு
படுகிறார்கள். வெளியே ஆயுதம், வெடி மருந்துகள், தங்கம்,
உணவுப் பொருட்கள், டீசல், பெட்ரோல் போன்ற கள்ளக்
கடத்தல் வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இவர்கள்
சாதாரணமாக ஒரு நாளைக்கு 500 ரூபாய் முதல் 1000 ரூபாய்
வரை சம்பாதிப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் கள்ளக்
கடத்திலிலே ஈடுபட்டவர்கள் பெயர்களைக் கூட
என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஒருவன் சிவலிங்கம்
என்று பெயர். இவன் இலங்கை அரசாங்கத்தினுடைய முன்னாள்
ஊழியன் ; செந்தலைப்பட்டணம் முகாமிலிருந்து இவன் செயல்
படுகிறான் ; யாழ்பாணத்திலுள்ள விடுதலைப் புலிகளுடன்
'ஒயர்லெஸ்' மூலம் தொடர்பு கொள்கிறான். இவர்களுக்குத்
துணையாக மற்றொரு விடுதலைப்புலி டாமினிக் என்பவன்
ஈடுபட்டு இருக்கிறான் என்று தகவல்கள் சொல்கின்றன. இரண்டு
நாட்களுக்கு முன்னாலே, பத்திரிக்கையிலே ஒரு நல்ல செய்தியைப்
பார்த்தேன். இந்த முகாம்கள் இடமாற்றம் செய்யப்படும் என்று

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 23

எதிர்பார்த்தேன். விரைவில் மாற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற பெட்ரோல் பங்குகளை தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அங்கே இருக்கிற டீசல், பெட்ரோல்— இவைகளையெல்லாம் இலங்கைக்குக் கடத்துவதற்கு பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அது குறித்தும் நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் விடுதலைப்புலிகள் "OFFER" என்ற அமைப்பின் பேரில் செயல்படுவதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த அமைப்பு திருச்சிராப்பள்ளியிலுள்ள 'பொன் நகர், எண் 21, இரண்டாவது குறுக்குத் தெருவிலுள்ள இடத்திலிருந்து செயல்படுவதாகத் தகவல்கள் வந்து இருக்கின்றன. இதையும் கண்காணிக்க வேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காலையிலே இங்கே நண்பர்கள் பேசும்போது, காமராசர் இரயில் நிலையப் பெயர் மாற்றத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தி.மு.க. ஆட்சியின் காலத்தில் அவர்கள் மீது பல பொய் வழக்குகள் போடப்பட்டன. அதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால் எங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் ஆகிவிட்டது என்று நினைக்கிறேன். அதற்குப் பின்னாலே இன்று வரையில் எந்த நோட்டீஸும் வரவில்லை; எந்த சம்மனும் வரவில்லை. ஆனால் உண்ணாவிரதப் போராட்டத்திலே முதல் தடவையாக கைதானவர்கள் அத்தனை பேர்கள் மீதான வழக்குகளும் இன்று வரையில் வாபஸ் பெறப்படவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர், திருவாடானை உறுப்பினர் கே. ஆர். இராமசாமி அவர்கள் மீது இரண்டாவது இரயில் மறியல் போராட்டத்திற்காக போடப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டுவிட்டது. ஆனால் முதலிலே போடப்பட்ட உண்ணாவிரத வழக்கு, அவர் மீது போடப்பட்ட வழக்கு, இன்னும் வாபஸ் பெறப்படவில்லை. தொண்டர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். தொண்டர்கள் மீது இருக்கிற வழக்குகள் அப்படியே இருக்கின்றன. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மீது போடப்பட்ட வழக்கை அரசு திரும்பப் பெற்றதை நான் வரவேற்கிறேன். முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று எந்தப் பாவமும் அறியாத ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப்பெற வேண்டுமென்று முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திண்டுக்கல்-காயிதே மில்லத், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி போன்ற பெயர்களைச் சூட்டி தி.மு.க. அரசு எடுத்த நடவடிக்கையை ரத்துச் செய்தது போன்று காமராசர் இரயில்



[1991 செப்டம்பர் 23 [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நிலையம் என்ற பெயரை மீண்டும் சூட்டுவதற்கு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி அடிக்கடிச் சொல்வார், 'இந்த நாட்டிற்கு எப்போது பரிபூர்ணமான சுதந்திரம் வந்து விட்டதாக நான் கருதுவேன் என்றால், பருவப் பெண், 16 வயது நிரம்பிய பருவப் பெண் தன்னுடைய உடலிலே நகைகள், ஆபரணங்கள் பூட்டி, அச்சமின்றி நடுநிசியில் எந்த இடத்திற்கும் போய் வருகிற சூழ்நிலை எப்போது ஏற்படுகிறதோ அப்போது தான் இந்த நாட்டிற்குப் பரிபூரணமான சுய இராஜ்யம் வந்து விட்டதாக நான் கருதுவேன்' என்று மகாத்மா காந்தியடிகள் சொல்வார்கள். நான் தங்களிடத்திலே கேட்டுக்கொள்வது, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நிலை தமிழகத்திலே ஏற்பட வேண்டுமென்று விரும்பி கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாகத் திகழ நீங்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்கள் ஆதரவு உண்டு என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான பதிலுரை தர வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதற்குரிய கால அவகாசம் இப்போது இருக்காது என்பதைக் கருத்திலே கொண்டு அவர்கள் நாளை காலை பதிலுரை வழங்கலாம் என அவையின் ஒப்புதலோடு அறிவித்துக் கொள்கிறேன். நாளை காலை வினா-விடை நேரத்தை ரத்து செய்யலாம் என்றும் கருதுகிறேன். அதற்கான தீர்மானத்தை முன்னவர் அவர்கள் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 6. தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப்பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 24—9—1991 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது.

பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4–30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30

பேரவை பிற்பகல் 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இர. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

### 5. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 27—கதர் கிராமத் தொழில்கள்.

(உ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்

(ஊ) கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மானியக்கோரிக்கை எண். 27 கதர்-கிராமத் தொழில்கள் மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,29,90,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 749. திரு மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADASS: Mr. Speaker Sir, to discuss the need to provide the financial assistance to Cottage Industries run by women and physically handicapped persons to produce washing soap hand-made paper and dolls, I move—

"That the allotment of. Rs. 7,29,90,000 under Demand No. 27, Khadi and Village Industries be reduced by Rs 100."





மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 743. திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கை எண் 48— ஊரகத் தொழில்கள் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகத் தொழில்கள் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 32,41,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 764. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் ஊரகத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் இன்றைய நிலை குறித்து விவாதிக்க" கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"ஊரகத் தொழில்கள் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,41,87,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 758, திரு. ஜி. பழனிசாமி. இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கை எண் 60— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 32,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்று கோருகிறேன்;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண் 766, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 767, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

<u>மாண்புமிகு திரு. முகமது ஆசிப் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்-கிராமத் தொழில்கள் ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு திலும் அவைமுன் வைக்கப்பட்டு இருக்கின்றன. **அவற்றை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத் நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற ஆலோசனைகள், கருத்துக்களின் அடிப்படையில் என்னுடைய பதில் உரையை இறுதியாக அவைக்கு அளிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்.

<u>*திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாக்களித்த, என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும் எனது நன்றியைக் கூறி எனது உரையை துவக்குகிறேன்.

இன்றைய மானியக் கோரிக்கையான, ஊரக மற்றும் சிறுதொழில்கள் சம்பந்தப்பட்டவற்றை இந்த அவையில் அறிமுகம் செய்து வைத்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைய வேண்டுமானால் பல வழிகளிலும் நாம் சலுகைகளை வழங்கிட வேண்டுமென்று இந்த அரசு உணர்ந்துள்ளதை நான் பாராட்டுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் இந்த மாமன்றத்திற்கு இந்தத் துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் நாடாளுமன்றத்தில் சென்ற முறை உறுப்பினராக இருந்தபோது தொழில் துறை ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருந்தவன் என்ற முறையில் எனக்குத் தெரிந்த வரையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது தமிழகத்தில்தான் அதிகமாக 'சிக் இண்டஸ்ட்ரீஸ்'

** 684-720 ஆம் பக்கங்களில் IV, V இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.



அதாவது நலிவுற்ற தொழில்கள் இருப்பதாகக் கணக்கில் வந்துள்ளன. இன்றைக்கு ஆர்.பி.ஐ. கணக்கின்படி 27,500 நலிவுற்ற இண்டஸ்ட்ரீஸ் இருப்பதாகக் கூறுகிறார்கள். As per Your departmert 18,000 இருப்பதாகக் கூறுகிறார்கள். நான் அப்பொழுதே இங்குள்ள சில தொழில் சங்கத் தலைவர்களைச் சந்தித்து ஏன் இந்த நிலை என்று கேட்டேன். அவர்கள் தமிழகத்திலுள்ள கடுமையான சட்டதிட்டங்கள் தான் இதற்குக் காரணம் என்று கூறினார்கள். அதையெல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்து, சில விலக்குகளை அளிக்க முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட சலுகைகளை அளித்தால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக, முன்னாள் கவர்னர் திரு. அலெக்சாண்டர் அவர்கள் 1988-ஆம் ஆண்டு 'Green channel' என்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி யாராவது தமிழகத்தில் ரூ. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட முதலீடு செய்ய முன்வந்தால் அவர்கள் எந்த ஒரு துறையின் அனுமதியும் பெறாமலேயே அந்தத் தொழிலை துவங்கலாம் என்ற அறிவிப்பு இருந்தது. அதாவது அவர்கள் ஆரம்பித்த 30 நாட்களுக்குள் மாவட்ட தொழில் மையத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான எல்லா உரிமங்களையும் பெற்று அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. ஆனால் அப்படியிருந்தும் அந்தத் திட்டத்தின்கீழ் ஒரு தொழில் நிறுவனம்கூட ஏற்படாதது, வருந்தத்தக்கதாகும்.

சமீபத்தில் அரசு மின் கட்டணத்தை சிறு தொழில்களுக்கு உயர்த்தியதால் பெருவாரியான தொழிற்கூடங்கள் மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது தொழிற்சாலைகளை மூடுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திவிடும். ஆகவே சிறு தொழில்களை நடத்துபவர்களுக்கு குறிப்பாக குறைந்த சக்தியில் மின் உபயோகிப்பவர்களுக்கு, அதாவது 13.0 குதிரைத் திறன்—மின்சார கட்டணம் வீடுகளுக்கு விதிக்கப்படுவது போல் அவர்களுக்கும் விதிக்கப்படவேண்டும். நெடுநாளைக்கு இல்லையென்றாலும் ஐந்து ஆண்டுகாலத்திற்காவது நீங்கள் இதனைச் செயல்படுத்திப் பார்க்கவேண்டும். தற்போது அரசாங்கம் 107 பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்களாக அறிவித்துள்ளனர். இங்கு மின் கட்டணத்தை மானிய முறையில் 3 ஆண்டுகளுக்கு 30 சதவீதம், 20 சதவீதம் 10 சதவீதம் என்ற வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மானியத்தைப் பெற தொழில் செய்வோர்கள் பணத்தை மின் வாரியத்திற்கு முதலில் கட்டி விட்டு, இம்மாவட்ட தொழில் மையத்தில் அதைப் பெற வேண்டும். இதில் அதிக தாமதமும் அதிக சிரமமும் ஏற்படுகிறது. ஆகவே தமிழக அரசு உயர்

[திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்] [1991 செப்டம்பர் 23

மின் அழுத்தத்திற்கு மின் வாரியத்தில் அந்தக் கட்டணத்தை குறைப்பதுபோல் சிறு தொழில்களுக்கும் இந்தச் சலுகையை செய்து தர வேண்டும்.

பிற்பகல் 4-40

நந்தம்பாக்கத்தில் சுமார் 40 ஏக்கர் நிலம் எந்த உபயோகத்திலும் இல்லாமல் அரசின் கையில் உள்ளதாகத் தெரிகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண்கள் தொழில் துவங்குவதில் மிகவும் ஊக்கம் அளிப்பவர். ஆகவே அந்த இடத்தில் சுமார் 15 ஏக்கர் அளவிற்கு பெண்கள் சிறு தொழில் செய்வோருக்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்து, மீதியுள்ள சுமார் 25 ஏக்கர் நிலத்தை குறுகிய தொழில் செய்வோருக்கு தொழிற்பேட்டையாக மாற்றினால் தொழில் பெருகும். இந்தத் தொழிற்பேட்டை அமைப்பதில் 'சிட்கோ' ஒரு 'out rate sale' என்று வைத்திருக்கிறார்கள். பொதுவாக அவர்கள் 100 இடத்தைக் கட்டினாலும், அதில் 1,000 பேருக்கு மேல் விண்ணப்பம் வந்தாலும் 100 பேருக்கு அதை குலுக்கல் முறையில் கொடுக்கிறார்கள். அது நியாயமாகத்தான் நடைபெறுகிறது. அதை 'out rate purchases' என்று சொல்கிறார்கள். அதுதான் மிகவும் கடினமான ஒன்று. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 90 சதவீதம் தொழில் செய்வோர் 10 இலட்சத்திற்கும் குறைவாகவே மூலதனம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி உடனே ரூ. 5 இலட்சத்தை எடுத்து கட்ட முடியும்? அப்படியே அறிவிக்கப்படும்போதே அவர்களுக்கு 'அலாட்' ஆனவுடன் 10 நாட்களுக்குள் தராவிட்டால் 24 சதவீதம் வட்டி கட்ட வேண்டும். அதற்கு மேலே போனால் மீண்டும் அபராத வட்டி என்று கட்டிக் கொண்டே போகிறார்கள். தொகையை அவர்கள் வங்கியிலே இருந்து பெறுவதற்கு கால தாமதம் ஏற்படுவதால் வெளியிலே சென்று அதிக வட்டிக்கு வாங்கி வந்து எப்படியாவது இடத்தைப் பெற வேண்டும் என்ற முயற்சியில் பணத்தை வாங்கி அந்த இடத்தைப் பெறுகிறார்கள். அதற்குப்பின்னால் என்னதான் தொழில் செய்தாலும் அந்த வட்டி கட்டுவதே அவர்களுக்கு சிரமமாக இருக்கிறது. ஆகையினால் இதையெல்லாம் மனதிலே வைத்து முதலில் 3 ஆண்டுகளுக்கு அந்த இடத்தை 'லீஸ்' முறையில் கொடுக்க வேண்டும். பிறகு தொழில் நல்லபடியாக நடந்தால் அவர்களுக்கு அவுட்-ரேட் சேல் செய்து கொடுக்கலாம். அதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிண்டி, அம்பத்தூர் போன்ற தொழில் பேட்டைகளிலும் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொழிற்பேட்டைகளிலும் சீரான சரியான சாலை வசதிகள்,



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்]

விளக்குகள், குடிதண்ணீர் வசதிகள் இல்லை. ஆனால் வரிகளை மட்டும் வசூலிக்கிறார்கள். ஆகவே முதல்வர் அவர்கள் இதை உடனடியாக கவனிக்க வேண்டும்.

தொழிற்பேட்டைகளில் அடிக்கடி எந்தவித அறிவிப்பும் இல்லாமல் மின்சாரம் தடைபடுகிறது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் தொழிலாளர்களுக்கு சீரான வேலை கொடுக்கவும் முடியவில்லை. இதையும் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அரசாங்கம் தொழில் துவங்குபவர்களுக்கும், ஏற்கெனவே இருக்கும் தொழில்களை விரிவுபடுத்துபவர்களுக்கும் 15 விழுக்காடு மானியம் வழங்குகிறது. இந்த அரசு இப்போது அதை 20 விழுக்காடாக உயர்த்தி உள்ளது. இந்தச் சலுகைகளையும் 'டிக்' மற்றும் வங்கிகளும் அவர்களின் மூலதனத்தில் ஈடாக எடுத்துக் கொண்டால் தொழில் முனைவர்களுக்கு தொழிலை வளரச் செய்ய மிகவும் உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தொழில் மையத்தில் இதைப் பெறுவது மிகவும் சிரமமாக உள்ளது. மத்திய அரசு 5 இலட்சம் வரை உள்ள ஊரக தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ஆனால் வட்டி விகிதத்தில் சிறு தொழில்களுக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. ஆகவே ஊரக தொழில்களுக்கு குறைந்த வட்டி விகிதத்திலும், சிறு தொழில்களுக்கு செக்யூரிட்டி மூலமும் கடன் கொடுத்தால் தொழில்கள் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். பல பேர் இந்த செக்யூரிட்டி முறையை வைத்திருப்பதால் தொழிலையே துவங்காமல் போய் விடுகின்றனர். பொதுவாக வங்கிகள் Working கேப்பிடலை அவ்வளவு எளிதாக கொடுத்து விடுவதில்லை. சில நேரங்களில் கொடுப்பதே இல்லை. ஆகையினால் ஆரம்பித்த பல தொழில்கள் பாதியிலேயே நின்று போய் விடுகின்றன. சிறு தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைப்பதற்கும், மற்றும் விற்பனை செய்வதற்கும் வேண்டிய வசதிகளையும் இந்த அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே டான்சி என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. இது கிட்டத்தட்ட 50 கோடிக்கு மேலே நட்டத்தில் நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நல்ல பல இடங்களில் ஷோரூம்களை வைத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் உற்பத்தியாகும் சிறு தொழில்களுடைய பொருட்களை வைத்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால் அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்] [1991 செப்டம்பர் 23

குஜராத், மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் "சிங்கிள் விண்டோ"
என்ற முறையில் ஒரு முனை தீர்வுக் குழு உள்ளது. அதன் மூலம்
மாநிலத்தில் தொழில் துவங்குபவர்களுக்கு ஒரு மாதத்திற்கு
ஒரு முறை கூடி எல்லாத் துறை அதிகாரிகளும் சேர்ந்திருந்து
தேவையான உதவிகளைக் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்
நாட்டில் தொழில் துவங்க ஒவ்வொரு துறைக்கும் சென்று அதற்
கான அனுமதியைப் பெற கடினமாகவும் இருக்கிறது, பல மாதங்
கள் 'டிலே' ஆகிறது. ஆகையினால் அதே முறையினை இங்கேயும்
கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறுகிய
தொழில்களுக்கு "டர்ன் ஓவர் டாக்ஸ்" என்று ஒன்று உள்ளது.
அந்த டர்ன் ஓவர் டாக்சிலிருந்து குறுகிய தொழில்களுக்கு
விதிவிலக்கு அளிக்கவேண்டும். சிறு தொழில் செய்பவர்களுக்கு
கிரேடு முறையில் அதை அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். தமிழகத்தில் வேக்ஸ் எனப்படும் மெழுகு
கிடைப்பதில் மிகவும் கடினமாக இருக்கிறது. 1987-க்கு
முன்பதிவு செய்த தொழிற்சாலைகளுக்குத்தான் கிடைக்கிறது.
பின்னால் பதிவு செய்தவர்களுக்கு அது கிடைப்பது மிகக் கடின
மாக இருக்கிறது. அரசாங்கம் இதில் உடனடியாக தலையிட்டு
அனைவருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

4—45 முற்பகல்

வெளி மாநிலத்திலிருந்து உதாரணமாக குஜராத் போன்ற
மாநிலத்திலிருந்து அதிகாரிகள் இந்த மாநிலத்திற்கு வந்து தமது
மாநிலத்தில் தொழில் துவங்க வேண்டுமென்று அழைக்கிறார்கள்.
எனக்குத் தெரிந்து இரண்டு முறை இதுவரைக்கும் வந்து விட்
டார்கள். நம்முடைய அரசாங்கம் அங்கு சென்று இது போன்ற
முறைகளில் ஈடுபடுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.
இங்கு சிறுதொழில் மூலம் தயாரிக்கப்படும் பல பொருட்கள்
வெளி மாநிலங்களுக்குச் சென்று விற்க முடியாத நிலை இருக்
கிறது. அதற்கு மொழி, பொருட் செலவு, மேலும் அவர்களுக்கு
அனுபவம் இல்லாத காரணத்தினால் இங்கேயே விற்று விடு
கிறார்கள். அதையெல்லாம் வாங்கி ஒழுங்குமுறை கூடத்தின்
மூலமாக வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால்
அதற்கும் தனியாக எக்ஸைஸ் வரி என்று போடுகிறார்கள்.
மற்ற மாநிலங்களில், குஜராத், டில்லி போன்ற இடங்களில்
அது போன்ற வரிகள் இல்லை. அதை நாம் மனதில் கொண்டு
இங்கேயும் அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்
டுக் கொள்கிறேன்.

அடுத்து எக்ஸைஸ் பார்முலா. இரண்டு விதமான
வரி கட்டுவதானல், வெளியூர் மட்டுமல்ல, இங்கேயிருக்
கின்ற நெய்வேலியிலேகூட அவர்களால் ஒப்பன் காம்படி
ஷனுக்குப் போக முடியவில்லை, அதனால் டில்லி, கல்கத்தா.



1991 செப்டம்பர் 23] [திரு. எஸ். எஸ். ஆர். இராமதாஸ்]

பாம்பேயிலே இருப்பவர்கள் இங்கே வந்து டெண்டர் போட்டு
அதற்கான உரிமை பெற்று விடுகிறார்கள். நம் ஊரிலே இருக்
கும் தொழிற்சாலைகளில் நம்மால் காம்படிஷன் செய்ய முடிய
வில்லை. இதையெல்லாம் மனதிலே கொண்டு அந்த வரியை
எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நமது புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அவர்கள்
இந்த மாநிலத்தை இந்தியாவிலேயே ஒரு சிறந்த தொழிற் கூட
மாக கொண்டு வர வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள்.
அவர்களுக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியான செஞ்சி மிகவும்
பின்தங்கிய இடம். அங்கே ஒரு தொழிற்சாலையை நிச்சயமாக
நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கூறி வாய்ப்பு அளித்த
மைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்கா
தரன்.

*திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்
களே, என்னை இந்த சட்டசபையின் உறுப்பினராகத் தேர்ந்
தெடுத்து வேட்பாளராகத் தேர்வு செய்து கள்ள சாரா
யத்தை தமிழகத்தை விட்டே அகற்றி மற்றும் பல சாதனைகள்
செய்து எதற்கெடுத்தாலும் புரட்சி, புரட்சி என்று ஒரு வேகத்
தோடு செய்யும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்
பாதங்களை வணங்கி எனது கன்னி உரையை நான் இந்த மா
மன்றத்தில் அளிக்கிறேன்.

சிவகாசி தொகுதியானது தொழில் நிறைந்த ஒரு தொகுதி
என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற
வுடனேயே வானொலியிலும், தொலைக்காட்சியிலும் குறிப்பிட்ட
ஒரு சிறப்பினை பெற்ற தொகுதி சிவகாசி தொகுதி. கிட்டத்
தட்ட 2,08,000 வாக்காளர்கள் உள்ளார்கள். அதில் பெரும்
பாலோர் தொழில் செய்பவர்கள். மேலும், எங்கள் தொகுதியில்
பட்டாசு, தீப்பெட்டி, பிரிண்டிங் பிரஸ் ஆகிய மூன்று தொழில்
கள்தான் சிறப்பாக உள்ளன. எங்கள் தொகுதியைப் பொறுத்த
வரையிலும் விவசாயம் என்பதே தற்சமயம் நடைபெற முடியாத
ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே மழை இல்லாத காரணத்தி
னால் விவசாயம் நடைபெற முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிக்
கொண்டிருக்கிறது. எனவே, எங்கள் தொகுதியில் கிராமங்
தோறும், ஒவ்வொரு கிராமமாகச் சென்று அந்தந்த பஞ்சாயத்துக்
களில் சிறு தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம்
எங்களுக்கெல்லாம் ஏற்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதியில் மேலும் அதிக மக்க

ளுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் எண்ணத்தோடு சிறு. சிறு தொழில்களை தொடங்கிக் கொடுத்து விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீ வாண்ட் டு பிகம் மாடர்ன் அக்ரிகல்சரிஸ்ட்ஸ். அந்த வகையில் மாண்புமிகு உரகத் தொழில் அமைச்சர் அவர்கள் நவீனமாக விவசாயங்களைச் செய்வதற்கும், விவசாயத்திற்கு உதவும் அலைடு ப்ராஜக்ட்ஸ்ஸை மேனுஃபாக்சரிங் பண்ணும் வகையிலும் சிறு தொழில்களை உருவாக்கி விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் நிறைந்த தொகுதியாக சிவகாசி இருந்தாலும் அதில் பிரச்சினைகள் நிறைந்து காணப்படுகின்றன. பட்டாசு தொழிற்சாலையைப் பொறுத்த மட்டிலும் உயிருக்கு உத்திரவாதம் இல்லாமல் எந்த நேரத்திலும் வெடி விபத்து நேரலாம் என்ற நிலையில் நடைபெறுகிறது. எனவே, பட்டாசு தொழிலைப் பொறுத்த வரைக்கும் Manufacturing the crackers within the factory must be strictly enforced என்ற வகையில் நாம் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். சில பகுதிகளிலே வீடுகளிலே வைத்து தயாரிக்கின்ற ஒரு நிலைமை இருந்து வருகிறது. அதைத் தடுக்க சட்டங்களாலும், அரசாங்க நடவடிக்கையாலும் நாம் ஸ்ட்டிரிக்டாகச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 4-50

மேலும், சட்டத்திலே ஒரு சில மாறுதல்களைக் கொண்டு வந்து 2 கிலோவுக்கு கீழே உள்ள மருந்துகளை வீடுகளில் உபயோகிக்கலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும். அங்கே பட்டாசு தொழிலுக்கு வேண்டிய திரி சுற்றும் தொழில் அனைத்துப் பகுதிகளில் இப்போது மேற்கொண்டு வருகிறார்கள். அதையும் லீகலைஸ்டு செய்ய வேண்டும். அப்போதுதான் விபத்துக்கள் குறைய வாய்ப்பு இருக்கிறது.

இப்போது எங்கள் தொகுதியில் விஜயகரசகுளத்தின் அருகே விஜயரங்கபுரம் என்ற ஊரில் இதனால் ஏற்பட்ட தீ விபத்தினால் 3 பேர் உயிர் இழந்துவிட்டார்கள். அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ஏதாவது ஒரு உதவியை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும், என் தொகுதியில் உள்ள ஏழாயிரமனைக்கு அருகில் "இந்தியன் நேஷனல் பையர் அவுஸ்"-இல் விபத்து ஏற்பட்டு அங்கே 3 நபர்கள் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து நிதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் டி. இராமலிங்கபுரம், விஜயரங்கபுரம் ஆகிய 2 ஊர்களிலும் மேலும் பல ஊர்களிலும் விபத்துக்களுக்கான மாற்றுப் பொருட்கள் அனைத்தும் உதிரி பாகங்கள் அனைத்தும் தயாரிக்கப்படுகின்றன. அவைகளுக்கும் லீகலைஸ்டு லைசன்ஸ் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வெடிவிபத்தைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை போதனைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டாசுத் தொழிலைப் பொறுத்த வரையில் It is a seasonal Industry. ஆகவே விழாக் காலங்களில் அதிகமாக, மற்ற நேரங்களில் குறைவாகத் தயார் செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் நிறைய சிரமங்கள் இருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியமும், தொழில் நசுங்கி விடாதபடியும், தொழிலாளர்களின் உயிருக்கு உத்திரவாதமும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சிவகாசியில் டான் பையர் அவுஸ் விபத்தில் பலியான குடும்பத்திற்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 10 ஆயிரம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அன்றே கிடைக்கச் செய்தது எங்கள் தொகுதியில் மட்டுமல்ல, இந்த உலகத்திலே வேறு எந்த முதலமைச்சரும் இவ்வாறு செய்யாத ஒரு நிலையை ஏற்படுத்தி அதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எங்கள் தொகுதி மக்களுக்கு மிகவும் நல்ல முறையில் கடமை ஆற்றியிருக்கிறார்கள். பட்டாசுத் தொழில் பல்வேறு காரணங்களால் நசிந்து கொண்டு வருகிறது. We have now reached an optimum position. We are facing now a declining position. அந்த பொசிஷனை மாற்றிவிட்டு பட்டாசு தொழில் சீனாவில் உள்ளது போல— அங்கே ஏற்கெனவே 140 கோடி வகைகள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரு நிலையில்—தமிழகத்தில், சிவகாசியில் தயாரிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்தி அந்தப் பட்டாசு தொழிலை நவீனமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், இங்கே 40 வகைகள் தான் தயாரிக்கப்படுகின்றன.

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1991 செப்டம்பர் 23

தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்தவரையில் குளோரைடு பற்றாக்குறை நிலவுகிறது. எனவே, அரசு கூடுதல் குளோரைடு தொழிற்சாலையை அமைக்கலாம். மேலும் தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான ரேட் பாஸ்பரஸ் மற்றும் இதர கெமிக்கல்ஸ் யாவும் இங்கே தயாரிக்கப்படவில்லை. அவைகள் யாவும் வெளி மாநிலங்களில் இருந்து தருவிக்கப்படுகின்றன. அவைகளை சிவகாசியில் சிறு தொழில்கள் மூலமாக ஆரம்பிக்கலாம்.

தீப்பெட்டித் தொழிலில் அடிக்கடி எங்களுக்கு பண்ட் ரோல் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி அந்த Central Excise Band Roll கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீப்பெட்டி விற்பனைக்கு இப்போதுள்ள நிலையைப் போல சேல்ஸ் டாக்ஸ் எதுவுமே போடக்கூடாது. அப்போது தான் அங்கே தீப்பெட்டி தொழில் நசிந்து விடாமல் ஒரு நல்ல நிலைமை ஏற்படும்.

அச்சுத் தொழிலைப் பொறுத்த வரையில் இந்த இந்தியாவிலேயே சிவகாசியில் அதிகமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 200 அச்சுத் தொழிலுக்குமேல் சிவகாசியில் இருக்கிறது. எனவே, அந்த அச்சுத் தொழில் நசிந்து விடாதபடி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அச்சுத் தொழிலைப் பொறுத்த வரையில் முக்கியமாக we are facing deficiency of Power. அதாவது மின்சார தட்டுப்பாடு எங்களுக்கு அதிகமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு தனியார் வசம் மின்சாரத் துறையை ஒப்படைக்கலாம். மேலும், இப்போது அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஜெனரேட்டர்களை எல்லாம் வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கு வரி விலக்கு அளிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சுத் தொழிலைப் பொறுத்தவரையில் கலர் பிக்மெண்ட்ஸ் யாவும் சிவகாசியில் இப்போது தயாரிக்கப்படவில்லை. இவை யாவும் பம்பாயில், மற்றும் மதுரையில் இருந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை சிவகாசியில் கொண்டு வந்தால் அங்கே நல்ல நிலைமையை ஏற்படுத்தலாம்.

அச்சுத்தொழிலில் 'ஒர்க்மென் காண்டிராக்ட்'க்குத் தனியாக வரி போடுகிறார்கள். (Actually in printing, there is no workmen



1991 செப்டம்பர் 23] [திரு. ஜெ. பால கங்காதரன்]

contract). எனவே அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் சிவகாசி தொகுதியைப் பற்றி நான் இதுவரை எதுவும் பேசவில்லை. எங்கள் தொகுதியில் விவசாயப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன.

பிற்பகல் 4–55

ஏற்கனவே எங்கள் தொகுதியில் வேம்பக்கோட்டை நீர்த்தேக்கம் ஆணைக்குட்டம் நீர்த்தேக்கம் என்று இரண்டு நீர்த்தேக்கங்கள் உள்ளன. அவற்றிலுள்ள நீரினைக் கொண்டு, சிவகாசித் தொகுதியில்தான் பாசன வசதி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே சிறுதொழில்கள், அதாவது பேப்பர் இண்டஸ்ட்ரீஸ், எங்களைப் பொறுத்த மட்டிலும் அந்த இரண்டு அணைக்கட்டுகளிலும் தண்ணீர் அதிகமாக உள்ள காலங்களில் சிறிய சிறிய தொழிற்சாலைகளை, அதாவது பேப்பர் இண்டஸ்ட்ரீஸ்களைத் தொடங்கலாம். மேலும் அங்கே விவசாயத்தை ஊக்குவிக்கவேண்டும். விவசாயத்தைப் பொறுத்த மட்டில், கிராமப்புறங்களில் முக்கியமாக உள்ளது. கூடுதல் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்படவேண்டும். காமராஜர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். விவசாய விளைபொருள்களுக்கு, காஸ்ட் ஆப் புரடக்ஷனுக்கு தகுந்த விலை நிர்ணயிக்க வேண்டும். சிவகாசியில் அரசு பழப்பண்ணையும், சமூக நலக் காடுகளும் அதிகமாக அமைக்கப்படவேண்டும். விவசாயத்தை இயந்திர மயமாக்கும் வகையில் டிராக்டர் கடன் உதவியும், ஹேண்ட் ஸ்பிரேயர்ஸ், பவர் ஸ்பிரேயர்ஸ், சீட்ஸ் ஆகியவற்றை குறித்த காலத்தில் வழங்க வேண்டும். சிவகாசியைப் பொறுத்தமட்டிலும் கல்விக்கு அதிகச் செலவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பள்ளிக்குச் சென்று படித்து முன்னேறுவதை விட ஏதாவது ஒரு தொழிலுக்குச் சென்று தங்களுடைய அன்றாட வாழ்க்கையை கழிப்பதையே மக்கள் விரும்புகின்றனர். ஏனென்றால், கிட்டத்தட்ட, தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும் அங்கே தொழில் செய்வதற்காக, அதாவது தீப்பெட்டித்தொழில், பட்டாசுத் தொழில் மற்றும் பிரிண்டிங் பிரஸ் ஆகிய தொழில்களைச் செய்வதற்காக அங்கே வருகின்றார்கள். அவர்களுடைய குழந்தைகளை முன்னேற்றும் வகையில் நாம் அங்கே கல்வி நிறுவனங்கள் பலவற்றை அமைத்திடவேண்டும். இருக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் போதிய வசதி செய்துகொடுக்கப்படவில்லை. மேலும் அங்கே இருக்கும் தனியார் பள்ளி கல்வி நிறுவனங்களுக்கு லேண்ட் டேக்ஸ் மற்றும் குடிநீர் வரிகளை குறைக்க வேண்டும். அவைகளை ரத்து பண்ணி தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சிவகாசியை சாத்தூர் தாலுக்காவிலிருந்து விடுத்து, தனி தாலுக்காவாக அமைக்கவேண்டும்.

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1991 செப்டம்பர் .23

தாலுக்கா அலுவலகத்தை சிவகாசியிலேயே அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நீதிமன்ற வளாகம் இல்லாமல் தற்சமயம் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேலும் டிஸ்டிரிக்ட் கோர்ட் சிவகாசியில் அமைக்கவேண்டும். அவை இரண்டுக்கும் சொந்தமாக கட்டிடம் கட்டித் தர வேண்டும். காவல்துறையைப் பொறுத்தமட்டிலும். சிவகாசிக்கு நவீன ஆயுதங்கள், நவீன வாகனங்கள் வழங்கப்படவேண்டும். சிவகாசியில் அடிக்கடி வெடிவிபத்து ஏற்படுவதால் அங்கே தீயணைப்பு நிலையத் திற்கு கூடுதலாக நவீன ரக தீயணைப்பு இயந்திரங்கள், வாகனங்கள் வழங்கப்படவேண்டும். சிவகாசியில் வெடிவிபத் துக்கு என்று அரசு மருத்துவமனையில் தனியாக ஒரு வார்டு, கூடுதலாக படுக்கை வசதிகளும், கூடுதலாக மருத்துவ வசதிகளையும், தீக்காயங்களுக்காக தனியாக வார்டும் அமைக்கப் பட வேண்டும். வேம்பக்கோட்டை ஒன்றியத்தில் ஏழாயிரமனை பண்ணையில் ஒரு அரசு மருத்துவமனையை ஆரம்பிக்கலாம். அங்கே அதிக அளவில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. அங்கேயிருந்து மருத்துவ வசதி பெறவேண்டு மென்றால், 30 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து சிவகாசிக்கோ அல்லது சாத்தூருக்கோ செல்ல வேண்டும். மேலும் வேம்பக்கோட்டையில் உள்ள தாயல்பட்டியில் தனியாக காவல் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும்.

ரேஷன் கார்டுகளைப் பொறுத்தமட்டிலும், சிவகாசி தொழில் மிகுந்த நகரம். ஆதலால் அங்கே 10 ஆயிரம் குடும்பங்கள் வரை கார்டு இல்லாமல் இருக்கிறார்கள். அனைவருக்கும் ரேஷன் கார்டுகள் வழங்கப்படவேண்டும். அரசு மாணவ விடுதிகளைப் பொறுத்தமட்டிலும் அனைத்து மாணவ விடுதிகளும் அங்கே தனியார் கட்டிடங்களில்தான் இயங்கி வருகின்றன.

சுற்றுப்புற சூழலைப்பொறுத்தமட்டில் ஆலங்குளம் சிமெண்ட் பேக்டரியிலிருந்து வெளியேறும் புகை அந்தப் பகுதியில் மிகுந்த சுற்றுப்புற கேட்டினை விளைவித்து வருகிறது. அதைப்பற்றி இன்றைய 'தினமணி' பேப்பரில்கூட கட்டுரையாக எழுதி இருக்கிறார்கள். எனவே, அந்த பேக்டரியில் தற்போது இயங்கும் வெட் பிராசஸ்-ஆக இயங்கும் ஈ.எஸ்.பி.-யை ட்ரை பிராசசாக மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் சிமெண்டும் மிச்சமாகும். அங்கே பொலுஷனும் ஒரு கண்ட்ரோலுக்கு வரும்.

வீட்டுவசதியைப் பொறுத்தமட்டில், புறம்போக்கு நிலங்களில் குடிசைப் போட்டு, சிவகாசியில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும். பட்டா இல்லை என்ற காரணத்தி னால் அங்கே குடிநீர் வசதி செய்யப்படவில்லை. மேலும்



1991 செப்டம்பர் 23] [திரு. ஜெ. பாலகங்காதரன்]

குடிசைப் பகுதிகள் அதிகமாக உள்ளன. எனவே, தீ விபத்து களும் அடிக்கடி நடைபெறுகின்றன. எனவே அனைத்து மக்களுக்கும் பட்டா வழங்கி, வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சிவகாசி பகுதி ஒரு தொழில் நகரமாக உள்ளதால் அங்கே தொழி லாளர்களுக்கென்று ரெக்ரியேஷன் கிளப் மற்றும் அவர் களுக்கு தங்கும் விடுதி ஆகியவற்றை கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிவகாசியைப் பொறுத்த மட்டிலும் தீப்பெட்டித் தொழிலானது தற்சமயம் நசிந்து கொண்டு வருகிறது. ஏனென்றால், 50 ரோஸ் பேக்டரிகள் அதிகமான எண்ணிக்கையில் இப்போது வளர்ந்து கொண்டு வருகின்றன. அந்த பேக்டரிகளுக்கு தற்சமயம் லைசன்ஸ் வழங்கவேண்டுமென்றால், மிகுந்த சிரமங்களுக்கிடையே பெறவேண்டியுள்ளது. ஏனென்றால் அந்த பேக்டரிகள் முன்பெல்லாம் ஜனதா மேட்ச் பேக்டரீஸ் என்று லைசன்ஸ் கொடுக்கும்போது சுற்றுப்புறத்தில் இத்தனை அடிகள் வேண்டு மென்று ஒரு ரூல்ஸ் எதுவும் இல்லாமல் இருந்தது. தற் சமயம் 5 அடிகள் வேண்டும், அப்போதுதான் தீப்பெட்டித் தொழிற்சாலையில் விபத்துக்கள் ஏற்பட்டாலும் பக்கத்தில் இருக்கிற கட்டிடங்கள் பாதிக்கப்படாது என்ற ஒரு நிலை மையை ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிற தொழிற்சாலைகள் பாதிக்கப்படு கின்றன. இதுவரையில் தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டிலும் எந்தவித விபத்தும் ஏற்பட்டதாக, இதுவரை ரிப்போர்ட் ஆக வில்லை. அப்படி இருக்கும்போது இந்த சேப்டி டிஸ்டன்ஸ் என்கிற இந்த 5 அடி தேவையில்லை எனக்கருதி அதை ரத்து செய்துவிடலாம். அப்போதுதான் அதிக அளவு மக்கள் தீப்பெட்டி தொழிற்சாலைகளை ஆரம்பிப்பார்கள். ஏன் நாங்களே கூட ஆரம்பிக்கலாம். எங்களுக்கெல்லாம் பல கட்டிடங்கள் உள்ளன. இந்த மாதிரி சூழ்நிலையில், ஏற்கனவே கட்டிடங் கள் உள்ளவர்கள் தீப்பெட்டித் தொழிலை அங்கே பிரதான மாக ஆரம்பிக்கலாம். அதன் மூலம் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கலாம். இல்லையென்றால் அவர்கள் குடும்பத்திலேயே ''செல்ப் எம்ப்ளாய்மெண்ட்'' என்ற முறையிலே அவர்களே தீப்பெட்டிகளை உற்பத்தி பண்ணலாம் என்ற நிலைமை ஏற்படும்.

பிற்பகல் 5–00

பட்டாசுத் தொழிலைப் பொறுத்தமட்டிலும், பட்டாசுத் தொழிற்சாலைகள் செய்ய வேண்டிய வெடிகள் என்னென்ன என்றும், பட்டாசுகளில் வெடிக்காத சேஃப்டியான பொருள் கள் என்னென்ன என்றும் தனித்தனி ரகங்களாகப் பிரித்து, சேஃப்டியான, வெடிக்காத பட்டாசுகளின் ஒருசில பாகங்களை

[திரு. ஜெ. பாலகங்காதரன்] [1991 செப்டம்பர் 23

பட்டாசுக்கு வேண்டிய பாகங்களைத் தனியான முறையில் தயாரிக்கலாம். அவைகளையெல்லாம் வீடுகளிலேயே வைத்துத் தயாரிக்கலாம். ஃபார் எக்சாம்பிள், இந்தப் பட்டாசுகளுக்குள்ள திரிகள், அந்தப் பட்டாசுகளுக்கு மேலே உள்ள குழாய்கள், கீழே உள்ள தூர் மண் ஆகியவற்றை வீடுகளிலேயே வைத்துத் தயாரிக்க அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த மருந்து செலுத்தும் இடங்களை மட்டும்தான் அந்த சேஃப்டியான பிளேசில் வைத்துச் செய்ய வேண்டும். அதற்கு மட்டும்தான் லைசன்ஸ் வேண்டும் என்ற முறையில் ஏற்படுத்தினால் இன்னும் அதிக அளவில் பட்டாசுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் என்ற ஒரு நிலைமை உள்ளது.

மேலும், பட்டாசுத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டிலும், அங்கே வேலை பார்க்கும் ஊழியர்கள் அனைவருக்கும் இப்பொழுது இன்ஷ்யூரன்ஸ் பணமாக ஆறு ரூபாய் என்று பிடித்து வருகிறார்கள். அதை அரசாங்கமே கட்ட வேண்டும். அப்பொழுதுதான் பட்டாசுத் தொழிற்சாலைகளின் அதிபர்களுக்கு மிக எளிதாக இருக்கும் சூழ்நிலை ஏற்படும்.

மேலும், தொழில் தொடங்குவதற்கு என் பகுதியைப் பொருத்தமட்டிலும் தீப்பெட்டித் தொழிற்சாலை என்றாலும் எந்த பேங்கிலும் நிதியுதவி தர மாட்டேன் என்கிறார்கள். மேலும் 'டிக்'-கில் சென்று அப்ரோச் பண்ணினாலும் அவர்களும் கொடுப்பதில்லை. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இந்த நிலைமையை மாற்றினால்தான் அங்கே மேலும் தொழில் தொடங்குவதற்கு நல்ல முன்னேற்றமாக இருக்கும்.

அதைவிட இன்னும் முக்கியமான விஷயம் என்னவென்றால், தீப்பெட்டித் தொழிலுக்கு இன்றியமையாத பொருளான வேக்ஸ் தயாரிக்க ஒரேயொரு கம்பெனிதான் உள்ளது. அதையும், மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, நான்கைந்து தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டிக்கொள்கிறேன்.

பட்டாசுத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டிலும், அங்கே இப்பொழுது வேண்டிய வெடிஉப்பு, பேரியம் நைட்ரேட் மற்றும் சில கெமிக்கல்ஸ் யாவும் வெளி மாநிலங்களிலேயிருந்துதான் தருவிக்கப்படுகிறது. குறிப்பாக பேரியம் நைட்ரேட்டெல்லாம் அன்னபூர்ணா கெமிக்கல்ஸ், ஆந்திராவிலேயிருந்துதான் வர வேண்டியுள்ளது. அந்த நிலைமையை மாற்றி அரியலூரிலிருக்கும் அந்த பேரியம் நைட்ரேட், சால்ட் எல்லாம் இங்கே சிவகாசிப் பகுதிக்கு அனுப்பினால், டிரான்ஸ்போர்ட்டுக்கும் குறைந்த செலவுதான் ஆகும். சிவகாசியிலேயே



199, செப்டம்பர் 23] [திரு. ஜெ. பாலகங்காதரன்]

மேனுபேக்சரிங் யூனிட் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பாமல் இந்தத் தொழிலுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

மேலும், பிரிண்டிங் பிரஸைப் பொறுத்தமட்டிலும், இம்போர்ட்டிங் லைசென்ஸ் வந்து இப்பொழுது அன்னியச் செலாவணி கையிருப்பு குறைவாக உள்ளதால் இம்போர்ட்டிங் லைசென்ஸைச் சற்றுக் கடினப்படுத்தியுள்ளார்கள். அதையும் மாநில அரசானது மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி எங்களுக்கு அதிக அளவில் இம்போர்ட்டிங் கொடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தித்தர வேண்டும். இப்பொழுது நமது அன்னியச் செலாவணி கையிருப்பு குறைவாக உள்ள காரணத்தைக் காட்டியே ஏற்கனவே உள்ள ரன்னிங் பிரிண்டிங் பிரஸ்களுக்கெல்லாம் மேலும் சில மெஷின்களை இறக்குமதி செய்ய முடியாமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். எனவே, அந்த நிலைமையை மாற்றி, பிரிண்டிங் பிரஸ்களையெல்லாம் சிவகாசியிலேயே கொண்டுவருவதற்கான நல்ல நிலையை ஏற்படுத்தவேண்டும்.

சிவகாசியிலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழக வண்ண அச்சகத்தில் உள்ள ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் 500 ரூபாய் என்று நிர்ணயம் செய்ய வேண்டும்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலகங்காதரன், இதுவரை பேசவில்லை என்று ரொம்ப வருத்தப்பட்டீர்கள். ஆகவே, டைம் கொடுத்தால் நீங்கள் போய்க்கொண்டே இருக்கிறீர்களே. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஆர். ஜெயராமன்.

*திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனக்கு இந்த மாமன்றத்திலே தொழில் துறையிலேயும், கைத்தறித் துறையிலேயும் என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்த காரணத்தினால் இன்று என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றேன்.

பிற்பகல் 5-05

இதற்கு முன்பாக, என்னுடைய கன்னிப் பேச்சிலே எனக்கு 5 நிமிடத்தைக் கொடுத்து, என்னுடைய கோரிக்கை ஒன்றிரண்டுதான் மாமன்றத்திலே எடுத்துரைக்க வாய்ப்

பளித்தீர்கள். என் இனத்தைச் சார்ந்தவர்களுடைய தொழில், கூலி வேலை செய்கின்ற ஒரு விவசாயியின் நிலைக்கு ஒத்தத் தொழிலாகிய நெசவுத் தொழில். இந்த மாமன்றத்திலே என்னுடைய வர்க்கத்தைச் சார்ந்த ஏழை நெசவாளிகளின் நிலையை முழுமையாக எடுத்துக்கூற வாய்ப்பளிக்குமாறு பேரவைத் தலைவரை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் தமிழக அரசையும், தமிழக முதல்வரையும் விசைத்தறி, கைத்தறியாளர்களுக்கு சிட்டா சிறு கோன் நூல்களையும் கட்டுப்பாடு நூல்களையும் விலையில் கிடைக்க ஏற்பாடு செய்ய விலையில் நியாய கேட்டுக் கொள்கிறேன். புதிதாக நூல் விநியோகத்திற்கென வேண்டுமாய் நியாய விலைக் கடைகளை திறப்பதன் மூலமாகவோ, தனியார் மற்றும் கூட்டுறவு மில்களிலிருந்தும் குறிப்பிட்ட விலைக்கு நூல்களை வாங்கி, சிறு விசைத்தறி, கைத்தறி யாளர்களுக்கு விற்பனை செய்ய வகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நூல் தட்டுப்பாடு காலத்தில், பருத்தி நூலை பதுக்கி வைத்து, பின் அதிக விலைக்கு விற்கும் நிலையும் தற்போது பெருகிவிட்டது. இதனையும் தமிழக அரசு கண்டுபிடித்து, பதுக்கலைத் தடைசெய்ய வேண்டும். இதுதவிர, மில் அதிபர்கள் தற்போது அவர்கள் உற்பத்தி செய்யும் நூலை வெளிநாடுகளில் அதிக விலைக்கு விற்க முயற்சி செய்கிறார்கள். இதனால், வரும் மாதங்களில் நூல் விலை மேலும் உயரக்கூடிய நிலையிலே இருந்தது. ஆனால், தற்காலிகமாக மத்திய அரசு, நூல் ஏற்றுமதியை தடை செய்து இருக்கிறது. மத்திய அரசுக்கு இதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஈரோடு, காஞ்சிபுரம், ஆரணி ஆகிய ஊர்களில் நெசவாளர்கள் அதிகம் வாழ்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டிருந்தார்கள். சரித்திர காலத்திலேகூட, குறிப்பிட்டிருக் கிறார்கள், சேலத்திலே கைத்தறியைப் பற்றி. ஆகையினால், சேலம் மாவட்டத்திலே தயாராகக் கூடிய ஜவுளிகளை விற்ப தற்கு சந்தை ஒன்றையும், மேலும் ஏற்றுமதி ஜவுளி அதிகமாக தயாராகக்கூடிய சேலம் மாவட்டத்திலே, சேலம் நகரத்திலே தொழிற்கூடம் (காம்ப்ளெக்ஸ்) ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த தொழிற்கூடம் கைத்தறிகளை படிப்படியாக விசைத் தறிகளாக ஆக்கவும் ஏற்றுமதியை அதிகப்படுத்தவும், மேம்படுத்தவும் ஆக்கப்பூர்வமான வழிவகுக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.





கோவை, திருப்பூர், மதுரை, போன்று எனது சொந்த மாவட்டமான சேலம், ஜவுளித் துறையில் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற பேரவாவில், சேலத்தில் மத்திய அரசின் சார்பில் 'டிசைன் சென்டர்' ஒன்றும், 'ஃபேஷன் டெக்னாலஜி' ஒன்றும் அமைக்க வேண்டுமென்றும் ஜவுளித் துறை அமைச்சகத்திற்கு வலியுறுத்தியுள்ளேன். மாநில அரசும் மாண்புமிகு தமிழக முதல்வரும் என்னுடைய இந்தக் கருத் தினை மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டுகிறேன் ........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அர்ச்சுனன்

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கைத்தறியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது கைத்தறியைப் பற்றிய விவாதமா நடந்து கொண்டிருக்கிறது ?

திரு. மா. சுந்தரதாஸ் : அது பிரச்சினையே அல்ல. உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும். அதுவும் ஒரு தொழில் தானே !

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆர். ஜெயராமன் தொடர்ந்து பேசலாம்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்ற காரணத்தினாலேயே பேசுகிறேன் என்று சொல்லி விட்டேன். மன்னிக்கவும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் என்னுடைய இந்தக் கருத்தினை மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டுகிறேன், கடந்த 17 ஆண்டுகளாக சேலத்தில் எந்தவித ஏற்றமும் இல்லாமல் இயங்கும் ஏற்றுமதி ஜவுளி உற்பத்தி, இவ்விரண்டு நிறுவனங்களைக் கொண்டு வருவதன் மூலம் ஏற்றமடையும் என்று நம்புகிறேன். தொழில் நுட்பத்தோடு, நாபார்டு நிதியுதவியுடன் அடுத்த பத்தாண்டுகளில் 75 ஆயிரம் கைத்தறி களை விசைத்தறிகளாக மாற்றுவதென்ற தமிழக அரசின் முடிவை வரவேற்கிறேன்.

நாட்டில் நாகரிகம், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிற இந்த நாளில், அரசின் 10 ஆண்டுத் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள

பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில்
50,000 கைத்தறிகளை 5 ஆண்டுகளில் நவீனப்படுத்தும் வகை
யில் திட்டம் ஒன்றைத் தொடங்க இருப்பதற்கும் நன்றி
கூறி, ஜவுளி தொடர்பான அனைத்துப் பணிகளும் சீராக்கப்
பட வேண்டும் எனக் கூறி, நெசவாளர் வீட்டில் ஒளிவிளக்கு
ஏற்ற தமிழக அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்
தலைவி அவர்கள் ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்
கொள்கிறேன்.

இதே ஆண்டில் நெசவாளர்களுக்கு தறி நெசவுக்கூடம்
இணைந்த வீடுகள் திட்டத்தில் 2000 வீடுகள் கட்டும் திட்டத்தை
வரவேற்கிறேன். விசைத்தறி துறையிலே இருக்கக்கூடிய
ஏழை நெசவாளர்களுக்கும் தவணை முறையிலே பணம்
செலுத்தக்கூடிய வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால் ரூ. 10,000 உதவித்
தொகையினை ரூ. 15,000 ஆக உயர்த்தியதற்கு மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்
களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் கவர்னர்
மேதகு அலெக்சாண்டர் நிர்வாகத்திலே, சிட்டா நூலுக்கு
விதித்திருந்த விற்பனை வரியினை அகற்றி,
ஏழை நெசவாளர்கள் நெய்கின்ற வேஷ்டி, சேலை ரகங்கள்
குறைந்த விலையில் விற்று ஏழ்மையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற
நெசவாளர்களைக் காப்பாற்றுங்கள் என்று முறையிட்டு குறை
யினைக் கேட்டுக் குறைத்தார். மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்திலே
நெசவாளர்களின் துயர் துடைக்கும் திட்டத்திலே தற்போது
சிட்டா நூலுக்கு இருக்கும் இரண்டு சதவீத விற்பனை வரி
யையும் நீக்கி நெசவாளர் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற
வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விசைத் தறிகளுக்கு 5 குதிரைவேகம் கொண்ட
மின்சார மோட்டார்களுக்கு முழுமையாக மின்சாரக் கட்ட
ணத்தை விவசாயிகளுக்கு அளிப்பதைப் போல் அளிக்கா
விட்டாலும் முன்பிருந்த நிலையிலே வீட்டு உபயோகத்திற்கு
55 காசு விகிதத்திலே அளிப்பதற்கு ஆணை பிறப்பிக்க
வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த
கோரிக்கையை கடந்த 5 ஆண்டுகளாக விசைத்தறி வாரிய
உறுப்பினர் என்ற முறையிலே வாதாடிக் கொண்டு வருகிறேன்.



தயைகூர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி
அவர்கள் கருணையோடு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று
தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம்
ரூபாய் 26.28 கோடி முதலீட்டில், இந்திய தொழில் வளர்ச்சி
வங்கி உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டத்தில் ரூபாய் 7
கோடியை பங்கு மூலதனமாக ஒதுக்கியுள்ள இந்தத் திட்டத்தில்,
அரசு குறிப்பிலே சேலம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை
சென்ற ஆண்டு மொத்த இலாபம் 326.23 இலட்சமாகவும், நிகர
இலாபம் 186.35 இலட்சமாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலை
யிலே சேலம் மாவட்டத்திலே உள்ள கூட்டுறவு நூற்பாலை தற்
போது அதனுடைய உற்பத்தித் திறன் 50,000 கதிர்களைக்
கொண்ட நூற்பாலையில் நாள் ஒன்றிற்கு ஏறத்தாழ 150 பேல்
கள் உற்பத்தியை ஈட்டி லாபகரமாக நடத்திக் கொண்டு செல்
கின்ற நேரத்தில், சேலம் மாவட்டத்தில் தான் பருத்தி நூல்
ரகங்கள் வேஷ்டி சேலை ஏற்றுமதி ஜவுளி உற்பத்தி செய்து
கொண்டிருக்கிற இந்நிலையில் சேலம் கூட்டுறவு நூற்பாலைக்
குச் சொந்தமான நிலம் மொத்த பரப்பளவு 35 ஏக்கர் வரை
உள்ளன. அந்த இடத்திலே தற்போது 15 ஏக்கர் நிலம்தான்
உபயோகத்தில் உள்ளது. மீதம் உள்ள நிலத்தில் மேலும் ஒரு
ஆலையை நிறுவி, அரசாங்கக் கூட்டுறவுத் துறைக்கு 50 சத
விகிதமும், அரசு இல்லாத கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50 சத
விகிதமும் உற்பத்திச் செய்து வினியோகம் செய்தால் அரசாங்கத்
திற்கு லாபத்தை ஈட்டித் தருவதோடு குறைந்தது 2,000 பேர்
களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று தமிழக
அரசையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்
களையும் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுமதி ஜவுளித் துறையிலே ஏற்றுமதியாளர்களுக்குத்தான்
இன்சென்டிவ் டிராபேக் கொடுக்கிறார்கள். மேலும் வருமானவரி
விலக்கும் அளிக்கிறார்கள். ஆனால், ஏற்றுமதி ஜவுளி உற்பத்தி
செய்கின்ற சிறு வியாபாரிகளுக்கு எவ்விதமான சலுகையும்
கிட்டுவதில்லை. ஒரு குறிப்பிட்ட தேதியிலே ஆர்டரை எடுத்து
முடிப்பதற்குள் நூல் விலை ஏற்றத்தினால் ஒரு மீட்டர்
துணியின் விலை, ஆர்டர் எடுத்த விலையிலே இருந்து அதிகம்
ஆகக் கூடிய நிலை உருவாகி, அவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தி
விடுகின்றன. அந்தநிலையை உற்பத்தியாளர்கள் சரிக்கட்டும்
நிலையிலே அவர்களுக்கு வருமான வரி விலக்காவது அளிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது). ஒரு நிமிடம் ....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இன்னும் ஒரு பக்கம் தானே இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. எஸ். ஆர். ஜெயராமன் :</u> இதைத் தமிழக அரசும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அரசாங்க ஊழியர்கள் ஓய்வு ஊதியம் பெருவதைப் போல ஏழை நெசவாளர்களுக்கும் தற்போது அவர்களுக்கு அளிக்கின்ற ஓய்வூதியம் அவர்கள் இறந்த பிறகுதான் ரூபாய் 250 மட்டும் கொடுக்கிறார்கள். அதை மாற்றி அவர்கள் இருக்கும் பொழுதே அரசாங்கத்தின் விதிப்படி 58 வயதிலோ அல்லது 60 வயதிலோ ஓய்வூதியம் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, காவிரிநீர்ப் பிரச்சினையில் உறுதியான முடிவு எடுத்ததற்கும், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் மனிதத் தன்மையற்ற பயங்கரமான அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஒருவர் கூட இல்லாமல் அகற்றுவோம் என்று சபதம் ஏற்று நாட்டிற்காக நாட்டு மக்களின் நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தமிழ்நாடும், நாட்டு மக்களும் பெருமைப்படுத்திக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு டாக்டர் பட்டத்தை வழங்க வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களையும் அவை முன்னவர் அவர்களையும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் பணிவன்போடு கேட்டுக் கொண்டு என் உரையை நிறைவாக்குகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5–15

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. வ. மு. சுப்பிரமணியம் அவர்கள்.

<u>திரு. வ. மு. சுப்பிரமணியம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்றவுடனே அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் ஊரக வளர்ச்சிக்காக ஒரு புதிய துணைத் திட்டத்தைத் தொடங்கி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 621 கோடி அளவுக்கு ஒரு கடன் திட்டமும் தயாரிக்கப்பட்டது உண்மையிலேயே நாம் பாராட்டக்கூடிய, மகிழ்ச்சி அடையக்கூடிய ஒன்றாகும்.



இந்த ஊரகத் தொழில் கொள்கையைப் பொறுத்தமட்டிலும் இந்தியாவின் கிராமங்களில் இருக்கின்ற உண்மையான பொருளாதார கோட்பாடு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஊரகத் தொழில் மூலம்தான் இந்தியாவிலே அனைத்து கிராமங்களும் தன்னிறைவு பெற்ற கிராமங்களாகவும், இந்தியாவின் பொருளாதாரம் கிராமத் தொழில்களின் அடிப்படையிலும் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஊரகத் தொழிலைப் பொறுத்தமட்டிலும் அந்தக் கிராமத் தொழில்கள் ஒரு ஜாதீய ஏற்பாட்டோடு அங்கே இயங்கி வந்தன என்பதையும் நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொழில் குலத்தொழில் ஆகவும், அப்போதைய அரசர்களால் மானியம் வழங்கப்பட்டு ஒரு சிறப்பான முறையில் இருந்தாலும் கூட அந்தத் தொழில் செய்பவர்களுக்கு அந்தத் தொழில் காரணமாக இன்று மரியாதை இல்லாமல் போய்விட்டது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் செருப்பு தைப்பவர்களின் தொழில் ஒரு கிராமத் தொழிலாக இருந்தாலும் கூட மாட்டுத் தோலிலிருந்து அந்தச் செருப்பைத் தைக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்தத் தொழில் இழிவாகக் கருதப்பட்டது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் கூட இந்தியாவின் பொருளாதாரத்திற்கு இந்த கிராமத் தொழில்கள் அடிப்படையாக இருந்தன : தன்னிறைவாக இருந்தன ; கிராமங்களைக் குடியரசாகக் கூட இருக்கவைத்தன என்கிறபோது காலனி ஆதிக்கத்திற்குப் பிறகுதான் அந்தக் கிராமத் தொழில்கள் எல்லாம் நசுக்கப்பட்டன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காலனி ஆதிக்கத்தால் நசுக்கப்பட்ட கிராமத் தொழில்கள் அப்படியே நசுக்கப்படுகின்றபோது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் எல்லாம் கைவிடப்பட்டார்கள். கார்ல் மார்க்ஸ் அவர்கள் ப்ரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் மூலம் இந்தியாவின் கிராமப் பொருளாதாரம் நசுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது இந்தியாவில் மட்டுமல்ல. ஆசியாவிலே எல்லா பகுதிகளிலும் இதே மாதிரியான ஒரு உற்பத்தி இருந்தது என்பதையும், ஒரு ஆசிய உற்பத்தி முறை இருந்தது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை ஒரு ' ஏசியன் மோட் ஆஃப் அப்ரோச் ' என்று கூடச் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலையில் இருந்த இந்தத் தொழில் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக சீர்கெட்டுவிட்டது என்றும் வளருகின்ற விஞ்ஞானத்திற்கு ஏற்றவாறு அந்தத் தொழிலை ஈடுகட்ட முடியவில்லை என்றும் நான் சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பின்னால் சுதந்திரப் போராட்டக் காலத்திலும் சரி, சுதந்திரம் அடைந்த காலத்திற்குப் பிறகும் சரி அதற்காக ஊக்கம் கொடுத்தும் கூட அது விஞ்ஞான முறையில் கடைப்பிடிக்கப்படாத கார

[திரு. வ. மு. சுப்பிரமணியம்] [1991 செப்டம்பர் 23

ணத்தால், விஞ்ஞான அடிப்படை அற்ற உற்பத்தியைத் தொடங்
கிய காரணத்தால் அந்தத் தொழில் இன்னும் முன்னேறாமல்
இருக்கிறது. ஆக கிராமத் தொழில் என்று நாம் சொல்கின்ற
போது அதை கிராம மக்கள் செய்தாலும் சரி, அல்லது யார்
செய்தாலும் சரி, அதை ஒரு விஞ்ஞான அடிப்படையில், விஞ்
ஞான உற்பத்தியாக மாற்றுகிறபோது அந்த உற்பத்திப் பொருள்
களின் விலையும் குறையும்; உற்பத்தி காஸ்ட் என்பதும் குறையும்.
ஆகவே இந்தத் தொழில்களை எல்லாம் நவீன முறையில்
கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படு
கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற மானாமதுரைத் தொகுதியைப்
பொறுத்தவரையில் மானாமதுரையில் மண்பாண்டங்கள் செய்யும்
தொழில் மிகவும் பிரசித்திப் பெற்ற தொழிலாகும். மானா
மதுரை மண்பாண்டங்கள், பூச்சட்டிகள் ஆகியவை இன்றைக்கு
வெளிநாட்டுக்குக் கூட ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இருக்
கின்றன. அழகு சாதனமாகவும் கூட அவை கருதப்படுகின்றன.
அந்தத் தொழில் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் ஆட்சிக்
காலத்தில் அந்தத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கு அதனை
அபிவிருத்தி செய்கின்ற முறையில் புரட்சித் தலைவர் அவர்கள்
அவர்களுக்கு தொழில் கூடங்கள் அமைத்து பச்சைப் பானையைச்
சுடுவதற்கு சூளை அமைத்துக் கொடுத்ததற்காக நான் நன்றி
யோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-20

அதுபோலத்தான் மானாமதுரையிலே உப்பளத் தொழிலாளர்
களும், தச்சுத் தொழிலாளர்களும் ஊருக்கு ஒருவர், இருவர்
என்று இல்லாமல் அதிகமான எண்ணிக்கையிலே இருக்கின்ற
காரணத்தினால் அங்கே கூட்டுறவுச் சங்கங்களை புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தி அவர்களின்
மேம்பாட்டடையச் செய்தது புரட்சித் தலைவர் அவர்களுடைய
ஆட்சி என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது
மட்பாண்டத் தொழில் அங்கே சீரும் சிறப்புமாக இருக்கின்ற
காரணத்தினால் ஏற்றுமதியாகக்கூடிய நிலையிலே ஒரு நல்ல
நிலை இருக்கின்ற காரணத்தினால் மட்பாண்டத்திற்கு ஒரு
தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அப்படி ஒரு தொழில் பேட்டை ஆரம்பித்தால் உற்பத்தி
அதிகமாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதனால் பலருக்கு
தொழில் கிடைக்கும் என்று வேலைவாய்ப்புகள் பெருகும்
என்றும் சொல்லிக்கொள்கிறேன். மானாமதுரையிலே சிப்காட்
மூலமாக ஒரு தொழில்பேட்டை ஆரம்பிக்கப்பட்டது. புரட்சித்
தலைவர் அவர்கள் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக்
காலத்திலேயிருந்து இன்றுவரை அது பீடுநடை போடாமல்



1991 செப்டம்பர் 23] [திரு. வ. மு. சுப்பிரமணியம்]

அது நசிந்து போய்க்கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு சில
தொழில்கள் அங்கே தொடங்கப்பட்டாலும் கூட, அங்கே பல
தொழில்கூடங்களில் தொழில் தொடங்கப்படாமல் இருக்கின்
றன. எந்தெந்த தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டதோ, அந்த
இடங்களிலே எல்லாம் அப்படியே தொழிற்சாலை எதுவும் ஆரம்
பிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு தொழில் முனைவர்கள்
யாரும், எல்லா வசதிகளும் இருந்தும், ஏன் முன்வரவில்லை
என்பது தெரியவில்லை. அந்த தொழில் முனைவர்கள் அங்கு
வராததற்கு காரணம் என்ன என்று அரசு ஆராய்ந்து அந்த
தொழில் பேட்டையை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றை சொல்கிறேன். அப்படி தொழில் முனைவர்கள்
வராவிட்டால் அந்த இடங்களில் எல்லாம் வீணாகப்போகாமல்
இருக்க, அந்த பகுதியிலே அந்த தொழில்பேட்டை இருக்கின்ற
காரணத்தினால், தொழில் விருத்தி அடையச் செய்கின்ற நோக்
கத்தோடு அரசு சிறு தொழில்களைத் தொடங்கலாம் என்று
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். புரட்சித் தலைவர்
ஆட்சிக் காலத்திலே பனை மரத்திலிருந்து கிடைக்கின்ற பனை
பொருட்களிலிருந்து பிரஷ், பெட்டி, ஆண்கள் அணியக்கூடிய ஓலை
தொப்பி இவைகள் எல்லாம் அங்கே தயாரிப்பதற்கு பயிற்சி
அளிப்பதற்கு என்று தொழிற்பயிற்சி கூடம் ஒன்று இருக்கிறது.
அந்த தொழில் பயிற்சிக்கூடம் புரட்சித் தலைவிக்கு பெருமை
யளிக்கின்ற வகையிலே இன்று நன்றாக நடந்துகொண்டிருக்
கின்றது. அதை இன்னும் விரிவுபடுத்தி அந்த தொழில்களை
அங்கே அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அதற்குக் காரணம் எங்கள் மாவட்டப் பகுதியிலே பனை மரத்
திற்குப் பஞ்சமே இல்லை. லட்சக்கணக்கான மரங்கள் பயனற்றுப்
போய் இருக்கின்றன. அந்த பனைமரத்துப் பொருள்களைக்
கொண்டு ஏற்றுமதி செய்கின்ற வகையிலே வெறும் பயிற்சி
நிலையமாக மட்டும் இல்லாமல் பனைமரத் தொழிலுக்கான்
ஒரு தொழிற்கூடத்தை அமைத்து அதையும் சீரமைக்கலாம்
என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி ரொம்ப வறண்ட தொகுதியாக இருக்
கின்ற காரணத்தினால் அங்கே தீப்பெட்டி தொழில் வளர்வதற்கு
எல்லா சூழ்நிலையும் நிலவுகிறது. மழை இல்லாத இடத்தில்தான்
தீப்பெட்டியினுடைய தொழில் நன்றாக அமையும் என்பது என்
னுடைய கருத்து. ஆகவே, தீப்பெட்டி தொழிலை சிவகாசியிலே
மட்டும் முடக்காமல், எங்கள் ராமநாதபுரம் மாவட்டப் பகுதி,
முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு கூட்டுறவு சங்கம்
மூலமாக அந்த தீப்பெட்டித் தொழிலை நடத்தவேண்டும் என்று

[திரு. வ. மு. சுப்பிரமணியம்] [1991 செப்டம்பர் 23

அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த உலோகத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று நடந்துகொண்டு வந்தது. அந்த கூட்டுறவுச் திறன் இழந்து அதிலே ஊழல் மலிந்து அந்த உலோகத் தொழில் கூட்டுறவுச் சங்கம் இன்று முடங்கிப்போய் செயலற்றதாகக் கிடக்கிறது.

மானாமதுரை இன்றும்கூட மட்பாண்டத்திற்கு பெயர்போன ஊர் என்பது மட்டுமல்ல. அங்கே பித்தளை பானை அதிகமாகச் செய்யப்படுகிறது. இந்த பித்தளை பானை களை அவர்கள் வீட்டிலே வைத்து செய்கின்றார்கள். அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையிலே அந்த உலோகத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தை புதுப்பித்தாவது அல்லது அது மாதிரி சங்கங்களை ஆரம்பித் தாவது அவர்களுக்கு ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 5-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. ரவிச் சந்திரன்.

*திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை உப்பிலியாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு எனது காணிக்கையாக்குகிறேன். என்னை 37,356 ஓட்டு வித்தியாசத் தில் வெற்றி பெறச் செய்த உப்பிலியாபுரம் சட்டமன்ற தொகுதி வாக்காள பெருங்குடி மக்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்று சட்டமன்றத்தில்கூட இடம் இல்லை என்று சாதனை படைத்த சரித்திர தலைவியே, தமிழக சட்டசபை வரலாற்றில் தேர்தலில் போட்டியிட்டு முதல்வர் பதவியை பிடித்த பெண் என்ற பெருமை பெற்ற தமிழக காவல் தெய்வம் புரட்சித் தலைவியே, தேர்தலில் பெற்ற இமாலய வெற்றியால் இந்திய அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி உலக அரசியல் தலைவர் களின் பார்வையை தன் பக்கம் திருப்பிய புரட்சித் தலைவியே, புரட்சித் தலைவரின் போர் முரசாக, அன்னை சந்தியாவின் அருந்தவப் புதல்வியே, தமிழக அரசியல் வரலாற்றில் புதிய சரித்திரம் படைத்த தமிழக முதல் அமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று கூறி எனது கன்னி உரையைத் துவங்குகின்றேன்.



1991 செப்டம்பர் 23] [திரு. வி. ரவிச்சந்திரன்]

பச்சைமலை பகுதியில் சந்தன மரம் அதிகமாக உள்ளதால் ஒரு சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள பச்சைமலை பகுதியில் காவல் நிலையம் ஒன்றுகூட இல்லை. ஆகவே, தென் புறநாடு, டாப்செங்காட்டுப்பட்டி, கோப்பை செம்புளிச்சம் பட்டி ஆகிய இடங்களில் காவல் நிலையம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். பச்சைமலை பகுதியில் 50 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். தென்புறநாடு, வண்ணாடு, கோம்பைநாடு, ஆத்திநாடு நான்கையும் ஒன்றாக சேர்த்து ஒரு ஊராட்சி ஒன்றியமாக அமைக்க வேண்டுமாய் வேண்டுகிறேன். பச்சைமலைப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி ஒன்றுகூட இல்லை. தென்புறநாடு புத்தூர் அரசினர் உறவிடப்பள்ளி, டாப்செங் காட்டுப்பட்டி அரசினர் நடுநிலைப் பள்ளி, செம்புளிச்சம்பட்டி அரசினர் நடுநிலைப் பள்ளி மூன்றையும் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி மாணவர் உணவு விடுதி, மாணவியர் உணவு விடுதி தனித் தனியே கொடுக்க வேண்டுகிறேன். பச்சைமலைப் பகுதியில் வண்ணாடு தென்புறநாடு நடுவில் உள்ள கை காட்டி என்னும் இடத்தில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க வேண்டுகிறேன். உன்னிகாட்டுபுதூர், கருவங்காடு பூதக்கால், குண்டக்காடி வழியாக புத்தூருக்கு ரோடு வசதி செய்து தர வேண்டு கிறேன்.

டாப்செங்காட்டுப் பட்டியில் இருந்து தோணூர் வரை 22 கிலோ மீட்டர் ரோடு சுமார் 5 வருட காலமாக வேலை செய்து முடிக்காமல் உள்ளது. பணியை முடித்து மினி பஸ் விட வேண்டு கிறேன். தொலைபேசி வசதி பச்சைமலை பகுதியில் இல்லை. அதை அமைத்துத் தருமாறும், பச்சைமலை புத்தூரில் 20 பெட் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரு மாறும் வேண்டுகிறேன். மலைவாழ் மக்கள் உடல்நிலை சரி யில்லை என்றாலும், பெண்கள் பிரசவ காலங்களிலும் அவ சரத்திற்கு ஆஸ்பத்திரி போக சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டியுள்ளது. கட்டிலில் வைத்து நோயாளிகளைத் தூக்கி செல்லும்போது மலையில் நடுவழியில் இறந்துவிடு கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலை நீடிக்காமல் புரட்சித் தலைவி அரசு மலைவாழ் மக்களுக்கு உதவுமாறு வேண்டுகிறேன். துறையூர் நகர மக்கள் குடி நீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, துறையூர் நகருக்கு முசிறி காவிரியிலிருந்து கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வர வேண்டுமாய் வேண்டுகிறேன். துறையூர் நகரில் உள்ள ஆதி திராவிட மக்கள் வினாயகர் தெரு பாலக்காட்டு மாரி யம்மன் கோயில் தெரு மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கொடுக்க வேண்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய

[திரு. வி. ரவிச்சந்திரன்] [1991 செப்டம்பர் 23

போது ஏழைகளைப் பார்த்தால் வரண்டுபவர்கள் போலவும், சுரண்டுபவர்கள் போலவும் நம் கண்ணிற்கு காட்சியளிப்பார் கள். ஆனால் அவர்களெல்லாம் வரணடுபவர்களும் அல்ல சுரண்டுபவர்களும் அல்ல. உண்மையான மனிதர்கள் அவர்கள் தான் என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டுமென்றும், தின மும் 18 மணி நேரம் வேலை செய்வதால் அவர்கள் உடம்பை வறுமை உறிஞ்சி விட்டது என்றுக் கூறினார்கள்.

என் தொகுதியை சார்ந்த டாப் செங்காட்டுப்பட்டி பெரிய சோலையில் ஐயப்பன் கோயில் உள்ளது. அது மிகவும் மோச மான நிலையில் உள்ளது. வனத் துறையின் கட்டுப்பாட்டில் இக்கோயில் உள்ளது. கோயிலுக்காக முதல்வர் நிதியிலிருந்து கட்டிடம் கட்ட நிதி உதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

புரட்சித் தலைவர் சமாதி மற்றும் பேரறிஞர் அண்ணா சமாதிக்கு மக்கள் அதிகமாக செல்கிறார்கள். கிராம மக்கள் பீச் ரோட்டில் நேரில் கடக்கும்போது விபத்து ஏற்பட ஏதுவாக உள்ளது. அதனால் பீச் ரோட்டில் ஒரு சுரங்கப்பாதை அமைக்கு மாறு வேண்டுகிறேன்.

துறையூர் நகரில் அதிகமான மோட்டார் வாகனங்கள் செல் வதால் முசிறி பிரிவு ரோட்டில் இருந்து நேராக பெருமாள் மலை அடிவாரம் வரை பைபாஸ் ரோடும், நகரத்தைச் சுற்றி 700—க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளதால் இங்கு உள்ள மாணவ மாணவியர் கல்லூரி, பாலிடெக்னிக் பயில வேண்டும் என்றால் திருச்சி போக வேண்டியுள்ளதாலும், 700—க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடையும் வகையில் கல்லூரி மற்றும் பாலி டெக்னிக் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். மற்றும் திருச்சியில இருந்து துறையூர் வழியாக ஆத்தூர் செல்லும் இருப்புப் பாதை அமைத்தால் கிராமப்புற மக்கள் வாழ்க்கைத் தரம் முன்னேற்றம் அடையும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன். ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் குழந்தைகள் துறையூர் உணவு விடுதியில் தங்கிப் பயில, இந்த வருடம் 50 மாணவியர் தங்கிப் படிக்க இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பிற்பகல் 5—30

பச்சைமலையில் உள்ள உணவு விடுதிக்கு புத்தூர், நச்சிலிப் பட்டி, கிணத்தூர், சின்ன இலுப்பூர், புதூர்குறிச்சி ஆகிய விடுதிகளில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை 40 பேர்தான் உள்ளது. ஆகவே, மேற்கண்ட விடுதிக்கு இன்னும் இடம் ஒதுக்கிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 23] [திரு. வி. ரவிச்சந்திரன்]

துறையூரில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை பெயர் மாற்றம் செய்து புரட்சித் தலைவர் மகளிர் உயர்நிலைப் பள்ளி எனப் பெயர் சூட்டுமாறு அன்புடன் வேண்டுகிறேன். கொல்லிமலை அடிவாரத்தில் புளியஞ்சோலை அமைந்துள்ளது. இங்கு மலையில் இருந்து ஆற்றுத் தண்ணீர் வந்து கொண்டிருக் கிறது. ஓர் அணை கட்டினால் அந்தப் பகுதியில் 250 கிராமங்கள் பயன்பெறும். செங்காட்டுப் பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுமாறு வேண்டுகிறேன்.

உப்பிலியாபுரம் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக 5 தங்கும் விடுதிகள் உள்ளன. இங்கு மாணாக்கர்கள் குடி தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே புதிய கிணறு வெட்டி, டாங்க் அமைக்குமாறு வேண்டு கிறேன். எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. மெ. ஆண்டி அம்பலம்.

<u>*திரு. மெ. ஆண்டி அம்பலம்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவையில் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கை தொடர் பாக கதர் துறை மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந் துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நத்தம் தொகுதியிலிருந்து 6—வது தடவையாகத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டதற் காக தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

1990—91ஆம் ஆண்டில் 12.25 கோடி ரூபாய் பெறுமான முள்ள கதர் துணியும், 7.48 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கதர் சில்க்கும், 4.51 கோடி பெறுமானமுள்ள பாலியஸ்டர் துணியும் உற்பத்தி செய்து, கிராமங்களில் உள்ள 45,956 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது. வருகிற ஆண் டில் கதர் துணி 13 கோடிக்கும், கதர் சில்க் 8.25 கோடிக்கும், பாலியஸ்டர் 5.50 கோடிக்கும் உற்பத்தி செய்ய வாரியம் கருதி யுள்ளதாக குறிப்பில் கூறப்பட்டுள்ளது. தமிழகத்தில் 694 கிராமத் தொழில் மையங்கள் இயங்கி வருவதாகவும், அவற்றில் 36,100 பெண்கள் பணி புரிவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே கிராமப் பெண்களை தனி அக்கறையுடன் இந்த அரசு கவனிக்கிறதென்று சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1991 செப்டம்பர் 23

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், பானையில் இருந்
தால்தானே அகப்பையில் வருமென்று சொல்லக் கூடிய நிதி
யமைச்சரவர்களாவார்கள். நான் வேடிக்கையாகச் சொல்
கிறேன். இப்படிச் சொல்கிற நிதி அமைச்சரவர்களைத்தான்
மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அந்தப் பொறுப்புக்கு
போட்டிருக்கிறார்கள் என்னும்போது பெரு மகிழ்ச்சி. நிதியை
இறுக்கிப் பிடித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையைப் பார்க்
கின்றபோது, அவர்கள் 2—½ மணி நேரம் நிதிநிலை அறிக்
கையைப் படித்ததைப் பார்த்தபோது, ஒரு ஆச்சரியத்தைத்
தருகிறது. குறிப்பாக கூடுதலாகப் பணத்தைச் செலவழிக்கக்
கூடாது, பணத்தை இறுக்கிப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற
எண்ணத்தோடு இருக்கிறார் நிதி அமைச்சர் அவர்கள். தேசியத்
தலைவர்கள் பிறந்த நாட்களில் கதர் விற்பனைக்கு சிறப்
புத் தள்ளுபடி உண்டு. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., பாரதப்
பிரதமர் ராஜீவ் காந்தி, முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.
ஆர். இவர்கள் பிறந்த நாளை ஒட்டி வழங்கப்படும் சிறப்புத்
தள்ளுபடியை 15 நாட்களுக்குக் குறையாமல் வழங்க வேண்டு
மென்று கதர் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன். கதர் துணி என்று சொன்னாலே, மக்கள் எளி
தாக வாங்கக்கூடிய ஒரு நிலையிலே அதைக் கொண்டு வர
வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
முன்பெல்லாம் இருந்தது போல், அரசு மருத்துவமனைகளுக்குத்
தேவையான மேசை விரிப்புகள், சன்னல், கதவுகளின் திரை
களுக்குத் தேவையான அளவில் பெரிய அளவுக்குத் தயார்
செய்து, அதன் மூலம் கிராமங்களில் தொழில் உற்பத்தியைப்
பெருக்கி, அங்கே இருக்கக்கூடிய நிறைய படிக்காத பாமரப்
பெண்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து, கதர் வாரியத்
தின் மூலம் கிராமங்கள்தோறும் உள்ளவர்கள் நல்ல பயன்
அடையக்கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
மேலும் காதி வஸ்திராலயா மூலம் புளி, பெப்பர்மிட் போன்ற
தரமான பொருட்கள் கிடைக்கும் வகையிலே எல்லா தலை
நகரங்களிலும் காதி வஸ்திராலயாவை அமைக்க வேண்டும்,

பிற்பகல் 5-35

பனைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளர்கள்
விபத்தில் இறந்தால் அவர்களுக்கு அரசு பத்தாயிரம் ரூபாய்
உதவித் தொகை வழங்குகிறது. ஆனால் கதர் கிராம வாரி
யத்தை நம்பியிருக்கக்கூடிய தொழிலாளர்கள் இறந்தால் அப்படி
ஏதும் வழங்கப்படுவதில்லை. அத்தகைய தொழிலாளர்களுக்கு
குறைந்தது ரூபாய் 5,000 மாவது இந்த அரசு கொடுக்கவேண்டு
மென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். கதர் கிராமத்
தொழில் வாரியம் உற்பத்தி செய்யும் பொருட்களை அரசு



1991 செப்டம்பர் 23] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

மற்றும் பிற துறைகள் வாங்கினால் அதை ஊக்கப்படுத்துவது
போல் அமையும் என்பதால் அரசு அதற்காக உத்தரவு போட
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக மலிவு விலை மதுவை அரசு ஒழிக்க முன் வந்
திருப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்தது
பெருமைக்குரிய விஷயமாகும். ஆனால் கூடுதலான விலைகள்
உள்ள மது விற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் அறவே
ஒழிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். நான் காங்கிரஸ்காரன் என்ற
முறையில் மட்டும் அல்லாமல் தோழமைக் கட்சிக்காரன் என்ற
அடிப்படையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். அறவே மதுவை ஒழிக்க வேண்டும் என்பது
தான் எங்கள் விருப்பம்.

தமிழ்நாட்டில் கதர்த் துணி மூட்டைகளை தோளில்
சுமந்து கொண்டு விற்றவர்கள் பெரியார், ராஜாஜி மற்றும்
திரு. வி. கல்யாணசுந்தரம் போன்றவர்கள். அவர்கள் பிறந்த
நாள்கள் வரும்போது ஒன்றிரண்டு நாட்கள்கூட கதர் விற்பனையில்
தள்ளுபடி விற்பனை செய்யப்படுவதில்லை. அந்தப் பெரியவர்
கள் பிறந்த நாளில் கதர் தள்ளுபடி விற்பனையை 15 நாட்கள்
செய்ய வேண்டுமென்று மரியாதைக்குரிய கதர்த் துறை அமைச்சர்
அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தந்தை பெரியார்
பிறந்தநாளையொட்டி கதர் தள்ளுபடி விற்பனை நடக்கிறது.
ராஜாஜி, திரு. வி. க. போன்றவர்களின் பிறந்த நாட்களுக்கும்
அவ்வாறு தள்ளுபடி விற்பனை அளிக்க வேண்டும். அவர்கள்தான்
கதரையே கட்டிக் காத்தவர்கள். சுதந்திரத்திற்காகப் பாடு
பட்டவர்கள். அவர்கள் பிறந்தநாளிலும் தள்ளுபடி விற்பனை
செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். அண்ணல் காந்தியடிகள் கிராமங்கள்தான் நாட்டின்
உயிர் நாடி என்று கூறினார். தற்போதுள்ள கிராமங்களை
விட்டுவிட்டு நகரங்களுக்கு மக்கள் செல்லக்கூடிய சூழ்நிலை
இருப்பதால் கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை, படிக்காத
பெண்களுக்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம்
தொழில்கள் கற்றுக் கொடுத்து வேலை வாய்ப்பை உருவாக்க
வேண்டும். கிராமங்களில் சிறு தொழிற்சாலைகள் அமைக்க
வேண்டும். தாலுக்கா அளவிலும் கதர் வாரியத்தை நிறுவ
வேண்டும் என்பது எங்கள் விருப்பம். கதர்த் துறை அமைச்சர்
அவர்கள் இன்றையதினம் அதைச் செய்வார்கள் என்ற
நம்பிக்கை எனக்கு உண்டு. தமிழ்நாடு கிராம கைத்தொழில்
வாரியம் 1,500 யூனிட்டுகளை கிராமங்களில் நிறுவி, அங்கே
பொருட்களை உற்பத்தி செய்வதிலும், விற்பனை செய்வதிலும்
கிராம மக்களை ஈடுபடுத்த வேண்டும். அதனால் கிராம

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1991 செப்டம்பர் 23

மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி ஏற்படும். கிராம மக்களுக்காக இந்த அரசு செய்யும் சேவையை பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து, தமிழ்நாட்டில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கதர் தள்ளுபடி விற்பனை 15 நாட்களுக்கு செய்யப்படுகிறது. ஆனால் பொங்கல் பண்டிகை எல்லாம் வரும்போது கொடுக்க வேண்டும். மாட்டுப் பொங்கலுக்குப் போனால் மண்டி போட்டு சாப்பிடலாம் என்று கிராமங்களில் சொல்வார் கள். அந்த பொங்கலுக்கும் 15 நாள் தள்ளுபடி விற்பனை செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரணம் பொங்கல் பெரிய பண்டிகை. தீபாவளியைவிட முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகைதான். அதற்கு 15 நாள் தள்ளுபடி விற்பனை கொடுக்க வேண்டும். கிராமங் களில் கதர் கிராமத் தொழில் விற்பனை நிலையங்கள் திறக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

தியாகிகளுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியமாக ரூபாய் 100 தருகிறது. மத்திய அரசு ரூபாய் 750 தருகிறார்கள். அண்டை மாநிலங்களில் தியாகிகளுக்கு மாநில அரசு ரூபாய் 300 தரு கிறார்கள். அதைபோல் அண்டை மாநிலங்களைப் போல நமது மாநில அரசும் தியாகிகளுக்கு ரூபாய் 300 என்ற அளவுக்கு ஓய்வூதியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், அந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளின் நிலைமையைப் பார்த்தால் வேதனை அளிக்கிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகள் நலனுக்காக அரசே சட்டம் போட வேண்டும். இங்கே மூத்த அமைச்சர்களை எல்லாம் தியாகிகளுக்கு—பலனே இல்லை. அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு இல்லை—ஆகவே, தியாகி களின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசாங்க வேலை கொடுக்க வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். சர்வோதயப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லாம் தேர்வுகளில் நூற்றுக்கு நூறு மார்க் எடுக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட வந்துவிட்டார்கள். அவர் ரொம்ப அனுபவப்பட்டவர். ஆனால் அரசாங்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் 50,60 மார்க்குகள் தான் எடுக்கிறார்கள். சர்வோதயப் பள்ளி மாணவர்கள் 100-க்கு 100 என்று எடுக் கிறார்கள்.



1991 செப்டம்பர் 23] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

பிற்பகல் 5-40

சர்வோதய பள்ளிகளில், என் தொகுதியைப் பொறுத்த வரையில் நிறைய பள்ளிகள் இருக்கின்றன. நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் எடுத்து நல்லபடியாக குழந்தைகள் படிக்கின்றனர். அதிலும் குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேகூட இல்லை. மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, தரமான படிப்பு வளருவதற்காக புதுத் திட்டங்களைப் போட வேண்டும் என்பது. மாணவர்கள் காலை எட்டு, ஒன்பது மணிக்குள் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். 9, 10 மணி என்று சொன்னால், இருக்கக் கூடிய பஸ்களில் செல்வது கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. அரசு அலுவலர்களும் அந்த நேரத்தில் பஸ்களில் சேர்ந்து செல் கிறார்கள். அதனால் குழந்தைகள் பஸ்களில் ஏறிச் செல்ல முடியவில்லை. கனம் கல்வி அமைச்சர் அவர்கள் வந்து விட்டார்கள். அவர் இப்போதே அவருடைய மனதிலே வைத்து காலை எட்டு மணியிலிருந்து ஒன்பது மணி வரையில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ரொம்ப முக்கியமான பிரச்சினை.

அது மட்டுமல்லாமல் பள்ளி விழாக்களில் கதர் துணி வாங்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் உத்தரவு போட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன். பள்ளி விழாக்களில் சாதாரணமாக கைத்தறி துணியைத்தான் போடுகிறார்கள். அந்த பள்ளி விழாக்களில் ஏற்கெனவே இருந்து வந்ததைக் குறைத்துவிட்டு இப்போது கைத்தறித் துணியைப் போடுகிறார்கள். கைத்தறி துணியும் இருக்கட்டும். கதர் துணியையும் போடலாம் என்று இரண் டையும் போட அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டு கதர் துணிக்கு நல்ல முக்கியத்துவம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காலஞ் சென்ற முன்னாள் முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் செயலாளராக இருந்த திரு. பரமசிவம், ஐ.ஏ.எஸ். அவர்களை கதர்த் துறையின் செயலாளராக மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். இது பெரு மைக்குரிய ஒன்று. அவர் நல்ல அனுபவம் உள்ளவர். சுதந் திரத்திற்குப் பாடுபட்டத் தியாகிகளுடைய சிரமங்களை நன்கு

புரிந்தவர். ஓய்வூதியம் மற்றும் உள்ள சலுகைகள் அவர் களுக்குக் கிடைக்கத் துரிதமாகச் செயல்படுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அண்ணல் காந்தியடிகள் கண்ட கனவை நினைவாக்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு ஒன்றைப் படிக்கிறேன்.

''கதர் சட்டைக்காரரை மட்டும் கவனித்த எம்.ஜி.ஆர்.''

''இராமாபுரம் தோட்டத்தில் காலை வேளையில் எப்போதுமே கூட்டம் நிரம்பி வழியும். அமைச்சர்கள், அதிகாரி கள், அ.தி.மு.க. தலைவர்கள், எம்.எல்.ஏ. க்கள் ஆகியவர்கள் முதல்வரைக் காண காத்துக் கிடப்பார்கள். அப்படித்தான் அன்றும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதிகாலை முதல் காத்திருந்தார்கள். மாடியிலிருந்து எம்.ஜி.ஆர். கீழே இறங்கி வந்தார். யாரையும் கண்டுகொள்ளாமல் விர்ரென்று காரில் போய் ஏறியவர் ஒரே ஒரு கதர்ச் சட்டைக்காரரைக் கண்டதும், காருக்கு உள்ளே இருந்தபடியே கையை அசைத்துக் கூப்பிட் டார். கதர் சட்டைக்காரரோ, அவசரமாக போகிறார், யாரையோ முக்கியமானவரை முதலமைச்சர் கூப்பிடச் சொல்லி அழைக்கிறார் என்று கருதிப் பேசாமல் இருந்தார். ஆனால் மீண்டும் எம்.ஜி.ஆர். அழைக்கவே அவரது பாது காப்பு போலீசார் வந்து கதர் சட்டைக்காரரை அழைத்துச் சென்றார்கள். இதைப் பார்த்த மற்றவர்கள் சிலரும் விவரம் புரியாமல் காருக்கு அருகே ஓடினார்கள். ஆனால் போலி சார் அவர்களைத் தடுத்து விட்டனர். அருகில் வந்த கதர் சட்டைக்காரரிடம், என்ன வேண்டுமென்று காருக்குள்ளே இருந்தபடியே கேட்டார். முதல்வரிடம் அவர் ஒரு மனுவைக் கொடுத்து ஏதோ கோரிக்கையைச் சொன்னார். மனுவைப் பெற்றுக்கொண்ட முதல்வர் சிரித்துக் கொண்டே சரி என்று தலையை அசைத்தார். அருகில் கூடி நின்ற அனைவரும் ஆச்சரியத்துடன் கதர் சட்டைக்காரரைப் பார்த்தார்கள். அந்த கதர் சட்டைக்காரர் யார் தெரியுமா? காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஆண்டி அம்பலம்தான். (சிரிப்பு) இந்திரா நாட்டில் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் தமிழ் காந்தியின் சிலையை அரசே அமைக்க வேண்டும் என்பதுதான் அவர் கொடுத்த கோரிக்கை.'' நான் தோழமைக் கட்சி என்ற அடிப்படையிலே இதை உங்கள் மத்தியிலே படித்துக் காண் பிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் படித்துக் காண்பிக்கிறேன். ஆகவே இன்றைய தினம் புதிதாக வரக்கூடிய அமைச்சர்கள் என்னைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் நினைக்



கிறேன். நான் தொடர்ந்து சட்டமன்றத்திற்கு வருபவன் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

*திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கதர் கிராமத் தொழில்கள், ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங் களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிலே பல்வேறு இடங் களிலே தொழில்கள் பெருகி வந்து கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 5-45

நீண்ட நெடுங்காலமாக தமிழகத்தைப் பொறுத்தவரை தொழில் துறையிலே முதலிலே முன் தங்கி இருந்த இடம் இன்றைக்கு மிகப் பின் தங்கி இருக்கிறது, என்றெல்லாம் சில நண்பர்கள் சொல்லிக் கொண்டு இருந்தாலும் இன்றைக்கு மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவு கிராமங்களிலே இருக் கின்ற அத்தனை பேர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் தான் நல்ல முறையிலே இந்த நாட்டினுடைய பொருளா தாரம் சிறப்பாக இருக்கும் என்ற ஒரு நல்ல நோக்கத்துடன், இன்றைக்கு கிராமப்புறத்திலே இருக்கின்ற அத்தனை படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை பெருக்கிக் கொடுக் கின்ற வகையிலே இந்த ஊரகத் தொழில்கள் வளர்ந்து இருக் கின்றன. அப்படி ஊரகத் தொழில்கள் வளர்ந்து வந்தாலும் இன்றைக்கு நாம் எண்ணிய அளவு இந்த நாட்டிலே முன்னேற் றம் அடைந்து இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கிற நேரத் தில் அந்த அளவு சிறப்பாக ஒரு இடத்தை அடையவில்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

மகாகவி பாரதியார் அவர்கள், 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் அமைப்போம், நல்ல சாலைகள் அமைப்போம்.' என்று கூறி இருக்கின்றார்கள். அந்த வகையிலே நாம் இன்றைக்கு சிறப்பாக நம்முடைய கிராமங்களிலே சிறந்த தொழில்களைத் துவக்குவதற்கு நாம் முன்னுக்கு வர வேண்டும். அதுபோலத்தான் இன்றைக்கு பெரும் தொழில்கள் நிறைய வளர்ந்து இருக்கின்றன. அந்தப் பெரும் தொழில்களுக்கு உறுதுணையாக சிறு சிறு தொழில்கள் இன்றைக்கு கிராமங்களிலே வளர்ந்தால்தான் அந்த அடிப் படையிலே பொருளாதாரம் பெருக முடியும்.

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 23

1991 ஆம் ஆண்டு சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் சிறு தொழிற்சாலைகளை பதிவு செய்து இருக்கின்றார்கள். அப்படிப் பதிவு செய்த அந்த ஒரு லட்சத்து 40 ஆயிரம் சிறு தொழில்களில் இன்றைக்கு 35 ஆயிரம் சிறு தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன. நம்முடைய நாட்டிலே சிறு தொழில்கள் இந்த அளவுக்கு நலிவடைவதற்கு என்ன காரணம் என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவிலே அரியானாவும், பஞ்சாபும் இன்றைக்கு சிறு தொழில் துறையில் மிகவும் முன்னேறி இருக்கின்றன. ஆனால் தமிழகம் இன்றைக்கு அந்த அளவுக்கு முன்னேறவில்லை என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் சிறு தொழில் துறை சிறந்த முறையிலே உருவாக கீழ்க்கண்ட திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிறு தொழில்களுக்கு தேவையான மூலப் பொருள்களை 'சிட்கோ' நிறுவனத்திடம் பெற்று அந்த 'சிட்கோ' நிறுவனம் எந்தெந்த தொழிலுக்கு எப்படியெல்லாம் மூலப் பொருள் தேவையோ அதையெல்லாம் நிச்சயமாக வழங்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு வங்கத்திலே சிறு தொழில்களுக்கும், ஊரகத் தொழில்களுக்கும் தனியாகவே செயலாளர்கள் இருக்கிறார்கள். அதே போன்று தொழில் துறை ஆணையாளர்கள் இருக்கிறார்கள். அந்த மேற்கு வங்காளத்தைப் போன்று தமிழகத்திலும் சிறு தொழில்துறையைக் கவனிப்பதற்கு தனி செயலாளரையும், தனி தொழில் துறை ஆணையாளரையும் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட தொழில் மையங்களிலே தொழில் முனைவோரின் நன்மையை கருதி செயல்படும் அதிகாரிகளையே நியமிக்க வேண்டும். இன்றைக்கு மாவட்ட தொழில் மையங்களில் நிறைய முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த முறைகேடுகளைப் பற்றிச் சொல்வதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். தொழில்களை செய்வதற்கு நமது அரசு தரும் நிதி உதவி மாவட்ட தொழில் மையங்களின் மூலம் வங்கிகளுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. ஆனால், வங்கிகளில் உள்ள அதிகாரிகள் மாவட்ட தொழில் மையங்களிலிருந்து அனுப்பப்படும் பரிந்துரைகளை ஏற்காமல் அவர்கள் விருப்பத்தின் பேரில் கடன் தொகைகள் வழங்கப்படுகின்றன. கடந்த தி.மு.க.



1991 செப்டம்பர் 23] [திரு. டி. சுதர்சனம்]

ஆட்சியிலே குறிப்பாக செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு 315 பேர்களுக்கு கடன் வழங்க வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்து இருந்தது. ஆனால் 250 பேர்களுக்கு மட்டும் தான் அந்தத் தொகை வழங்கப்பட்டது. மீதி 65 பேர்களுக்கு, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு அந்தக் கடன் வழங்கவில்லை. அதைப்பற்றி அந்த ஆட்சி சிறிது கூட கவலைப்படவில்லை. ஆனால், இன்றைக்கு ஆதி திராவிட மக்களுக்காக தன்னுடைய பத்திரிகையிலே முதலைக் கண்ணீரை திராவிட முன்னேற்றக் கழகம் வடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோன்று தமிழகத்திலே 107 தாலுக்காக்களை பின் தங்கிய தாலுக்காக்களாக அறிவித்து அதற்கு அங்கே தொழில் துவங்குவதற்கு தொழில் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த தொழில் மானியத்தை இன்றைக்கு 15 சதவீதமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசு இந்த சிறு தொழில்களை நல்ல வளமுடையதாக ஆக்குவதற்காக, அதை உயர்த்தி, அந்த பின்தங்கிய தாலுக்காக்களிலே தொழில் துவங்குபவர்களுக்கு இந்த அரசு 25 சதவீதமாக மானியத்தை உயர்த்த வேண்டும்.

அங்கே ஆதிதிராவிடர்கள் சிறுதொழில்களைத் தொடங்குவார்களானால் அந்த மானியத்தை 30 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-50

அதைப்போல பி.ஈ., பாலிடெக்னிக் போன்ற படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களுக்கு, இளைஞர்களுக்கு உடனடியாக இந்த அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தோ அல்லது தமிழ் நாடு அரசு கட்டுப்பாட்டிலுள்ள தொழில் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது 'டிக்' மூலமோ நிதியுதவி செய்து ஒவ்வொருவரும் 10 பேருக்கு வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டும். அதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கி இருக்கிறார்கள். அதைப்போல குடிசைத் தொழில் செய்பவர்களுக்கு 5 எச்.பி. வரை மின்சாரம் இலவசமாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 23

சுமார் 50 ஆயிரம் சிறுதொழில்கள் நிலக்கரியை நம்பியுள்ளன. நிலக்கரி பற்றாக்குறை இன்றைக்கு நிறைய இருக்கிறது. இங்கே வழங்கியிருக்கிற தொழில் அறிக்கையில் மாதம் ஒன்றுக்கு கட்டிக் கரி 250 வாகன்கள் ஒதுக்கியிருப்பதாகவும், தூள் கரி 116 வாகன்கள் ஒதுக்கியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு அந்த 250 கட்டிக் கரி வாகன்களும், 116 தூள் கரி வாகன்களும் நம்முடைய தொழில் தேவைக்கு தமிழகத்திற்கு போதுமானது அல்ல. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் நிறைய தொழில்களை அங்கே தொடங்குவதற்காக சண்டை போட்டு கட்டிக் கரியையும், தூள் கரியையும் அவர்கள் பெற்று வருகிறார்கள். நாங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தொழில் துறை அமைச்சராக இப்போதைய சட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும், சிறுதொழில் துறையைப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தபோது அவர்களை அணுகி இந்தக் குறையைப் போக்குவதற்கு மிகப்பெரிய கோரிக்கையை விடுத்து, அவர்கள் அமைச்சர்களையெல்லாம் அழைத்து பேசி, அன்றைக்கு மத்திய அரசாங்கத்தில் பேசி, இதை உயர்த்துவதற்கு ஆவன செய்தார்கள். அப்படி ஆவன செய்து கொண்டிருந்த போது, அன்றைக்கு ஆந்திரா முதலமைச்சரிடம் பேசி, 'அட்ஹாக் பேசிஸ்'-ல் ஆந்திராவிலிருந்து மாதம் ஒன்றுக்கு மூன்று ரேக்குகள் அதாவது 120 பாக்ஸ் வாகன்கள் தூள் கரியையும், இரண்டு ரேக்குகள் அதாவது 80 பாக்ஸ் வாகன்கள் கட்டிக் கரியும் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்தும் பெற்றுத் தந்தார்கள். இப்படி ஒதுக்கப்பட்ட நிலக்கரி நமக்கு தரமுள்ள நிலக்கரியாக வருகிறதா என்று எண்ணிப்பார்க்கையில் அந்த நிலக்கரி தரமில்லாத நிலக்கரியாக இன்றைக்கு சாந்தா நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த சாந்தா நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வருகிற நிலக்கரியை இன்றைக்கு கணக்கெடுத்துப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு 250 வாகன்கள் என்று சொல்லுகிறோமே நாம், அந்த 250 வாகன்களில் கடந்த எட்டு மாதங்களில் நமக்கு வந்திருக்கிற பாக்ஸ் வாகன்களின் எண்ணிக்கை ஜனவரி மாதம் 70 வாகன்கள், பிப்ரவரி மாதம் 44 வாகன்கள், மார்ச் மாதம் 64 வாகன்கள், ஏப்ரல் மாதம் 29 வாகன்கள், மே மாதம் 20 வாகன்கள், ஜூன் மாதம் ஒரு வாகனும் இல்லை, ஜூலை மாதம் ஒன்று கூட இல்லை. ஆகஸ்ட் மாதம் 14 வாகன்கள் வந்திருக்கின்றன.

அதைப்போல தூள் கரியை எடுத்துக் கொண்டால் ஒரு மாதத்திற்கு 11[illegible] பாக்ஸ் வாகன்கள் சொல்கிறார்கள் ஆனால் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் 7



1991 செப்டம்பர் 23] [திரு. டி. சுதர்சனம்]

வாகன்கள் தான் தூள் கரி தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறது. இங்கே இந்த தொழில் ஆற்றுகிறவர்களுக்கெல்லாம் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இந்தக் கரியை விநியோகித்துக் கொண்டிருக்கிறோம். அந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கிற கரி டன் ஒன்றுக்கு சுமார் 800 ரூபாய் அளவுக்கு கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் வெளி மார்க்கெட்டில் அந்த கரி டன் ஒன்றுக்கு 1,500 ரூபாய் இன்றைக்கு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அவலநிலையைப் போக்குவதற்கு தமிழக அரசு உடனடியாக தலையிட்டு இன்றைக்கு சாந்தா நிலக்கரிச் சுரங்கத்திலிருந்தும், அதைப்போல சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்தும் தரமான கட்டிக் கரியும், தூள் கரியும், கோக் என்று சொல்கிறார்களே அதையும், சிறுதொழில்களுக்கு உதவி செய்கிற வகையில் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

800 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அது 400 தொழில் கூட்டுறவுச சங்கங்களாக குறைந்து இருக்கின்றன. அப்படி குறைந்ததற்கு காரணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நிர்வாக திறமையின்மையும், மெத்தனப் போக்குமே ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூடப்பட்ட சங்கங்களைப் பற்றி விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்க வேண்டும். இன்றைக்கு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டால்தான் தொழிற்சாலைகள் சிறப்பாக நடைபெறும். ஆகவே, 800 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தது, இன்றைக்கு 400 ஆக குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிய வேண்டுகிறேன்.

அதைப்போன்று தொழில் கூட்டுறவுச் சங்கத்திலே இன்றைக்கு பாலித்தீன் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக பணியாற்றுகின்றன. அதற்காக இந்த அரசை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-55

அதைப்போன்று கயிறு கூட்டுறவுத் தொழில் சங்கங்கள் 80 நடைபெறுகின்றன. அந்தச் சங்கங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை. தென்னை மரங்கள் அதிகமாக உள்ள தஞ்சை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்தத் தொழில் சிறக்க ரப்பருடன் சேர்த்து இணைத்து புதிய பொருள்களைச் செய்து அவற்றை விற்பனை செய்யும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 23

சேலத்திலே உள்ள சாகோ கூட்டுறவுச் சங்கம் ஜவ்
வரிசித் தொழிலை அங்கே இருக்கிற சிறு விவசாயிகளுக்கு
உபயோகப்படுகின்ற வகையிலே சிறப்பாகச் செய்து வரு
கிறது. அதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று 'டான்கோ' தொழில் நிறுவனம் 1983-ல்
10 கோடி ரூபாய் மூலதனத்தில் தொடங்கப்பட்டு, திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலே நஷ்டத்தை ஏற்படுத்தி இன்
றைக்கு இலாபத்திலே வருவதற்கு அந்த நிறுவனம் முயற்சி
செய்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக சிறு அளவிலே
தோல் பதனிடும் தொழில் முனைவர்களுக்கு மூலப்பொருள்
கள், இரசாயனப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்க
நமது அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போன்று செருப்பு, சோப்பு போன்ற தொழில்
களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு
அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை
வசதி கிடைக்க உத்தரவாதத்தை இந்த அரசு வழங்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்கு அருகே தோல் தொழில்பேட்டை ஒன்றை
இந்த அரசு அமைக்க உத்தேசித்திருப்பதாக நான் அறிகி
றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும் மாண்பு
மிகு சிறு தொழில்கள் அமைச்சர் அவர்களையும் அந்தத்
தொழில் பேட்டையை என்னுடைய தொகுதியாகிய பூவிருந்த
வல்லியில் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று பூவிருந்தவல்லியிலே அரசுக்குச் சொந்த
மான நிலம் நிறைய இருக்கிறது; தண்ணீரும் இருக்கிறது.
அதனாலே அந்தத் தொழில் பேட்டையை நிச்சயமாக
அங்கே அமைக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அடிப்படையிலே பல தொழில்
பேட்டைகள் வியாசர்பாடி, பொள்ளாச்சி, சிவகாசி, தூத்
துக்குடி போன்ற இடங்களில் செயல்படுகின்றன.

'சிட்கோ' நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் தொழில்
பேட்டைகளில் புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களுக்கு
முதலீட்டு மானியம் வழங்கப்படுவதைப் போல கூட்டுறவுத்



1991 செப்டம்பர் 23] [திரு. டி. சுதர்சனம்]

துறையிலே தொடங்கப்படும் புதிய தொழில்களுக்கும் நமது
புரட்சித் தலைவி அரசு மானியம் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இந்த 800 கூட்டுறவு தொழில் சேவை
சங்கங்கள் கலைக்கப்பட்டு, அவை தனி அதிகாரிகளின்கீழ்
செயல்படுகின்றன. அந்தத் தனி அதிகாரிகளில் பலர் நல்ல
முறையில் பணியாற்றுகிறார்கள். சிலர் அவ்வாறு பணி
யாற்றவில்லை. அதனால் கலைக்கப்பட்ட கூட்டுறவுச்
சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 பேர் கொண்ட ஆலோசனைக்
குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'டான்சி' தற்
போது செயலிழந்து பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி இருக்
கிறது. ஏறத்தாழ 56 கிளைகள் அதற்கு இருக்கின்றன.
56 கிளைகளைக் கொண்ட அந்த நிறுவனத்தில் 1500 தொழி
லாளர்கள் இருக்கும்போது அதிகாரிகள் 3000 பேர்கள்
இருப்பது எந்த வகையில் நியாயம் என்பதை நீங்கள் எடுத்
துச் சொல்ல வேண்டும். அரசு அலுவலகங்களுக்குத் தேவை
யான பொருள்களை டான்சியில் இருந்து பெறுகிறார்கள்.
அதோடு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி துரித
மாகப் பொருள்களை தயாரித்து தொழிலாளர்கள் பாதிக்
கப்படாமல், அதே நேரத்தில் இலாபகரமாக அந்த நிறு
வனத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

இன்று பெரிய நஷ்டத்திலே இயங்கும் டான்சி நிறு
வனத்தின் தலைமை அலுவலகம் வாடகைக் கட்டடத்
திலே இயங்கிவருகிறது. ஆரம்பிக்கும்போது 2500 ரூபாயாக
இருந்த அந்த வாடகை இன்றைக்கு மொத்தம் ஒரு
இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.
அந்த வாடகையைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்
படிப்பட்ட ஒரு நிலைமை அந்த டான்சி நிறுவனத்தில்
இருக்கிறது. அதைப் போக்கிட இந்த அரசு முயற்சி
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் தேயிலைத் தொழில் சங்கங்கள் மூலமாக
15 கூட்டுறவு தொழில் நிறுவனங்கள் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றன. அவற்றின் மூலமாக 20,000 சிறு விவ
சாயிகள் 30,000 ஏக்கரிலே தேயிலை பயிர் செய்து
கொண்டிருக்கிறார்கள். அந்த 15 தொழில் கூட்டுறவுத்
தேயிலை சங்கங்களிலும் உற்பத்தியாகும் தேயிலைக்கு
நல்ல விலை கிடைக்கிறது. சில தினங்களுக்கு முன்னாலே
கோயம்புத்தூரிலே தேயிலையோடு மரத்தூளையும் கலந்து

[திரு. டி. சுதர்சனம்] [1991 செப்டம்பர் 23

விற்றதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தது. இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும். அந்த 15 தேயிலை தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிலே முதலமைச்சராக இருந்தபோது இலாபத்திலே நடைபெற்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இடையிலே நலிவுற்று 15-ல் 12 சங்கங்கள் இலாபத்திலும் 3 சங்கங்கள் நஷ்டத்திலும் இயங்கி வருகின்றன என்றும் நான் அறிகிறேன்.

பிற்பகல் 6-00

அந்த 3 சங்கங்களையும் லாபகரமான சங்கங்களாக மாற்றியமைக்கின்ற வகையிலே இந்த அரசு செயல்படவேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் சிவகாசியில் இருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலை, தமிழ்நாட்டிலே கூட்டுறவு அடிப்படையிலே பல தீப்பெட்டிச் சேவைச் சங்கங்கள் சாத்தூர் மற்றும் கோவில்பட்டி பகுதிகளிலே இயங்கி வருகின்றன. முன்பு தீப்பெட்டித் தொழில் சேவை சங்கங்களின் உறுப்பினர்கள் மட்டுமே, காமன் லேபிளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டார்கள். இடைக்காலத்தில், டிரேடிங் கம்பெனிகளும் காமன் லேபிளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட காரணத்தால், தீப்பெட்டித் தொழில் சேவை சங்கங்கள் பாதிக்கப்பட்டதாக அறிகிறேன். எனவே, இதுபோன்ற தீப்பெட்டிச் சங்கங்களினுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து, அவைகளை நல்லமுறையில் நடத்தி, தொழில்கள், நல்லமுறையில் நடக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்லமுறையிலே தொழில்கள், வளர்ந்து தமிழகம் சிறப்பான இடத்தைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

*HON'BLE THIRU MOHAMED ASIF: Honourable Speaker, Sir, this day Tamil Nadu is blessed with an unprecedented rule of piety and righteousness. This fact is established by the undoubtable manifestation of nature, when the river Cauvery swelled to save the fading crops of Tamil Nadu.



1991 செப்டம்பர் 23] [Thiru Mohamed Asif]

Honourable Chief Minister, Puratchi Thalaivi's reign is unparalleled in the history of Tamil Nadu. A God fearing Chief Minister with a firm faith in Almighty rules the State fearing to do what is not piety.

"We know the diversity of religions.

But the underlying principle in them is the same."

An understanding of this underlying principle enables our Honourable Chief Minister to foster a secular State respecting all religions with a tradition that is imbibed in TamilCulture.

Poet Bharathi taught that there is no caste to create a casteless society. The first blow to the caste ridden politics came from the Honourable Chief Minister when the selected candidates regardless of the predominent caste in the Constituencies. Hitherto nobody dared to do this Acid Test. She was successful in this and the confidence that people reposed in her gave her absolute majority and the caste ridden parties were blown to pieces paving the way for founding a caste less and creedless society.

Courage, munificence, wisdom and diligence are the four cardinal virtues of a ruler says, Thiruvalluvar. Puratchi Thalaivi's dauntless statement to retrieve Kacha The evu, to free Tamil Nadu from the clutches of Militants and to settle Cauvery dispute through the Supreme body of justice clearly show the courage in her. Crores and crores of rupees disbursed to the victims of various calamities and for other noble causes indicate her Munificience. Because of the selfless desires to serve the humanity and her holy nature, God will always keep her under His Benevolent protection and no force on earth can dream of harming her Our Puratchi Thalaivi's indomitable Leadership will definitely enable her to lead not only our State but also the whole nation towards peace and prosperity. In this August House, I thank Almighty for having blessed me with an opportunity to serve as a humble servant of such a great leader, Puratch Thalaivi. With the blessings of my Noble leader I now commence my business talk.

பிற்பகல் 6–05

The Government under the inspiring and dynamic leadership of the Honourable Chief Minister is deeply Committed to the goal of elevating Tamil Nadu to the forefront of Industrial development in the country. A comprehensive and well-thought-out policy framework has also been announced and it would be no exaggeration to say that the

[Thiru Mohamed Asif] [1991 செப்டம்பர் 23

revered Puratchi Thalaivi has heralded a new era in the history of economic development in the State by highlighting the need for industrialisation in the proper perspective.

It is the expectation of the Government that the small industries sector should be used to its full potential to achieve the State's objectives of dispersed development and employment generation. It is also in this context that a programme for strengthening the infrastructural facilities in the backward and most backward taluks has been announced, beside, relaxation of rules in respect of very small units. It is the Governments intention that the District Industries Centres should serve as effective instruments for implementing the policies and programmes of the Government at the field level. Steps have been taken to improve their working through fixing of time limits for various clearances, periodical reviews, etc.

It has been decided to create an Entrepreneur Guidance Cell in each District Industries Centre to assist and guide the entrepreneurs. The functional Managers will be given intensive training for this purpose and 24 Managers will be trained during this year.

The Honourable Chief Minister has made it clear that the official machinery will be geared to act as Friends-in-Need to the entrepreneurs. The General Managers and Functional Managers will be specially trained to improve their motivation and skill for this purpose. The officers will be trained in two batches by October—November 1991.

## INDUSTRIAL INFORMATION DISSEMINATION MEETS :

There has been an information explosion to which an average small industrialist has no easy access. To fill this communication gap, Industrial information dissemination meets will be conducted by associating various institutional and promotional agencies. The first of this series launched on 20th September 1991, for disseminating information about the services rendered by the Research Laboratories, was well received and it is proposed to conduct such meets throughout the State.

## SCARCE RAW MATERIALS :

The continued short supply of certain essential raw materials has been causing concern to Government; for instance, as against the assessed demand of 12,860 tonnes of Paraffin Wax and 6,000 tonnes of match wax per annum, the Government of India had made an allotment of 1,400 tonnes of Paraffin Wax and 1,110 Tonnes of match wax per quarter for



1991 செப்டம்பர் 23] [Thiru Mohamed Asif]

1991 and a 25 percent cut was also effected by the Government of India in the allocation of Paraffin Wax during the third quarter (July-September 1991). I have personally appealed to Honourable Minister of State for Petroleum and Natural Gas of Government of India to raise the allocation for the State as existing Units are working below capacity for want of these raw materials.

Similarly, as against an assessed annual, demand of 1.5 lakh metric tonnes of pigiron, allotment for 1991—92, was only 41,500 Metric Tonnes. As a result of persistent efforts taken by the Government, an additional allocation of 12,000 Metric Tonnes was made bringing the total allocation for the year to 53,500 Matric Tonnes. I have taken up this matter also with the concerned Honourable Minister of Government of India. And I have also requested Honurable Minister of State for Coal to allot the full requirement of 30,000 Metric Tonnes of hard coke to the State.

The Tamil Nadu Small Industries Development Corporation (SIDCO) has proposed to take up the distribution of Tin, Copper and Titanium-dioxide and a raw material depot is proposed to be opened in Sivaganga during this year.

As part of its efforts to create developed infrastructure, SIDCO has planned to construct a minimum of 200 sheds per year during the Eighth Plan period and to increase this number in the event of demand from small units. It has programmed to set up an Industrial estate at Vadamugam-Kangayampalayam near Perundurai in Periar District and Keelanagatchi in Ramanathapuram District.

மிற்பகல் 4-10

SIDCO has launched the formation of an Industrial Estate at Namakkal called "Namakkal Auto Nagar" and it has also decided of sponsor an Industrial Estate for Hosiery Garments at Madurai.

SIDCO has proposed to enlarge its marketing activities by covering new areas as a measure of support for small units. During the current year, SIDCO has proposed to step up its distribution of raw materials from 64,768 tonnes during 1990—91 to 81,124 tonnes during 1991—92.

Now coming to the Tamil Nadu Leather Development Corporation, i.e., TALCO, a remarkable feature of the functioning of the Corporation has been that that it has earned a profit of Rs. 73.26 lakhs upto the end of August 1991, as against the loss of Rs. 32.71 lakhs during the last

year. After a gap of three years, TALCO has made a beginning in the export trade by exporting finished leather to the value of Rs. 3 lakhs, to South Korea.

The Corporation has accorded a high priority to find solution to the problem of Tannery effluents. As a pioneer venture, it has promoted seven Common Effluent Treatment Plants to a cost of Rs. 15.76 crores. Trial run has commenced in the Vaniambadi project while others are in various stages of execution. The Government have entrusted to TALCO the work of supplying Rain Coats to sanitary workers of municipalities at a cost of Rs. 94.81 lakhs during the year.

The Vinnamangalam Tannery of TALCO was in partial lay off for the past six months which was listed on 5th September 1991. The performance of the unit has since improved and substantial orders have been obtained. In this regard I am pleased to inform this August House that TALCO has recently bagged an order from the Bhilai Steel Plant to the tune of Rs. 2.20 crores for the supply of Gloving Leather.

Next, I wish to refer to the Tamil Nadu Industrial Investment Corporation, i.e., TIIC. During this year till August 1991, TIIC has sanctioned Rs. 121.40 crores mostly for small industrial compared to last year's total sanction of Rs. 187.49 crores. It implements several schemes having socio-economic impact like Soft Loan, Mahila Udayam Nidhi Scheme, etc. Powers have been delegated and systems and procedures have been streamlined to render speedier assistance to entrepreneurs. A grievance cell has also been created to attend to complaints and problems or entrepreneurs. TIIC has taken steps to ensure that loan applications received in complete shape, are disposed of which within a given time limit of 60 days.

Next, I wish to say a few words about the Tamil Nadu Small Industries Corporation, i.e., TANSI. The turnover of the Corporation was of the order of 26.59 crores in 1990-91 though it had also to suffer a loss of Rs. 6.81 crores during 1990-91. It looks forward to an improved performance during this year because of the orders on hand and others in the pipeline and the anticipated savings consequent to the implementation of the "Turn Around Plan".

With regard to Sericulture, Sericulture is an ancient industry dating back to second century A.D. In the world, particularly China, has been playing a major role in the silk trade. Though India has been keeping abreast with the cultivation, its production of silk is not much and



ranks second. As you all know, Tamil Nadu is noted for its quality oriented Kanchipuram Silk Sarees which is sought after all over the country.

பிற்பகல் 6-15

As of today Tamil Nadu has got 67,000 silk handlooms engaged in the production of silk sarees, dhoties, etc. The annual requirement for the handloom weavers in this State is 1,200 M.Ts. of raw silk. In order to become self-sufficient in silk production, the Sericulture Department was organised as a separate one in the year 1979 and started functioning in formulating schemes and doing extension in the field.

Sericulture is a highly labour intensive Agro-based Rural Industry. This industry fits in snuggling with the ideas mentioned in the Election Manifesto of our leader, Honourable Chief Minister Puratchi Thalaivi. Tamil Nadu stans third in the country in Silk production next to Karnataka and Andhra Pradesh. As of today, the production of silk in our State is 900 M.Ts. To achieve self sufficiency in silk production the World Bank project is being implemented at a cost of 41.77 crores over a period of 7 years. This aims at increasing silk production to 1,500 M.Ts. at the end of the project period. This will also generate employment of 1.00 lakh persons.

In the implementation of this project, Tamil Nadu has been topping the list in the country. Mulberry cultivation has been increased from 10,000 acres in 1979 to 57,000 acres in the year 1990. During the World Bank project implementation period from April 1989 to August 1991, 11,500 acres have been brought under Mulberry Cultivation.

Employment provided in these 2½ years is 30,200 persons. It is proposed to provide additional employment opportunity for 26,250 persons during 1991-92. Under the Scheme assistance is being given to Reelers by way of interest subsidy and improved reeling devices. Common markets were also established in Hosur, Dharmapuri, Salem, Coimbatore, Dindigul, Vaniambadi, Theni and Thiruchirapalli, in oredr to provide remunerative prices to the commns of the Mulberry farmers.

Under marketing, the Tamil Nadu Co-operative Silk Producers Federation (TANSILK) has beeen rendering excellent services to the Reelers as well as weavers by way of purchasing and selling silk at reasonable prices.

I am happy to inform the honourable Members that it has not only wiped out accumulated loss of the earlier years (107.00 lakhs) but also made a net profit of 14.67 lakh. (Thumping of desks) The maiden dividend of Rs. 5.62 lakhs was paid towards the Government share on 12th August 1991 by presenting a draft to the Hon'ble Chief Minister, Puratchi Thalaivi. (Thumping of desks).

Since there has been steady rise in the Raw silk prices, in the recent Textile Ministers meeting held at New Delhi, our Government urged the Government of India to import silk from China to bring down silk prices and also make available quality Silk to the weavers.

Taking the directions of the Hon'ble Chief Minister, Puratchi Thalaivi, during the Part II discussions, the Department has already intimated action in securing Government land in high altitude areas like Kodaikanal, Coonoor, Valparai for promoting the production of Bi-Voltine Coonoor which will fetch higher income to the growers and facilitate the production of higher grade silk at International standards.

Now I would like to refer to Tamil Nadu Handicrafts Development Corporation Ltd. The Tamil Nadu Handicrafts Development Corporation promotes and develops age old handicrafts of Tamil Nadu. By operating Emporia and Exhibitions, this Corporations is rendering direct marketing assistance to the artisans thereby eliminating middlemen.

As compared to the 1990-91 sales acheivement of Rs. 4.5 Crores, the Tamil Nadu Handicrafts Development Corporation aims at to achieve Rs. 6.00 Crores sales turnover during 1991-92. Till August 1991, the Sales achievement is Rs. 2.2 crores.

The Tamil Nadu Handicrafts Development Corporation is also executing special orders worth of Rs. 1.69 crores during this year. It has bagged a prestigious orders, with the blessing and guidance of the Hon'ble Chief Minister, for the manufacture of a Golden Chariot of the Tirumala Tirupati Devasthanams, Thirumalai, at a cost of Rs. 1.00 crore and the construction of the second corridor work at Rameswaram at a cost of Rs. 14.00 lakhs.

I would like to inform the House that the Tamil Nadu Handicrafts Development Corporations has this year acquired 3.80 Grounds from Government of India, off Anna Salai, Madras, for establishing a Handicrafts Complex for housing Corporation Head Office, exhibition halls and emporia. This proposal, pending for fifteen years is being taken up successfully with the blessing of our noble Chief Minister Puratchi Thalaivi. (Cheers). This Corporation with a view to expand its activities proposes to open new show rooms this year at Secunderabad and at Anna International Airport, Madras. The Corporation is making sincere efforts to aggressively bag larger export orders to expand marketing opportunities for the artisans of Tamil Nadu and also avail the much needed foreign exchange.



பிற்பகல் 6-20

**Conclusion :** The working of all these developmental organisations will be continuously and effectively monitored and changes, that are necessary, will be made to ensure that more small scale units are set up in the State as announced by the Hon'ble Chief Minister. These units, when set up, will go a long way in enlarging industrial output and contributing to economic development. We shall endeavour to ensure that sector plays its rightful role and contributes its share for making the Hon'ble Chief Minister s goal of elevating Tamil Nadu to Number One position a reality in the near future.

Now I am coming to the Cut Motions given by Hon'ble Members. Mr. Speaker Sir shall I read all these things one by one. (Some voices—Need not....)

**HON'BLE SPEAKER:** Hon'ble Minister need not go one by one. He can sum up the replies.

**HON'BLE THIRU MOHAMED ASIF :** Mr. Speaker Sir, Reply to the cut motions of Thiru T. Kumaradoss, Thiru R. Singaram and Thiru G. Palanisamy—Industries Department—Government have already made well laid policies for the development of Industries by fixing suitable norms for the incentives and concessions and also fixing up the objective time limit for disposal of the applications Industrial Policy of the Government on Rural and Small Scale Industries for the year 1991-92 have been placed before the Legislature and the above Cut Motions may be withdrawn.

Hon'ble Members Thiru D. Sudarsanam has given one Cut Motion. Hon'ble Member Thiru R. Natesan has given four Cut Motions. Hon'ble Thiru G. Palanisamy has given one cut Motion. Hon'ble Thiru S. Rajaraman has given two Cut Motions. Hon'ble Thiru M. Sundaradoss has given one Cut Motion. Hon'ble Thiru H. M. Raju has given three cut Motions. Hon'ble Thiru S. Ramachandran Thiru R. Singaram and Thiru G. Palanisamy have also given Cut Motions.

[Thiru Mohamed Asif] [1991 செப்டம்பர் 23

I hope my detailed talk would have given full answer to their queries. (Thumping of desks) However, if anything is incomplete the Members are at liberty to ask me at any time and I will be pleased to furnish reply. Hence I request through the Hon'ble Speaker, Hon'ble Members to kindly withdraw the Cut Motions.

HON'BLE SPEAKER : Thiru Lakshmanan.

*THIRU V. K. LAKSHMANAN : Hon'ble Speaker Sir, It is more than three years since the Coir Board has sanctioned a sum of more than Rs. 31 lakhs for identifying Tamaraikulam in Pollachi Taluk as a model Coir village......

I understand that this money has not been drawn so far from the Coir Board. Will the Hon. Minister explain the reason for the delay ?

பிற்பகல் 6-25

HON. THIRU MOHAMED ASIF : Hon. Speaker, Sir, this matter has just now been brought to my notice. I will only be too pleased to look into it and furnish a reply shortly. (Thumping of desks).

THIRU M. SUNDARADASS : Hon. Speaker, Sir, so many industries were closed down by the earlier Government. Is there any proposal to restart those industries? Especially, there are industrial areas in Kuzhithurai and Marthandam and many industries there were closed down by the previous Government. Is there any proposal to restart them ?

HON'BLE SPEAKER : There cannot be a reply to a specific question now. The Hon. Member can ask, in general, whether there is any proposal revive those industries.

HON. THIRU MOHAMED ASIF : Hon Speaker, Sir, I would like to repeat the same answer which I gave the other day when I said that the aim of our Hon. Chief Misnister, Puratchi Thalaivi is to elevate our Tamil Nadu to the first position in the industrial map of India by providing all facilities to the industries. (Thumping of desks)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 35 ஆயிரம் சிறு தொழில்கள் நலிவு அடைந்திருக்கின்றன என்றும், 800 கூட்டுறவு தொழிற் சேவை சங்கங்களில் 400 இன்றைக்கு நலிவு அடைந்து இருக்கின்றன என்றும் சொல்கிறார்கள். அந்த நலிவு அடைந்த



1991 செப்டம்பர் 23] [திரு. டி. சுதர்சனம்]

கூட்டுறவுச் சங்கங்களையும் அந்தச் சிறு தொழிற்சாலைகளையும் இந்த அரசு என்ன நடவடிக்கையின் மூலமாக அவைகளை அபிவிருத்தி செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

Hon. Thiru MOHAMED ASIF :

** ** **

I do not have the details with me now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 27— கதர் கிராமத் தொழில்கள் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 7,29,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மானியக் கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

" ஊரகத் தொழில்கள் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 32,41,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் " என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி).

மானியக் கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப் பெறவில்லை.

" ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 32,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் " என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி).



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களுக்கு பதில் கூறுகிறபோது

* * * * * * *

என்று சொல்லியிருக்கிறார். அது இந்த நேரத்தில சரியாக இருக்காது. அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை (24—9—1991) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 6-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

106. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 24—1—1991-ஆம் நாளிட்ட 24-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்பு சட்டததின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன வைக்கப்பெற்றது].

107. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) அதிகரிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 12—4—1991-ஆம் நாளிட்ட 411-ஆம்எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) அங்கீகரிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29!1974 57(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1991 செப்டம்பர் 26

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

89. கோரிக்கை எண். 15— தமிழ்நாடு காவல் துறையின் கடந்தகாலச் சாதனைகள் மற்றும் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு, 1990-91. (தமிழ், ஆங்கிலம்).

90. கோரிக்கை எண். 16— தமிழ்நாடு நிவேனைப்புத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு, 1991-92. (தமிழ் ஆங்கிலம்.)

91. வருவாய்த்துறையின் செயல் முறைத் திட்டம், 1991-92, (தமிழ், ஆங்கிலம்.)

92. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1990-91 (தமிழ், ஆங்கிலம்.)



## இணைப்பு 1.

[411-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 2.

### மாநில ஆயத்தீர்வை குறித்த கொள்கை விளக்கம்.

**1. மதுவிலக்குக் கொள்கையின் காலவரிசைப்படியான வளர்ச்சி.**

தமிழ்நாடு, இந்தியாவில் மதுவிலக்கு கொள்கையை செயலாக்கிய முதல் மாநிலம் என்கிற தனிப் பெருமையைப் பெற்றுள்ளது. மதுவிலக்குக் கொள்கை, கடந்த பல ஆண்டுகளாகப் பல மாற்றங்களையும் திருத்தங்களையும் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. முதற்கண், மதுவிலக்கு, சேலம் மாவட்டத்தில் 1937 அக்டோபரில் செயலாக்கப்பட்டது; பின்னர் பிற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. முடிவில், 1948 அக்டோபர் 2 ஆம் நாள் முதல் இம் மாநிலம் முழுவதும் செயலாக்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு மது விலக்கு சட்டத்தின் செயல்பாடு முதன்முறையாக 1971 ஆகஸ்டில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மறுபடியும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 1973 ஆகஸ்டில் கள்ளுக்கடைகளையும் 1974 செப்டம்பரில் சாராயக்கடைகளையும் மூடிவிட்டு மீண்டும் மதுவிலக்குச் சட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட்டது எனினும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் பிறமாநிலங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு, உரிமம் பெற்ற கடைகளில், தொடர்ந்து பர்மிட் உள்ளவர்களுக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாட்டில் அப்போது மது உற்பத்திக்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

மறுபடியும் 1981 மே திங்களில், மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டு, கள், சாராய விற்பனை மீண்டும் அனுமதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் முதன் முதலாக மதுபானம் தயாரிப்பதற்கு 4 தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுத்துறையில் ஒரு நிறுவனத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இது தவிர தனியார் துறையில் ஒரு பீர் தொழிற்சாலைக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கள், சாராயம் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்களைக் குடிப்பதற்கு தனி அனுமதி (பர்மிட்) முறை கொண்டு வரப்பட்டது. கள்ளுக்கடைகள் ஏலமுறையில் அனுமதிக்கப்பட்டன.

முதலில் சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்கப்பட்டது. தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த இந்தச் சாராய உற்பத்தி நிறுவனங்களில், உற்பத்தி செய்யப்பட்ட சாராயத்தை, மொத்த வியாபாரம் செய்வதற்கு 15 தனி நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த மொத்த வியாபார

கள் சாராயத்தைச் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகித்து வந்தவர்கள். இந்தச் சில்லறை கடைகள் முதலில் ஏலம், மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டன. இந்த முறை 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு விற்பனைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டு இதுவரை 15 தனிப்பட்ட நபர்களிடமிருந்துவந்த மொத்தவியாபாரத்தை இக்கழகம் 1983 ஜூலை 25 ஆம் நாளிலிருந்து எடுத்துக்கொண்டது. இருந்தபோதிலும் சாராய உற்பத்தி தொடர்ந்து தனிப்பட்டவர்களிடமே இருந்து வந்தது மொத்த வியாபாரத்தை எடுத்துக்கொண்ட டாஸ்மாக் நிறுவனம், சில்லறை வியாபாரத்தையும் நடத்த வேண்டுமென்று அரசு 1985-ல் முடிவு செய்தது. இருப்பினும், சில்லறை வியாபாரத்தை டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தாமல், சில்லறை வியாபாரம் செய்கின்ற உரிமையைத் தனிப்பட்ட நபர்களுக்கு ஏஜென்சி முறையில் டாஸ்மாக் நிறுவனம் கொடுத்தது. இதில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்படவே, மறுபடியும் சில்லறை வியாபாரத்தை 1986 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் முதல் டெண்டர் மற்றும் ஏலமுறைக்கு அரசு கொண்டுவந்தது.

மறுபடியும், மதுவிலக்கு கொள்கை மறு ஆய்வு செய்யப்பட்டு மாற்றம் பெற்றது. 1987 ஜனவரி 1 ஆம் நாள் முதல் கள், சாராய உற்பத்தி விற்பனை, பயன்பாடு ஆகியவை தமிழ் நாட்டில் முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டது. எனினும், 2,037 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 'இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள்' தொடர்ந்து விற்பனையாகி வந்தன. 'இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள்' தொழிற்சாலைகள் ஐந்தும் பீர் தொழிற்சாலை ஒன்றும் தொடர்ந்து இயங்கிவர அனுமதி அளிக்கப்பட்டது. அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பைத் தடுத்து வருவாய் அதிகரிக்கும் நோக்கத்துடன், 1989 ஜனவரியில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு, மதுவிலக்குச் சட்டத்திலும், விதிகளிலும் பல திருத்தங்களைக் கொண்டு வந்தது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைச் சில்லறை விற்பனை செய்வதற்காக, உரிமமும் சிறப்பு உரிமமும் வழங்கும் பொருட்டு ஒப்பந்த, ஏல முறை கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் சிலவும் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிடம் ஒதுக்கப்பட்டன. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைக்கான ஆயத்தீர்வை வீதம் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபாயாக இருந்தது 55 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு மீண்டும் 60 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது. இத்தொகையை மதுதயாரிப்பாளர் செலுத்தவேண்டும் என்று வரையறுக்கப்பட்டது.



11. மது தயாரிப்பிற்கான மூலப்பொருள் வழங்கல்—ஆதாரங்கள்.

(i) வடிசாலைகள் :

இந்த மாநிலத்தில் எட்டு வடிசாலைகள் உள்ளன. அவற்றின் உரிமம் பெற்ற மொத்த உற்பத்தித் திறன் 948.80 இலட்சம் லிட்டர் சாராவியாகும். முழு உற்பத்தித் திறனையும் பயன் படுத்துவதற்கு, அவற்றிற்கு 4.39 இலட்சம் டன் கருப்பஞ் சாற்றுக் கசண்டு தேவைப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 முதல் நவம்பர் 1990 வரை) வடிசாலைகள் சுமார் .672 இலட்சம் 'பல்க் லிட்டர்' சாராவி உற்பத்தி செய்தன. இது அதன் உற்பத்தித் திறனில் 70.84 சதவீதமாகும். மோக னூரிலுள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகிய ஒவ்வொன்றிலும் 55,000 டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஒதுக்கீட்டுடன், கூட்டுறவுத் துறையில் இரண்டு வடிசாலைகள் அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது. வடிசாலைகளிலிருந்து சாராவி அனுப்பப்படும்போது, ஆயத் தீர்வையும், விற்பனைக் கட்டணமும் வசூலிக்கப்படுவது வழக்கம். தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படும் தொழிலக ஆல்கஹால் மீது ஆயத்தீர்வையும் விற்பனைக் கட்டணமும் விதிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று இந்திய உச்சநீதிமன்றம், நீதிப் பேராணை மனு எண் 182/1980இல் 1980 ஆண்டு அக் டோபர் திங்கள் 25 ஆம் நாளன்று தீர்ப்பளித்தது.

உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளுக்கிணங்க, தொழிற்சாலை களில் பயன்படுத்துதல், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள், தயாரித்தல், ஏற்றுமதி செய்தல் முதலிய பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிற பலவகைப்பட்ட சாராவிமீது ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம் ஆகியவற்றை விதிப்பதை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய நாளான 25–10–1989 லிருந்து திரும்பப் பெறுவதற்காக, 3–2–1990 அன்று அரசு உத்தரவுகளைப் பிறப்பித்தது. நீதிமன்றம் அனுமதித்தவாறு, நிருவாகப் பணிக் கட்டணமாக, ஒரு பல்க் லிட்டருக்கு 50 காசு மட்டுமே விதிக்கப்படுகிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் காணப்படும் வாசகமும் அதன் கருத்தும் பல்வேறு வகையாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

குடிக்கத்தக்க சாராவியை பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யும்போது சில மாநிலங்கள், அத்தகைய குடிக்கத்தக்க சாராவிக்கு வரி விதிக்கின்றன. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற பிற மாநிலங்களில் [illegible] போன்றே, இந்த அரசும், இம்மாநிலத்திற்கு வெளியே

ஏற்றுமதி செய்யும்போது, குடிக்கத்தக்கத் தெளிந்த சாராவிக்கு ஒரு 'பல்க்' லிட்டருக்கு 5 ரூபாய் ஏற்றுமதி அனுமதிக் கட்டணம் வசூலிக்கவும் இப்போது முடிவு செய்துள்ளது.

(ii) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள்-பீர் தயாரிப்பு ஆலைகள் :

இம்மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் தயாரிப்பு ஆலைகள் ஐந்து உள்ளன. இவற்றில், நான்கு தயாரிப்பு ஆலைகள் தனியார் துறையிலும், ஒன்று கூட்டுத்துறையிலும் உள்ளன. கூட்டுத்துறையிலுள்ள தயாரிப்பு ஆலையின் நிருவாகம், இப்போது அரசின் நிருவாகப் பொறுப்பில் உள்ளது. இந்த ஐந்து தயாரிப்புப் பிரிவுகளின் ஆண்டு மொத்த உற்பத்தித் திறன் 468 இலட்சம் 'பல்க்' லிட்டராகும். இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளின் மொத்த உற்பத்தி 1990 ஏப்ரல் திங்களுக்கும் 1991 மார்ச்சுத் திங்களுக்கும் இடைப்பட்ட கால அளவில், மொத்தம் 32.16 இலட்சம் கேஸ்களாகும். இவை, 289.47 இலட்சம் 'பல்க்' லிட்டருக்கு நிகரானவையாகும்.

(iii) பீர் வடிசாலைகள் :

தற்போது தனியார் துறையில் ஒன்றும், பொதுத் துறையில் ஒன்றுமாக இரண்டு பீர் வடிசாலைகள் உள்ளன. தமிழ்நாடு சாராவி தயாரிப்புக் கழகம் என்றழைக்கப்படுகிற அரசுத்துறை நிறுவனம், 1989 டிசம்பரில் வணிக உற்பத்தியைத் தொடங்கியது. 1990-91 ஆம் ஆண்டில், மொத்த பீர் தயாரிப்பு 315.20 இலட்சம் கேஸ்களாகும். இவை 2,458.54 இலட்சம் 'பல்க்' லிட்டருக்கு நிகரானவையாகும்.

(iv) தமிழ்நாடு சாராவிக் கழகம் :

தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ) தனி அரசுத் துறை நிறுவனமாக அமைக்கப்பட்டது. இக்கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ், 10-7-1990 அன்று முறையாக இணைக்கப்பட்டது. முந்தைய அரசின் கொள்கைக்கிணங்க, தமிழ்நாடு சாராவிக் கழகம் பீர் வடிசாலை ஒன்றை அமைத்து, 1989 டிசம்பரில் புட்டிகளில் அடைக்கும் பணியைத் தொடங்கியது. இவை உற்பத்தித் திறனை முழுமையுமாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. பின்னர், இம்மாநிலத்தில் நாட்டு மதுவை உற்பத்தி செய்து, தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்தின் மூலமாக விற்பனை



செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகம் 1990-91-ல் ரூ. 24 கோடி செலவில் நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகள் 11-ஐக் கொண்டிருந்தது.

இக்கழகம், பீர் வடிசாலையின் அதிக உற்பத்தித் திறன் அளவான 100 சதவீதத் திறன் அளவைப் பயன்படுத்தியுள்ளது ; இதன் உற்பத்திப் பொருளுக்கு அங்காடியில் வரவேற்புள்ளது. வழக்கமான விற்பனைத் தேவைகளை நிறைவு செய்யவும், அதிகமாகப் பயன்படுத்தப்படும் சிறப்பான காலங்களின் விற்பனைத் தேவையை நிறைவு செய்யவும், இக்கழகம் போதிய அளவுக்கு நாட்டு மதுவை உற்பத்தி செய்தது.

இம்மாநிலத்தில், 16-7-1991-லிருந்து நாட்டு மதுக் கடைகள் மூடப்பட்டதால், நாட்டு மது உற்பத்தியும் நிறுத்தப்பட்டது அரசு தமிழ்நாடு சாராவி (டாஸ்கோ) கழகத்தைக் கலைத்து விட்டு, அதன் பீர் வடிசாலையைத தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்துடன் (டாஸ்மாக்) இணைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது. 'டாஸ்கோ' நிறுவனம் கலைக்கப்பட்டு வருகிறது. இக்கழகத்தைக் கலைக்கும் பணி நடைபெற்று வருகையில், இதனைக் கலைத்து விடுவதைவிட தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்துடன் இணைப்பது சிறந்ததாக இருக்குமென மற்றொரு செயற்குறிப்பு வந்துள்ளது. இச்செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

III. மதுவகை வழங்கல் :—

(i) மொத்த வணிகம் :

மதுவகைகளைப் பல்வேறு சில்லறை உரிமத்தாரர்களுக்கு வழங்கும் பணியைத் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் மேற்கொள்கிறது ; இக்கழகத்திடம், மொத்த வணிகக் கிடங்கு உரிமமும், 30 கிளை வணிகக் கிடங்கு உரிமங்களும் உள்ளன. தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் வழங்கும் மதுவகைகள் தவிர, வேறெந்த வகை மதுவையும் சில்லறைக் கடைகளில் விற்பனை செய்ய இயலாது. வேறு வகையில் கூறின், 'டாஸ்மாக்' நிறுவனம், இம்மாநிலத்தின் ஏகபோக மொத்த விற்பனை நிறுவனமாக உள்ளது.

(ii) தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம் :

இது, தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு நிறுவனமாகும். இது, 1988 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து இயங்கி வருகிறது ; இந்தியாவில் தயாரிக்கப்படும்

வெளிநாட்டுச் சாராவியையும், பீரையும் மொத்த விற்பனை செய்கின்ற மாநில அரசின் முகவரமைப்பு இது ஒன்றே ஆகும். சில்லறை உரிமதாரர்களுக்கு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டுச் சாராவியையும், பீரையும் வழங்குவதற்காக இம் மாநிலத்தில் மொத்தம் 5 வட்டார அலுவலகங்களும் 30 மொத்த விற்பனை நிலையங்களும் உள்ளன.

தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், 5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. மாநில அரசு, இதுவரை, ஒவ்வொன்றும் 1,000 ரூபாய் மதிப்புள்ள, 34,000 மூலதனப் பங்குகளை வைத்துள்ளதுடன், 3.4 கோடி ரூபாய் செலுத்தியுள்ளது. இப்பங்குத் தொகை தவிர, தேவைப்படும் போதெல்லாம், அரசு வழிவகை முன் பணமும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைப் பொருட்கள் இம்மாநிலத்திலுள்ள தயாரிப்பாளர்களிடமிருந்தும், ஏனைய மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட இவை, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனை நிலையங்கள் 30 மூலமாக சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1990–91 ஆம் ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் 36 இலட்சம் பெட்டிகளும், பீர் 48 இலட்சம் பெட்டிகளும் விற்பனை செய்யப்பட்டன. மதுவிலக்கு—ஆயத்தீர்வை ஆணையாளர் நிர்ணயித்த விலை வீதங்களில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள்: பீர் கிடைப்பதற்கு உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகம், சில்லறை விற்பனையையும் மேற்கொண்டு, மாநிலத்தில் முக்கியமான மாநகர்களிலும் நகரங்களிலும் 57 சில்லறை விற்பனைக் கடைகளை நடத்துகிறது. இக்கழகம் 15–7–1991 வரை நாட்டு மது விற்பனைக்கு மொத்த விற்பனையாளராகவும் செயல்பட்டு வந்தது.

## (iii) சில்லறை விற்பனைக் கடைகள் :

மாநில அரசுக் கருவூலத்திற்கு அதிக வருவாய் திரட்டும் நோக்கத்துடனும் வேண்டப்பட்டவர்களுக்கு சில்லறை விற்பனை உரிமங்கள் அளிக்கப்படுகின்றன என்ற புகார்களைத் தவிர்க்கும் பொருட்டும், அனைவருக்கும் வாய்ப்பளிப்பதற்கும், மதுக்கடைகளை நடத்துவதற்காக F.L.1 உரிமங்கள் வழங்கப்படும் முறை 31–5–1989-லிருந்து கைவிடப்பட்டது. அதற்கு பதிலாக, 1–6–1989-இலிருந்து பொது ஏலம் ஒப்பந்தம் என்ற புதிய முறையும், அரசு நிறுவனங்கள், கூட்டுறவுகளுக்கு நியமன அடிப்படை என்ற முறையும்





கொண்டு வரப்பட்டது. இப்புதிய முறை கொண்டு வரப்படும் முன்னர், இம்மாநிலத்தில் F.L. 1 உரிமம் பெற்ற மதுக் கடைகள் மொத்தம் 2,037 ஆகும். ஒவ்வோர் ஆண்டும் முன்னாள் உரிமத்தாரர்களிடமிருந்து மொத்தம் ரூ. 4.20 கோடி வசூலிக்கப்பட்டன. புதிய முறையின் கீழ் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தம் 3,465 கடைகளில், 3,369 உரிமங்கள் வழங்கப்பட்டன. அதாவது 2,428 உரிமங்கள் பொது மக்களுக்கும், 150 உரிமங்கள் தமிழ்நாடு மாநில விற்பனைக் கழகத்திற்கும், 334 உரிமங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும், 457 உரிமங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டன. 1989–90 ஆம் ஆண்டில் விண்ணப்பக் கட்டணம், உரிமக் கட்டணம், ஆகியவற்றின் மூலமாக ரூ. 35.58 கோடி கிடைத்தது. 1990–91 ஆம் ஆண்டில் விதிகளின்படி 1,840 கடைகள் தங்கள் உரிமங்களைப் புதுப்பித்தன. 1990 மே, ஜூன் திங்களில் நடந்த ஏலத்தில் 357 கடைகளும், 1,990 டிசம்பரில் நடந்த ஏலத்தில் 175 கடைகளும் விற்கப்பட்டன. விற்பனை செய்யப்பட்ட மொத்தக் கடைகளின் எண்ணிக்கை 2,372 ஆகும். கிடைத்த உரிமைக் கட்டணம் ரூ. 21.57 கோடி ஆகும். 1991-92 ஆம் ஆண்டில், தனியார், பொது மற்றும் கூட்டுறவுத் துறைகளில் 2,099 கடைகளின் உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டில் விண்ணப்பக் கட்டணம், உரிமக் கட்டணம், உரிமைக் கட்டணம் ஆகியவற்றின் மூலமாக ரூ. 22.34 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## (iv) விலை நிர்ணயித்தல் :

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றுக்கான விலையை, உள் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறையின் 14–2–1989 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி மதுவிலக்கு-ஆயத்துறை ஆணையாளர் முன்னர் நிர்ணயித்து வந்தார். இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மது வகைகள், பீர் ஆகியவற்றுக்கான விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் தற்போது அரசிடம் உள்ளது. இதனால் உற்பத்தியும், சில்லறை விற்பனையும் கட்டுப்படுத்தப்படுவதுடன், சில்லறை விற்பனையாளர்க்கிடையே ஏற்படும் வியாபாரப் போட்டியும் நீக்கப்பட்டுள்ளது.

## (v) ஆயத்தீர்வை :

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட சாராவியின் மீதான ஆயத்தீர்வையும், விற்பனைக் கட்டணமும் செலுத்துவதிலிருந்து இம்மாதுவகைகளைத் தயாரிக்கும்

பிரிவுகளுக்கு விலக்களித்து 1982–83 ஆம் ஆண்டில் அளிக்கப்
பட்ட சலுகையை, 1989 ஜனவரியில் அரசு திரும்பப் பெற்
றது. மேற்சொன்ன சலுகையை திரும்பப் பெற்றதால்,
அரசுக்குக் கூடுதலாக ஆண்டுதோறும் ரூ. 23 கோடி கிடைக்கு
மென்று மதிப்பிடப்பட்டது. எனினும், முன்னர் குறிப்பிடப்
பட்ட உச்ச நீதிமன்ற ஆணையைத் தொடர்ந்து 25–10–1989
முதல் தொழிற்சாலை ஆல்கஹாலின் அல்லது சுத்திகரிக்கப்
பட்ட சாராவியின் மீதான வரி விதிப்பு திரும்பப் பெறப்
பட்டது. தொழிற்சாலை ஆல்கஹால் மீது ஆயத்தீர்வை
அல்லது விற்பனைக் கட்டணம் விதிப்பதற்கு மாநில அரசுக்கு
எவ்வித அதிகாரமும் கிடையாது என்று உச்ச நீதிமன்றம்
தீர்ப்பளித்த போதிலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளி
நாட்டு மதுவகைகள் மீது தீர்வை விதிப்பதற்கு மாநில
அரசுக்குள்ள அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் முழுவதும்
அங்கீகரித்துள்ளது. எனவே, உச்சநீதிமன்றம் அளித்த
தீர்ப்பைத் தொடர்ந்து ஆல்கஹால் மீது விதிக்கப்பட்ட
வரியைத் திரும்பப் பெற்றதால் ஏற்பட்ட வருவாய் இழப்பை
ஈடு செய்வதற்காக, மாநிலத்திற்குள் தயாரிக்கப்பட்டு, பயன்
படுத்தப்படும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு
மதுவகைகள் குறித்து செலுத்தத்தக்க ஆயத்தீர்வை 25–10–1989
முதல் புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 55-லிருந்து ரூ. 60
ஆகவும், தயாரிப்பாளர் விற்பனைக் கட்டணம் 'பல்க்' லிட்டர்
ஒன்றுக்கு ரூ. 2 இலிருந்து ரூ. 5 ஆகவும் உயர்த்தப்பட்டது.

எஃப்.எல். 2, எஃப்.எல். 3, எஃப்.எல். 4A ஆகியவை
உட்பட சில்லறை விற்பனை உரிமதாரர்களின் தேவையை
நிறைவு செய்யும் பொருட்டு, இம்மாநிலத்தில் உற்பத்தி
செய்யப்படாத சில மதுவகைகளை அரசு தொடர்ந்து
இறக்குமதி செய்து வருகிறது. இறக்குமதி செய்யப்பட்ட
மதுவகைகளுக்கு, அரசு, பல்க் லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய்
வீதம் இறக்குமதி உரிமக் கட்டணமாக தீர்வை விதிக்கின்றது.
1990 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் ஆல்கஹால் கையிருப்பு
குறைவாக இருந்ததைக் கருத்தில் கொண்டு, வெளிமாநிலங்
களுக்கு அனுப்பப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளி
நாட்டு மதுவகைகளுக்கு ஏற்றுமதி உரிமக் கட்டணம் புரூஃப்
லிட்டர் ஒன்றுக்கு 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

## vi. ஆயத்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாய் :

இதற்கு முந்தைய ஆண்டின் இதேகால அளவில் ஆயத்
தீர்வை மூலம் கிடைத்த வருவாய் ரூ. 301.71 கோடியாக
இருந்தது ; 1991 ஆம் ஆண்டு மார்ச் திங்களுடன் முடி
வடைந்த ஆண்டில் ஆயத்தீர்வை மூலம் கிடைத்த வருவாய்
ரூ. 434.86 கோடியாகும்.





கருப்பஞ்சாற்றுக் கசண்டு விற்பனையைப் பொறுத்த
மட்டில் இந்த அரசு, இதில் எழுந்த பிரச்சினைகளைத்
தீவிரமாகக் கவனித்து விரைந்து நடவடிக்கை எடுத்தது.
கருப்பஞ்சாற்றுக் கசண்டு என்பது சர்க்கரை உற்பத்தியில்
ஓர் உடன்விளை பொருளாகும். இதுவே சுத்திகரிக்கப்பட்ட
சாராவி தயாரிப்பதற்கான அடிப்படை மூலப்பொருளாகும்.
இந்த சுத்திகரிக்கப்பட்ட சாராவி மதுபானங்கள், சில
மருந்துகள், வேதியல் பொருட்களைத் தயாரிப்பதற்கான
அடிப்படை மூலப்பொருளாகும். இம்மாநிலத்தில் மொத்தம்
31 சர்க்கரை ஆலைகள் உள்ளன. 1990–91 ஆம் ஆண்டில்
கருப்பஞ்சாற்றுக் கசண்டின் ஆரம்ப இருப்பு (1–10–1990
ஆம் நாளன்றிருந்தவாறு) 0.99 இலட்சம் மெட்ரிக் டன்
னாகும். எதிர்பார்க்கப்பட்ட கருப்பஞ்சாற்றுக் கசண்டு
உற்பத்தி 5.74 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். எனவே,
மொத்தம் கிடைக்கக்கூடிய கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு
6.73 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும். இம்மாநிலத்தி
லுள்ள இதனைப் பயன்படுத்தும் வடிசாலைகள் (4.39
இலட்சம் மெட்ரிக் டன்) ஏனையோர் ஆகியோரின் தேவைக்கு
இது முற்றிலும் போதுமானதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்
படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு தேவைக்கு அதிகமாக
இருப்பில் சேர்ந்து விடுவதைக் குறைக்க, வெளிநாடுகளுக்கு
1 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை
ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்குமாறு இந்திய அரசு
கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனை ஏற்று இந்திய அரசும்
ஆணை பிறப்பித்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் (1891
அக்டோபர் முதல் 1992 செப்டம்பர் வரை) கருப்பஞ்
சாற்றுக் கசண்டு உற்பத்தி நடப்பாண்டு உற்பத்தியை விட
10 சதவீதம் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படு
கின்றது. சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு
கையிருப்பு அதிகரிக்கும் பிரச்சினையை மேலும் சமாளிப்
பதற்காக, பின்வருமாறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன :

(1) கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள், நல்
லெண்ணெய் உற்பத்தி ஆலைகள், இதைப்போன்ற தொழிற்
சாலைகள், ஏனையோர் ஆகியோருக்கு எந்தவிதக் கட்டுபாடு
மின்றி கருப்பஞ்சாற்றுக் கசண்டை புதியதாக ஒதுக்கீடு
செய்ய அல்லது கூடுதலாக ஒதுக்கீடு செய்ய, மதுவிலக்கு–
ஆயத் துறை ஆணையருக்கு அனுமதி வழங்குதல். இவ்வகை
பயனீட்டாளர்களுக்குப் புதிதாக ஒதுக்கீடு செய்ய விதிக்கப்
பட்ட தடை ஆணையை நீக்குதல் ;

(2) 1991–92 ஆம் கருப்பஞ்சாற்று கசண்டு ஆண்டிலும்
வெளிநாடுகளுக்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி
செய்வதற்கான அனுமதி வேண்டி மத்திய அரசை அணுகு
தல் ;

(3) தற்போதுள்ள வடிசாலைகளுக்கு அவற்றின் தகுதி யின் அடிப்படையில், வடிசாலைத்திறனை விரிவுபடுத்துவதற் காகக் கூடுதல் ஒதுக்கீடு செய்யுமாறு வரும் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்தல்;

(4) தற்போதுள்ள இரசாயன தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், அவை ஒவ்வொன்றின் தகுதியின் அடிப்படை யில் விரிவாக்க நடவடிக்கைகளுக்காகக்கூடுதல் ஒதுக்கீடு செய்தல்;

(5) கூட்டுறவுத்துறை, பொதுத்துறை ஆகியவற்றில் வடி சாலைகளை அமைக்க அனுமதி அளிப்பதுடன் தனியார் துறை யிலும் அவற்றின் சொந்தப் பயனுக்கு வேண்டியதை உற்பத்தி செய்து கொள்வதற்கு வடிசாலைகளை அமைக்க அனுமதி வழங்குதல்; இவ்வாறு வடிசாலைகளை அமைப்பதில் சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை அளித்தல், ஒதுக்கீடுகளை நிர்ணயம் செய்யும்போது கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகளுக்கும் பொதுத் துறையிலுள்ள வடிசாலைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். இதற்கு முன்பு இருந்ததைப்போல், சம்பந்தப் பட்ட ஆணைகளின் கீழ் கருப்பஞ்சாற்றுக் கசண்டு/ஆல்கஹால் ஒதுக்கீடு குறித்து முடிவு செய்யும் அதிகாரம் அரசிடம் இருக்கும்.

vii. நாட்டு மது விற்பனை, பயன்பாடு குறித்த தற்போதைய அரசின் மதுவிலக்கு கொள்கை:

தமிழ்நாடு சாராவிக் கழகம் உற்பத்தி செய்த நாட்டு மது, இந்த அரசு ஆட்சிக்கு வந்த சமயத்தில், 3,626 சில்லறை விற் பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. மாநிலம் முழுவதிலும் முழு மதுவிலக்கை அமுல்படுத்துவது தற்போதைய அரசின் கொள்கையாதலால், முதல் நடவடிக்கை யாக, பதவியேற்றவுடனேயே, 1991 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் நாட்டு மது விற்பனையை அறவே நீக்கி இந்த அரசு ஆணை பிறப்பித்தது. இதற்கிணங்க, 1991 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 16 ஆம் நாளிலிருந்து நாட்டு மதுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. பொதுவாகக் குடிப் பழக்கத்தின் தீமைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றவதற்கும், குறிப்பாக ஏழைகளின் பொருளாதார நிலையை மேம்படுத்து வதற்கும் உரிய சமூகப் பொருளாதார நல நடவடிக்கையாக அரசு மேற்குறிப்பிட்ட கொள்கை முடிவை எடுத்தது. இதனால் மாநில அரசுக்கு இந்த ஆண்டு ஒரு பெரும் தொகை அதாவது 322 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. ஒரு முழு ஆண்டில் 391 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

viii. ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுதல்:

ஆயத்தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும், உரிமம் பெற்ற கடைகளில் போலிச் சாராயம், கள்ளச் சாராயம் ஆகிய



வற்றை விற்பனை செய்வதைத் தடுக்கவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள்/பீர் தயாரிப்பு, ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வாங்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளி நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் ஆகியவை அடங்கிய புட்டிகளின் மேல் ஒட்டுவதற்குரிய ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிட்டு வழங்க மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆயத்தீர்வை சீட்டுக்களை அச்சிடுகின்ற பணியை முன்பு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமே செய்து வந்தது. 1989 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல் ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுகின்ற பணி மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளருக்கு மாற்றப்பட்டு, ஆயத்தீர்வை சீட்டுகளை அச்சிடுகின்ற இரண்டு அச்சு இயந்திரங்கள் எழிலகத் தின் வளாகத்திலேயே நிறுவப்பட்டுள்ளன. இந்த அச்சு இயந்திரங்கள், தேவைப்படும் ஆயத்தீர்வைச் சீட்டுகளை அச்சிடு வதற்கு போதுமானதாக உள்ளன.

IX. மதுவிலக்குச் செயலாக்கம்:

(i) மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு:

மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு, 1–4–1990-க்கு முன்னர், அதன் செயலாக்கப் பிரிவுகளுடன் காவல் துறைத் தலைவர் (Inspector General of Police) (செயலாக்கம்) ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வந்தது. ஆயினும், மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு தொடர்பான பணி, 1990 ஏப்ரலி லிருந்து காவல் துறையிடமே ஒப்படைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 16–7–1991-லிருந்து நாட்டு மது விற்பனையை நிறுத்தி விட்ட காரணத்தினால், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல், ஆகியவற்றை ஒழித்துக் கட்டும் வகையில், அரசு மதுவிலக்கு செயலாக்கப் பிரிவை மாற்றியமைக்கத் தீர்மானித்துள்ளது. மதுவிலக்கு செயலாக்கப் பிரிவை அமைப்பது குறித்து விரிவான செயற்குறிப்பை காவல்துறைத் தலைமை இயக்குநர் (Director General of Police) அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

(ii) கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்க எடுக்கப் பட்ட நடவடிக்கைகள்:

(அ) திடீர்ச் சோதனைகளும் கைப்பற்றுதல்களும்:

கள்ளச்சாராயம்/மதுபானம் காய்ச்சுதல், எடுத்துச் செல்லு தல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதை தமிழ்நாடு காவல்துறை ஓர் அறைகூவலாகக்

கொண்டுள்ளது. இத்தகைய சமூகத் தீமையை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதற்கான உறுதியான முடிவுடன், ஏற்கனவே சாராயம் காய்ச்சி வந்த கிராமங்கள், மலைகள், ஆற்றுப் படுகைகள் ஆகிய எல்லா இடங்களிலும் அடிக்கடி திடீர்ச் சோதனைகள் நடத்தப்படுகிறது. எல்லையோர மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் சாராயம் கொண்டு வருவதைத் தடுக்கும் வகையில், கெடுபிடியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. மதுவிலக்கு ஆயத்துறை அதிகாரிகளின் தீவிரமான விரட்டுதலினாலும், கூடுதலான முயற்சிகளினாலும், இது தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுடன் எல்லையோர மாநிலங்களை இணைக்கும் சாலைகளில், வரும் வண்டிகளில் முறையான, சோதனை நடத்தியதால், பெருமளவில் கள்ளச் சாராயம் கைப்பற்றப்பட்டது. எடுத்துக் காட்டாக, தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வண்டிச் சோதனையில் (வேப்பனப் பள்ளி காவல் நிலைய எல்லையில்) கர்நாடக மாநிலத்திலிருந்து வந்த தொட்டிகளுடன் (Ta ker) கூடிய லாரி ஒன்றை இடைமறித்து சோதனை செய்ததில், 125 சாராய மூட்டைகள் கைப்பற்றப்பட்டன. ஒவ்வொரு மூட்டையிலும் 100 மி.லி. கொண்ட பாக்கெட்டுகள் 400 இருந்தன. இந்த சாராயம் கர்நாடக மாநிலத்தில் தயாரிக்கப்பட்டவை. ஆனால், போலியாக 'டாஸ்கோ' வின் சின்னம் போடப்பட்டிருந்தது. இதன் தொடர் நடவடிக்கையாகத் துப்புத் துலக்கியதில், 3 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, சிறிய சாராயப் பைகளை (Sach. is) போலியாகத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட எந்திரம் கைப்பற்றப்பட்டது. இதேபோன்ற வண்டிகளின் சோதனை ஒன்றை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். (கிழக்கு) மாவட்டத்தில் நடத்தியதில், இரண்டு லாரிகளில், 1,17,900 போலி சாராயப் பைகள் கைப்பற்றப்பட்டன; அந்தப் பைகளில், போலியான 'டாஸ்கோ' சின்னம் இருந்தது.

(ஆ) <u>1990 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட கள்ளச் சரக்குகள் பற்றிய விவரங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆந்திர மாநிலச் சாராயம் கள்ளச்சாராயம் மற்றும் சாராயம். | உட்பட. பாக்கெட் | 38,43,254 லிட்டர். |
| (ii) | கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட சாராய ஊறல். | | 1,47,89,451 லிட்டர். |
| (iii) | இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் (பாட்டில்களில்). | முழுபாட்டில் | 1,343 |
| | | அரை பாட்டில் | 6,255 |
| | | கால் பாட்டில் | 38,640 |



| | | |
|---|---|---|
| (v) | கைப்பற்றப்பட்ட வண்டிகள். | 759 மோட்டார் வண்டிகள் மற்றும் [illegible] சைக்கிள்கள். |

நடப்பாண்டில், கைப்பற்றப்பட்ட கள்ளச்சரக்குகளின் மதிப்பு ரூ. 22,60,56,540 ஆகும்.

(இ) <u>கள்ளச்சாராய வணிகர்களை சிறைவைத்தல் :</u>

1990ஆம் ஆண்டில், தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கள்ளச் சாராய வணிகர்கள், போதைப் பொருள் கடத்துவோர், வனப் பொருட்களைக் கொள்ளையிடுவோர், குண்டர்கள், விலைமாதர்களை வைத்துத் தொழில் புரிவோர், சட்ட விரோதமாக பிறருடைய நிலத்தில் குடிசை போடுவோர் ஆகியோரின் பயங்கர நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், 96 கள்ளச்சாராய வணிகர்கள் கைது செய்யப்பட்டனர். 1991ஆம் ஆண்டில் ஜூலை வரையில், இதே போன்று, இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

(ஈ) <u>கள்ளத்தனமாக சாராயத்தை எடுத்துச்செல்வதைத் தடை செய்தல் :</u>

அதைப் போன்றே மாநிலங்களுக்கிடையேயும் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதாகத் தகவல் வந்தது. இவ்வாறு கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்தகைய நடவடிக்கை ஒன்றில், விருதுநகர் நகரத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டதுடன் போலியான பெயர்ச்சீட்டு ஒட்டப்பட்ட டாப் XXX வகை ரம் புட்டிகள் 144, வின் விஸ்கி புட்டிகள் 528 பறிமுதல் செய்யப்பட்டன. அருப்புக்கோட்டையிலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகை, அடங்கிய போலியான பெயர் சீட்டுக்கள் ஒட்டப்பட்ட 272 புட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டு, குற்றஞ் சாட்டப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். இத்தகைய கடுமையான நடவடிக்கையினால், உரிமம் பெற்ற மதுக்கடைகள் மூலம் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவை பாண்டிச்சேரியிலிருந்து எடுத்து வந்து தமிழ்நாட்டில் விற்பனை செய்த அமைப்புகள் அழிக்கப்பட்டன. 1950ஆம் ஆண்டில், 759 வண்டிகள் (சீருந்துகள், வேன்கள் முதலானவை) கள்ளச்சாராயத்தை எடுத்து வரும்போது பறிமுதல் செய்யப்பட்டன. புகை வண்டிகள், படகுகள் முதலானவற்றின் மூலம் கள்ளச் சாராயம் கடத்துவதைக் கட்டுப்படுத்த சிறப்புக் கவனமும் செலுத்தப்பட்டது.

**(உ) எரி சாராயத்தை வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுத்தல் :**

தொழில்முறை ஆல்கஹால், சாராயம் தயாரிக்கப்பயன் படுத்தப்படுவது குறித்து காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, இது கூர்ந்து கவனிக்கப் பட்டது. இந்த ஆண்டில் பல்வேறு சமயங்களில் மொத்தம் 23,462 லிட்டர் எரி சாராயம் டாங்கர்களுடன் பறிமுதல் செய்யப் பட்டன. எரி சாராயம் தவறாகப் பயன்படுத்தப்படுவதையும், அவற்றை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதையும் தடுக்க, மூத்த அதிகாரிகள், எரி சாராயத்தை வைத்திருக்க உரிமம் பெற்ற வடிசாலைகளையும், இரசாயனத் தொழிற்சாலை களையும் அடிக்கடி சோதனையிட்டனர். கள்ளச் சாராயம் தயாரிக்க, எரி சாராயம் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, தொழில்நுட்ப ரீதியில் சாத்தியக்கூறு உள்ள இடங்களிலெல்லாம், தொழிற்சாலைகளுக்கு எரி சாராயத்திற்குப் பதிலாக இயல்பு மாற்றப்பட்ட சாராவியை வழங்க அரசு ஆணைகள் பிறப்பித் துள்ளது. தொழிற்சாலைகளின் முறையீடுகளைக் கவனிக்கத் தொழில்நுட்பக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

**(ஊ) போதை மருந்துகளுக்கு அடிமையாவதைத் தடுத்தல் :**

மக்களிடையே போதை மருந்துக்கு அடிமையாகும் பழக்கம் பரவுவதைத் தடுக்கவும், போதை மருந்துகளைப் பயன்படுத்து வதை நிறுத்தவும் மத்திய அரசு, 1985ஆம் ஆண்டு போதை மருந்துகள், மருந்துப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது. 14-11-1985 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்த இச்சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் அபராதம் விதிக்கவும், கடுங்காவல் தண்டனை விதிக்கவும் வகை செய்கின்றன.

1985ஆம் ஆண்டு போதைப் பொருட்கள், மருந்துப் பொருட் கள் சட்டத்தின்கீழ் கொடைக்கானல் மலைப்பகுதிகளிலும், கேரளாவில் எல்லையோரமாக அமைந்துள்ள பகுதிகளிலும் உள்ள வனங்களில் கஞ்சாச்செடி பயிரிடுவதைத் தடுக்க அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில், காவல் துறையினரின்/சுங்க அதிகாரிகளின் உதவி யுடன் அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு, அங்கு பயிரிடப் படுகின்ற கஞ்சாப் பயிர் அழிக்கப்படுகிறது. இது தொடர்பாக, 1988ஆம் ஆண்டு போதை மருந்துகள், மருந்துப் பொருட்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் சட்டம் (மத்தியச் சட்டம் 46/1988) என்னும் மற்றொரு சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்கீழ் போதை மருந்துகளை கள்ளத்தனமாக எடுத்துச் செல்வோரைத் தடுப்பு காவலில் வைக்க, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அரசு செயலருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.



**(எ) போதை மருந்துப் பொருட்களைத் தடை செய்தல் :**

போதை மருந்துப் பொருட்கள் தமிழ்நாட்டில் தாராளமாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன; கள்ளச் சாராயம், கள், முதலியவற்றைத் தவிர, ஆல்கஹால் அதிக அளவு அடங்கியுள்ள மதுக்கசாயம், அஸ்வம், அரிஷ்டம் போன்ற ஆயுர்வேத மருந்து தயாரிப்புப் பொருட் களும், குளோரைடு ஹைடிரேட்டுடன் (இப்பொருள், போதைத் தரக்கூடியதும் விஷத்தன்மை வாய்ந்ததுமானதாகும்) கலக்கப் பட்டு, சாராயத்திற்கு மாற்றுப் போதைப் பொருளாகப் பயன் படுத்தப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது.

அதே போன்று, ஆல்கஹால் அடங்கிய ஜிஞ்சர் பெரிஸ், டின்சர் மற்றும் ஆங்கில மருந்துத் தயாரிப்புப் பொருட்களும், சாராயத்திற்கு மாற்றுப் போதைப் பொருளாகப் பயன்படுத்தப் படுவதாகக் கண்டறியப்பட்டது. இவ்வகைப் பொருட்களின் விற்பனையை ஒழிக்கும் பொருட்டு, முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு 1990ஆம் ஆண்டில், 1,138 லிட்டர் மதுக்கஷாயம் கைப் பற்றப்பட்டது.

**(ஏ) நீதிமன்றங்களில் வழக்குகளை முடிவு செய்தலும் மதுவிலக் குக் குற்றம் சார்ந்த வழக்குகளை இணக்க ஏற்பாட்டின் மூலம் தீர்த்து வைத்தலும்.**

நீதி மன்றங்களில் தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் வித்திதுறைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களை முடிக்க சம முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக, 1990 இல் 2,73,463 வழக்குகள் தீர்க்கப்பட்டன. நீதிமன்றங்கள் பிறப்பித்த ஆணைகளின் மூலம், 2,09,90,027 ரூபாய் அபராதத் தொகையும் வசூலிக்கப்பட்டது.

**(ஐ) கிராம அளவிலான மதுவிலக்குக் குழுக்களை அமைத்தல் :**

கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் நோக்குடன் செயல்படுகின்ற காவல் துறையினருக்கு உதவ, கிராம அளவில் அமைக்கப்படும் மதுவிலக்கு குழுக்களுக்கு எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்க ளிடையே ஆதரவு காணப்பட்டது. இக்குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகள் அனைத்திலும் இத்தகைய மதுவிலக்குக் குழுக்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வாறு செய்வதன் மூலம் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதி பொதுமக்களிடம் ஒருமித்த ஆதரவைத் திரட்ட முடியுமென நம்பப்படுகிறது.

(ஓ) மாநில அளவிலான பிரச்சாரக் குழுவை ஏற்படுத்துதல் :

பூரண மதுவிலக்கே, தற்போதைய அரசின் கொள்கையாகும். மது, நமது மாநிலத்தில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக்கடைகளை மூடுவதால் அரசுக்கு ஏற்படும் கணிசமான வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது இவ்வரசு, 16-7-1991 ஆம் நாள் முதல் நாட்டு மதுக்கடைகளை மூடியது. நாட்டு மதுக்கடைகளை மூடிய அதே நேரத்தில் அரசானது, கள்ளச் சாராயம் தயாரிப்பதில் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது. மதுவிலக்குக் காரணமாக ஏற்படும் நற்பயன்கள் குறித்தும் குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்தும் பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பிரபலமான ஆடவர் மற்றும் மகளிரைக் கொண்ட மாநில அளவிலான மது விலக்கு பிரச்சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ஓ) கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களை பொறுப்பாக்குதல் :—

கள்ளச் சாராயம் காய்ச்சுதல்/எடுத்துச் செல்லுதல்/தன்வசம் வைத்திருத்தல்/விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுத்து அறவே ஒழிப்பதற்காக, கிராம நிருவாக அலுவலர்களையும், காவல்துறை காவல்நிலைய அலுவலர்களையும் (அதாவது, காவல்துறை உதவி ஆய்வாளர்/ஆய்வாளர்) முழுக்க முழுக்க பொறுப்பாளிகளாக்க அரசு முடிவு செய்துள்ளது. கிராம நிருவாக அலுவலர்களும், காவல் நிலைய அலுவலர்களும், தங்களுடைய அதிகார வரம்பிற்குள் நடைபெறும் இத்தகைய கள்ளத்தனமான நடவடிக்கைகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். பெருமளவில் கள்ளத்தனமாக சாராயம் காய்ச்சுதல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுப்பதில் கிராம நிருவாக அலுவலர்கள்/காவல்துறை காவல் நிலைய அலுவலர்கள் அலட்சியம் காட்டினாலோ, திறமையாக செயல்படவில்லையானாலோ அவர்கள் மீது கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும். அப்பகுதிக்குச் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளான காவல்துறை ஆய்வாளர்/காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரும் கள்ளச்சாராயம் காய்ச்சுதல்/எடுத்துச் செல்லுதல்/வைத்திருத்தல்/கள்ளச் சாராயத்தை விற்பனை செய்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல்,





முழுமையாக ஒழித்துவிடுதல் போன்ற பணிகளுக்கு முழுப் பொறுப்பாக்கப்படுவர். அவர்கள் தரப்பில் குறைபாடுகள் எவையேனும் ஏற்பட்டால், அதற்காக அவர்கள்மீது கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும்.

இம்மாநிலத்தில் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதை தடை செய்வதற்காக, அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு தீவிர நடவடிக்கைகளின் பயனாக, காவல்துறை, கள்ளச் சாராயம் காய்ச்சும் குற்றவாளிகள் பலரைக் கண்டுபிடித்துள்ளது. இது தொடர்பாக, பரபரப்பு ஏற்படுத்தியதொரு வழக்கை இங்கே குறிப்பிடலாம். அதாவது, கோயம்புத்தூர் ஊரக மாவட்டக் காவல்படைப்பிரிவு, வருவாய்த்துறை அதிகாரிகளுடன் இணைந்து அவினாசிக் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட, இராக்கியாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஈசுவரமூர்த்தி என்பவருடைய பண்ணை வீட்டை 19—8—1991 அன்று திடீர் சோதனை செய்தது. பண்ணை வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஒரு அம்பாசிடர் கார், 3 சிறிய லாரி ஆகியவற்றில் இருந்தவர்கள் அனைவரும் காவல் துறையினரைக் கண்டவுடன் அவற்றை அப்படியே விட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டனர். ஆயினும், பண்ணை வீட்டை சோதனையிட்டதில், பெரிய டாங்கர்களில் (Tankers) வைக்கப்பட்டிருந்த 45,000 லிட்டர் எரிசாராயமும், பீப்பாக்களில் வைக்கப்பட்டிருந்த மற்றொரு 6,000 லிட்டர் எரிசாராயமும் பண்ணையிலிருந்து கைப்பற்றப்பட்டன. அடுத்துள்ள மற்றோர் அறையிலிருந்து தண்ணீர் அடங்கிய டாங்கரில் (Tankers) ஒவ்வொன்றுக்கும் 35 லிட்டர் கொள்ளளவுள்ள 70 ஜெர்ரி கேன்களில் கலவையிடப்பட்ட சாராயமும், 70 ஜெர்ரி காலி கேன்களும், 30 காலி பீப்பாய்களும், 3 குதிரைத் திறன் கொண்ட 3 மோட்டார்களும் (Meters) 5 குதிரைத் திறன் கொண்ட 1 மோட்டாரும் (Meter) கைப்பற்றப்பட்டன. மேலும், 100 வெடிக்கும் இயல்புள்ள குச்சிகளும் (Gelatine Sticks), மின்சக்தி மூலம் வெடிக்க வைக்கும் (Deterators) கருவிகள் 100-ம் உரிமம் பெறப்பட்ட 32 வகை துப்பாக்கியும், 17 தோட்டாக்களும் 'அம்பாசிடர்' காரிலிருந்து கைப்பற்றப்பட்டன. குற்றத்திற்குள்ளாகக் கூடிய பிற பொருட்களும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் ஒரு கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குற்றத்தில் முக்கிய குற்றவாளிகளான திரு. ஈசுவரமூர்த்தியும், இந்த சட்டவிரோதமான வாணிபத்தில் ஈடுபட்டிருந்த ஏனைய 14 நபர்களும் கைது செய்யப்பட்டனர். இப்பகுதியில் பணியிலிருந்த காவல் துறையைச் சேர்ந்த 7 ஆய்வாளர்களும் மற்றும் 7 துணை ஆய்வாளர்கள் அனைவரும் பணியில் கவனக்குறைவாக நடந்து கொண்டனர் என்ற காரணத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

மேலும், 4 தலைமைக் காவலர்களும், 2 காவலர்களும் அந்த மாவட்டத்திற்கு வெளியே பணி மாற்றம் செய்யப்பட்டு விட்டனர்.

முடிவுரை :

சுருங்கக்கூறின், மதுவிலக்குக் கொள்கையைச் செயல் படுத்த அரசு பின்வரும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :

(i) கணிசமான அளவு வருவாய் இழப்பு ஏற்படுவதையும் பொருட்படுத்தாமல், வறிய நிலையில் உள்ள மக்களின் நலனையே பெரிதாகக் கருதி 1991 ஆம் ஆண்டு சூலை திங்கள் 16 ஆம் நாள் முதற்கொண்டு நாட்டு மதுக்கடைகளை அரசு மூடிவிட்டது.

(ii) இம்மாநிலத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல்/ எடுத்து செல்லுதல்/வைத்திருந்தல்/கள்ளச் சாராயம் விற்பனை செய்தல் போன்றவற்றை அறவே களையும் பொறுப்பு கிராம நிருவாக அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள் ஆகியோரைச் சேர்ந்தது என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. தவறு செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(iii) மதுவிலக்கு காரணமாக ஏற்படும் நற்பயன்கள் குறித்து ஒரு புறமும், மறுபுறம் குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்து பொது மக்களிடம் பிரச்சாரம் செய்வதற்காகவும், அவ்விரு நோக்கங்களை எய்தவும் பெருமக்களைக் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iv) அரசின் மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தும் வகையில், மதுவிலக்கைச் செயல்படுத்தும் பிரிவு மீண்டும் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

(v) கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்காக எரி சாராயம் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, எங்கெல்லாம் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள் உள்ளனவோ அங்கெல்லாம் இரசாயனத் தொழில்களுக்காக இயல்பு மாற்றப்பட்ட சாராவியை வழங்க வேண்டுமென்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.



## இணைப்பு 1.

**1980-81 முதல் 1990-91 வரையில் தயாரிக்கப்பட்டதும், உபயோகிக்கப்பட்டதுமான சாராவியின் அளவு.**

(இலட்சம் லிட்டர்களில்).

| ஆண்டு. | தொடக்க இருப்பு. | இந்த ஆண்டுகளில் தயாரிக்கப் பட்ட சாராவி. | அருந்தும் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. | தொழில் பயனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சாராவி. | முடிவான இருப்பு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1980-81 | 26.96 | 3,77.21 | 1,23.16 | 1,94.91 | 61.47 |
| 1981-82 | 61.47 | 5,01.74 | 3,37.19 | 85.19 | 1,05.28 |
| 1982-83 | 1,05.28 | 5,78.51 | 5,00.18 | 64.67 | 74.80 |
| 1983-84 | 74.80 | 5,60.84 | 5,64.71 | 60.17 | 6.07 |
| 1984-85 | 6.07 | 579.14 | 4,66.78 | 93.98 | 21.16 |
| 1985-86 | 21.16 | 6,81.87 | 5,84.80 | 52.20 | 54.46 |
| 1986-87 | 54.46 | 6,32.08 | 1,97.91 | 2,97.75 | 70.28 |
| 1987-88 | 70.28 | 6,48.83 | 1,81.66 | 2,93.01 | 50.36 |
| 1988-89 | 50.36 | 7,11.10 | 1,65.31 | 3,76.11 | 1,06.10 |
| 1989-90 | 1,06.10 | 6,72.09 | 2,20.94 | 4,18.81 | 73.73 |
| 1990-91 | 73.73 | 4,94.96 | 2,77.83 | 2,55.35 | 35.51 |

(1990 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1991 ஆம் ஆண்டு ஜூலை வரை).

1-8-91 அன்றுள்ளவாறு.

## இணைப்பு 2.

### ஆண்டுவாரியாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகள்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள்.

மொத்தம் லிட்டர்களில்.

| | |
|---|---|
| 1985–86 | 90,61,299 |
| 1986–87 | 1,77,58,623 |
| 1987–88 | 3,25,86,089 |
| 1988–89 | 4,01,06,485 |
| 1989–90 | 3,47,52,995 |
| 1990–91 | 2,89,46,786 |
| 1991–92 | 83,74,286 |

(1991 ஏப்ரல் முதல் 1991 ஜூலை வரை)

பீர் உற்பத்தி.

(மொத்தம் லிட்டர்களில்.)

| | |
|---|---|
| 1985–86 | 9,71,09,937 |
| 1986–87 | 14,08,20,201 |
| 1987–88 | 14,18,38,663 |
| 1988–89 | 15,20,48,738 |
| 1989–90 | 18,19,37,597 |
| 1990–91 | 24,58,53,511 |
| 1991–92 | 16,58,499 |

இலங்கள்

(1991 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலைத் திங்கள் வரை)



## இணைப்பு 3.

### இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை.

| இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள். | உள்ளூர். | இறக்குமதி. | ஏற்றுமதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. ஆயத்தீர்வை ... | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 60. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 60. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 30. |
| 2. விற்பனைக் கட்டணம் (உற்பத்தியாளர்). | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 5. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 2. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 5. |
| 3. விற்பன்னக் கட்டணம் (மொத்த விற்பனையாளர்—டாஸ்மாக்). | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 2. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 2. | .. |
| 4. கூடுதல் விற்பனைக் கட்டணம் (டாஸ்மாக்). | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 6.69. | .. | .. |
| 5. இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம். | .. | 1 புரூப் லிட்டருக்கு ரூ. 5. | .. |
| 6. ஏற்றுமதி அனுமதிக் கட்டணம். | .. | | அனுமதி ஒன்றுக்கு ரூ. 10. |

பீர்—

| | | | |
|---|---|---|---|
| 1. ஆயத்தீர்வை | — | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 2.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.40. |
| 2. விற்பனைக் கட்டணம் | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.10. |
| 3. விற்பனைக் கட்டணம் (மொத்த விற்பனையாளர்). | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 0.50. | ... |
| 4. கூடுதல் விற்பனைக் கட்டணம். | 1 பல்க் லிட்டருக்கு ரூ. 4.30. | ... | .. |
| 5. இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம். | ... | மதிப்பில் 10 சதவிதம். | |
| 6. ஏற்றுமதி அனுமதிக் கட்டணம். | — | | அனுமதி ஒன்றுக்கு 10 ரூபாய். |



### இணைப்பு 4.

1981 முதல் 1991-ம் ஆண்டு வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் விற்பனை உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1981–82.. | .. | .. | .. | 1,211 |
| 1982–83.. | .. | .. | .. | 1,225 |
| 1983–84.. | .. | .. | .. | 1,228 |
| 1984–85.. | .. | .. | .. | 1,229 |
| 1985–86.. | .. | .. | .. | 1,231 |
| 1986–87.. | .. | .. | .. | 2,254 |
| 1987–88.. | .. | .. | .. | 2,317 |
| 1988–89.. | .. | .. | .. | 2,349 |
| 1989–90.. | .. | .. | .. | 3 369 |
| 1990–91.. | .. | .. | .. | 2,372 |
| 1991–92.. | .. | .. | .. | 2,099 |

இணைப்பு 5.

1987 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையிலும் (1991 ஆம் ஆண்டு ஜூலை வரை) துப்பறியப்பட்ட மது விலக்கு வழக்குகள் பறிமுதல் செய்யப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை, பறிமுதல் செய்யப்பட்ட கள்ளக் கடத்தல் பொருட்கள் ஆகியவை பற்றிய விவரங்கள்.

| வரிசை எண் மற்றும் விவரம். | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 (1991 ஜூலை வரை) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 2,29,014 | 4,08,326 | 5,94,929 | 3,78,298 | 1,48,262 |
| 2. பறிமுதல் செய்யப்பட்ட ID சாராயி அளவு லிட்டர்களில். | 27,30,120 | 35,47,099 | 57,79,871 | 38,43,245 | 12,76,707 |
| 3. அழிக்கப்பட்ட ஊறலின் அளவு லிட்டர்களில் | 2,40,36,679 | 4,24,80,579 | 4,08,24,780 | 1,47,89,457 | 63,20,282 |
| 4. பறிமுதல் செய்யப்பட்ட இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள் அளவு பாட்டில்களில்) ; | | | | | |
| (அ) முழு பாட்டில் .. .. .. | 12,631 | 1,346 | 7,685 | 1,343 | 1,184 |
| (ஆ) அரை பாட்டில் .. .. .. | 5,491 | 1,776 | 6,674 | 6,255 | 543 |
| (இ) கால் பாட்டில் .. .. .. | 47,722 | 32,701 | 1 13,801 | 38,640 | 9,573 |
| 5. பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் : | | | | | |
| (அ கார் .. .. .. .. | 246 | 285 | 467 | 269 | 143 |
| (ஆ) ஜீப் .. .. .. .. | 11 | 6 | 11 | 11 | 1 |
| (இ) வேன் .. .. .. .. | 76 | 48 | 88 | 65 | 26 |
| (ஈ) ஆட்டோ-ரிக்ஷா .. .. .. | 90 | 80 | 113 | 98 | 23 |
| (உ) லாரி .. .. .. .. | 03 | 35 | 57 | 36 | 26 |
| (ஊ) மோட்டார் சைக்கிள் .. .. | 221 | 360 | 658 | 205 | 72 |
| (எ) படகு .. .. .. .. | 1 | .. | 0 | .. | 2 |
| (ஏ) ஸ்கூட்டர் .. .. .. .. | 22 | 21 | 62 | 72 | 26 |
| (ஐ) பஸ் .. .. .. .. .. | 4 | 2 | 24 | 4 | 1 |
| (ஒ) பார வண்டி/பாரக்கட்டை வண்டி .. | 8 | 0 | 5 | .. | .. |
| (ஓ) சைக்கிள்கள் .. .. .. | .. | .. | .. | 1,887 | 301 |
| பறிமுதல் செய்யப்பட்ட மொத்த வாகனங்கள். | 722 | 805 | 1,487 | 2,646 | 621 |

## இணைப்பு 6.

**1987ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையிலும் (1991 ஜூலை வரை) செயல்பாட்டு பிரிவு துப்பறியப்பட்ட மதுவிலக்கு வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள்.**

| வரிசை எண்ணும் விவரங்களும். | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 (ஜூலை 1991 வரை) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. துப்பறியப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 2,29,014 | 4,08,326 | 5,94,929 | 3,78,298 | 1,48,262 |
| 2. குற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 2,05,612 | 3,20,352 | 4,85,199 | 3,70,076 | 1,37,710 |
| 3. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 22,338 | 70,324 | 3,17,088 | 2,72,641 | 80,596 |
| 4. விடுவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.. | 27,649 | 28,613 | 1,900 | 822 | 70 |
| 5. திரும்பப் பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 11,086 | 14,737 | 743 | 57 | 9 |
| 6. விசாரணை முடிவுறாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை. | 1,44,539 | 2,06,678 | 1,65,468 | 96,556 | 57,035 |
| 7. நடவடிக்கை எடுக்கப்படாமல் விட்டுவிடப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 23,367 | 63,109 | 39,556 | 3,516 | 2,602 |
| 8. புலனாய்விலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 35 | 4,865 | 70,170 | 4,706 | 7,950 |



## இணைப்பு 7.

1—8—1991 ஆம் நாளன்றுள்ளவாறு குண்டர்கள் சட்டத்தின் கீழ்க் காவலில் வைக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை (ஆண்டுவாரியாக, தரம் வாரியாக விவரம்).

| வரிசை எண்ணும் விவரங்களும். | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 (ஜூலை 1991 வரை). | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1. கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் | 62 | 45 | 87 | 100 | 106 | 237 | 349 | 126 | 96 | 96 | 1,244 |
| 2. மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் வரும் குற்றவாளிகள். | 3 | .. | .. | 7 | 1 | .. | 3 | .. | .. | .. | 14 |
| 3. வனச் சட்டத்தின் கீழ் வரும் குற்ற வாளிகள். | .. | .. | .. | .. | .. | .. | 3 | 2 | 2 | 1 | 8 |
| 4. குண்டர்கள் .. .. .. | 76 | 204 | 462 | 367 | 346 | 322 | 234 | 116 | 228 | 74 | 2,479 |
| 5. விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் | 3 | .. | 1 | 1 | 5 | 3 | 7 | 3 | 1 | .. | 24 |
| 6. சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்கள். | .. | .. | .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | 2 |
| மொத்தம் .. | 144 | 249 | 550 | 476 | 458 | 562 | 647 | 247 | 327 | 111 | 3,771 |

இணைப்பு 8.

கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் ஈட்டிய ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்).

| | வருவாய்க் கணக்குத் தலைப்பு. | 1987–88 | 1988–89 | 1989–90 | 1990–91 | 1991–92 (ஜூன் 1991 வரை). |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | நாட்டுச் சாராவி (சாராயம்) .. .. | 69.84 | 35,08 | 2,19.39 | 1,54,64.41 | 40,54.79 |
| 2. | புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) .. | 48.08 | 3,55.41 | 1,67.02 | 12,45.75 | 4.48 |
| 3. | மால்ட் வகை மது (பீர்) .. .. .. | 2,86.11 | 7,39.91 | 12,15.13 | 26,79.12 | 6,97,19 |
| 4. | வெளிநாட்டு மது, சாராவி .. .. | 1,04,51.87 | 1,24,43.70 | 2,52,92.96 | 2,28 89.08 | 60,54.89 |
| 5. | வணிக ரீதியிலான, இயல்பு மாற்றப்பட்ட சாராவி. | 4:73.67 | 6,69.74 | 25,53.81 | 96.74 | 3.46 |
| 6. | மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள். | 2,03.18 | 60.71 | 2,54.68 | 2 39.40 | 60.59 |
| 7. | அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப் பொருட்கள். | 0.71 | 0.95 | 3.45 | 2.38 | 0.15 |
| 8. | அபராதங்களும், பறிமுதல்களும் .. .. | 4.25 | 2.74 | 1,70.14 | 40.69 | 7.51 |
| 9. | பணியும் பணிக்கட்டணங்களும் .. .. | 5.27 | 8.60 | 47.55 | 3,39.61 | 1,04.37 |
| 10. | ஏனைய வரவினங்கள் .. .. .. | 4,73.02 | 3,98.50 | 2,57.74 | 4,88.51 | 55.08 |
| | மொத்தம் .. | 1,20 16.00 | 1,48,02.34 | 3,01,81.87 | 4,34,85.69 | 1,10,42.41 |



1991 செப்டம்பர் 23]

## இணைப்பு II.

### தமிழ்நாடு காவல் துறை.

### சாதனைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய குறிப்பு.

### 1990-91

. காவல் துறையின் பின்னணி—விவரச் சுருக்கம் ;

தமிழ்நாடு காவல்துறை, வலிமை மிக்க சிறந்த காவல் படையாக விளங்குகிறது; மாநில நிருவாகத்தில் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பலதிறப்பட்ட பொறுப்பினையும் கொண்டதாகவும் விளங்குகிறது. தற்போதுள்ள மாறிவருகின்ற சூழ்நிலையில், காவல்துறையின் பங்கும் பணிகளும் மிகவும் சிக்கலானதாகவும் மிகப் பெரிய அளவில் பொறுப்புகளைக் கொண்டதாகவும் உள்ளன. காவலர் ஆற்ற வேண்டிய பணிகள் சில நேரங்களில் கடும் சோதனைகள் மிக்கதாகவும் சவாலாகவும் அமைகின்றன. மக்களின் உயிரையும் உடைமைகளையும் காத்து, இம்மாநிலத்தில் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவது காவல் துறையின் தலையாய கடமையாகும். அமைதியை நிலைநாட்ட, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும் அவர்களின் கடமையாகும்.

2. காவலரின் அதிகாரங்களையும், பணிப் பொறுப்புகளையும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து அவற்றின் செயலாக்கத்தை முறைப்படுத்துதல், குற்ற நிகழ்வைத் தடுத்தல் மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல் என வகைப்படுத்தலாம்.

''முறைப்படுத்தும் பணிகள்'' என்பதில், போக்குவரத்துச் சட்டங்கள், விதிகளைச் செயலாக்குதல், முக்கிய மாநகரச் சாலைகளில் போக்குவரத்தை முறைப்படுத்துதல், பல்வேறு நபர்களுக்கும், புகழ்வாய்ந்த உயர்நிலை பெருமக்களுக்கும் பாதுகாப்பு அளித்தல், வங்கிகள், தொழிற்சாலைகள், முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகியவை அடங்கும்.

காவலரின் ''தடுப்புப் பணிகள்'' என்பதில், முன்கூட்டியே தகவல்களைச் சேகரித்தல், சாதிக் கலவரம், தொழிலாளர் அல்லது மாணவர் கலவரம் ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து, சட்டம் ஒழுங்கைக் காத்திட உரிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவை அடங்கும்.

''காவலர்களின் துப்புத்துலக்கும் பணியில்'' குற்றங்களை உடனுக்குடன் புலன் விசாரணை செய்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல், குற்றவாளிகளைக் கைது செய்தல், இவர்கள்

மீது வழக்கு தொடருதல், வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துதல் ஆகியவை அடங்கும். விரைந்த தொழில் வளர்ச்சி, நகர்ப்புறங்களின் விரிவாக்கம், கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு மக்கள் குடி பெயர்தல், பொதுவாக மக்களிடையே ஒழுக்கப்பண்புகள் மாறி வருதல், குற்றவாளிகளின் செயல்வகை மாறுபாடு ஆகியவற்றால் உருவாகின்ற பல தடைகளை மேற்கூறிய பணிகளை மேற்கொள்ளும் போது எதிர் நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், குற்றங்களைக் கண்டுபிடிக்க காவலர் நவீன கருவிகளையும் தொழில் நுட்ப உத்திகளையும் கையாள வேண்டியுள்ளது.

3. தமிழ்நாடு காவல் துறை திறமையாகவும் முனைப்புடனும் விவேகத்துடனும் பயனுள்ள வகையில் பணியாற்றுவதிலும் பெயர் பெற்றதாகும். அந்துறையினர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பெரிய, மிகப் பல பொறுப்புகளையும் நன்குணர்ந்து சுறுசுறுப்புடன் நிறைவேற்றி வருவதுடன், அவர்கள் கடமை உணர்வுடனும், செயலுறுதியுடனும் ஆற்றிய சாதனைகளுக்காக, அரசின் பாராட்டையும் பொதுமக்களின் பாராட்டையும் ஒருங்கே பெற்றுள்ளனர். இவ்வகையில் தமிழ்நாடு காவல்துறை கடந்த ஆண்டு ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கதாகும்.

4. மது விலக்குச் சட்டம், வரதட்சணை ஒழிப்புச் சட்டம், குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், குண்டர்கள் தடைச் சட்டம் போன்ற சமூக நலச் சட்டங்களைச் செயலாக்குவதில், அவர்களுடைய பங்கு மறைக்க முடியாததும் குறைத்து மதிப்பிட முடியாததுமாகும். அத்துடன் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், நலிந்த மக்கள் பிரிவினருக்கும் உதவுவதில், அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளனர். கள்ளச் சாராயக்காரர்கள் தடுப்புச் சட்டம், வழக்கமாகக் குற்றம் புரிவோர் தடுப்புச் சட்டம் தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றைச் செயலாக்கியதின் மூலமாக, காவல்துறை இம்மாநிலத்திலுள்ள பல சமுதாய விரோதிகளை கைது செய்து, அவர்களைத் தடுப்புக் காவலில் வைத்து, குற்றங்கள் நிகழ்வதை வெகுவாக குறைத்துள்ளது.

5. குற்றவாளிகளை விரைவாகக் கண்டு பிடித்து, அவர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனை பெற்றுத் தந்ததன் மூலம், மாநில வரலாற்றில், தமிழ்நாடு காவல் துறையினர் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளனர். கிராமக் காவல் பணியிலும் இது தொடர்பான பிற பணிகளிலும், பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும், காவலர்-பொதுமக்கள் தொடர்பை மேம்படுத்துவதிலும் காவல் துறையின் முயற்சி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.



6. தமிழ்நாடு காவல்துறையிடம், தம்முடைய பல திறப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகவும், குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், போதிய போக்குவரத்து வசதி, தகவல் தொடர்பு ஏற்பாடு, நவீன அறிவியல் கருவிகள் ஆகியவை உள்ளன. நிதி ஆதாரங்கள் குறைவாக இருக்கின்ற நிலையில், காவல் துறையின் தேவைகள் அதிகமாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி உள்ள போதிலும், காவல் துறையின் நியாயமான தேவையை நிறைவு செய்ய முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

7. தமிழ்நாட்டில், இலங்கைப் போராளிகளால் ஏற்படும் அபாயத்தையும், இம்மாநிலத்தின் சமூகக் கட்டமைப்பிற்கு ஏற்பட்ட சேதத்தையும் தடுக்க தற்போதைய தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இம்மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதற்கு ஊறுவிளைவிக்கும் வகையில், அவர்கள் விடுத்துள்ள அச்சுறுத்தலின் வகையில், அவர்கள் விடுத்துள்ள அச்சுறுத்தலின் காரணமாக தமிழ்நாட்டில் போராளிகளின் கொடிய நடவடிக்கைகளையும், அதன் மோசமான விளைவுகளையும் தடுத்து கட்டுப்படுத்தி, அறவே ஒழிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இதன் பொருட்டு, உள்ளூர் காவலர்களுக்கு போதிய அளவிற்கு படைக்கலன்களும் வெடிமருந்துப் பொருட்களும் அளிக்க வேண்டியுள்ளது. காவல் படைக்கு உரிய பயிற்சி, சாதனம், போக்குவரத்து, தகவல் தொடர்பு முதலிய வசதிகளை அளித்து நவீன மாக்க, அரசு ஏற்கெனவே உறுதியான நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

## II. நிருவாக அமைப்பும் பணியாளர்களும்.

8. தமிழ்நாடு காவல் துறை, பல பணியாளர்களைக் கொண்ட மிகப் பெரிய அமைப்பாகும். இத்துறை, காவல் துறை தலைமை இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறது; இவர் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதுடன், மாநிலத்தின் காவல்துறை நிருவாகப் பொறுப்பினையும் மொத்தமாக கவனித்து வருகிறார். காவல்துறைத் தலைவர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) இம்மாநிலத்தின் அன்றாட நிருவாகம், சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் பணிகளில் காவல் துறை தலைமை இயக்குநருக்கு உதவியாக உள்ளார். காவல் துறைத் தலைவர் (குற்றங்கள்) தனிவகைக் குற்ற வழக்குகள் மற்றும் தொழில் நுட்பப் பணிகளைக் கவனித்து வருகிறார். காவல் துறைத் தலைவர் (வனப்பிரிவு-குற்றப் புலனாய்வுத் துறை), வனவளம் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் தொடர்பான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியைக் கவனிக்கிறார். காவல்துறைத் தலைவர் (ஊர்க் காவல் படை) மாநிலத்தின் சிவில் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை நிருவாகத்தைக் கவனித்து வருகிறார். காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு அமல் பிரிவு) மதுவிலக்கு மற்று ஆயத்

தீர்வை தொடர்பான பணிகளை கவனித்து வந்தார். காவல் துறைத் தலைவர் (புலனாய்வு) புலனாய்வுப் பணியையும் பாதுகாப்புப் பணியையும் கவனிக்கிறார். காவல் துறைத் தலைவர் (படைக்கலப் பிரிவு மற்றும் பயிற்சி) சிறப்புக் காவல் படை மற்றும் பயிற்சி நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டுள்ளார்.

7. தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகளின் (I.P.S.) எண்ணிக்கை 180 ஆகும். 1990 ஆம் ஆண்டில் இந்திய காவல் பணி அதிகாரி ஒருவர் ஓய்வு பெற்றார். நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 6 இந்தியக் காவல் பணி அதிகாரிகள் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டனர். மாநிலக் காவல் பணியைச் சேர்ந்த ஏழு அதிகாரிகள், பதவி உயர்வு ஒதுக்கீட்டின் கீழ், 1990-91-ல் இந்திய காவல் பணி பதவித்தரத்தில் நியமிக்கப் பட்டனர்.

10. இணைப்பு 1-ல் கண்டுள்ளபடி 1—1—1991 அன்றிருந்தவாறு, தமிழ்நாடு காவல் படையின் மொத்த பணியாளர் எண்ணிக்கை 68,638 ஆகும். 1970-ல் 2,023 நிருவாகப் பணிப் பதவிகளும், 316 அலுவலகப் பணிப் பதவிகளும், மற்றும் 73 பிற பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவரங்கள் இணைப்பு 11ல் கொடுக்கப்பட்டுள்ளன.

11. தமிழ்நாடு சேமக்காவல் படையில் 187 படைப் பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 7 அணிகளும், சட்டம் மற்றும் ஒழுங்கைத் திறம்பட பேணிக் காத்திட, உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி வருகின்றன. இது தவிர, தமிழ் நாடு சிறப்புக் காவல் படை, மத்திய அரசின் ஆணைப்படி, இம் மாநிலத்திற்கு வெளியே முகமையில் அனுப்பப்பட்டுள்ளது.

(i) துப்பறியும் நாய்படை :

12. குற்றத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் புலனாய்வு நடத்தும் பணியாளர்களுக்கு உதவுவதற்காக, தமிழ்நாட்டில், பதினோரு துப்பறியும் நாய் படைகள் உள்ளன. 1990-ல் 1,206 வழக்குகளில் இந்தத் துப்பறியும் நாய்கள் துப்புத்துலக்க பயன் படுத்தப்பட்டன. 540 வழக்குகளில் அவற்றின் துப்பு துலக்கும் பணி பயனுள்ளதாக இருந்தது.

(ii) குதிரைக் காவல் படை :

13. இந்தக் குதிரைக் காவல்படை, கும்பலையும், போக்குவரத்து நெருக்கடிகளையும் முறைப்படுத்துவதில் பயன்தரும் வகையில் பணிபுரிகின்றது. சென்னை மாநகரக் குதிரைக் காவ



படையில் 34 குதிரைகளும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள குதிரைக் காவல்படை ஒவ்வொன்றுக்கும் 10 குதிரைகளும் உள்ளன.

(iii) குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவு :

14. தீண்டாமையை ஒழிக்கவும், ஆதிதிராவிடர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படுவதை அறவே அகற்றவும், குடியுரிமை கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதில் அரசு, தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களும் மிக முக்கியத்துவம் அளித்து குடியுரிமைகள் பாதுகாப்பு சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. மேலும், இச்சட்டத்தை பயன்தரும் வகையில் திறம்பட செயலாக்குவதற்காக நாளது வரையில் தமிழ் நாட்டிலுள்ள 25 காவல் மாவட்டங்களில் 25 இயலூர்திக் காவல் பிரிவுகள் உள்ளன. மேற்சொன்ன பிரிவுகள் ஒவ்வொன்றிலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், நிலை 2 காவலர் இருவர் ஆகியோர் பணி புரிந்து வருவதுடன் ஜீப் ஒன்றும் உள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, காவல் துறை துணைத் தலைவர் (குடியுரிமைப் பாதுகாப்பு) இச்சட்டம் செயல் படுத்தப்படுவதைக் கண்காணித்து வருகிறார். காவல்துறைத் துணைத் தலைவருக்கு (குடியுரிமை பாதுகாப்பு) உதவுவதற்காக, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு காவல்துறை துணைக் கண்காணிப் பாளரின் தலைமையின் கீழ் மூன்று கண்காணிப்பு படைகள் 1987 நவம்பரிலிருந்து இயங்கி வருகின்றன. தீண்டாமை என்னும் கொடிய நோய் அதிகம் பரவியுள்ள கிராமங்களில் அவற்றைக் கண்டறிந்து அக்கொடிய நோயினை பூண்டோடு ஒழிப்பதற்கு மாதிரி ஆய்வுகளை நடத்த ஆராய்ச்சி பிரிவு ஒன்று தனியே பொறுப்பு வகிக்கிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் குறை களைத் தீர்ப்பதற்கும் அவர்கள் அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கும், இப்பிரிவு பிற துறைகளின் நெருங்கிய ஒத்துழைப் புடன் பணிபுரிகிறது.

(iv) தனி நீதிமன்றங்கள் :

15. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்கு களையும், ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள், கொடுமைகள் குறித்த பிற வழக்குகளையும் விசாரிக்க நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், 1989 ஆம் ஆண்டில் 660 வழக்கு களும், 1990 ஆம் ஆண்டில் 789 வழக்குகளும் பதிவு செய்யப் பட்டன. இதே போன்று ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு

இழைக்கப்பட்ட இன்னல்கள் கொடுமைகள் தொடர்பாக 1989-ம் ஆண்டில் 489 வழக்குகளும், 1990 ஆம் ஆண்டில் 545 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

(v) பெண் காவலர்கள் :

16. தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவலர்கள் பெண் கைதிகளைச் சோதனையிடல், பெண் குற்றவாளிகளைக் கைது செய்து நீதி மன்றங்களுக்குப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுதல், இளம் குற்றவாளிகள் தொடர்பானவற்றைக் கவனித்தல், மகளிர் மருத்துவ மனைகள் பெண்களுக்கான கல்வி நிலையங்களில், பெண்களுக்குப் பாதுகாப்பளித்தல் போன்ற கடமைகளைத் தொடர்ந்து சிறந்த முறையிலும் பயனுள்ள வகையிலும் ஆற்றி வருகின்றனர். தற்போது தமிழ்நாட்டிலுள்ள மகளிர் காவல் படையில் 10 காவல் துறை ஆய்வாளர்களும், 108 காவல்துறை உதவி ஆய்வாளர்களும், 100 மகளிர் தலைமைக் காவலர்களும், 1,040 மகளிர் காவலர்களும் பணிபுரிகின்றனர். 1990 மார்ச்சில் 79 மகளிர் காவலர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு 18—6—1990 லிருந்து ஆறு திங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

III. காவல் துறையின் தகவல் தொடர்பு ஏற்பாடு :

17. காவல் துறையின் தகவல் தொடர்பு ஏற்பாட்டில் தமிழ்நாடு காவல் துறை மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. நுண்ணலை தகவல் தொடர்பு முறை 545.5 கி. மீட்டர் நீளம் கொண்டது. மாவட்ட தலைமை இடங்களுக்கான தகவல் தொடர்பு இணைப்பு வசதிகள் 1,165 கி. மீ. நீளத்திற்கு மீவுயர் அலை முறையில் உள்ளன. இராமநாதபுரம் பசும்பொன் தேவர் திருமகன், திருவண்ணாமலை—சம்புவராயர், காமராஜர் மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலக் காவல் தலைமையகத்துடன் நுண்ணலை (Microwav ) மீவுயர் அலை (U.H.F.) அதி மீவுயர் அலை (V.H.F.) வசதி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. 1,061 காவல் நிலையங்களில் 1,012 காவல் நிலையங்களுக்கும், 110 உட்கோட்டங்களில் 94 உட்கோட்டங்களுக்கும் மீவுயர் அலை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நாளது வரையிலான புதிய தகவல் தொடர்புச் சாதனங்களை பயன்படுத்துவதன் மூலம் காவல் படையை நவீனப்படுத்த வேண்டிய அவசரத்தேவை எழுந்துள்ளது. உயர் அலை தகவல் தொடர்பு சாதனங்களைப் புதிதாகப் பெறவும் பழைய மீவுயர் அலை தகவல் தொடர்பு சாதனங்கள் 300-க்கு பதிலாக புதிய சாதனங்களை அமைக்கவும், பழைய ரிப்பீட்டர் (repeater) தகவல் தொடர்பு சாதனங்கள் 10-க்கு பதிலாக புதியன அமைக்கவும், இரவு நேரத்தில் பார்க்கக் கூடிய தொலைதூர நோக்காடிகள் (binoculars) வாங்கவும்





மின்னணு ஒருங்கிணைப்பு தகவல் தொடர்பு சாதனம் (Electronic Integrated communication system) வாங்கவும் வேண்டிய தேவை உள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்தி வலுப்படுத்துவதற்கு விரிவான செயற் குறிப்பு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காவல்துறையை நவீனப்படுத்துவதில் பணியாக மேம்படுத்தப்பட்ட நவீன தகவல் தொடர்பு முறையை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல்படையை நவீனப்படுத்துவதற்காக 80.45 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

சிறந்த தகவல் தொடர்பு வசதிகளைச் செய்து கொடுத்துள்ள தன் மூலம் காவல் துறையின் வானொலிப் பிரிவு குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், பெருமைமிக்க உயர்நிலை சீர் பெருமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும், போக்குவரத்தைக் கட்டுப் படுத்துவதிலும் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் காவல் துறைக்குப் பெரிதும் உதவியாக உள்ளது.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதற்காக, காவல் படைக்குப் போதிய அளவுக்கு மோட்டார் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய வண்டிகள் வழங்கப்பட்டு வருகின் றன. பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகளும் வழங் கப்பட்டு வருகின்றன. காவல் துறை வண்டிகளை பராமரிப்ப தற்கென்றே தமிழ்நாட்டில் நான்கு பணிமனைகள் உள்ளன.

IV. புலனாய்வுக் கருவிகள்.

(i) அறிவியல் கருவிகள் :

18. அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் அதிகரித்துவரும் கணிப்பொறிகளின் பயனும் உலகமெங்கிலும் நிருவாக முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய முன்னேற்ற உத்திகளை தமிழ்நாடு காவல் துறை பயன்படுத்திக்கொண்டு குற்றங்களைக் கண்டறிவதில் புதிய தொழில் நுட்ப உத்திகளைப் புகுத்தியதோடு குற்றங்கள் தொடர்பான தகவல் விவரஙகள், காவல் துறைப் பணியாளர் களைப் பயன்படுத்துதல் பற்றிய விவரங்கள், காவல் துறை பணியாளர் பற்றிய தகவல் விவரங்கள் ஆகியவற்றைக் கணிப் பொறிகளில் தொகுத்து வைப்பதிலும் புதிய முறையை புகுத்தியுள்ளது.

(ii) கணிப்பொறிப் பிரிவு :

19. 1971ஆம் ஆண்டிலேயே, காவல் துறையில் கணிப்பொறி வசதி அமைக்கப்பட்டது. குற்ற ஆவணங்களும் குற்றவாளிகள் தொடர்பான ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு கணிப்பொறி தகவல் தொகுப்பில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட தலைமையிடங்கள் தொலையச்சுத் தகவல் தொடர்பு மூலம் (Teleprinter Terminal) நேரடியாக தொடர்பு கொண்டு, கண்டுபிடிக்க முடியாத காணாமல் போன பொருள்கள் பற்றிய அனைத்து குற்றங்கள் குறித்தும் உடனுக்குடன் தகவல்களைப் பெற இயலும் வகையில் இக்கணிப்பொறி தகவல் பிரிவு மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

(iii) குற்றத் தடய அறிவியல் துறை :

20. நம்முடைய குற்றத் தடய அறிவியல் துறை ஆசியாவிலேயே மிகவும் பழமையான தடய அறிவியல் நிறுவனங்களில் ஒன்றாகும். சட்டத்தைச் செயற்படுத்தும் மாநில அரசைச் சார்ந்த அனைத்து நிறுவனங்களுக்கும், மத்திய அரசுத் துறைகளுக்கும் தேவைப்படும்போதெல்லாம் குற்றத் தடய அறிவியல் பணியை இத்துறை மேற்கொண்டு வருகிறது. சென்னையில் இத்துறைக்குப் பிரதான ஆய்வுக்கூடம் ஒன்றும் துப்பாக்கியியல், உயிரியல், வேதியல், ஆவணங்கள், ஆயத்துறை, நிழற்படப் பிரிவு, இயற்பியல், மதுவிலக்கு, ஆராய்ச்சி—வளர்ச்சி, நிறை நீரியல் பிரிவு, நஞ்சியல், போதைப் பொருள் பிரிவு, கருவிகள் பிரிவு என 13 தனி ஆய்வுப் பிரிவு வசதிகளும் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக, 24 காவல் மாவட்டங்களில் 24 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் (ஊர்திகள்) செயல்படுகின்றன. இவற்றுடன், சென்னைப் பெருநகரில் குற்றம் நடந்த இடத்தில் குற்றத் தடய அறிவியல் ஆய்வுப் பணிக்காக 24 மணி நேரமும் செயல்படக்கூடிய நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்றும் செயல்படுகிறது. சென்னை மாநகரிலும் சென்னை மாநகரைச் சுற்றிலுமுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட நஞ்சுண்டவர்களுக்கு உதவுவதற்காக, நஞ்சியல் மருத்துவ ஆய்வு வசதிகளையும் இத்துறை செய்து வருகிறது. சர்ச்சைக்குறிய குழந்தைகளின் தந்தை யார் என்று கண்டுபிடித்து இந்நாட்டிலுள்ள ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு உதவுவதற்காக சமூக அமைப்பாக, ஆய்வு மையம் ஒன்றையும் இத்துறை நடத்தி வருகிறது. இத்துறை, தடய அறிவியலில் எம்.எஸ்.ஸி., பி. எச்.டி. (டாக்டர்) பட்டத்திற்கான கல்வி வசதிகளையும் அளித்து வருகிறது.

V. காவலர் நலம்.

21. காவலர்களின் இடர்மிகு பணி நிலையையும் அவர்களது பணியின் கடுமையையும் கருத்திற் கொண்டு, அரசு தமிழ்நாட்டிலுள்ள காவலர்களுக்கென்று பின்வரும் நலத் திட்டங்களை வகுத்துள்ளது.



(i) உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்:

இத்திட்டம், 1980 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு, 1984 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாயில் போன்ற உணவுப் பொருட்களும் ஏனைய சில இன்றியமையாப் பொருட்களும், காவல்துறை ஆய்வாளர்கள் பதவித் தரம் வரையிலான அலுவலர்களுக்கும், காவல் வானொலிப் பிரிவில் உள்ள தொழில் நுட்பப்பிரிவு அலுவலர்களுக்கும், சுருக்கெழுத்துப் பிரிவு அலுவலர்களுக்கும், சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. இதுவகையில் ஏற்படும் செலவை அரசு ஏற்கிறது.

(ii) காவலர் வீட்டு வசதித் திட்டம் :

காவலர் பணியைச் செவ்விய முறையில் மேற்கொள்வதற்கு, காவல் துறை அதிகாரிகள், காவல் துறை பணியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகில் வீடுகள் கட்டிக் கொடுப்பது இன்றியமையாததாகும். காவல் துறை பணியாளர்களுக்குக் குறிப்பாகக் கீழ்நிலையிலுள்ள பணியாளர்களுக்குத் தற்போது அளிக்கப்பட்டுள்ள வீட்டு வசதிகள் போதிய அளவிற்கு இல்லை. குறிப்பாக இத்தகைய சூழ்நிலையில் காவல் துறைப் பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, காவல் துறையில் 42 சதவீதத்தினருக்கே வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முன்னாள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், இம்மாநிலம் முழுவதிலும் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியது. இக்கழகம் 31–3–1989 அன்று கலைக்கப்பட்டது. இதனால், காவலர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தைப் பெரிய அளவில் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்தன. காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்த தற்போதைய அரசு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் தொடங்க இப்போது முடிவு செய்துள்ளது. இக்கழகம், காவல்துறையில் பணியாற்றுபவர்களுக்கு வீடுகள் கட்டித்தரவேண்டிய முக்கிய நோக்கத்துடன் குறுகிய காலத்தில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் சீரிய திட்டம் ஒன்றை வகுக்கக் கருதுகிறது. நடப்பு நிதியாண்டில், எட்டு கோடி ரூபாய் செலவில் குறைந்தது 1,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்குத் தேவைப்படும் நிதி, வரவு-செலவுத் திட்டத்தில், மூலதன பங்காக ஒதுக்கப்படும்.

## (iii) காவல் நிலையக் கட்டிடங்கள் :

மொத்தமுள்ள 1,061 காவல் நிலையங்கள், 180 புறக் காவல் நிலையங்கள் ஆகியவற்றில், 768 காவல் நிலையங்களும், 108 புறக்காவல் நிலையங்களும் மட்டுமே அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏனையவை வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. தனியார் கட்டிடங்களுக்கு இவ்வாண்டு செலுத்தப்பட்ட வாடகை சுமார் 21 இலட்சம் ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பத்து காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்காக, அரசு உள்துறையின் 12-3-1991 ஆம் நாளிட்ட 440ஆம் எண் ஆணையில் 72.00 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

## (iv) காவல் பதக்கங்கள் :

22. காவல்துறையினரின் திறமை வாய்ந்த பணிச் சாதனையைப் பாராட்டும் வகையிலும் அவர்களது பணியை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களது தொழில் ஆற்றல் திறமைகளை வளர்த்து கொள்ள இயலும் வகையிலும் அவர்களை உருவாக்கவும் அரசு, காவலர்களுக்குப் பல்வேறு பதக்கங்கள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது.

## (v) தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் :

23. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த 65 காவல்துறை அதிகாரிகள் காவலர்களுக்குத் துணிவுடைச் செயல், பாராட்டத்தக்க செயல் புரிந்தமைக்காக ஒவ்வோராண்டும் அண்ணா பிறந்த நாளில் தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் வழங்கப்படுகிறது. ஆய் வாண்டில், இத்திட்டத்தின்கீழ் பின்வரும் வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்குத் துணிவுடைச் செயலுக்கான 8 பதக்கங்களும் பாராட்டத்தக்க பணியாற்றியமைக்கான 57 பதக்கங்களும் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் | 3 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் | 6 |
| காவல்துறை ஆய்வாளர்கள் | 18 |
| காவல்துறை உதவி ஆய்வாளர்கள் | 10 |
| காவல்துறைத் தலைமைக் காவலர்கள் | 6 |
| காவல்துறைக் காவலர்கள் | 14 |
| தீயணைப்புப் பணியாளர்கள் | 8 |



சட்டம்-ஒழுங்கு, குற்றவியல், போக்குவரத்து, புலனாய்வு
ஆகிய பிரிவுகளிலும், படைக்கலந்தாங்கிய மாவட்ட காவல்படை,
படைக்கலந்தாங்கிய சிறப்புக் காவல்படை ஆகிய துறைகளிலும்
விளையாட்டுத் திறன் நிருவாகப் பணி திறம்பட்ட முன்மாதிரி
யான பணி ஆகியவற்றிலும் சிறப்பாகத் திறமையுடன் பணி
யாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், கடமை உணர்வு,
நேர்மை, பற்றுறுதி, சீறிய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகிய
நற்பண்புகளைப் பாராட்டும் வகையிலும், பத்தாண்டுகளுக்குக்
குறைவில்லாமல் பணியனுபவத்துடன் அப்பழுக்கற்று பணி
யாற்றிய காவல்துறை தலைமைக் காவலர்கள், காவலர்கள்
ஆகியோருக்கு ஒவ்வோராண்டும் பொங்கல் நாளன்று, தமிழ்
நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் வழங்கப்படுகிறது. இந்தப்
பதக்கங்கள் 1990 ஆம் ஆண்டில் 1,313 காவலர்களுக்கு வழங்கப்
பட்டன.

மாநில அரசு வழங்கும் இந்த விருதுகளுடன்கூட, இந்திய
அரசும் குடியரசுத் தலைவர் காவல் பதக்கங்களை வழங்குகிறது.
இப்பதக்கங்கள், ஒவ்வோராண்டும் குடியரசு மற்றும் சுதந்திர
தின விழாக்களின்போது தகைசால் பணி, பாராட்டத்தக்க பணி,
துணிவுடைச் செயல் ஆகியவற்றிற்காக காவல் துறையைச்
சேர்ந்த அனைத்து பதவித்தரங்களிலுமுள்ள அதிகாரிகள்,
பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒருவர் தகைசால்
பணியாற்றியமைக்காக குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம்
வழங்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப்படவேண்டுமெனில், அவர்
பாராட்டத்தக்க பணியாற்றியமைக்காக காவல் பதக்கம் வழங்கப்
பட்டு 6 ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்பதோடு,
20 ஆண்டுகள் பணியனுபவமும் அப்பழுக்கில்லா வகையில் பணி
ஆற்றியிருக்கவும் வேண்டும். 15 ஆண்டுகள் பணியனுபவமும்
அப்பழுக்கில்லா வகையில் பணியும் புரிந்தவருக்கு மட்டுமே
பாராட்டத் தக்க பணிக்கான காவல் பதக்கம் வழங்கப் பரிந்து
ரைக்கப்படுகிறது. 1990ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில்
இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த அதிகாரிகள் நால்வர் உட்பட
15 காவல்துறையினருக்கு பாராட்டத்தக்க பணிக்கான காவல்
பதக்கம் வழங்கப் பரிந்துரைக்கப்பட்டது. இவர்களில்
(காவல்துறை துணைத் தலைவர் பதவித் தரத்திலுள்ள) இந்திய
காவல் பணி அதிகாரி ஒருவர், காவல்துறை கூடுதல் கண்காணிப்
பாளர் ஒருவர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள்
இருவர், காவல்துறை ஆய்வாளர்கள் இருவர், காவல்துறை
உதவி ஆய்வாளர் ஒருவர், காவல்துறை தலைமைக் காவலர்
ஒருவர் ஆகியோருக்கு இந்திய அரசு இப்பதக்கங்களை
வழங்கியது. 1990ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது
இந்திய காவல் பணி அதிகாரிகள் இருவர் உட்பட 4 பேருக்கு
தகைசால் பணியாற்றியமைக்காக குடியரசுத் தலைவர்
காவல் பதக்கம் வழங்கப்பட பரிந்துரைக்கப்பட்டதில், ஒருவருக்கு பாராட்டத்தக்க பணி
இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது.

[1991 செப்டம்பர் 23

யாற்றியமைக்காக பதக்கம் வழங்க இந்திய காவல் பணி அதிகாரிகள் நால்வர் உட்பட 15 பேருக்குப் பரிந்துரை செய்யப் பட்டதில், துணைத் தலைவர் பதவித்தரத்திலுள்ள இந்திய காவல் பணி அதிகாரி ஒருவர், காவல்துறை துணைக் கண்காணிப் பாளர் மூவர், காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவல்துறை தலைமைக் காவலர்கள் இருவர், காவல்துறைக் காவலர் ஒருவர் ஆகியோருக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது. மாநில அரசு பரிந்துரை செய்தனுப்பியவர்கள் நீங்கலாக தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டு இந்திய அரசில் முகமைப் பணியி லுள்ள காவல்துறை கண்காணிப்பாளர் பதவித் தரத்தைச் சேர்ந்த இந்திய காவல் பணி அதிகாரி ஒருவருக்கும் 1990ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின்போது பாராட்டத் தக்க பணியாற்றியமைக்கான காவல் பதக்கம் வழங்கப்பட்டது.

## (vi) தமிழ்நாடு காவலர் நலநிதி :

24. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் அனைத்து சார்நிலைப் பணியாளர்களும் இடர் நிலையில் உதவிபெறவும் மேம்பாடடையவும் 1957ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவலர் நல நிதி என்ற துறை நலநிதி ஒன்றை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது. இந்நிதியில் தாமாகவே சேர விரும்பும் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ரூ. 4 முதல் ரூ. 28 வரையிலான ஆண்டுச் சந்தாத் தொகை மூலமும், காவல் துறை அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகை மூலமும் இந்நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது. இதைத் தவிர, அரசு, ஆண்டு மானியத் தொகையாக 1985ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 5 இலட்சம் வழங்கி வருகிறது.

25. இந்நிதி பின்வரும் காரியங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது :—

(1) இதன் உறுப்பினர்களைச் சார்ந்திருப்பவர்களின் ஈமச் சடங்குகள் குறித்த செலவுக்காக விருப்ப மானியம் வழங்குதல். (ரூ. 200.)

(2) இறந்த காவல் துறை பணியாளரின் விதவை
அவரைச் சார்ந்திருப்போருக்கு இறந்த பணியாளரின் பதவித்
தரத்திற்கு ஏற்ப ரூ. 200 முதல் ரூ. 700 வரை குடும்ப
நிவாரணத் தொகை வழங்குதல்.

(3) எலும்புருக்கி நோய், புற்றுநோய், தொழுநோய்
போன்ற நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்ட உறுப்
பினர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.



1991 செப்டம்பர் 23]

(4) காவலர் குடியிருப்புகளில் உள்ள படிப்பகங்களுக்கு
நாளிதழ்கள், பத்திரிகைகள் வாங்க ஆண்டொன்றுக்கு
ரூபாய் 500 வீதம் வழங்குதல்.

(5) காவல் துறையில் பணியாற்றும் சார்நிலைப் பணி
யாளர்களின் குழந்தைகள் கல்லூரிகளிலும் பல் தொழில் பயிற்சிப்
பள்ளிகளிலும் உயர் கல்வியைத் தொடரும் வகையில் அவர்
களுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்குதல், தமிழ்மொழியைப்
பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர் பட்டப்படிப்புகளுக்கு
ஓராண்டிற்கு படிப்புதவித் தொகை ரூ. 500 என்றும் தொழிற்
கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ. 1,500 என்றும் வழங்கப்படு
கிறது.

(6) ஆண்டு வருவாயில் 10 சதவீதத் தொகை தமிழ்
நாடு காவல் துறையினர் குடும்பங்கள் நல அமைப்பு நிதிக்கு
வழங்கப்படுகிறது.

(7) பணியிலிருக்கும்போது இறந்துபோகும் காவல்
துறையினர் அவர்களுடைய பதவித்தரங்கள் மற்றும்
ஏனைய ஆதாரங்களிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் நிவா
ரணம் எதையும் கணக்கில் கொள்ளாமல், அவர்களுடைய
குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 2,000 வழங்கப்படு
கிறது. 1990 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.
1,52,250.00 செலவிடப்பட்டுள்ளது. இதனால், 763 பேர்
பயனடைந்துள்ளனர்.

## (VII) தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு நினைவு படிப்புதவித் தொகை :

26. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவுப்
படிப்புதவித் தொகை நிதி காவல் துறையில் பணியாற்றும்
சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகளில் தகுதிவாய்ந்த
குழந்தைகளுக்கு அவர்கள் கல்லூரி அளவில், உயர்கல்வி மற்
றும் தொழில் நுட்பக் கல்வியைத் தொடரும் வகையில்
ஆண்டுப் படிப்புதவித் தொகை வழங்குவதற்கென்றே உள்
ளது. இந்நிதிக்கான வருவாய் ஆதாரம், ஒட்டுமொத்த
சந்தாத் தொகைகளும், கொடையுள்ளம் படைத்தவர்களிட
மிருந்து பெறப்படும் ஆண்டு அன்பளிப்புத் தொகைகளும்
ஆகும். இத்திட்டத்தின்கீழ் 716 மாணவர்களுக்கு 3,87,885
ரூபாய் படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டது.

[1991 செப்டம்பர் 23

## (viii) தமிழ்நாடு காவல்துறையினர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் :

27. காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக நிருவாகப் பணியாளர்களின் குடும்பத்தினர் துணை வருவாய் பெறுவதற்கும், பொழுதுபோக்கு வசதிகள், கல்வி, மருத்துவ வசதிகள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் இயலும் வகையில், அவர்களிடையே நலப்பணிகளைத் தொடங்கி, மேம்படுத்தி ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1990 ஆம் ஆண்டில் காவல் துறைப் பணியாளர்களின் குடும்பத்தினர், நூல் நூற்றல், தையல், பாய் பின்னுதல், தரைக்கம்பளம் நெய்தல், தீக்குச்சித் தயாரித்தல், பால்பண்ணை, கோழிப்பண்ணை வைத்தல் முதலியவை போன்ற திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டனர்.

(அ) 20 கூட்டுறவுச் சங்கங்களும் சிறு தொழில் பிரிவுகளும் உள்ளன. இவற்றில் காவல்துறைப் பணியாளர்களின் குடும்பங்கள், பணியன்கள், காலுறைகள், நெடுநீள் அடி யற்ற காலுறைகள், சர்ஜ் துணியிலான தொப்பிகள், கொசு வலைகள், காற்பட்டிகள், தரைக்கம்பளங்கள், விரிப்புகள், கூடைகள், பாலிதீன் பைகள் முதலியவை போன்ற பொருள் களைத் தயாரிக்கின்றன.

(ஆ) ஆவடி மற்றும் மதுரையில் இரண்டு கூட்டுற வுப் பால்பண்ணைகளும், விருதுநகரில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்றும் உள்ளன. இராமநாத புரம் மாவட்டத்தில் பால் பண்ணைகள் செயல்படுகின்றன. இவ்வாறாக, காவல்துறையினரின் குடும்பங்கள், தங்கள் வருமானத்தைப் பெருக்கும் வகையில் கறவை மாடுகளை வளர்க்கவும் காய்கறித் தோட்டங்களை ஏற்படுத்தவும் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

(இ) சென்னை, இந்தியத் தொழில் நுட்பவியல் நிறு வனம் மற்றும் தொழில்கள் வணிகத்துறை இயக்ககம் ஆகியவற்றின் உதவியுடன், காவல் துறைப் பணியாளர் களின் குழந்தைகள், மின்னணுவியல் கருவிகளைக் கையாள வும், தொலைக்காட்சிப் பெட்டிகள், கணக்கிடு பொறிகள் பாகங்கள் ஆகியவற்றை இணைக்கும் பணியில் பயிற்சி பெறவும், தமிழ்நாடு காவல் துறையினர் கணக்கிடு பொறி தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட் டது. கணக்கீடு பொறி பாகங்களைத் தயாரிக்கவும், கவால் துறைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கணக் கீடு பொறிப்பணியில் பயிற்சி பெறுவதற்கும் திட்டம் ஒன்று உள்ளது.



1991 செப்டம்பர் 23]

(ஈ) அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் அளித்த
பணிகளை, தமிழ்நாடு காவல் துறையினர் டயர் புதுப்பிக்
கும் தொழில் கூட்டுறவுச் சங்கம், தன்னிடமுள்ள 30 உறுப்
பினர்களைக் கொண்டு நிறைவேற்றியுள்ளது.

(உ) தமிழ்நாடு காவல் துறையினர் விளையாட்டு
பொம்மைகள்-விளையாட்டுப் பொருள்கள் தொழில்
கூட்டுறவுச் சங்கம் 20 உறுப்பினர்களுடனும், தமிழ்நாடு காவல்
துறையினர் உலகோப்பற்றவைப்புத் தொழில் கூட்டுறவுச்
சங்கம் 30 உறுப்பினர்களுடனும் சென்னை புறநகர்ப் பகுதியில்
செயல்படுகின்றன.

(ஊ) சிவகாசியிலும் மணிமுத்தாறிலும் உள்ள தீக்
குச்சித் தயாரிப்புத் தொழிற்பிரிவுகளும் மற்றும் சென்னை
யிலுள்ள புத்தகம் கட்டும் பிரிவுகளும், காகித உறைகள்
தயாரிக்கும் பிரிவுகளும், 1989 ஆம் ஆண்டில் காவல் துறைப்
பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்
புகள் அளித்துள்ளன.

## VI. காவல் படையை நவீனப்படுத்தல்.

நவீனப்படுத்துவது என்பது ஒரு
28. காவல் படையை நவீனப்படுத்தும் திட்டம்
தொடர் நடைமுறையாகும். நிதியுதவியுடனும் அவ்
மாநில நிதிகளுடன் மத்திய அரசின் இப்போது தமிழ்
வப்போது செயற்படுத்தப்படுகிறது. தீவிரவாதிகள் ஆகியோரின்
நாட்டில் இலங்கைப் போராளிகள், அவர்களுடைய பயங்கர நட
அச்சுறுத்தல், தமிழ்நாட்டில் கருத்தில் கொண்டு விரிவான
வடிக்கைகள் ஆகியவற்றைக் தனி முக்கியத்துவமும் அதிக
செயற் குறிப்பைத் தயாரிக்க இலங்கைப் போராளி
முன்னுரிமையும் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில்
களின் | தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்
கடந்த இரு ஆண்டுகளாக அளவுக்கு அதிகமாக போராளிகளின்
துள்ளன. கடற்கரையோர மாவட்டங்களில் இங்கிருப்பது.
நடமாட்டம், தமிழ் அகதிகள் அதிக அளவில் ஆகியவை
போராளிகள் மேற்கொண்ட சதித்திட்டங்கள் பொதுவாக
குறிப்பாக தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுருத்தல்
இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்கும் கடும் திருநாட்
தருவதாக உள்ளன. 21-5-1991 அன்று இந்தியத் அவர்கள்
டின் முன்னாள் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி முறை
கொடூரமாக படுகொலை செய்யப்பட்டது கொடிய செயல்பட்ட
யிலும், இரக்கமற்ற முறையிலும் அவர்கள் தமிழ்நாட்டின் பல
தற்கு எடுத்துக்காட்டாகும். இது தவிர ஆபத்தாக
முக்கியமான தலைவர்களின் பாதுகாப்பிற்கும் இத்
உள்ளது. இலங்கைத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்

தலைவர்களின் உயிருக்கு ஆபத்தாகவும், கொலை மிரட்டலாகவும் இருந்து வருகின்றன. புதியதாக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் போராளிகளின் நடவடிக்கைகள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், அவர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தல் குறையவில்லை என்பதோடு, அது தொடர்ந்து நிலையான அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. போராளிகள்/தீவிரவாதிகள் மிகவும் நவீன, சக்திவாய்ந்த, நுட்பமான ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகையில் நாம் வாலாயமாகப் பயன்படுத்தும், ஆயுதங்கள் எவ்வகையிலும் அவற்றிற்கு இணையாகாது என்பதை இது தொடர்பாக குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். வேறு வகையில் கூறுவோமாயின், நாம் பயன்படுத்திவரும் ஆயுதங்கள், அவற்றிற்கு நிகரானவை அல்ல. மேலும் போராளிகள் அவர்களுடைய குறிக்கோளை நிறைவேற்றுவதில் மிகவும் உறுதியாக உள்ளவர்கள், தைரியம் உடையவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள், அவர்களுடைய செய் திறமையையும், நடவடிக்கைகளையும் தடுக்க வேண்டுமென்றால், தமிழ்நாட்டிலுள்ள காவல் படையினருக்கு நவீன ஆயுதங்கள், சாதனங்கள், பயிற்சி அடிப்படை வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் காவல் படையை வலுப்படுத்துவதும், நவீனப்படுத்துவதும் முதன்மையானதும் அவசியமானதுமாகும்.

29. இந்தச் சவாலை உடனடியாக எதிர் கொள்ளவும், வருங்காலத்தில் காவல் துறையினரின் திறமையையும், சாதனையையும், மேம்படுத்தவும், பின்வரும வகையில் காவல் துறையை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும் தமிழ்நாடு அரசு கருதியுள்ளது :

1. ஆயுதங்கள்
2. வெடிமருந்துகள்
3. எளிதில் இயங்குதல்
4. அதிரடிப்பயிற்சி
5. கூடுதல் படைகள்
6. வெடிகுண்டுகளைச் செயலற்றவையாக்குவதற்கான பயிற்சியும் சாதனமும்.
7. பாதுகாப்புச் சாதனம்
8. மேம்படுத்தப்பட்ட செய்தித் தொடர்பு
9. பயிற்சி.

30. இச் செயற்குறிப்புக்கு ரூ. 80.45 கோடி தேவைப்படலாம். தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் புதுடில்லிக்குச் சென்று, பிரதமரையும், உள் துறை அமைச





சரையும் சந்தித்து இந்நிலையைப் பற்றி விளக்கமாகக் கூறி, இதற்காக நிதியுதவி கோரியுள்ளார். 100 சதவீத மானிய அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு உதவுமாறு விரிவான செயற்குறிப்பு ஒன்றும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## VII. குற்றம்.

31. சமூகச் சூழ்நிலைகள், சமூகத்தின் பார்வை, மனப் பான்மை, நடத்தை முதலியவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ள தாலும், குற்றவாளிகள் பயன்படுத்தும் உத்திகள், கருவிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாலும், குற்றங்களைக் கண்டு பிடிப்பதும், தடுப்பதும், கடினமானதாகவும், சிக்கலானதாகவும் உள்ளது. குற்றங்களை வெற்றிகரமாகப் புலனாய்வு செய்வதற்கும், கண்டுபிடிப்பதற்கும், அதிகப் பயிற்சியும், தொழில் திறமையும் வேண்டியுள்ளது. காவல் படையினர் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு ஏற்ப அவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள, அவர்களுக்கு குற்றம்/குற்றப்புலனாய்வுப் பணியில் நிறுவன நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. காவல் துறையினர் விரைந்து பயனுள்ள நடவடிக்கை எடுத்ததன் மூலம் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன. குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் காவல் துறையின் சாதனையைப் பின்வரும் அட்டவணையிலிருந்து காணலாம் :—

| | 1989 | | 1990 | |
|---|---|---|---|---|
| குற்றத் தலைப்பு. | தெரிவிக்கப் பட்டவை. | கண்டுபிடிக்கப் பட்டவை. | தெரிவிக்கப் பட்டவை. | கண்டுபிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆதாயத்திற்காக செய்யப் பட்ட கொலைகள். | 76 | 31 | 86 | 38 |
| கொள்ளை | 96 | 28 | 149 | 42 |
| வழிப்பறிக் கொள்ளை. | 414 | 199 | 543 | 231 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வீட்டை உடைத்துத் திருடியது. | 8,208 | 4,314 | 8,253 | 4,227 |
| பெரும் திருட்டு. | 21,738 | 15,598 | 25,204 | 17,607 |
| சிறு திருட்டு | 1,646 | 1,417 | 1,728 | 1,637 |
| கால்நடை திருட்டு. | 745 | 650 | 770 | 676 |
| மொத்தம் | 32,923 | 22,237 | 36,733 | 23,923 |
| கண்டுபிடிக்கப்பட்டதன் சதவீதம் | | | 1989 | 67.5 |
| | | | 1990 | 65.1 |

கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவீதம் அனைத்திந்திய சராசரியைவிட அதிகமாகும்.

## VIII. சட்டம்-ஒழுங்கு.

32. தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டில் பொதுவாக சட்டம்-ஒழுங்கு தொடர்பாக, பின்வரும் சிலசம்பவங்களை குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

### (i) சாதிக் கலவரங்கள் :

33. திண்டுக்கல் மாவட்டத்திற்கு ''காயிதே-மில்லத்'' மாவட்டம் என்று பெயரிடப் பட்டதைக் கண்டித்து, இந்து முன்னணி 24-3-1990 அன்று திண்டுக்கல்லில் ஊர்வலமும் மாநாடும் நடத்தியது. காவலர் தலையிட்டு, நிலைமையைக் கட்டுப் படுத்தினர்.

2-9-1990 அன்று திருவல்லிக்கேணி, ஐஸ் ஹவுஸ் பகுதிகளில் சென்ற விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் பெரும் சாதிக் கலவரமாக மாறி இறுதியில் காவலர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய கட்டாய மேற்பட்டது. ஆனால், உடனடியாக நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.




10-10-1990 அன்று தேன்கனிக் கோட்டையில் இந்து தீவிரவாதிகள் (விஜயாத்திரா) ராம் ஜோதி ரதத்துடன் காவலர் கட்டுப்பாட்டை மீறி முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதி வழியே செல்ல முயற்சித்ததால் வன்முறை வெடித்தது. உடனே காவல் துறையினர் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

### (ii) காவலர் துப்பாக்கிச்சூடு :

34. பின்வரும் சம்பவங்களில் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் ஏற்பட்ட சாதிக் கலவரங்களைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியிருந்தது :—

| நாள். (1) | இடம். (2) | மாவட்டம். (3) |
|---|---|---|
| 10-2-1990 | நம்பியூர் | கோயம்புத்தூர் |
| 3-4-1990 | திருக்கோயிலூர் | தென் ஆர்க்காடு |
| 14-4-1990 | ஆம்பூர் | வட ஆர்க்காடு அம்பேத்கர். |
| 19-4-1990 | சுந்தரராஜபுரம் | காமராஜர் |
| 19-4-1990 | நத்தம் | அப்போதைய திண்டுக்கல் காயிதே மில்லத். |
| 15-7-1990 | மொரப்பூர் | தருமபுரி |
| 19-8-1990 | ஊத்தாபுரம் | மதுரை ஊரகம் |
| 2-10-1990 | சேத்தியாதோப்பு | தென் ஆர்க்காடு |
| 16-11-1990 | மஞ்சூர் | நீலகிரி |

### (iii) வெடிகுண்டு விபத்து :

இந்த மாநிலத்தில், 1990 ஆம் ஆண்டில் தற்செயலாக ஏற்பட்ட 18 வெடிகுண்டு விபத்துக்கள் உட்பட மொத்தம் 57 (ஐம்பத்தேழு) வெடிகுண்டு விபத்துக்கள்/வெடிவிபத்து சம்பவங்கள் ஏற்பட்டன. காவல்துறையினர் தலையிட்டு

நிலைமையைக் கட்டுப்படுத்தினர். காவல்துறையினரால் கட்டுப் படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க வெடிவிபத்துக்கள் வருமாறு :—

| நாள். | இடம். | மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 14-6-1990 | பூடியார்புரம் | சிதம்பரனார் |
| 20-9-1990 | தூத்துக்குடி | சிதம்பரனார் |
| 24-5-1990 | சாத்தூர் | காமராஜர் |
| 1-10-1990 | பெண்ணகரகம் | தருமபுரி |
| 9-12-1990 | கிருஷ்ணகிரி | தருமபுரி |
| 6-2-1990 | திருநின்றவூர் | அப்போதைய செங்கை அண்ணா (கிழக்கு) |
| 30-11-1990 | ஆதனூர் | அப்போதைய செங்கை அண்ணா (மேற்கு). |

36. தமிழ்நாடு காவல் துறையினரிடம், வெடி குண்டுகளை [illegible], செயலிழக்கச் செய்து அப்புறப்படுத்து வதற்கும், வெடிகுண்டுகளைக் கையாள்வதற்கும் போதிய சாதனங்கள் இல்லை. பயிற்சி சாதனங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு காவல் துறையினர் பெரு மளவில் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளனர். தமிழ்நாட்டில், தீவிரவாதிகள், இலங்கைப் போராளி கள் ஆகியோரின் நடவடிக்கைகளினால் வெடிகுண்டு விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதால் அதற்கேற்ப காவல் துறையினரைத் தகவமைத்துக் கொள்வது இன்றியமை யாததும், தவிர்க்க முடியாததாகவும் ஆகும். ஆகவே, வெடிகுண்டை செயலிழக்கச் செய்து, அப்புறப் படுத்தும் காவலர் படையை அமைத்தல், மோப்ப நாய்கள் கொண்ட பிரிவுகள் சிலவற்றை அமைத்தல், தமிழ்நாடு காவல் துறை காவல் பணியாளர்களுக்கு தேசியப் பாதுகாப்புப் படைப் பயிற்சி நிலையத்தில் உரிய பயிற்சி அளித்தல் ஆகியவை நடைபெற்று



வருகின்றன. கண்ணி வெடிகளை அகற்றும் பயிற்சி பெங்களூரிலுள்ள (எம்.ஈ.ஜி.) இராணுவப் பொறியாளர் பாதுகாப்புப் பொறியியற் கூடத்திலும், தேசிய பாதுகாப்புப் பணிக்கான அதிரடிப்படை வீரருக்குரிய பயிற்சி, பெரு மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பயிற்சி ஆகியவை உட்பட ஏனைய பயிற்சித் திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

37. இந்த மாநிலத்தில், இலங்கைப் போராளிகளுடனும், தீவிரவாதிகளுடனும் இடதுசாரித் தீவிரவாதிகள் சேர்ந்து கொண்டு பெருமளவில் வன்முறைகளில் ஈடுபட்டனர். இத் தகைய நடவடிக்கைகள் தற்போது தடுக்கப்பட்டிருந்தாலும் அவை, இன்னும் குறையவில்லை. இத்தகைய தீவிரவாதி களின் வன்முறைகளை எதிர்த்து அடக்கிவிடும் வகையில், மாநில சிறப்புக் காவல் பிரிவுகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது. இந்த மாநிலத்தின், 9 தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவுகள் ஒவ்வொன்றிலும், 1 காவல் துறை ஆய்வாளர், 4 துணை ஆய்வாளர்கள், 7 தலைமைக்காவலர்கள், 36 காவலர் களைக் கொண்ட (சேமக் காவல் துணை - ஆய்வாளர் ஒருவர், தலைமைக்காவலர் ஒருவர், 6 காவலர்களும் அடங்கும்.) தீவிர வாதிகளை எதிர்த்து அடக்கிவிடும் படைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக, ஒரு பிரிவு, ஒவ்வொரு காலாண்டிலும் 3 மாதங்கள் பயிற்சி வகுப்பிற்கு அனுப்பப்படும். அதனைத்தொடர்ந்து இவர்கள் தேசியப் பாது காப்புப் பயிற்சியுடன் இணைக்கப்பட்டு 6 மாதகாலம் பணிபுரிவர்; இத்திட்டத்தின்கீழ், மொத்தம் 9 படைப்பிரிவுகளிலிருந்தும் 9 பிரிவு களுக்கும் பயிற்சி அளிக்கப்படும். இதற்கிணங்க அரியானா மாநிலம் மனேசரிலுள்ள பாதுகாப்புப் படை பயிற்சி நிலையத் தில் 15-7-1991 அன்று தொடங்கப்பட்டுள்ள பணியாளர் பாதுகாப்பு அலுவலர்கள் பயிற்சிக்காக 43 அதிகாரிகளும் (காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் இருவர், ஆய்வாளர்கள் இருவர், 38 துணை ஆய்வாளர்கள்) வெடி குண்டுகள் பற்றி துப்புத்துலக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்து அப்புறப் படுத்தும் பயிற்சிக்காக, ஆய்வாளர் ஒருவர், 10 துணை ஆய்வா ளர்கள், 4 தலைமைக்காவலர்கள் ஆகியோரும் அனுப்பப் பட்டுள்ளனர்.

## (iv) தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் :

38. தமிழ்நாட்டில், இடதுசாரித் தீவிர வாதிகளின் நடவடிக்கைகள் பெருமளவில் அதிகரித்து வருகின்றன. எனினும் காவல்துறை அவர்களைத் திறமையாகக் கட்டுபடுத்திக் கொண்டிருக்கிறது.

(v) தொழிலாளர் அமைதியின்மை :

39. பெருங்களத்தூரிலுள்ள ஸ்டேண்டர்டு மோட்டார் நிறுவனத்திலும் ஓசூரிலுள்ள டி.வி.எஸ். சுசுக்கி தொழிற்சாலையிலும் எழுந்துள்ள தொழிலாளர் அமைதியின்மை தொடர்பான சூழ்நிலையைக்கட்டுப்படுத்த காவல் துறையினர் தலையிட்டு, தேவையான நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## IX. தற்போதைய அரசு பொறுப்பேற்ற பின்னர் கையாளப் பட்ட சில முக்கிய பரபரப்பூட்டிய வழக்குகள்.

40. திண்டுக்கல், மேற்குத் தேரடித் தெருவில், 20-6-1991 அன்று பட்டாபி செட்டியார் என்கிற வணிகர் ஒருவர் கொலை செய்யப்பட்டு ரூ. 300 திருடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கொலை திண்டுக்கல் நகர மக்களுக்குப் பீதியை ஏற்படுத்தியது. காவல் துறையினரின் விரைந்த திறமையான புலன் விசாரணையின் காரணமாக, நான்கு இளம் குற்றவாளிகளான பேகம்பூரைச் சேர்ந்த அப்துல் ரகுமானும் (14) அவனது மூன்று கூட்டாளிகளும் 31—7—1991 அன்று கைது செய்யப் பட்டனர். இவ் வழக்கு, விசாரணையிலுள்ளது.

41. ஈரோடு, பன்னீர் செல்வம் பூங்காவிற்கு அருகில், 28—7—1991 அன்று, ஐந்து பேர்கள் டி.எம்.ஆர். 1455 ஆம் எண்ணுள்ள அம்பாசிடர் டாக்சியில் பவானி சாகருக்குச் சென்றனர். வழியில், பயணிகள் அந்தக்கார் ஓட்டுநர் பாலு என்பவரைக் கொலை செய்துவிட்டு வண்டியுடன் திசைரென்று மறைந்துவிட்டனர். உடனடியாக தளராத புலன் விசாரணையின் காரணமாக இலங்கையைச் சேர்ந்த குற்றவாளிகளான சுந்தரமும், அவனது நான்கு கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டு 6—8—1991 அன்று, திருடப்பட்ட கார் கைப்பற்றப்பட்டது. இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

42. சின்னசேலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காட்டுக்கோட்டை, பெரியதிருவத்தூரில், 28—2—1991 அன்று, அடையாளம் தெரியாத ஏழு குற்றவாளிகள், கத்தி, கம்புகள் போன்ற ஆயுதங்களுடன், புகார் கொடுத்தவரான தங்கவேலு என்பவரின் வீட்டில் நுழைந்து, தங்க நகைகளையும், ரொக்கம் ரூ. 1,200ஐயும் (மொத்த மதிப்பு ரூ. 3,800) கொள்ளையிட்டனர். காவல் துறையினர் அறிவியல் ஆராய்ச்சி முறையில் புலன் விசாரணை நடத்தி, இருளர் பாலு, இருளர் செல்வம் ஆகியோரை 6—8—1991 அன்று கைது செய்து திருடப்பட்ட சொத்துகளை மீட்டனர். அவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், கடலூரிலும் இதே போன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த



இருளர் பேச்சிமுத்து என்பவரின் தலைமையிலிருந்த 21 பேர்களைக் கொண்ட கும்பல் ஒன்று பிடிபட்டது. அந்தக் கும்பலின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள திருடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டன. அனைத்து வழக்குகளும் விசாரணையிலுள்ளன.

43. பொள்ளாச்சியிலுள்ள சதீஸ் மோட்டார் ஓர்க்ஸ் நிறுவனத்தில் 24-7-1991 அன்று, கேரளாவைச் சேர்ந்த குற்றவாளிகளான இராஜுவும் அவனது கூட்டாளிகள் நால்வரும் துப்பாக்கி முனையில் இராஜ்குமார் என்பவருக்குச் சொந்தமான கே.ஆர்.ஓ. 9047ஆம் எண் அம்பாசிடர் காரைத் திருட முயன்றனர். சில மணி நேரத்துக்குள் குற்றவாளிகள், கைது செய்யப்பட்டனர். கேரளாவைச்சேர்ந்த இந்த கார் திருட்டுக் குற்றவாளிகள் கோயம்புத்தூர் ஊரக மாவட்டத்தில் நடைபெற்ற இதே போன்ற நான்கு கார் திருட்டு வழக்குகளிலும், கேரளா மாநிலத்தில் நடைபெற்ற 4 கார் திருட்டு வழக்குகளிலும் சம்பந்தப்பட்டிருந்தனர். அவர்களின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், ரூ. 8 இலட்சம் மதிப்புள்ள திருடப்பட்ட கார்கள் மீட்கப்பட்டன. எல்லா குற்றவாளிகளும் குண்டர்கள் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

44. சித்தலப்பாக்கம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட இராதா நகரில், 1-7-1991 அன்று, அடையாளம் தெரியாத குற்றவாளி ஒருவன் துப்பாக்கியுடன், புகார் கொடுத்தவரின் வீட்டில் நுழைந்து, தங்க நகைகளையும், ரொக்கத்தையும் அவரிடமிருந்து கொள்ளையடித்தான். அவற்றின் மதிப்பு ரூ. 2,450 ஆகும். தீவிர புலன் விசாரணையின் காரணமாக 31-7-1991 அன்று இலங்கையைச் சேர்ந்த குற்றவாளியான தாபா என்கிற சுரேஷ் கைது செய்யப்பட்டார். இந்தக் குற்றவாளி, கொள்ளை, திருட்டு, சங்கிலி பறிப்பு ஆகிய வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்று கண்டுபிடிக்கப்பட்டு, ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

45. சென்னை, அண்ணா நகர், நான்காவது தெருவில் 26-7-1991 அன்று, அடையாளம் தெரியாத குற்றவாளிகள் சிலர், ரூ. 20,000 மதிப்புள்ள டி.எஸ்.ஐ. 1487 ஆம் எண் எமகா மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருடி விட்டனர். உடனடியாகச் செய்த தீவிர புலன் விசாரணையின் காரணமாக, சாம்ராஜ் குமார் என்பவரும், அவரின் ஏழு கூட்டாளிகளும் (நகரிலுள்ள கல்லூரி மாணவர்கள்) கைது செய்யப்பட்டனர். அவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், ரூ. 1,50,000 மதிப்புள்ள 5 மோட்டார் சைக்கிள்களும், 3 வீடியோ புகைப்படக் கருவிகளும் மீட்கப்பட்டன. அனைத்து வழக்குகளும் விசாரணையிலுள்ளன.

46. அருப்புக்கோட்டை சண்முகம் தெருவில், 29-7-1991 அன்று அருப்புக்கோட்டையைச் சேர்ந்த ஜெயமுருகன் என்கிற குற்றவாளி புகார் கொடுத்த அரங்கசாமி என்பவர் வீட்டை கள்ளச் சாவி ஒன்றால் திறந்து தங்க நகைகள், ரொக்கம் ரூ. 21,900 (மொத்தம் மதிப்பு ரூ. 57,900)ஐ திருடி விட்டார். அறிவியல் ஆராய்ச்சி முறை புலன் விசாரணையின் காரணமாக அதே நாளன்று குற்றவாளி கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

47. தர்மபுரி மாவட்டம், சூலகிரி காவல்நிலைய எல்லைக் குட்பட்ட ஏரடப்பள்ளியில் 27-6-1991 அன்று தின்ன மாரையன், முனுசாமி ஆகிய குற்றவாளிகள் ஜனகம்மா கோயிலில் பூட்டை உடைத்து நுழைந்து ரூ. 15,000 மதிப்புள்ள கங்கம்மா சுவாமி (பஞ்சலோகச் சிலையை) திருடி விட்டனர். உடனடியான புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி கைது செய்யப்பட்டு சுவாமி சிலை மீட்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணையிலுள்ளது.

48. 31-7-1991 அன்று ஓடம்போக்கி பாலம் அருகே ஓடிக்கொண்டிருந்த 6175 ஆம் எண் சென்னை-காரைக்குடி கம்பன் விரைவு இரயில் வண்டியில், அடையாளம் தெரியாத மூன்று குற்றவாளிகள், காதர் என்பவரிடமிருந்து ரூ. 3 இலட்சம் ரொக்கம் அடங்கிய பை ஒன்றை பறித்துச் சென்றனர். காவல் துறையினர் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்ததன் காரண மாக குற்றஞ் சாட்டப்பட்ட இரவீந்திரனையும், தஞ்சாவூரைச் சேர்ந்த அவருடைய கூட்டாளிகள் இருவரையும், சம்பவம் நடந்த சில மணி நேரங்களில் கைது செய்து, களவுபோன ரொக்கத் தொகை முழுவதையும் கைப்பற்றினர். இந்த வழக்கு விசாரணையில் உள்ளது.

49. 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், தஞ்சாவூர் மாவட்டத்தில், பத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சடகோப பிள்ளை என்பவரின் மகனான திரு. இராமமூர்த்தி என்பவர் கோயில் நிலத்தில் புதைப்பட்டிருந்த நடராசர் திருவுருவச் சிலையையும், ஏனைய சில திருவுருவச் சிலைகளையும் கண் டறிந்தார். இந்த நடராசர் திருவுருவச் சிலை அங்கிருந்து எடுக்கப்பட்ட பின்னர், தொடக்கத்தில், ரூ. 10,000-திற்கு விற் கப்பட்டு, இதனைத் தொடர்ந்து இத்திருவுருவச் சிலை இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டு " பம்பர் டெவலப்மென்ட் கார்பரேசன் " (Bumper Development Corporation) என்னும் கனடா நாட்டு நிறுவனத்தால் ரூ. 25 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டு இலண்ட னிலுள்ள, பிரிட்டன் காவல் துறை அமைப்பு, ஸ்காட்லண்ட் யார்டு இந்த நடராசர் திருவுருவச் சிலையை " பம்பர் டெவலப்



மெண்ட் கார்பரேசனிடமிருந்து " கைப்பற்றி, தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறைக்கு தகவல் தெரிவித்தனர். பிரிட்டன் காவல் துறை அமைப்பு, இந்திய அரசோடும், தமிழக அரசோடும் இணைந்து, இந்தத் தெய்வத் திருவுருவச் சிலை பத்தூர் கிரா மத்திலுள்ள திருக்கோயிலைச் சேர்ந்தது என்பதை உறுதி செய்தது. இந்த தெய்வத் திருவுருவத் சிலையை மீட்க, காவல் துறையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர். இலண்டன் நீதிமன்றத்தில் நீண்ட காலமாக வழக்காடிய பின்னர், இந்த தெய்வத் திருவுருவச் சிலை, இங்கு கொண்டுவரப்பட்டு, 9-8-1991 அன்று பிரிட்டன் நாட்டு இந்திய தூதுவர் மூலம், இந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த தெய்வத் திருவுருவச் சிலை பத்தூர் கிராமத்தைச் சேர்ந்த விசுவ நாதசுவாமி திருக்கோயிலில் (இதன் சீரமைப்புப் பணி நடந்தேறி வருகிறது) முன்பிருந்த இடத்திலேயே பிரதிஷ்டை (நிலைபெறச் செய்யும்) செய்யும் வரையில் திருவாரூரில், தெய்வத் திருவுருவச்சிலை பாதுகாப்பு மையத்தில், பாது காப்பிற்காக வைக்கப்பட்டிருக்கிறது.

X. புதிய அரசு பதவியேற்ற பின்னர் மேற்கொண்ட குறிப்பிடத் தக்க சில சாதனைகள் :

50. இந்த அரசு பதவி ஏற்ற பிறகு காவல் துறை பணி யாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியைத் திறமை யாகவும், தொழில் முறையில் சிறப்பாகவும் செய்து முடிக்க, அவர்களுக்கு தெளிவான நெறிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. காவிரி நதி நீர் பிரச்சினை மீதான நடுவர் மன்ற இடைக்கால உத்தரவைக் கர்நாடக அரசு செயல் படுத்தாததையடுத்து, அதனை எதிர்த்து 26-7-1991 அன்று மாநில அரசு பொறுப் பேற்று நடத்திய முழு கதவடைப்பின்போது காவல்துறையினர் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கையும், முன் எச்சரிக்கை நடவடிக்கையும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்.

51. இலங்கைப் போராளிகள் / தீவிரவாதிகளைப் பொறுத்த வரை காவல் துறையினர் சட்டத்திற்குட்பட்டு உறுதியாகவும், எந்தவித அச்சமுமின்றி செயல்பட அவர்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக தமிழ்நாடு காவல் துறை யினரின் திறமையான செயல்பாட்டை போராளிகள் நன்குணர்ந் துள்ளனர். இப்போராளிகளின் நடவடிக்கைகளும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. மாநிலத்தில் கடற்கரை யோரப் பகுதிகளில், கள்ளக் கடத்தல்காரர்கள், போராளிகள் ஆகியோரின், நடவடிக்கைகளை ஒடுக்குவதிலும் காவல் துறையினர் வெற்றி பெற்றுள்ளனர். இது தொடர்பாக, கடற்கரையோரப் பகுதிகளில், நெடுகவுள்ள முக்கிய இடங்களில் நவீன ஆயுதங்கள் கொண்ட காவல்படைப் பிரிவினர் அடங்கிய 34 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. போராளி களின் ஊடுருவலை, குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள

கடல் வழியாக ஊடுருவுவதைத் தடுக்க மத்திய சேமக் காவல் படையும், தமிழ்நாடு சிறப்புக் காவலர்களும் அடங்கிய பத்து படைப் பிரிவுகள், கடற்கரையோரப் பகுதிகளில் நியமிக்கப் பட்டுள்ளன. போராளிகளை முழுவதுமாக அகற்றுவதற்கு, உள்ளடங்கியப் பகுதிகளிலும் மத்திய சேமக் காவல்படை கொண்ட இரு படைப்பிரிவுகள் மேற்கொண்டும் நியமிக்கப் பட்டுள்ளன. மேலும், இன்றியமையாப் பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர, பல சீர்பெரு மக்களின் (V. V, I. S.) பாதுகாப்பு குறித்து அச்சுறுத்துதல், சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற் படுத்துதல் போன்ற வன்முறை செயல்களில் தற்போது ஈடுபட்டுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கை களை ஒடுக்க, கடற்கரைப் பகுதிகள் கொண்ட எல்லா மாவட்டங்களிலும் கப்பல் ரோந்துக் காவல் படைகளை அமர்த்த அரசு வலியுறுத்தியுள்ளது. இச்செயல் நோக்கத்திற் காக, கடற்கரைப் பகுதிகள் கொண்ட மாவட்டங்கள் வகை-I, வகை-II என்று இரு வகைகளாகப் பிரிக்கப்படும். தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் கிழக்கு, தஞ்சாவூர் மேற்கு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் வகை I-ன் கீழ் அமையும். செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். கிழக்கு, மேற்கு, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னி யாகுமரி ஆகிய மாவட்டங்கள் வகை II-ன் கீழ் அமையும். கப்பற்படை காவல் நிலையங்களுக்கு, போதிய அளவு பணியா ளர்கள் நீர்செல்கலங்கள், படைக் கலங்கள் ஆகியவற்றிற்கு வகைசெய்யப்படும். கப்பற்படை காவலர்கள் 3 முறை மாற் றுப் பணிகளில், நாள் முழுவதும் காவல் பணி புரிவார்கள். சம் பந்தப்பட்ட மாவட்டத்தில் கடற்படைப் பகுதிகளிலுள்ள முக்கிய இடங்களில் கப்பற்படை ரோந்துக் காவல் நிலையங்கள் அமைக் கப்படும்.

52. காவலர்கள் ஒருங்கிணைந்து தொடர்ந்து நிலையான முயற்சி எடுத்ததன் மூலம் போராளிகள் காவலர்களின் அயராத கடுமையான நடவடிக்கையை தாக்குப்பிடிக்க முடியாமல் அதிர்ந்து, இடம் விட்டு இடம் ஓடி ஒளியத் தொடங்கி, மற் மாநிலங்களில் புகலிடம் தேடியுள்ளனர். காவல் துறையினர் வேட்டையாடிப் பிடித்ததில், சில முக்கிய போராளிகளைக் கைது செய்து, குற்றத்திற்குட்படுத்தும் பொருட்களையும் பெருமளவில் கைப்பற்றினர். உதாரணமாக, கோயம்புத்தூர், கரூர், திருச்சி ராப்பள்ளி போன்ற ஊர்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கி யிருந்த மறைவிடங்களிலிருந்து காவல் துறையினர் அண்மையில், பெருமளவிலான ஆயுதங்கள், வெடி குண்டுகள், மருந்துகள், வெடி மருந்துப் பொருட்கள் அவர்களின் வெளியீடுகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். போராளிகள் /திவிரவாதிகளின் செயல் பாடுகள் பற்றிய விவரங்கள், அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்ட பொருட்கள் ஆகியவை, காவல் துறையினர் மேற்கொண் டுள்ள பணியில் அவர்கள் அடைந்துள்ள வெற்றிக்குச் சான்று பகருவதாக விளங்கும்.



53. (i) கோயம்புத்தூர், இராமநாதபுரத்தில் இரு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தங்கியிருந்த வீட்டை, கோயம்புத்தூர் நகரக் காவல் துறையினர், 28-7-1991 அன்று முற்றுகை யிட்டனர். இந்தத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இருவரும் சையனைடு நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். இவர்கள் இருவரும் குணா, கிஷோர் என்று கண்டறியப்பட்டது. இந்த கிஷோர், முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த டிக்சன் என்று பின்னர் அடையாளங் காணப்பட்டார். கம்பியில்லாத் தந்திச் செய்தி அமைப்புகள், ஆவணங்கள் சிலவும், ஓரளவு அழிக்கப்பட்ட ரூபாய் நோட்டுகளும் இந்த வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டன.

(ii) உள்ளூர்வாசிகளும், இறந்த குணா, டிக்சன் ஆகி யோரின் கூட்டாளிகளுமான கோபாலகிருஷ்ணன் (ஓமியோபதி மருத்துவர்) பிரபாகரன் (Lab. Assistant) இராஜரத்தினம் ஆகி யோர் 5-8-1991 ஆம் நாளன்று, திருச்சியில், சமயபுரம் என்னு மிடத்தில் கைது செய்யப்பட்டனர். இவர்களுடைய இல்லத்தைச் சோதனையிட்டபோது, குற்றத்திற்குட்படுத்தும் பொருட்கள் சிலவும் தகவல் தொடர்பச் சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

(iii) திருச்சி, கரூர், செட்டிப்பாளையம் கிராமத்திலுள்ள ஒரு வீட்டைக் காவல் துறையினர் 17—8—1991 அன்று திடீர் சோதனையிட்டனர். தமிழ் ஈழ விடுதலைப் புலியான சங்கர் என்கிற வரதன், காவல் துறையினரை கத்தியால் தாக்க முயன்று, பின்னர் சையனைடு மாத்திரையை விழுங்கி தற்கொலை செய்து கொள்ளவும் முயன்றார். எனினும், காவல் துறையினர் அவர் அதனை விழுங்கமுடியாதபடி தடுத்து, அந்த சையனைடு குப்பி யையும் அவரிடமிருந்து எடுத்தனர். வரதன் என்ற குற்றவா ளிக்கு உடந்தையாக இருந்த, இலங்கையைச் சேர்ந்த "சுமதி" என்ற பெண்ணும் காவல் துறையினரால் பிடிக்கப்பட்டார். அந்த வீட்டிலிருந்து கம்பியில்லாத் தந்திச் செய்தி அமைப்பு களும், ரூபாய் நோட்டுகளும் கைப்பற்றப்பட்டன. மேற்ச் சொன்ன இடங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களின் விவ ரங்கள் வருமாறு :— 9 மி.மீ. அளவுள்ள 1 கைத் துப்பாக்கி. 34 துப்பாக்கிக் குண்டுகள், குண்டு இல்லாத 9 மி.மீ. அளவுள்ள 4 காலி கைத் துப்பாக்கிகள், 85 மி.மீ. அளவுள்ள தோட்டாக்கள், பிளாஸ்டிக்கால் ஆன 7,650 கை எறி குண்டுகள் (Hand Grenades), 3 சான்யோ டிரான்ஸ் ரிசீவர்கள் (Sanyo Trans Recivers) பாதி எரிந்து போன கம்பியில்லாதத் தந்திச் செய்தி அமைப்பு ஒன்று, கம்பியில்லா டிரான்ஸ்மீட்டர் ரிசீவர் ஒன்று, கம்பியுடன் கூடிய ஸ்டீரியோ ஹெட்போன் (Stereo Head Phone) ஒன்று, கம்பியில்லாத் தந்தி அமைவு (வீட்டிற்குள் பயன்படுத்தும் அமைவு) ஒன்று, ஏரியல் மேட்சிங் யூனிட் ஒன்று, மாடல் ஐ.சி. 2 ஜி. டிரான்ஸ் ரிசீவர் ஒன்று, டிரான்ஸ் ரிசீவர் ஏரியல்ஸ் இரண்டு, 6ஆம் எண்ணுள்ள வெடியை வெடிக்க உதவும் 10,000

கருவிகள், 5,600 பாட்டரி செல்கள், ரொக்கம் (தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முத்திரைக் கொண்ட நாணயங்கள், அச்சுகள்) ரூ. 62,000, ரொக்கம் ரூ. 9,100, ரூ. 5,600 மதிப்புள்ள எரிந்த ரூபாய் நோட்டுகள், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள மருந்துப் பொருட்கள், மாருதி வேன் ஒன்று, மாருதி ஜிப்சி ஜீப் ஒன்று, யமஹா மோட்டார் சைக்கிள் ஒன்று, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தொடர்பான வெளியீடுகள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சீருடைகள், சையனைடு குப்பிகள், சங்கேத செய்திகள் (Ccde Messages) ஆவணங்கள் முதலியனவாகும்.

54. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோடு தொடர்பு கொண்டுள்ள கள்ளக்கடத்தல்காரர்கள் சிலரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மாநிலத்திலுள்ள அகதிகள் முகாமிற்கு வெளியில் இலங்கைத் தமிழர்கள் தங்குவதை முறைப்படுத்தவும் இங்கு வசிக்கும் இலங்கைத் தமிழர்கள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தங்க இடம் கொடுப்பதை தடுக்கவும், அகதி முகாமில் தங்கியில்லாத இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள காவல் நிலையத்திற்குத் தெரிவிக்குமாறு 28–9–1991ஆம் நாளிட்ட அனைத்து நாளிதழ்களிலும் அறிக்கை வெளியிட்டதன் மூலம் அரசு உத்தரவளித்துள்ளது. இதுவரையில் இதுபோன்ற இலங்கைத் தமிழர்கள் 27,187 பேர் தகவல் தெரிவித்துள்ளனர். தங்களுடைய வீடுகளை இலங்கைத் தமிழர்களுக்கு வாடகைக்கு கொடுத்துள்ள 3,569 வீட்டுச் சொந்தக்காரர்களும், தங்களுடைய அலுவலகங்களில் இலங்கைத் தமிழர்களை பணியமர்த்தியுள்ள 1,104 தொழிலதிபர்களும் தங்கள் பகுதி காவல் துறையினருக்கு இது குறித்து தகவல் கொடுத்துள்ளனர். காவல் நிலையத்தில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்வதற்குரிய நாள் முடிவடைந்த பின்னர், தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்யாத இலங்கை தமிழர்களைக் கண்டறிய காவல் துறையினர் தனி முயற்சியை மேற்கொண்டனர். தனி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, பெயர் பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்கள், இந்தத் தனி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

55. தமிழ்நாட்டில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது, அவர்களுடைய நடவடிக்கைகளை ஒடுக்கியது ஆகியவற்றில் காவல் துறையினர் அண்மைக் காலத்தில் எடுத்த முயற்சிகளும், அதனால் கிட்டிய பயன்களும் நாட்டில் சீரிய முறையில் சிந்திக்கும் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

56. பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத் தொகையை, அது போன்ற சேதங்களை ஏற்படுத்தின தனி நபர்களிடமிருந்து அல்லது அது போன்ற சேதங்களுக்குக் காரணமான அரசியல் கட்சிகள் அல்லது ஏனைய நிறுவனங்களிடமிருந்து வசூலிக்க இயலும் வகையில் சட்டம் ஒன்று இயற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.





## XI. மகளிருக்கு இழைக்கப்படும் கொடுமையைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

57. மகளிருக்கு அநீதி இழைக்கப்படாமல் தடுப்பதிலும், அவர்கள் பழிவாங்கப்படுவதினின்றும் பாதுகாப்பதிலும் அரசு, மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. '' மகளிருக்கு இழைக்கப்படும் குற்றம் '' என்ற தலைப்பின் கிழ் முறையே 1–6–1990 முதல் 31–7–1990 வரையிலான கால அளவிலும் 1–6–1991 முதல் 31–7–1991 வரையிலான கால அளவிலும் பதிவான வழக்குகளின் எண்ணிக்கையைப் பற்றிய விவரம் வருமாறு :—).

| குற்றத் தலைப்பு. | 1–6–1990 முதல் 31–7–1990 வரை. | 1–6–1991 முதல் 31–7–1991 வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வரதட்சணைக்காரணமான மரணம் | 7 | 23 |
| 2. வரதட்சணைக் கொடுமை | 32 | 155 |
| 3. கற்பழித்தல் | 35 | 31 |
| 4. தொந்தரவு செய்தல் | 98 | 96 |
| 5. கவர்ந்து செல்லுதல் கடத்திச் செல்லுதல். | 87 | 58 |
| 6. கேலி செய்து தொல்லை தருதல் | 149 | 111 |

58. மகளிருக்கு இழைக்கப்படும் குற்றங்கள் குறித்து பகுப்பாய்வு செய்ததில், 1–6–1991 முதல் 31–7–1991 வரையிலான கால அளவில் நடந்துள்ள வரதட்சணைக் காரணமான மரணம் மற்றும் தொந்திரவுகள் என்ற தலைப்பு நீங்கலான அனைத்துத் தலைப்புகளின் கீழும் குற்றங்களின் எண்ணிக்கை முந்தைய ஆண்டில் இதற்கு நிகரான கால அளவுடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளது என தெரிய வருகிறது. வரதட்சணைக் காரணமாக மரணம் மற்றும் கொடுமை குறித்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் இக்கொடுமை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு, குறிப்பாக இக்கொடுமைக்கு ஆளானோரின் உறவினர்கள் தாமாகவே முன் வந்து இக் குற்றங்கள் குறித்து காவல் துறையிடமும் சமூக நல அமைப்புகளிடமும் தெரிவித்ததே ஆகும்.

[1991 செப்டம்பர் 23

59. மகளிருக்கு இழைக்கப்படும் குற்றங்களை தவிர்க்கும் பொருட்டு, எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளின் விவரம்:—

(அ) மகளிருக்கு இழைக்கப்படும் குற்றங்கள் பற்றி காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் பொழுது உடனுக்குடன் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலானாய்வு நடத்தப்படுகிறது.

(ஆ) முக்கியமான பரப்பரப்பான வழக்குகளில் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் பிரிவு, புலனாய்வுப் பணியை மேற்கொள்கிறது.

(இ) மகளிருக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கண்காணித்து புலனாய்விற்கு வழிகாட்டுவதற்காக, குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த குற்றப்பிரிவு அதுபோன்ற வழக்குகள் பற்றிய மாதாந்திர புள்ளி விவரங்களை காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறுகிறது. மேலும் மகளிருக்கு இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பாக நாளிதழ்களில் வெளியாகும் செய்திகள் குறித்தும் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப்பிரிவு விரிவான அறிக்கைகளை மாவட்டங்களிலிருந்தும், சென்னை மாநகரத்திலிருந்தும் கேட்டுப் பெற்று அவை குறித்து நீதிமன்றங்களில் இறுதியாகத் தீர்ப்பு வழங்கப்படும் வரையில், அவற்றைக் கண்காணித்தும் வருகிறது.

(ஈ) வரதட்சிணைக் கொடுமை தொடர்பான மனுக்களை விசாரணை செய்யும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்கெனவே உள்ள பணியாளர்களிடையேயிருந்து ஒரு காவல் துறை ஆய்வாளர் அல்லது உதவி ஆய்வாளர் மற்றும் 2 அல்லது 3 தலைமைக் காவலர்கள் அல்லது காவல்கள் அடங்கிய பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மாவட்டக் குற்றப் பதிவேட்டுப் பிரிவின் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும் சென்னை மாநகரத்தில் குற்றப் பிரிவு (பொது) காவல் துறை உதவி ஆணையரும், இப்பிரிவிற்குத் தலைமை வகிப்பர்.

(உ) வரதட்சணைக் கொடுமை காரணமாக ஏற்பட்ட மரணம் குறித்த விசாரணையை வருவாய்க் கோட்ட அதிகாரி/சார் நிலை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்த வேண்டும். பிணப் பரிசோதனையை இரு மருத்துவ அதிகாரிகள் அடங்கிய குழு செய்ய வேண்டும்.

(ஊ) மகளிர், திருமணமான நாளிலிருந்து ஏழாண்டுக் காலத்திற்குள் தற்கொலை செய்து கொண்டது அல்லது திருமணமான நாளிலிருந்து ஏழாண்டுக் காலத்திற்குள் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகளில் மரணமடைந்தது தொடர்பான அனைத்து வழக்



1991 செப்டம்பர் 23]

குகள் துணைக் கண்காணிப்பாளர் பதவி தரத்திற்குக் குறையாத பதவித் தரத்தில் உள்ள காவல் துறை அதிகாரியால் புலனாய்வு செய்யப்பட வேண்டும்.

(எ) மகளிருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து புலனாய்வு செய்து, வழக்குத் தொடர்வதில் உதவுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் சென்னை மாநகரிலும் ஆலோசனைக் குழு ஒன்று செயல்படுகிறது.

60. மகளிருக்குக் கொடுமைகள் இழைக்கப்படாவண்ணம் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட மகளிருக்கு விரைவில் நீதி கிடைக்கவும் வேண்டி, பொதுவாக காவல் துறையினரும், குறிப்பாக குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மாநில குற்றப் பிரிவும், தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## XII. காவலர்—பொதுமக்களுக்கிடையேயான உறவு.

61. குற்றத் தடுப்பு, குற்றக் கண்டுபிடிப்பு, போக்குவரத்தினை ஒழுங்குப்படுத்துவது ஆகியவற்றில் பொது மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்குக் காவலர்களுக்கும் பொதுமக்களுக்கு மிடையே நல்லுறவு நிலவ வேண்டியது மிகவும் இன்றியமையாதது. பொது மக்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் எவ்வாறு பெறுவது என்பதில் தமிழ்நாடு காவல் துறையினருக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தங்களின் அன்பான நடத்தையாலும் பொது மக்களின் குறைகளைத் தீர்க்க நேர்மையான உண்மையான நடவடிக்கை எடுப்பதன் மூலமும் பொது மக்களிடையே அரசினைப் பற்றியும், காவல் துறையைப் பற்றியும் நல்லெண்ணத்தை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் காவல் துறையைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

62. கிராம விழிப்புப் பணிக்குழு, மாவட்ட போக்குவரத்துக் குழுக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தல், சாலைப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தேசிய மாணவர் படை, தேசிய நலப் பணித் திட்டம் முதலிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்துதல், புறநகர் குடியிருப்பு சங்கத்தினரைச் சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம், காவலருக்கும் பொது மக்களுக்கும் இடையேயான உறவு மேலும் நெருக்கமாகியுள்ளது. மேலும் காவலருக்கும் பொது மக்களுக்கு மிடையேயான உறவை மேம்படுத்துவதில் ஊர்க்காவல் படையும் சிவில் பாதுகாப்பு அமைப்புகளும் காவல் துறைக்கு உதவுகின்றன.

(i) ஊர்க்காவல் படை :

63. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல்படை சட்டம்
மற்றும் விதிகளின்கீழ், ஊர்க்காவல்படை என்ற அமைப்பு காவல்
படைக்கு உதவும் ஒரு துணை தொண்டுப் படையாகச் செயல்படு
கிறது. காவல் துறைத் தலைவர் ஒருவர் இந்த அமைப்பின்
தலைவராக உள்ளார். 30-11-1990 ஆம் நாள் நிலவரப்படி
இப்படைப் பிரிவில் 9,213 ஆண்களும் 412 பெண்களும் உள்ளனர்.
ஊர்க்காவல் படை வகையில் ஆண்டொன்றுக்கு 32.00 இலட்சம்
ரூபாய் செலவாகிறது. ஊர்க்காவல் படை குறித்தாகும் சில செல
வினங்களில் 50 சதவீதத் தொகையை மத்திய அரசு ஏற்றுக்
கொள்கிறது.

64. 1990 ஆம் ஆண்டு மிகச் சிறந்த கடமை பற்றுறுதிக்காக,
ஊர்க்காவல் படையைச் சேர்ந்த ஆறு அலுவலருக்குத் தமிழ்நாடு
முதலமைச்சர் ஊர்க்காவல் படை பதக்கமும், பாராட்டத் தக்கப்
பணிக்காக, குடியரசுத் தின நாளன்று ஊர்க்காவல் படையைச்
சேர்ந்த ஒருவருக்கு ஊர்க்காவல்படை மற்றும் சிவில் பாதுகாப்புப்
படை பதக்கமும் சுதந்திர தினத்தன்று ஊர்க்காவல் படை
யைச் சேர்ந்த ஒருவருக்கு அதே பதக்கமும் வழங்கப்பட்டன.

(ii) சிவில் பாதுகாப்பு :

65. இந்திய அரசு, சென்னை மாநகரத்தையும், செங்கல்பட்டு
-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த கல்பாக்கத்தையும் "வகை
1", சிவில் பாதுகாப்பு நகரங்களாக அறிவித்துள்ளது. சிவில்
பாதுகாப்புப் படை அமைப்பு, இம்மாநிலத்தில் வெள்ளம் புயல்
பாதுகாப்பு நிவாரணப்பணிகளில் ஈடுபடும் பொருட்டு இப்படை
யின் இயக்குநரான காவல் துறைத் தலைவர் (ஊர்க்காவல் படைப்
பிரிவு), தகுந்த பயிற்சி அளிக்கிறார்.

## XIII. 1990 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள்.

66. காவல் துறைக்குத் தேவையான பணியாளர்கள் மற்றும்
கருவிகள் தொடர்பான சில திட்டங்களுக்கு அரசு 1990-ல் அனு
மதி வழங்கியுள்ளது. அனுமதிக்கப்பட்ட சில முக்கியமான திட்
டங்கள் பற்றிய விவரம் வருமாறு;

(அ) இரண்டு உட்-கோட்டங்கள், இரு வட்டங்கள், 19
காவல் நிலையங்கள் மற்றும் 3 புறக் காவல் நிலையங்கள் ஆகிய
வற்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், அரசு
7 புறக்காவல் நிலையங்களைக் காவல் நிலையங்களாக நிலை
உயர்த்தியுள்ளது.





(ஆ) பழைய வண்டிகளுக்குப் பதிலாக 2 அம்பாசிடர் மோட்
டார் வண்டிகள், 4 லாரிகள், 30 மோட்டார் சைக்கிள்கள் ஆகிய
வற்றை 27.83 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக வாங்கவும் 11
மோட்டார் வண்டிகளையும் பிக்கப் வேன் ஒன்றையும் 5.84 இலட்
சம் ரூபாய் செலவில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) வட ஆர்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு
அதையடுத்து, 27,100 ரூபாய் செலவில் தொலை பேசி வசதிகள்
அமைக்கவும், 2.00 இலட்சம் ரூபாய் செலவில் மேசை-நாற்காலி
போன்ற அறைக்கலன்களை வாங்கவும் அரசு அனுமதி வழங்கி
யுள்ளது.

## XIV. புதிய திட்டங்கள்.

67. 1991-92 ஆம் ஆண்டில் ஒரு சில புதிய திட்டங்களுக்கு
அனுமதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உள்ள
புதியம்புத்தூரில் 6.14 இலளீசம் ரூபாய் செலவில் புதிய காவல்
நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது.

(ஆ) தஞ்சாவூர் மேற்குக் காவல் மாவட்டத்தில் உள்ள
கும்பகோணத்தில் 20.82 இலட்சம் ரூபாய் செலவில் தேவையான
துணைப் பணியாளர்களுடன் தகவல் தொடர்புக் கூடம் ஒன்றை
ஏற்படுத்துவது.

## XV. முடிவுரை.

68. காவல் துறையை உறுதியான, செயல்திறன் வாய்ந்த
ஒரு துறையாக மாற்றுவதற்காக உரியவாறு நியமனம் செய்தல்,
அவர்களது திறன் மற்றும் சாதனையை மேம்படுத்த உரிய பயிற்சி
அளித்தல், போதிய கருவிகள் வழங்குதல், போதிய அளவுக்கு
அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், இசைவான சூழ்நிலையை
உருவாக்குதல் ஆகியவற்றின்மூலம் அத்துறையை முழுக்க முழுக்
கச் சிறந்த திறனுள்ளதாக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்
காக காவல் துறைக்கு நவீன கருவிகளையும் சாதனங்களையும்
வழங்கவும், அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கவும், ஓரிடத்தி
லிருந்து இன்னொரு இடத்திற்கு எளிதாகவும் விரைவாகவும்
சென்று நடவடிக்கை எடுக்க ஏதுவாக போதிய எண்ணிக்கையில்
வாகனங்களை வழங்கவும் அரசு முயற்சி எடுக்கும். காவல் துறை
யினருக்கு ஊக்கமளித்து அவர்களின் திறனையும் செயல் வேகத்
தையும் மேம்படுத்தும் பொருட்டு ஊக்க உதவித் தொகைகள்,
ஊதிய உயர்வுகள், ஊதியங்கள் மற்றும் பதவியுயர்வுக்கான வாய்ப்
புகள் ஆகியவற்றை அளிக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு கரு

[1991 செப்டம்பர் 23

யுள்ளது. சுருங்கக்கூறினால், தற்போதைய அரசு பொறுப்பினை ஏற்றபிறகு, இம்மாநிலத்தில். காவல் ஆட்சிப் யினர் திறமையாகச் செயல்படுவதற்கேற்ற சூழ்நிலை உருவாக்கப் துறை பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைக் கட்டுக்குள் கொண்டுவர விரைவான நடவடிக்கைகள், இலங்கைத் தீவிரவாதி களுக்கு எதிரான கடும் நடவடிக்கை ஆகியவற்றைக் கொண்டு பார்க்கும்போது காவல் துறை தலையீடுகளின்றி செயல்படுகிறது என்பது தெளிவாகிறது. மேலும் சட்டத்திற்குட்பட்டு, சூழ் நிலைக்கேற்ப விருப்பம்போல் நடவடிக்கை எடுக்கக் காவல் துறைக்குப் புதிய அரசு அதிகாரம் அளித்துள்ளது. காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு இவ்வரசால் மேற்கொள்ளப் பட்டுவருகின்ற முயற்சி, ஆறு படைப் பிரிவுகளைப் புதிதாக உருவாக்கவும், இம்மாநிலத்தில் உள்ள காவல்துறையினரின் திற னையும் படைக்கலக் கருவிகளையும் மேம்படுத்தவும், அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கை ஆகியவை காவல் துறையினருக்கு நம் பிக்கை ஊட்டியுள்ளதோடு இதுகாறும் குற்றச் சாட்டுகளுக்கு உள் ளாகி வந்த காவல் துறையின் மதிப்பையும் உயர்த்தியுள்ளது.



1991 செப்டம்பர் 23]

## இணைப்பு I.

1991 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளன்றுள்ளவாறு தமிழ்நாடு காவல்துறைக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர் களின் எண்ணிக்கை.

| தொடர் எண். | பதவி. | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | காவல்துறைத் தலைமை இயக்குநர் .. | 1 |
| 2 | காவல்துறைத் தலைவர்கள் .. | 8 |
| 3 | காவல்துறைத் துணைத் தலைவர்கள் .. | 21 |
| 4 | காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் .. | 66 |
| 5 | காவல்துறைத் தளவாய்கள் .. | 2 |
| 6 | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் (நிலை I/நிலை II). .. | 52 |
| 7 | காவல்துறைத் துணைத் தளவாய்கள் .. | 5 |
| 8 | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (நிலை I). | 248 |
| 9 | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (நிலை II). | 41 |
| 10 | காவல்துறை உதவித் தளவாய்கள் .. | 39 |
| 11 | காவல்துறை ஆய்வாளர்கள் .. | 1,231 |
| 12 | காவல்துறைத் துணை ஆய்வாளர்கள் | 7 |
| 13 | காவல்துறை ஆய்வாளர்கள் (சேமப்படை). | 120 |
| 14 | காவல்துறை உதவி ஆய்வாளர்கள் .. | 3,897 |
| 15 | காவல்துறை உதவி ஆய்வாளர்கள் (சேமக் காவல்படை) | 626 |
| 14 | காவல்துறை தலைமைக் காவலர்கள் ... | 5,987 |

[1991 செப்டம்பர் 23

| | | |
|---|---|---|
| 17 | காவல்துறை ஹவில்தார்கள் .. .. | 830 |
| 18 | காவல்துறை காவலர்கள் (நிலை I) .. | 5,964 |
| 19 | காவல்துறை நாயக்குகள் .. .. | 620 |
| 20 | காவல்துறை லான்ஸ் நாயக்குகள் .. | 1,071 |
| 21 | காவல்துறை காவலர்கள் (நிலை II) .. | 44,194 |
| 22 | காவல்துறை பெண் ஆய்வாளர்கள் .. | 10 |
| 23 | காவல்துறை பெண் உதவி ஆய்வாளர்கள் | 108 |
| 24 | காவல்துறை பெண் தலைமைக் காவலர்கள். | 100 |
| 25 | காவல்துறை பெண் காவலர்கள் .. | 1,040 |
| | | 66,288 |
| | மிகையான பதவிகள் .. | 2,350 |
| | பெருமொத்தம் .. | 68,638 |

மிகையான பதவிகள் :

| | | |
|---|---|---|
| 1 | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள். | 5 |
| 2 | காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள். | 31 |
| 3 | காவல்துறை ஆய்வாளர்கள் .. .. | 101 |
| 4 | காவல்துறை உதவி ஆய்வாளர்கள் .. | 107 |
| 5 | காவல்துறைத் தலைமைக் காவலர்கள் .. | 46 |
| 6 | காவல்துறைக் காவலர்கள் (நிலை II) .. | 1,852 |
| 7 | காவல்துறைக் காவலர் (ஓட்டுநர்) .. | 208 |
| | **மொத்தம்** .. | 2,350 |



1991 செப்டம்பர் 23]

## இணைப்பு II.

### 1990-ல் அனுமதித்த பதவிகளின் விவரம்.

I. நிருவாகப் பிரிவு :

| | | |
|---|---|---|
| 1 | காவல்துறைத் தலைவர் .. .. | 1 |
| 2 | காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் .. | 5 |
| 3 | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள். | 19 |
| 4 | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள். | 7 |
| 5 | காவல் துறை ஆய்வாளர்கள் .. | 34 |
| 6 | காவல்துறை உதவி ஆய்வாளர்கள் .. | 59 |
| 7 | காவல்துறை உதவி ஆய்வாளர்கள் (சேமக் காவல்படை). | 5 |
| 8 | காவல் துறைத் தலைமைக் காவலர்கள் | 133 |
| 9 | காவல் துறைக் காவலர்கள் (நிலை I) .. | 75 |
| 10 | காவல் துறைக் காவலர்கள் (நிலை-II) | 1,284 |
| 11 | காவல் துறை பெண் ஆய்வாளர்கள் .. | 10 |
| 12 | காவல் துறை பெண் உதவி ஆய்வாளர்கள். | 20 |
| 13 | காவல்துறை பெண் தலைமைக் காவலர்கள். | 20 |
| 14 | காவல் துறை பெண் காவலர்கள் . | 350 |
| 15 | நாயக் .. .. .. .. | 1 |
| | மொத்தம் .. | 2,023 |

II. அமைச்சுப் பணியாளர்கள் :

| | | |
|---|---|---|
| 1 | நிர்வாக அதிகாரிகள் .. .. | 2 |
| 2 | நேர்முக உதவியாளர்கள் .. .. | 4 |
| 3 | கண்காணிப்பாளர்கள் .. .. | 43 |
| 4 | உதவியாளர்கள் .. .. .. | 82 |
| 5 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 56 |
| 6 | தட்டச்சர்கள் .. .. .. | 14 |
| 7 | பதிவுரு எழுத்தர் .. .. | 8 |
| 8 | இளநிலை உதவியாளர்-தட்டச்சர் .. | 16 |
| 9 | சுருக்கெழுத்து தட்டச்சர் .. | 8 |
| 10 | இளநிலை உதவியாளர்கள் (மந்தணம்) | 1 |
| 11 | அலுவலக உதவியாளர்கள் .. .. | 82 |
| | மொத்தம் .. | 316 |

III. தொழில்நுட்பப் பதவிகள் :

| | | |
|---|---|---|
| 1 | தொழில் நுட்ப அதிகாரி .. .. | 1 |
| 2 | ஆய்வாளர் (தொழில் நுட்பம்) .. | 1 |
| 3 | உதவி ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்) | 9 |
| 4 | வானொலிப் பிரிவு மேற்பார்வையாளர்கள். | 4 |
| 5 | வானொலிப் பிரிவு உதவி ஆய்வாளர்கள். | 3 |
| 6 | வானொலிப் பிரிவு தலைமைக் காவலர்கள். | 6 |
| 7 | காவலர்கள் (நிலை-I) .. .. | 9 |
| | மொத்தம் .. | 33 |



IV. நிழற்படப் பிரிவு பணியாளர் :

| | | |
|---|---|---|
| 1 | தொழில் நுட்ப அதிகாரி (நிழற்படப் பிரிவு) | 1 |
| 2 | நிழற்படப் பிரிவு முதுநிலைக் கண்காணிப்பாளர்கள். | 4 |
| 3 | நிழற்படம் எடுப்பவர் .. .. | 1 |
| 4 | நிழற்படப் பிரிவு முதுநிலைப் பணியாளர். | 1 |
| | மொத்தம் .. | 7 |

V. ஒரு விரல் ரேகை ஆய்வு கூடப்பிரிவு பணியாளர் :

| | | |
|---|---|---|
| 1 | இயக்குநர் .. .. .. | 1 |
| 2 | கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 3 | விரல் ரேகை வல்லுநர்கள் .. .. | 2 |
| 4 | விரல் ரேகை ஆராய்ச்சியாளர்கள் .. | 2 |
| | மொத்தம் .. | 6 |

VI. மற்ற பதவிகள் :

| | | |
|---|---|---|
| 1 | சிறப்புப் பிரிவு மேலாளர்கள் .. | 2 |
| 2 | சிறப்புப் பிரிவு உதவியாளர்கள் .. | 6 |
| 3 | சட்ட ஆலோசர்கள் .. .. | 2 |
| 4 | மீயுயர் அலை கருவி இயக்குபவர்கள் .. | 4 |
| 5 | காசாளர்கள் .. .. .. | 4 |
| 6 | பெருக்குபவர்கள் .. .. .. | 7 |
| 7 | துப்புரவாளர்கள் .. .. .. | 2 |
| | மொத்தம் | 27 |

[1991 செப்டம்பர் 23

**1990-ல் கலைக்கப்பட்ட பதவிகளின் விவரம் :**

| நிருவாகப் பிரிவு. (1) | காவல் துறை ஆணைக் குழு. (2) | உணவுப் பொருள் வழங்கல். (3) | குற்றப் புலனாய்வு பிரிவு/மதுவிலக்கு ஆயத்துறைப் பிரிவு. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| 1 காவல் துறைத் தலைவர். | 1 | ... | 1 | 2 |
| 2 காவல் துறைக் கண்காணிப்பாளர். | ... | 2 | 8 | 10 |
| 3 காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர். | .. | .. | 6 | 6 |
| 4 காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர். | 1 | 3 | 32 | 36 |
| 5 காவல் துறை ஆய்வாளர்கள். | 3 | 8 | 106 | 117 |
| 6 காவல் துறை உதவி ஆய்வாளர்கள். | 2 | ... | 126 | 128 |
| 7 காவல் துறைத் தலைமைக் காவலர்கள். | ... | 4 | 62 | 66 |
| 8 காவல் துறைக் காவலர்கள் (நிலை-I). | ... | 9 | ... | 9 |
| 9 காவல் துறைக் காவலர் (நிலை-II) | 12 | 92 | 2,049 | 2,153 |
| 10 காவல்துறைக் காவலர் (ஓட்டுநர்) | 4 | .. | 299 | 303 |
| மொத்தம் ... | 23 | 118 | 2,689 | 2,830 |



1991 செப்டம்பர் 23]

**1990-ல் கலைக்கப்பட்ட பதவிகளின் விவரம் :**

| அமைச்சுப் பணியாளர். (1) | காவல் ஆணைக்குழு (2) | உணவுப் பொருள் வழங்கல். (3) | குற்றப் புலனாய்வு பிரிவு/மதுவிலக்கு ஆயத்துறைப் பிரிவு. (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| 1 நேர்முக எழுத்தர்கள் | 1 | ... | 1 | 2 |
| 2 கண்காணிப்பாளர்கள் | 4 | 1 | 11 | 16 |
| 3 உதவியாளர்கள் | 7 | 7 | 25 | 39 |
| 4 சிறப்புப் பிரிவு உதவியாளர்கள் | 4 | ... | ... | 4 |
| 5 இளநிலை உதவியாளர்கள் | ... | 5 | 45 | 50 |
| 6 இளநிலை உதவியாளர்கள்—தட்டச்சர். | 7 | 4 | 16 | 27 |
| 7 தட்டச்சர்கள் | ... | 1 | 25 | 26 |
| 8 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள். | 4 | 2 | 7 | 13 |
| 9 பதிவுத் எழுத்தர்கள். | ... | 1 | 3 | 4 |
| 10 அலுவலக உதவியாளர்கள். | 7 | .. | 50 | 57 |
| மொத்தம் ... | 34 | 21 | 183 | 238 |

[1991 செப்டம்பர் 23

## இணைப்பு III.

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### மானியக் கோரிக்கை எண் 16.

### கொள்கைக் குறிப்பு 1991–92.

1967 அக்டோபர் முதல் தனித் துறையாக இயங்கி வரும்
தமிழ்நாடு தீயணைப்புத் துறை, நாட்டின் மிகப் பெரிய
மற்றும் திறமை மிக்க அமைப்பாகத் தொடர்ந்து தனது தனித்
துவத்தையும் நன்பமதிப்பையும் பேணி வருகிறது. இத்துறையின்
முதல் குறிக்கோள் தீ மற்றும் இதர விபத்துக்களின் அபாயம்,
சேதம் மற்றும் அழிவிலிருந்து உயிர் மற்றும் உடைமைகளைக்
காத்தலாகும். தீத்தடுப்பைத் தவிர தீ விபத்தில் பாதிக்கப்
பட்டவர்கள் மற்றும் வெள்ளம், புயல், பூகம்பம், கட்டிடம்
இடிந்து விழுதல் போன்ற இயற்கையினால் ஏற்படும் சீற்றங்
களிலும், இரயில் விபத்துக்கள் போன்றவற்றில் பாதிக்கப்பட்ட
வர்களுக்கும் அவசர நிவாரணம் அளித்தலும் இத்துறையின்
பிற பணிகளுள் அடங்கும். மேலும், தேர்தல்கள், கலவரங்கள்,
பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கிய பிரமுகர்களின்
பாதுகாப்பு ஆகியவற்றில் காவல் துறைக்கும். தொற்று நோய்கள்
பரவும் காலங்களில் பொது சுகாதாரத் துறைக்கும் இத்துறையின்
சேவை நீட்டிக்கப்படுகிறது. அரசு கட்டிடங்கள், தொழிற்
சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்கள் ஆகியவைகளில்
தீத்தடுப்பு ஏற்பாடுகள் குறித்தும் இத்துறை ஆலோசனை வழங்கு
கின்றது. இவை தவிர, பொதுமக்கள் கூடுமிடங்களுக்கான
சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்,
சென்னை நகர மாநகராட்சி சட்டம், தமிழ்நாடு
பஞ்சாயத்து சட்டம், படைக்கலச் சட்டம் மற்றும் விதிகள்,
தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் ஆகிய பல்வேறு
சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட மற்றும்
உரிமம் வழங்கப்பட வேண்டிய இடங்களை ஆய்வு செய்யவும்,
சட்டப்படி தமிழ்நாடு தீயணைப்புத் துறை அலுவலர்களுக்குக்
கடமை உள்ளது. 1990–91 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள்
மற்றும் விதிகளின் கீழ் தீயணைப்பு அலுவலர்களால் ஆய்வு
செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள்
பிற்சேர்க்கை I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### நிர்வாக அமைப்பு.

2. தமிழ்நாடு தீயணைப்புத் துறை காவல் துறைத் தலைவர்
தரத்தில் உள்ள காவல்துறை அலுவலரை இயக்குநராகக்
கொண்டு அவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி
வருகிறது. நிர்வாக வசதிக்காக தமிழ்நாடு தீயணைப்புத்
துறை சென்னையை தலைமையிடமாகக் கொண்ட வட



1991 செப்டம்பர் 23]

மண்டலம், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்ட
மத்திய மண்டலம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட
தென் மண்டமலம், கோவையைத் தலைமையிடமாகக் கொண்ட
மேற்கு மண்டலம் என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு,
ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை இயக்குநரின் கட்டுப்
பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும்
மூன்று முதல் ஐந்து கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்ட
மும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்
களைத் தன்னகத்தே கொண்டு, ஒரு கோட்டத் தீயணைப்பு
அலுவலரின் பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. ஒவ்வொரு
கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கும் நிர்வாக மற்றும் செயல்
பணிகளில் ஒரு உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவியாக
இருக்கிறார். தற்சமயம், இம்மாநிலத்தில் ஒரு மாநிலப்
பயிற்சி பள்ளி மற்றும் மாநிலப்பட்டறை தவிர 18 கோட்டங்கள்
கீழ்க்கண்டபடி இயங்கி வருகின்றன.

நிர்வாக அமைப்பு.

தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர்.

| | | | |
|---|---|---|---|
| துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை. | துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி. | துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை. | துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோவை. |
| கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள். |
| 1. வட சென்னை. | 1. திருச்சிராப்பள்ளி | 1. மதுரை. | 1. கோவை-பெரியார்-நீலகிரி. |
| 2. தென் சென்னை. | 2. புதுக்கோட்டை. | 2. திருநெல்வேலி-கட்டபொம்மன் | 2. சேலம்-தர்மபுரி. |
| 3. செங்கற்பட்டு-எம். ஜி. ஆர். | 3. தஞ்சாவூர். | 3. கன்னியாகுமரி. | 3. திண்டுக்கல்-அண்ணா. |
| | 4. தென்னாற்காடு | 4. சிதம்பரனார். | 4. வேலூர்-அம்பேத்கார். |
| | 5. விழுப்புரம் | 5. காமராசர். | 5. சம்புவராயர். |



பணியாளர் எண்ணிக்கை.

3. 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ஆம் நாளன்று உள்ள நிலவரப்படி, தமிழ்நாடு தீயணைப்புத்துறையில் உள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,690 ஆகும். ஒவ்வொரு பதவித் தரத்திலும் உள்ள பணியாளர்களின் விவரம் பிற்சேர்க்கை III மற்றும் IV-ல் அளிக்கப்பட்டுள்ளன.

ஊர்திகளும் சாதனங்களும்

4. தமிழ்நாடு தீயணைப்புத்துறையில் 237 நீர் தாங்கி வண்டிகளும், 75 நோயாளர் ஊர்திகளும், 191 இதர துணை ஊர்திகளும் உள்ளன. இவை தவிர, இத்துறையில் 59 சிறப்பு சாதனங்களும் உள்ளன.

எட்டு நீர்தாங்கிவண்டிகள் கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் 25 ஊர்தி அடிச்சட்டங்கள் வாங்கி, அவற்றை நீர்தாங்கி வண்டிகளாகக் கட்டுமானம் செய்து தீயணைப்பு நிலையங்களுக்கு, கண்டனம் செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படின் பழைய நீர்தாங்கி வண்டிகளுடன் போராடும் தீயணைப்பு நிலையங்களின் செயல்திறன் அதிக அளவில் உயரும்.

5. இத்துறையை எல்லா வகையிலும் நவீனப்படுத்துவதில் அரசு மிகுந்த ஆர்வமுடன் உள்ளது. பழைய மற்றும் பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. நகரத்தில் பலமாடிக் கட்டிடங்களிலும், சரியான அணுகு சாலைகள் இல்லாத குடிசைப் பகுதிகளிலும் தீயை அணைக்கவும், மீட்புப் பணிகளுக்கும், " ஸ்நார்க்கல் " என்ற நவீன தீயணைப்பு ஊர்தி ஒன்று உள்ளது. இந்த ஊர்தி சென்னை நகரத்தில் நிலையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம் மற்றும்அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிசைத் தீ விபத்துக்கள் மற்றும் பல மாடிக் கட்டிட தீ விபத்துக்களில் தீயணைப்பதில் இவ்வூர்தி மிகவும் உபயோகமாக இருந்து வருகிறது.

ஜப்பான் நாட்டு தீயணைப்புக் கருவிகள் வாங்குதல்.

6. இந்திய அரசின் ஜப்பான் நாட்டின் உதவித் திட்டத்தின் கீழ் SIUZU ஊர்தியில் கட்டுமானம் செய்யப்பட்ட 1 சுழல்மேசை ஏணி, இரண்டு காற்றுப் பதன வசதி செய்யப்பட்ட நோயாளர் ஊர்திகள் (ISUZU), 9 " TOHATSU " தூக்கிச் செல்லும் பம்புகள், 5 தீ உடைகள் ஆகியவற்றை, அவற்றுக்கான உதிரி பாகங்களுடன் மொத்தம் ரூ. 3.32 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டு அரசு வாங்கி உள்ளது.

46. மீட்டர் உயரமுள்ள இந்த ISUZU சுழல் மேசை ஏணி, பலமாடிக் கட்டிடங்களில் சிக்கியுள்ளவர்களை வேகமாக வெளியேற்ற உபயோகப்படுத்தக் கூடிய மீட்பு மற்றும் தீயணைப்புக் கருவியாகும். இந்த சுழல் மேசை ஏணியை இயக்க 50 தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு ஜப்பானியப் பொறியாளர்களால் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

## கம்பியில்லாத் தந்திகள்.

7. தீயணைப்பதிலும், மீட்புப்பணி புரிவதிலும் கால அளவென்பது முக்கியமான ஒன்றாகும். தற்சமயம் தீயணைப்புத்துறையில் சென்னை நகரம் முழுவதும் 65 கம்பில்லாத் தந்தி கருவிகளும் மாவட்டங்களில் 28 கம்பில்லாத் தந்திகளும் வழங்கப்பட்டுள்ளன. தீயணைப்பு ஊர்திகளுக்கிடையே தொலைத் தொடர்பு அமைப்பை நவீனப்படுத்துவதற்காக, கூடுதல் கம்பியில்லாத் தந்தி கருவிகளை வாங்கி மாநிலத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தீயணைப்பு நிலையங்கள்.

8. 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளன்று மாநிலத்தில் இயங்கும் மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை பிற்சேர்க்கை II-ல் உள்ளபடி 201 ஆகும். அவற்றுள்ள 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னை நகரத்திலும் இதர 180 தீயணைப்பு நிலையங்கள் பிற மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

9. மாநிலத்தில் கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதும், மாநிலத்தில் தேவையான ஒவ்வொரு இடத்திற்கும் 25 கி.மீ. தூரத்திற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது இத்துறையின் உடனடி குறிக்கோளாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி மற்றும் குடிசைப் பகுதிகள் போன்ற தீ அபாயம் நிறைந்த பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, அந்த இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க அரசு ஒப்பளித்து வருகிறது.

10. மிகவிரைவாகவும், பாதுகாப்பாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் மக்களுக்கும் சரியான நேரத்தில் போதுமான சேவை சென்று சேரும்பொருட்டு தீயணைப்புத்துறையை நவீனப்படுத்துதல் மற்றும் சீர்திருத்துதல் மட்டுமின்றி, புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்கவும் அரசு ஆர்வமாக உள்ளது.





11. இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் ஏற்படுத்தியுள்ள நிலையான தீ ஆலோசனைக் குழுவினால் வரையறுக்கப்பட்ட அலகின்படி, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கக்கூடிய தீயணைப்பு நிலையங்களின் அதிக பட்ச எண்ணிக்கை 8 ஆகும். இதனைக் கருத்தில் கொண்டும், மாநிலத் தீயணைப்புத்துறையின் சிறந்த சேவையை உறுதிப்படுத்தவும், தற்போதைய காமராசர் கோட்டத்தை, இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் கோட்டமாகவும் இரண்டாகப் பிரிக்க அரசு கருதியுள்ளது. இதற்காக, தற்போது காமராசர் கோட்டத்திலுள்ள உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவியை கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரத்தில் உயர்த்தவும், புதிய இராமநாதபுரம் கோட்டத்திற்குத் தேவையான துணை பணியாளர்களை ஒப்பளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12. 1990–91 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் 10 குறிப்பிட்ட இடங்களில் பத்து தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. 1991–92 ஆம் ஆண்டுக்கான பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் கீழ்க் காணும் இடங்களில் 6 புதிய தீயணைப்பு நிலையங்களை திறக்க அரசு கருதியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. சிப்காட் வளாகம் | .. | கும்மிடிப்பூண்டி. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 2. அனுப்பானடி | | மதுரை மாவட்டம். |
| 3. நாவல்பட்டு | .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 4. கணபதி | .. | கோவை மாவட்டம். |
| 5. [illegible] | .. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம். |
| 6. [illegible] | .. | பெரியார் மாவட்டம். |

[1991 செப்டம்பர் 23

## உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்.

13. தனது சேவை மற்றும் செயல்திறன்
எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் கோளாறுகள் காரணமாக,
மாகத் தீ விபத்து ஏற்படலாம் என அஞ்சி காரண
நகரிலுள்ள இல்லத்தரசிகளிடம் இருந்து சென்னை
அவசர அழைப்புகள் உட்பட எந்தத் பெறப்படும்
உதவி தேவைப்படுவோருக்கு அனைத்து தருணத்திலும்,
நிவாரணமும் அளிப்பதில் இத்துறை உதவிகளையும்
றுள்ளது. இத்துறையின் சேவை தனியிடத்தைப் பெற்
எல்லா நேரத்திலும் 24 மணி பொது மக்களுக்கு
1990–91-ல் இத் துறை 3,048 நேரமும் கிடைக்கும்.
அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டது. அவசர மற்றும் மீட்பு

14. 1990–91-ல் 4/91 முடிய
தீயணைப்பு நிலையங்கள் 16,506 மாநிலத்தில் உள்ள
களை ஏற்றுச் செயல்பட்டன. அவற்றுள், தீ விபத்து அழைப்பு
புகள், ரூ. 50,000-க்கு மேல் 233 அழைப்
அல்லது உயிரிழப்போ கொண்ட பொருட் சேதமோ
கும். மாநிலம் முழுவதும் தீ பெருந் தீ விபத்துக்களா
பொருட் சேதத்தின் மதிப்பு விபத்துக்களால் ஏற்பட்ட
கோடியாகும். அதே சமயம் உத்தேசமாக ரூ. 10.07
உடைமைகளின் மதிப்பு ரூ. 91.86 காப்பாற்றப் பட்ட
முதல் 1990 முடிய உள்ள 5 கோடியாகும். 1986
விபத்து விவரங்கள் பிற்சேர்க்கை ஆண்டுகளுக்கான தீ
டுள்ளது. V-ல் அளிக்கப்பட்

## குடிசைத் தீ விபத்துக்கள்.

15. திரும்பத் திரும்ப குடிசைகளில்
பாலான தீ விபத்துக்கள் கடுமையான ஏற்படும் பெரும்
படுத்துகின்றன. இத் தீ விபத்துக்களைச் விளைவுகளை ஏற்
கோடைக்காலத்தில், பற்கோல், கூரைக் சமாளிப்பதற்காக
எளிய தீயணைப்புச் சாதனங்களுடன் கொக்கி போன்ற
புற நகர்த் தீயணைப்பு நிலையங்கள் குடிசைப் பகுதிகளில்
வழங்கப்பட்டன. இப் புறத் ஏற்படுத்த அறிவுரைகள்
இப்பகுதிகளில் இரவு பகல் எந்நேரமும் தீயணைப்பு நிலையங்கள்
இப்பகுதிகளை விழிப்புடன் பணியாற்றியதுடன்
தொடர்பு கொள்வதற்காக கண்காணித்தும் வந்தன.
களுக்கு ''வாக்கி–டாக்கி'' இப்புறத் தீயணைப்பு நிலையங்
தன. இப்புறத் தீயணைப்பு கருவிகளும் வழங்கப்பட்டிருந்
மான ஒத்துழைப்பின் நிலையங்களின் மிக உபயோக
யில் குடிசைத் தீ காரணமாக இவ்வாண்டு சென்னை
விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமான



1991 செப்டம்பர் 23]

அளவு குறைந்துள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் இப் புறத்
தீயணைப்பு நிலையங்கள் பணியாற்றிய தீ விபத்துக்கள்
குறித்த புள்ளி விவரங்கள் பின் வருமாறு :—

| ஆண்டு. | | | அழைப்புகள். |
|---|---|---|---|
| 1984 | .. | .. | 291 |
| 1985 | .. | .. | 80 |
| 1986 | .. | .. | 74 |
| 1987 | .. | .. | 68 |
| 1988 | .. | .. | 58 |
| 1989 | .. | .. | 61 |
| 1990 | .. | .. | 48 |

## மாநிலப் பட்டறை.

16. துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களின் பெரும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காகச் சென்னையில் இத் துறை பட்டறை ஒன்றைப் பேணி வருகிறது. தீயணைப்புத் துறையின் நீண்டகாலத் தேவைகளை கவனிக்கவும், செயல் திறனை மேம்படுத்தவும், உதவிப் பொறியாளர் (தானியங்கி) பதவி ஒன்றை அரசு ஒப்பளித்துள்ளது.

## நியமனம் மற்றும் பயிற்சி.

17. காலியாகவுள்ள 700 தீயணைப்போர் பதவிகளை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

18. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலப் பயிற்சிப் பள்ளி, நேரடியாக நியமனம் செய்யப்பட்ட அனைத்து, அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. இப்பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவி செய்ய இரண்டு நிலையத் தீயணைப்பு அலுவலர்களும், இரண்டு

முன்னணித் தீயணைப்போர்களும் உள்ளனர். இப் பள்ளியில் 1991 ஆம் ஆண்டு சூளைத் திங்கள் 1 ஆம் நாள்வரை பயிற்சி பெற்ற பணியாளர்களது விவரம் பின்வருமாறு :—

| | நிலைய தீயணைப்பு அலுவலர். | தீயணைப் போர். | தீயணைப்போர் ஓட்டி. | யந்திர கம்மியர் ஓட்டி. | முன்னணித் தீயணைப்போர். | தீயணைப்பு பயிற்சி. |
|---|---|---|---|---|---|---|
| 1. துறையைச் சார்ந்த பணியாளர்கள். | .. | 664 | 40 | 6 | 210 | .. |
| 2. மற்றவர்கள் | .. | .. | .. | .. | .. | 41 |

## வெகுமதிகள்.

19. இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது சிறந்த சேவையை ஊக்குவிக்கவும், பாராட்டவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. அவர்களுக்கு குடியரசு தினத் தன்றும், சுதந்திர தினத்தன்றும் குடியரசுத் தலைவரது தீயணைப்புத் துறைப் பதக்கமும், வீரச் செயல்கள் மற்றும் சீரிய பணிக்கான முதலமைச்சரது காவல் மற்றும் தீயணைப்புத் துறை பதக்கமும் அளிக்கப்படுகின்றன.

20. மேற்கண்டவை தவிர ''தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம்'' என்ற புதிய பதக்கம் ஒன்றையும் ஒவ்வொரு பொங்கல் நாளன்றும் அளிப்பதற்காக அரசு உரு வாக்கியுள்ளது. இப் பதக்கம் பெறும் ஒவ்வொரு தீயணைப் போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்பவருக் கும் மாதம் ரூ. 20 ரொக்கப் படியும் முன்னணித் தீயணைப் போர், யந்திரக் கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 25 ரொக்கப் படியும் வழங்கப்படுகிறது. 1990–91 ஆம் ஆண்டில் மேற்கண்ட வெகுமதித் திட்டங்களின்கீழ் 1991 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 1 ஆம் நாள் வரை பதக்கம் வழங்கப்பட்டவர் களின் விவரம் பின் வருமாறு :—





| பதக்கம். | பணியாளர்கள். | | வெகுமதிகள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 1. சிறந்த சேவை அல்லது வீரச் செயலுக்காக குடியரசு தினத்தன்று வழங்கப்படும் தீயணைப் துறைப் பதக்கம் (இந்திய அரசு பதக்கம்) | நிலைய தீயணைப்பு அலுவலர் | 2 | 3 |
| | முன்னணி தீயணைப்போர் | 1 | |
| 2. சிறந்த சேவை அல்லது வீரச் செயலுக்காக சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் தீயணைப் புத் துறைப் பதக்கம் (இந்திய அரசு பதக்கம்) | நிலைய தீயணைப்பு அலுவலர் | 1 | 4 |
| | யந்திர கம்மியர் ஓட்டி | 1 | |
| | தீயணைப்போர் ஓட்டி | 1 | |
| | தீயணைப்போர் | 1 | |
| 3. அண்ணா பிறந்தநாளன்று வழங்கப்படும் தமிழக முதல்வரின் காவல் பதக்கம் (15 செப்டம்பர்) | உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர். | 1 | 8 |
| | நிலைய தீயணைப்பு அலுவலர் | 2 | |
| | முன்னணித் தீயணைப்போர் | 2 | |
| | தீயணைப்போர் ஓட்டி | 1 | |
| | தீயணைப்போர். | 2 | |
| 4. தமிழக முதல்வரின் பொங்கல் பதக்கம். | முன்னணித் தீயணைப்போர் | 42 | 120 |
| | தீயணைப்போர் ஓட்டி | 67 | |
| | யந்திர கம்மியர் ஓட்டி | 8 | |
| | தீயணைப்போர் | 3 | |

[1991 செப்டம்பர் 23

## நோயாளர் ஊர்தி சேவை.

21. மாநிலத்தில் உள்ள 201 தீயணைப்பு நிலையங்களுள் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள 75 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. நோயுற்றவர்களும் காயம்பட்டவர்களும் நியாயமான கட்டணத்தை வாடகையாக பெற்றுக் கொண்டு மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். ஏழை எளிய மக்கள் இலவசமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். நோயாளர் ஊர்திகள் 5,565 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. இவற்றுள் 4,935 அழைப்புகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இக்கட்டண அழைப்புகளின் மூலம் ரூ. 3,97,635 வருவாய் ஈட்டப்பட்டது. மேலும் அதிக அளவு நோயாளர் ஊர்திகளை படிப்படியாக, வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## நலத் திட்டங்கள்.

### தீயணைப்புத்துறை சேமநல நிதி.

22. துயருற்ற தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை சேமநலநிதி துவக்கப்பட்டது. காசநோய், தொழு நோய், புற்று நோய் போன்ற கொடிய நோய்களால் அவதிப்படும் பணியாளர்களுக்கோ, அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ, சத்துணவிற்காகவும், பணியாளர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விக்காகவும் பணியாளர்களோ அவரைச் சார்ந்தவர்களோ இறந்து விட்டால் அவர்களது ஈமச் சடங்குகளுக்காகவும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கும் அடையாள உதவித் தொகையாக ரூ. 200 வழங்கப்படுகிறது. 1990 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற 12 பணியாளர்களுக்கு ரூ. 2,400 வழங்கப்பட்டது. இந்நிதியில் உறுப்பினர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை 4,571 1990 ஆம் ஆண்டில் இந்நிதிக்கு சந்தாத் தொகையாக ரூ. 51,612 வசூலிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு சனவரி திங்கள் முடிய இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரொக்க உதவித் தொகை ரூ. 84,412. ஒவ்வோர் ஆண்டும் இந்நிதிக்கு அரசு மானியம் வழங்குகிறது. இந்த ஆண்டு அரசு வழங்கும் மானியத் தொகை ரூ. 50,000-லிருந்து ரூ. 60,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

23. காவல்துறையைப் போலவே தீயணைப்புத் துறையிலும் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்குக் கீழுள்ள பதவிகளை வகிப்பவர்களுக்கு முக்கிய



1991 செப்டம்பர் 23]

உணவுப் பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு :

| | வருடம். | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | 1985–86 | 20.43 |
| 2. | 1986–87 | 28.00 |
| 3. | 1987–88 | 28.00 |
| 4. | 1988–89 | 29.00 |
| 5. | 1989–90 | 26.09 |
| 6. | 1990–91 | 25.95 |

24. அரசுப் பணியாளர்களின் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 60,000 உடன் இத்துறையின் சார் நிலைப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது உயிர் துறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு மேலும் ரூ. 10,000 உதவித் தொகையாக வழங்க அரசு ஒப்பளித்துள்ளது. மேலும், பணியில் ஈடுபட்டிருக்கும் சமயம் காயம் ஏற்பட்டால் காயத்தின் தன்மைக்கேற்ப பணியாளர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 3,000 வரை உதவித் தொகை வழங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது.

25. உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவிக்குக் கீழ் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் 1987 முதல் ஒரு செட் பருத்தி சீருடைகளுக்குப் பதிலாக ஒரு செட் டெரி காட்டன் சீருடைகள் வழங்கப்படுகின்றன. இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

## குடியிருப்புகள்.

26. துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் நோக்கத்துடன் முதல் கட்டமாக, உடுமலைப் பேட்டை,

[1991 செப்டம்பர் 23

இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் தீயணைப்பு பணியாளர்களுக்கு அரசு குடியிருப்புகளைக் கட்டி, ஒதுக்கீடு செய்துள்ளது. அசோக் நகர், நந்தனம், வண்ணாரப் பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டும் பணி பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவும் முக்கிய வசதிகளில் ஒன்றாக வரவேற்கப் பட்டுள்ளது.

## முடிவுரை.

27. சுருக்கமாக, இந்த மாநிலத்தில் எந்த மூலையிலும் ஏற்படும் தீ விபத்துக்களைத் திறம்படச் சமாளித்து மக்களின் உயிரையும் உடைமைகளையும் காப்பாற்றி தக்க சமயத்தில் இன்றியமையாத சேவை புரிவதன் மூலம் மிகப் பயனளிக்கக் கூடிய அரசுத் துறைகளில் ஒன்று என்று தொடர்ந்து நிரூபித்து வருவதுடன், தனது புகழையும் தீயணைப்புத்துறை தொடர்ந்து நிலை நாட்டி வருகிறது.



பிற் சேர்க்கை—I.

1990–91-ல் பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின்கீழ் தீயணைப்புத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்த கட்டிடங்களின் எண்ணிக்கை :—

| வரிசை எண். | சட்டங்கள் மற்றும் விதிகள். | ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 1955-ம் வருட தமிழ்நாடு திரைப்படச் சட்டம் | 226 |
| 2 | தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகள் 1957 | 186 |
| 3 | பொதுமக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம் | 400 |
| 4 | தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகள் சட்டம் 1920 மற்றும் சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919. | 805 |
| 5 | தமிழ்நாடு மாவட்ட குழுக்கள் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம். | 196 |
| 6 | தொழிற்சாலை விதிகள் | 1,046 |
| 7 | ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் | 793 |
| 8 | படைக்கலச் சட்டம் மற்றும் விதிகள் | 1,473 |

## பிற்சேர்க்கை—II.

### தமிழ்நாட்டில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களின் விவரம்.

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | **1. வடமண்டலம், சென்னை.** |
| வட சென்னைக் கோட்டம் | 1. வண்ணையம்பதி. |
| | 2. எஸ்பிளனேடு. |
| | 3. ராயபுரம். |
| | 4. வியாசர்பாடி. |
| | 5. செம்பியம். |
| | 6. கீழ்பாக்கம். |
| | 7. வேப்பேரி. |
| | 8. தண்டையார்பேட்டை. |
| | 9. வ.உ.சி. நகர். |
| | 10. எண்ணூர். |
| | 11. மணலி. |
| தென்சென்னைக் கோட்டம் | 1. எழும்பூர். |
| | 2. திருவல்லிக்கேணி. |
| | 3. மயிலாப்பூர். |
| | 4. தேனாம்பேட்டை. |
| | 5. அசோக்நகர். |
| | 6. சைதாப்பேட்டை. |
| | 7. கிண்டி. |
| | 8. ராஜ்பவன். |
| | 9. தாம்பரம். |
| | 10. அம்பத்தூர். |
| செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். கோட்டம். | 1. காஞ்சிபுரம். |
| | 2. ஸ்ரீபெரும்புதூர். |
| | 3. மதுராந்தகம். |
| | 4. செங்கற்பட்டு |
| | 5. திருவள்ளூர். |
| | 6. கும்மிடிப்பூண்டி. |



| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | 7. மறைமலைநகர். |
| | 8. செங்குன்றம். |
| | 9. உத்திரமேரூர். |
| | 10. பொன்னேரி |
| | 11. திருத்தணி. |

வடமண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை-32.

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | **மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி.** |
| திருச்சிராப்பள்ளி கோட்டம் | 1. திருச்சிராப்பள்ளி. |
| | 2. ஸ்ரீரங்கம். |
| | 3. முசிறி. |
| | 4. துறையூர். |
| | 5. பெரம்பலூர். |
| | 6. ஜெயங்கொண்ட சோழபுரம். |
| | 7. கரூர். |
| | 8. மணப்பாறை. |
| | 9. அரியலூர். |
| | 10. புள்ளம்பாடி. |
| | 11. அரவங்குறிச்சி. |
| | 12. புகளூர். |
| தென் ஆற்காடு கோட்டம் | 1. கடலூர். |
| | 2. சிதம்பரம். |
| | 3. நெல்லிக்குப்பம். |
| | 4. பண்ருட்டி. |
| | 5. விருத்தாசலம். |
| | 6. உளுந்தூர்பேட்டை. |
| | 7. காட்டுமன்னார்கோயில். |
| | 8. குறிஞ்சிப்பாடி. |
| | 9. திட்டக்குடி. |
| | 10. கடலூர் (சிப்காட்). |
| | 11. வேப்பூர். |

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| விழுப்புரம் கோட்டம் | 1. விழுப்புரம். |
| | 2. கள்ளக்குறிச்சி. |
| | 3. திண்டிவனம். |
| | 4. செஞ்சி. |
| | 5. திருக்கோயிலூர். |
| | 6. சங்கராபுரம். |
| | 7. மரக்காணம். |
| துக்கோட்டை கோட்டம் | 1. புதுக்கோட்டை. |
| | 2. அறந்தாங்கி. |
| | 3. பொன்அமராவதி. |
| | 4. ஆலங்குடி. |
| | 5. திருமயம். |
| | 6. இலுப்பூர். |
| | 7. கந்தர்வக்கோட்டை. |
| | 8. கீரனூர். |
| ஞ்சாவூர் கோட்டம் | 1. தஞ்சாவூர். |
| | 2. கும்பகோணம். |
| | 3. மன்னார்குடி. |
| | 4. நாகப்பட்டினம். |
| | 5. நன்னிலம். |
| | 6. திருவாரூர். |
| | 7. மயிலாடுதுறை. |
| | 8. பட்டுக்கோட்டை |
| | 9. ஒரத்தநாடு. |
| | 10. சீர்காழி. |
| | 11. திருத்துறைப்பூண்டி. |
| | 12. பேராவூரணி. |
| | 13. பாபநாசம். |
| | 14. திருக்காட்டுப்பள்ளி. |
| | 15. குடவாசல். |
| | 16. தரங்கம்பாடி. |
| | 17. திருவிடைமருதூர். |

**மத்திய மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை—55.**





| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | **தென்மண்டலம், மதுரை.** |
| மதுரை கோட்டம், | 1. மதுரை. |
| | 2. தல்லாகுளம். |
| | 3. மேலூர். |
| | 4. உசிலம்பட்டி. |
| | 5. பெரியகுளம். |
| | 6. தேனி-அல்லிநகரம். |
| | 7. ஆண்டிப்பட்டி. |
| | 8. மயிலாடும்பாறை. |
| | 9. உத்தமபாளையம். |
| | 10. போடிநாயக்கனூர். |
| | 11. திருமங்கலம். |
| | 12. கம்பம். |
| | 13. சோழவந்தான். |
| | 14. கொட்டாம்பட்டி. |
| | 15. கட்டமலைக்குண்டு. |
| காமராஜர் கோட்டம், | 1. ராமநாதபுரம். |
| | 2. ராமேஸ்வரம். |
| | 3. கமுதி. |
| | 4. பரமக்குடி. |
| | 5. முதுகுளத்தூர். |

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | 6. ஏர்வாடி. |
| | 7. காரைக்குடி. |
| | 8. தேவகோட்டை. |
| | 9. சிவகங்கை. |
| | 10. சிங்கம்புணரி. |
| | 11. திருப்பத்தூர். |
| | 12. ஸ்ரீவில்லிப்புத்தூர். |
| | 13. இராஜபாளையம். |
| | 14. சாத்தூர். |
| | 15. சிவகாசி. |
| | 16. அருப்புக்கோட்டை. |
| | 17. விருதுநகர். |
| | 18. வத்திராயிருப்பு. |
| | 19. திருச்சுழி. |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் கோட்டம். | 1. பாளையங்கோட்டை. |
| | 2. திருநெல்வேலி (பேட்டை). |
| | 3. தென்காசி. |
| | 4. கடயநல்லூர். |
| | 5. அம்பாசமுத்திரம். |
| | 6. நாங்குனேரி. |
| | 7. சங்கரன்கோயில். |
| | 8. வாசுதேவநல்லூர். |
| | 9. வள்ளியூர். |





| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர் |
|---|---|
| கன்னியாகுமரி கோட்டம். | 1. நாகர்கோவில். |
| | 2. கன்னியாகுமரி. |
| | 3. குழித்துறை. |
| | 4. குலசேகரம். |
| | 5. பத்மநாபபுரம் (அ) தக்கலை. |
| சிதம்பரனார் கோட்டம். | 1. கோவில்பட்டி. |
| | 2. தூத்துக்குடி. |
| | 3. தூத்துக்குடி அனல்மின் நிலையம். |
| | 4. திருச்செந்தூர். |
| | 5. சாத்தான்குளம். |
| | 6. ஸ்ரீவைகுண்டம். |
| | 7. விளாத்திக்குளம். |
| | 8. கழுகுமலை. |

தென்மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை—56.

<u>மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்.</u>

| | |
|---|---|
| கோயம்புத்தூர்-பெரியார்-நீலகிரி கோட்டம். | 1. கோயம்புத்தூர் (தெற்கு). |
| | 2. கோயம்புத்தூர் (வடக்கு). |
| | 3. மேட்டுப்பாளையம். |
| | 4. திருப்பூர். |
| | 5. பொள்ளாச்சி. |

[1991 செப்டம்பர் 2.

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | 6. உடுமலைப்பேட்டை. |
| | 7. வால்பாறை. |
| | 8. பல்லடம். |
| | 9. ஈரோடு. |
| | 10. தாராபுரம். |
| | 11. காங்கேயம். |
| | 12. கோபிசெட்டிப்பாளையம். |
| | 13. சத்தியமங்கலம். |
| | 14. கூடலூர். |
| | 15. உதகமண்டலம். |
| | 16. குன்னூர். |
| வேலூர்-அம்பேத்கார் கோட்டம் | 1. வேலூர். |
| | 2. இராணிப்பேட்டை. |
| | 3. இராணிப்பேட்டை. (சிப்காட்), |
| | 4. அரக்கோணம். |
| | 5. திருப்பத்தூர். |
| | 6. வாணியம்பாடி. |
| | 7. ஆம்பூர். |
| | 8. குடியாத்தம். |
| | 9. சோளிங்கர். |
| | 10. நாட்ராம்பள்ளி. |
| சம்புவராயர் கோட்டம் | 1. திருவண்ணாமலை. |
| | 2. செங்கம். |
| | 3. போளூர். |



1991 செப்டம்பர் 23]

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| | 4. செய்யார். |
| | 5. வந்தவாசி. |
| | 6. ஆரணி. |
| | 7. தண்டராம்பட்டு. |
| | 8. ஜவ்வாதுமலை. |
| சேலம்-தர்மபுரி கோட்டம். | 1. மேட்டூர் அனல்மின் நிலையம். |
| | 2. சேலம். |
| | 3. திருச்செங்கோடு. |
| | 4. ஆத்தூர். |
| | 5. மேட்டூர். |
| | 6. நாமக்கல். |
| | 7. ராசிபுரம். |
| | 8. சங்கரி. |
| | 9. ஏற்காடு. |
| | 10. கொல்லிமலை. |
| | 11. தர்மபுரி. |
| | 12. ஓசூர் (சிப்காட்). |
| | 13. கிருஷ்ணகிரி. |
| | 14. அரூர். |
| | 15. பெண்ணகரம். |
| | 16. பாலக்கோடு. |
| திண்டுக்கல்-அண்ணா கோட்டம். | 1. நத்தம். |
| | 2. வத்தலகுண்டு. |
| | 3. திண்டுக்கல். |

[1991 செப்டம்பர் 23

| கோட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| திண்டுக்கல் அண்ணா கோட்டம்—தொடர்ச்சி. | 4. பழநி. |
| | 5. ஒட்டன்சத்திரம். |
| | 6. வேடசந்தூர். |
| | 7. கொடைக்கானல். |
| | 8. நிலக்கோட்டை. |

மேற்கு மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை—58.

மொத்த தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| வட மண்டலம் | 32 |
| மத்திய மண்டலம் | 55 |
| தென் மண்டலம் | 56 |
| மேற்கு மண்டலம் | 58 |
| மொத்தம் | 201 |



பிற்சேர்க்கை—III.

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை.

(களப்பணியாளர்கள்).

| வரிசை எண். | பதவியின் பெயர். | ஒப்பளிக்கப் பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | தீயணைப்புத்துறை இயக்குநர் | 1 |
| 2 | தீயணைப்புத்துறை துணை இயக்குநர் | 4 |
| 3 | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 19 |
| 4 | உதவிப்பொறியாளர் (தானியங்கி) | 1 |
| 5 | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 19 |
| 6 | நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் | 198 |
| 7 | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 15 |
| 8 | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 9 | முன்னனித் தீயணைப்போர்கள் | 597 |
| 10 | இயந்திரக் கம்மியர் ஓட்டி | 191 |
| 11 | தீயணைப்போர் ஓட்டிகள் மற்றும் இயந்திரக் கம்மியர்கள் | 898 |
| 12 | தீயணைப்போர்கள் மற்றும் அதற்கு இணையான பதவிகள் | 3,475 |
| | மொத்தம் | 5,423 |

## பிற்சேர்க்கை—IV.

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை.

(அமைச்சுப் பணியாளர்கள்)

| வரிசை எண். | பதவியின் பெயர். | ஒப்பளிக்கப் பட்ட எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | தீயணைப்பு இயக்குநரது நேர்முக உதவியாளர்கள் | 2 |
| 2 | கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) | 2 |
| 3 | கண்காணிப்பாளர்கள் | 21 |
| 4 | உதவியாளர்கள் | 58 |
| 5 | இளநிலை உதவியாளர்கள் | 60 |
| 6 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 5 |
| 7 | தட்டச்சர்கள் | 24 |
| 8 | பதிவுரு எழுத்தர்கள் | 21 |
| 9 | அடிப்படைப் பணியாளர்கள் | 64 |
| | மொத்தம் .. | 257 |



## பிற்சேர்க்கை V.

1986 முதல் 1990 வரை கடந்த இந்தாண்டுகளில் ஏற்பட்ட தீவிபத்துக்கள், உடைமைகள் மற்றும் உயிர்ச்சேதம், காப்பற்றப்பட்ட உடைமைகள்/உயிர்களின் விவரம்.

| ஆண்டு. | தீ விபத்துக்கள் எண்ணிக்கை. | சேதம். உடைமை. | சேதம். உயிர்கள் | காப்பற்றப்பட்டவை. உடைமை. | காப்பற்றப்பட்டவை. உயிர்கள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. | (4) | (5) ரூ. | (6) |
| 1986 .. | 8,937 | 5,27,35,000 | 137 | 58,21,45,310 | 425 |
| 1987 .. | 10,668 | 8,20,36,000 | 182 | 60,72,37,235 | 271 |
| 1988 .. | 10,200 | 3,98,75,900 | 126 | 35,01,03,900 | 148 |
| 1989 .. | 10,330 | 4,72,53,750 | 178 | 64,23,41,510 | 211 |
| 1990 .. | 10,341 | 7,36,94,873 | 140 | 64,32,81,907 | 274 |

[1991 செப்டம்பர் 23

## இணைப்பு IV:

(538 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

### கொள்கை திட்டங்கள் 1991-92.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 1-4-1960 லிருந்து செயல்படத் தொடங்கியது. ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மற்ற முகவரமைப்புகளின் ஒத்துழைப்புடன், கிராமப் பகுதிகளில், கதர் கிராமத் தொழில்களை மேம் படுத்துவதற்குத் திட்டங்களை வகுத்து, மேம்படுத்தி ஒருங்கிணைத்து, செயல்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

1987 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழு (திருத்தச்) சட்டத்தின்படி, திருத்தப்பட்ட பொருள் விளக்கத்தில் பின்வருமாறு ஏழு தொகுதிகளின்கீழ் தொழில் களின் ஆய்வு வரம்பு சேர்க்கப்பட்டுள்ளது:—

(1) கனிமப் பொருளை அடிப்படையாகக் கொண்ட தொழில்.

(2) வனப் பொருளை அடிப்படையாகக் கொண்ட தொழில்.

(3) வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிலும் உணவுப் பொருள் தயாரிப்புத் தொழிலும்.

(4) பாலிமர், இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்.

(5) பொறியியல்—மரபு சாராத எரிசக்தி.

(6) துணித் தொழில்.

(7) பழுதுபார்ப்புத் தொழில.

தற்போது 10,000 மக்கள் தொகை கொண்ட பகுதியில் வாழ்கின்ற கைவினைஞர் ஒருவர் ரூ. 15,000 வரை முதலீடு செய்து மின்சக்தியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கலாம். இவ்வாறு, கதர் கிராமந் தொழில்கள் ஆணைக் குழுவின் வரம்புக்குள் வரும் கிராமத் தொழில்களின் மொத்த எண்ணிக்கை 26-லிருந்து 96 ஆக உயர்ந்துள்ளது.



1991 செப்டம்பர் 23]

வாரியம், கதர் கிராமத் தொழில்கள் திட்டத்தை மூன்ற டுக்கு முறையாக பின்வருமாறு செயல்படுத்துகிறது;—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | வாரியத்தின் சொந்த தொழிற் பிரிவுகள் | 1,239 |
| (2) | வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள். | 1,587 |
| (3) | கதர் கிராமத தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள். | 67,170 |

கதர் திட்டங்கள், உணவுக்குப் பயன்படுத்தப்படுபவை தவிர பிற எண்ணெய், சோப்பு தொழில் ஆகியவை வாரியத்தின் தொழிற் பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பனை வெல்லம், வெல்லம், பழுப்புச் சர்க்கரை, பருப்பு, தானிய வகைகள், செயற்கை நார், சுண்ணாம்பு, பிரம்பு மூங்கில் ஆகிய தொழில்கள், கூட்டுறவு அமைப்புகள் மூலமும், தனி யார் மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து தொழில்களும், வாரியத்தின் தொழில் பிரிவுகள், தொழில் கூட்டுறவு அமைப்புகள், தனியார்கள் ஆகியவை மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

**கதர்:**

இவ்வாரியம் 694, கிராமத் தொழில் மையங்களையும், 82 கதர் உற்பத்தி மையங்களையும், 22 பட்டு உற்பத்தி மையங்களையும், சாயம் தோய்த்தல், வெளுத்தல், வேலைப் பாடு செய்தல் ஆகியவற்றிற்கு 6 பிரிவுகளையும் நடத்தி வருகிறது. இத்தொழில் பிரிவுகள் மூலமாக 45,956 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில், 36,100 பேர் மகளிர். 1990-91-ஆம் ஆண்டில் கதர் உற்பத்தியின் மதிப்பு ரூ. 12.25 கோடியாகும். 1989-90 ஆம் ஆண்டில், இந்த உற்பத்தி மதிப்பு ரூ. 10.80 கோடியாக இருந்தது. 1991-92ஆம் ஆண்டில், கதர் உற்பத்தி மதிப்பை ரூ. 13.00 கோடியாக உயர்த்த வாரியம் கருதியுள்ளது.

பட்டு உற்பத்தி ;

1990-91ஆம் ஆண்டில், பட்டு உற்பத்தி மதிப்பு ரூ. 8.04 கோடியாகும். 1989-90-ஆம் ஆண்டில் இந்த உற்பத்தி மதிப்பு ரூ. 7.48 கோடியாக இருந்தது. 1991-92-ஆம் ஆண்டிற்கான இலக்கு ரூ. 8.25 கோடியாகும்.

பாலியஸ்டர் :

1990–91ஆம் ஆண்டில், பாலியஸ்டர் தயாரிப்பு ரூ. 4.51 கோடியாகும். 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 5.50 கோடி மதிப்புக்கு பாலியஸ்டர் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர் பயன்கள் :

அங்காடி மாற்றத்திற்கேற்ப வடிவமைப்புகளை மாற்று வதற்கு நெசவாளர்களுக்கு இயலும் பொருட்டு, 1991–92ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் 1,000 நெசவாளர்களுக்குப் பழைய அச்சு பண்ணைகளுக்குப் புதிய அச்சு பண்ணைகள் (வடி பண்ணைகள்) வழங்குவதற்கு மானியமாக ரூ. 3.00 இலட்சம் வழங்க மாநில அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

தள்ளுபடி :

மாநில அரசு பண்டிகை சமயங்களிலும், தேசியத் தலைவர் களின் பிறந்த நாள் விழாக்களின்போதும், பருத்தி, கதர், பட்டு ரகங்கள் விற்பனை மீது, ஓராண்டில் 90 நாட்களுக்கும் பாலியஸ்டர் விற்பனை மீது 60 நாட்களுக்கும் 10 சதவீதம் சிறப்பு தள்ளுபடி அளிக்கிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஆண்டு முழுவதும் பருத்தி கதருக்கு 15 சதவீதம் தள்ளுபடியும் பாலியஸ்டருக்கு 10 சதவீதம் தள்ளுபடியும் அனைத்து ரகங்களுக்கும் ஓராண்டில் 90 நாட்களுக்கு 10 சத வீதம் சிறப்பு தள்ளுபடியும் அளிக்கிறது.

கிராமத் தொழில்கள் :

இவ்வாரியத்தின் கீழ், 238 துறைப் பிரிவுகளும், 1,587 தொழில் கூட்டுறவு அமைப்புகளும் செயல்படுகின்றன. இவ்வாரியம், இதுவரை 67,170 கைவினைஞர்கள் சொந் மாகத் தொழில் தொடங்குவதற்காக நிதியுதவி அளித்துள்ளது. கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தி, விற்பனை 1990–91 ஆம் ஆண்டில் முறையே ரூ. 251.59 கோடி ரூ. 280.77 கோடி ஆகும். 1991–92ஆம் ஆண்டில் இது மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமத் தொழில் பொருள்களின் உற்பத்தி விற்பனையை முறையே ரூ. 275 கோடி, ரூ. 310 கோடியாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பனைவெல்லம் :

பனைப் பொருட்களில், பதநீர், பனை வெல்லம், பனங் கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனை திண்பண்டங்கள் போன்று உண்ணத்தக்க பொருள்களும், இலை, இலைப் பொருள்கள், தூரிகைகள், கட்டிட உத்திரங்கள் முதலியன போன்ற பிற பயன்பாட்டுப் பொருள்களும் அடங்கும். வாரியம், கடந்த



ஆண்டில் ரூ. 1.50 கோடி மதிப்புள்ள பனை நாரை ஏற்றுமதி செய்தது. வாரியம் மூன்றடுக்குத் தொழில் கூட்டுறவு அமைப்பு மூலம் அதாவது தொடக்கச் சங்கங்கள், மாவட்ட இணையங்கள், மாநில அளவில் தலைமைக் கூட்டுறவு இணையம் மூலமாக பனைத் தொழிலை மேம்படுத்துகிறது.

பனைவெல்லம் மட்டும் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 87.77 கோடி அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இத் தொழில், குறிப்பிட்ட காலத்திலும், முறையான அடிப்படையிலும் பெரு மளவில் வேலை வாய்ப்பு அளிக்கிறது. கள் இறக்குபவர்கள் மரத்தில் ஏறும் போது இறந்துவிடுபவர்களுக்கு மாநில அரசின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 அளிக்கப்படுகிறது.

சோப்பு :

வாரியம், வேப்ப எண்ணெய், புங்க எண்ணெய் போன்று சமையலுக்குப் பயன்படுத்தப்படாத எண்ணெய்களைக் கொண்டு சலவை சோப்புகளைத் தயாரிக்கிறது. 1991–92ஆம் ஆண்டில் மேலும் 5 சலவை சோப்புகள் தயாரிக்கும் பிரிவுகளை ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது. வாரியத்தின் சலவை சோப்பு வணிகக் குறியீடு பதிவின் கீழ் 'கோபுரம்' சலவை சோப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வாரியம், நறுமணத்துடன் அதாவது சந்தனம், வேம்பு, ஆகிய மணத்துடன் குறிஞ்சி என்ற வணிகப் பெயரில் குளியல் சோப்பைத் தயாரிக்கிறது.

தோல் :

வாரியம், காலணி தயாரிக்கும் 27 பிரிவுகளை ஏற்படுத்தி யுள்ளது. இது, பொது மக்களின் சேவையை நிறைவு செய்வதுடன், காவலர், ஊர்க்காவலர் முதலியோருக்கு அம்யூனிஷன் பூட்ஸ், ஷூக்கள், பள்ளி செல்லும் குழந்தை களுக்கு இலவச செருப்புகள் ஆகியவற்றையும் வழங்குகிறது.

வாரியம் 1981–82ஆம் ஆண்டிலிருந்து புதுமையான திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் தோல் தைக்கும் தையல் இயந்திரத்துடன் இரும்புத் தகடாலான பெட்டிக் கடையையும் வழங்கியுள்ளது.

இதுவரை 7,250 பெட்டிக்கடைகளை வாரியம் வழங்கி யுள்ளது. தையல் இயந்திரத்துடன் ஒரு பெட்டி கடையின் சராசரி விலை ரூ. 10,000 ஆகும். இத் திட்டத்திற்காகும் செலவு முழுவதும், சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து செய்யப்படுகிறது.

மட்பாண்டத் தொழில் :

வீடு கட்டும் பணிகள் அதிகமாகி விட்டதன் காரணமாக சுட்ட களிமண் பொருள்கள், பளிங்குப் பொருள்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, விருத்தாசலத்தில் செயலற்றுப் போன மட்பாண்டத் தொழில் பிரிவை, அரசு இவ்வாண்டில் எடுத்துக் கொண்டு, சுட்ட களிமண், பொருள்கள், பளிங்குப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கத் தொடங்கும்.

செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை திட்டுதல் :

செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை தீட்டி மெருகிடும் தொழில் திருச்சிராப்பள்ளியில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு சட்டத்தின் அண்மைக் கால பொருள் விளக்கத்தில், செயற்கை இரத்தின கற்களுக்கு பட்டை தீட்டி மெருகிடுவது ஒரு இனமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றுமதி வாய்ப்பு மிக அதிகமாக இருப்பதால் திருச்சிராப்பள்ளியில் அதனைச் சுற்றிலும் இத்தொழிலை பெரிய அளவில் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 3 தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்காக, 1991–92 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் வாரியத்திற்கு நிதியுதவி செய்ய மாநில அரசு ஒப்புக் கொண்டு பங்கு மூலதன வகையில் மானிய உதவியாக ரூ. 1.19 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியது.

விற்பனை :

வாரியத்திடம், பின்வரும் விற்பனைப் பிரிவுகள் உள்ளன:—

| | | |
|---|---|---|
| (அ) | கதர் கைவினை மையங்கள் | 159 (நகரங்களிலும் மாநகரங்களிலும் கதர் கிராமத் தொழில் பொருள்களின் விற்பனை). |
| (ஆ) | கிராமயோக் விற்பனை நிலையம் | 9 (கிராமத் தொழில் பொருள்களின் விற்பனை மட்டும்). |
| (இ) | கிராம சில்பாக்கள் .. | 20 (கிராமப் பகுதிகளில் கதர் கிராமத் தொழில் பொருள்களின் விற்பனை). |
| (ஈ) | தோல் பொருள்கள் விற்பனை கடைகள். | 25 (தோல் பொருள்களின் விற்பனைக்கு மட்டும்). |





கதர் வாரியம், சென்னை பன்னாட்டு விமான முனையத்தில் விற்பனை நிலையம் ஒன்றையும், அதேபோன்று பன்னாட்டு-உள்நாட்டு விமான முனையத்திற்கு இடையில் விற்பனை நிலையம் ஒன்றையும் தொடங்கியுள்ளது.

வெளி மாநிலத்தில் அதாவது, பெங்களூரில் ஒரு விற்பனை நிலையமும் தொடங்கப்பட்டுள்ளது.

1990–91 ஆம் ஆண்டில் 24.85 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர் பொருள்களும், 260.82 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமத் தொழில் பொருள்களும் விற்பனை செய்யப்பட்டன. 1991–92 ஆம் ஆண்டில் 29.00 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர் பொருள்களையும், 310.00 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமத் தொழில் பொருள்களையும் விற்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறளகத்தில் உள்ள காதி விற்பனை நிலையம் இந்தியாவிலேயே மிகப் பெரிய விற்பனை நிறுவனமாகும். இது, பல வகையான கதர் பொருட்கள், கிராமத் தொழில் பொருட்கள் கைத்திறத் தொழில் பொருட்கள் முதலியவற்றை விற்பனை செய்கிறது. வாரியமானது உற்பத்திக் கொள்கையைச் செயலாக்க ஏதுவாக அங்காடி விற்பனை போக்கினைப் பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, பணப் பற்று வரவுகளைப் பதிவு செய்வதற்காக (Computer and Electronice Cash Register) மின்னணுப் பொறி ஒன்று வாங்கி நிறுவுவதற்காக 1991–92 ஆம் ஆண்டு பகுதி 2 ஆம் திட்டத்தின்கீழ் 2.50 இலட்சம் ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள முகவர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சோப் விற்பனை ஊக்கமளிப்பதாக இருந்ததையடுத்து தோல் பொருட்களையும் முகவர்களின் மூலம் விற்பனை செய்யும் முறையை இவ்வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.

வேலை வாய்ப்பு :

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் கிராமப் புற கைவினைஞர்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே வேலை வாய்ப்பினை அளித்து வேலை வாய்ப்பினைத் தேடி நகர்ப்புறங்களுக்கு வரும் மக்கள் கூட்டத்தைக் குறைக்கிறது. இவ்வாரியம், முழு நேர, பகுதி நேர வேலை வாய்ப்பினை அளிப்பதோடு குறிப்பிட்ட பருவக் கால அடிப்படையிலும் வேலை வாய்ப்பினை அளிக்கிறது.

இந்த வாரியம், 31–3–1991 ஆம் நாள் வரையில் 9.99 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் கூடுதலாக 1,00 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

[1991 செப்டம்பர் 23

## தனித் திட்டங்கள்.

### பழங்குடியினர் மேம்பாட்டு ஒருங்கிணைந்த திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியைக் கொண்டு, தேனி வளர்த்தல், புளியங் கொட்டைகளை செய்ற்முறைபடுத்துதல், பாய் முடைதல், பிரம்பு, மூங்கில் கூடைகள் பின்னுதல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு இதன் மூலம் 6,300 பேர் பயனடைகிறார்கள். 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 97.11 இலட்சம் மூலதனச் செலவில் 698 பழங்குடியினர் பயனடை வதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

### பகுதி (..) திட்டங்கள்:

1991–92 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் கருதியுள்ளது.

| (1) | ரூபாய் இலட்சத்தில். (2) | பயனீட்டாளர்களின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 இரத்தினக் கற்களைப் பட்டை தீட்டுதல். | 1.19 | 90 |
| 2 கதர் நெசவாளர்களுக்கு அச்சு வடி பண்ணைகளை விநியோகித்தல். | 3.00 | 1,000 |
| 3 குறளகம், கதர் கைத்திறப்பொருள் துறையில் பணப் பற்று வரவு பதிவுசெய் மின்னணுப் பொறி நிறுவுதல். | 2.50 | — |
| மொத்தம் .. | 6.69 | 1,090 |

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

இத் திட்டத்தின்கீழ் மஞ்சள் புல்லிலிருந்து எண்ணெய் வடித்தெடுப்பதற்கான கருவிகளையும், நீலகிரித் தைலம் வடித் தெடுப்பதற்கான கருவிகளையும் வழங்குதல், மலைப் பகுதி



1991 செப்டம்பர் 23]

களில் வாழும் தனிப்பட்டவர்கள் பயனடையும் வகையில் தேனீ வளர்க்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடிப்படை உதவிகள் செய்தல் போன்ற திட்டங்கள் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 4,006 பேர் உதவி பெற்றுள்ளனர். 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் மூலதனச் செலவில் 140 பேர் பயனடையும் திட்டங்கள் செயல்படுத்தப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

இத் திட்டம் அண்ணா, காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் தேனீ வளர்த்தல், நீலகிரி தைலம், ஜெரானியம் எண்ணெய் போன்ற இன்றியமையா தாவர எண்ணெய்களை வடித்தெடுத்தல் பனை ஓலை, பிரம்பு, மூங்கில் தொழில்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு 1985–86 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இவ் வாரியம் கொடைக்கானலில் அதற்குச் சொந்தமாக உள்ள நிலத்தில் ஜெரானியம் செடிகளைப் பயிரிட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 1,972 கைவினைஞர்கள் பயனடைகின்றனர். 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 3.00 இலட்சம் மூலதனச் செலவில் 320 பேர் பயனடையும் வகையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள்:

இத் திட்டத்தின் கீழ் 15,532 பேர் பயன் பெறத்தக்க வகையில் அரசு நிதி வழங்கியுள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் 11,470 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் ரூ. 154.00 இலட்சம் செலவாகக் கூடிய செயற் குறிப்புகளை வாரியம் வகுத்துள்ளது.

### பண்ணாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி:

1990–91 ஆம் ஆண்டில் கிராமத் தொழில் திட்டங்களின் மூலம் உரிய முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட 445 மகளிர் பயனடைந்துள்ளனர்.

1991–92 ஆம் ஆண்டில் 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்படும். இதன் மூலம் 980 பெண்கள் பயன் பெறுவர்,

சிறப்பு உள்ளாக்கத் திட்டம்.

இதுவரை பல்வேறு திட்டங்களின் கீழ் 23,489 கைவினைஞர்களின் பயனுக்காக நிதியுதவி வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் 7 250 செருப்புப் பெட்டிக் கடைகளை இலவசமாக வழங்குவதும் அடங்கும்.

4,968 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக 360.23 இலட்சம் ரூபாய் செலவாகக் கூடிய திட்டங்களை வாரியம் உருவாக்கியுள்ளது. செருப்பு பெட்டிக் கடைகள் 2,000-ஐ வழங்குவதும் இதில் அடங்கும். இந்து ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 2,800 கைவினைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெறவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தோல் தொழிலின் கீழ் 380 இலட்சம் ரூபாய் செலவு பிடிக்கும் பெருந் திட்டம் ஒன்றை வாரியம் தீட்டியுள்ளது.

தொகுதி மேம்பாட்டுத் திட்டம்:

11,720 கைவினைஞர்கள் பயன் பெறுவதற்காக அரசு இதுவரை நிதியுதவி அளித்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டும் 21.60 இலட்சம் ரூபாய் செலவில் 350 கைவினைஞர்கள் பயன் பெறுவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றன.

வாரியத்தின் நிதி:

கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் மத்திய அரசு ஏற்பளித்தவாறு நிதியுதவி அளிப்பதற்கான அதனுடைய முறையின்படி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த வாரியத்திற்குத் தேவைப்படுகின்ற நிதியை அளிக்கின்றது. வாரியத்தின் வணிகத் தன்மையற்ற நடவடிக்கைகள் தொடர்பான வருவாய், செலவு ஆகியவற்றுக்கிடையே உள்ள நிகர வேறுபாட்டுத் தொகையைத் தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

பம்பாய் கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்படி 1990–91 ஆம் ஆண்டுக்கு வங்கியின் நிதியுதவி உட்பட 22.94 கோடி ரூபாயை வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது (1989-90 ஆம் ஆண்டில் இத்தொகை 16,47 கோடி ரூபாயாக இருந்தது) 1991–92 ஆம் ஆண்டில் வங்கியின் நிதியுதவி உட்பட 32.76 கோடி ரூபாயை அளிக்க ஆணையம் தற்காலிகமாக ஒப்புக் கொண்டுள்ளது.



மாநில அரசு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அதனிடம் ஒப்படைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த நிதி உதவி அளித்தது.

| | 1990–91 ஆம் ஆண்டுக்கான இறுதித் திருத்த நிதி யொதுக்கம். | 1991–92 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்: | | |
| (i) கதர் நிதிக்கான நிகரச் செலவு மானியம் (Net Cost Grant). | 250.00 | 150.00 |
| (ii) கிராமத் தொழில்கள் நிதிக்கான நிகரச் செலவு மானியம். | 250.00 | 150.00 |
| (iii) தணிக்கைக் கட்டணங்கள் | 40.00 | 40.00 |
| (iv) கதர் விற்பனை குறித்த தள்ளுபடி. | 350.00 | 350.00 |
| (v) ஏனைய சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக. | 43.95 | 39.90 |
| மொத்தம் | 933.95 | 729.90 |

[1991 செப்டம்பர் 23

இணைப்பு V.

157 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

தொழில் கொள்கை.

(ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்.)

1991-92.

முன்னுரை:

1.1. தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருக்கச் செய்வதற்காக, இம்மாநிலத்தை விரைந்து தொழில் மயமாக்கு வதற்கான இலக்கினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வகுத்துள்ளார். இந்த இலக்கினை எய்துவதற்காக, தொழில் வளர்ச்சியில் பின்வரும் மூன்று முக்கியக் கூறுகள் இன்றி யமையாதவையாகக் கண்டறியப்பட்டுள்ளன:

(1) பொருத்தமான தொழில் சூழ்நிலை.

(2) போதிய அடிப்படை வசதிகள்:

(3) தடையற்ற மின்சாரம் கிடைக்கச் செய்தல்.

1.2. மூலதனப் பற்றாக்குறையுள்ள நம் நாட்டில் சிறு தொழில் வளர்ச்சி பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தொழில் மயமாக்கும் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்குச் சிறு தொழில் வளர்ச்சி முக்கியப் பங்கு வகிக்கிறது. ஏனெனில், நடுத்தர பெரிய தொழில்களுடன் ஒப்பிடுகையில், சிறு தொழில்களுக்கு மூலதனம் தேவைப்படுவதில்லை. மேலும், அதிக வேலை வாய்ப் பையும் உருவாக்குகிறது.

1.3. மாநிலத்தில், சிறு தொழில் வளர்ச்சிக்காக, அரசு, புதிய சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1.4. சிறு தொழில்களையும், மிகச் சிறு தொழில்களையும் பெருக்கும் நோக்கத்துடன் பின்வரும் முக்கியக் கூறுகள் கண் டறியப்பட்டுள்ளன:—

(1) திட்டங்களையும் தொழில் முனைவர்களையும் உரிய விதத்தில் கண்டறிதல்.

(2) நடைமுறைகளை எளிதாக்குதல்.



1991 செப்டம்பர் 23]

(3) மூலப் பொருட்கள் கிடைக்கும் வகையைப் பெருக் குதல்.

(4) உற்பத்திப் பொருள் விற்பனையைப் பெருக்குதல்.

(5) தொழில் நுட்ப உதவியை அதிகரித்தல்.

(6) பலவகை உதவித் தொகையையும் ஊக்கத் தொகை யும் வழங்குதல்.

(7) தொழில் வளர்ச்சியின் மைய அமைப்பாக விளங்கும் மாவட்டத் தொழில் மையங்களுக்குப் புத்துயிர் அளித்தல்.

புதிய தொழில் கொள்கையின் விளைவு:

2.1. சிறு தொழில்களையும், மிகச் சிறு தொழில்களையும் வளர்க்கவும், வலுப்படுத்தவும் மத்திய அரசு, அண்மையில் கொள்கை நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. மத்திய அரசு அறிவித்த புதிய தொழில் கொள்கை, இம்மாநிலத்தில் மேலும் பல தொழில்களைத் தொடங்கித் தொழில் மயமாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்குகிறது. உரிமம் வழங்கும் நடை முறைகள், நீக்கப்படுவது, கால தாமதம் ஏற்படுவது தவிர்க்கப் படுவது மட்டுமின்றி தொழில் முனைவர்கள் தங்கள் தொழிலுக் கான மனைகளையும் இடங்களையும் தேர்ந்தெடுக்கவும் உதவும். ஏகபோக, கட்டுப்படுத்தப்பட்ட வணிக நடைமுறைச் சட்டத்தை அகற்ற உத்தேசிக்கப்படுவதால், தற்போதுள்ள தொழில் பிரிவுகள் பெருகுவதற்கும் வழிவகுக்கும்.

2.2. அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட கொள்கை முடிவு, மிகச் சிறிய தொழில்கள் தொடர்பானதாகும். இத் தொழிற் பிரிவுகள் எந்த இடத்தில் அமைந்திருப்பினும், அத்தொழில்களுக்கான முதலீட்டு வரையறை தற்போதைய அளவான 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

2.3. சிறு தொழில் வளர்ச்சிக்கு சிறுதொழில் பற்றிய கொள்கை முனைப்புத் திட்டம் அனைத்து வகையிலும் ஊக்க மளிப்பதுடன், புதிய உற்சாகத்தையும் அளிக்கும்.

2.4. மாநில அரசின் இவ்வளர்ச்சிப் பங்கு அதிக முக்கியத் துவம் வாய்ந்துள்ளதால் தொழில் துறையில் பிற்பட்ட பகுதி களில் தொழில்களைத் தொடங்கவும், அப்பகுதிகளில் தொழி லதிபர்களின் கவனத்தை ஈர்க்கவும் அரசு அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டுள்ளது.

2.5. பெட்ரோலிய-இரசாயனப் பொருட்கள், ஆல்கஹாலை
அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொறியியல், உணவுப்
பொருள் பதப்படுத்தும் தொழில்கள், வேளாண்மையை அடிப்
படையாகக் கொண்ட தொழில்கள் முதலிய தொழில் வளர்ச்சியை
ஊக்குவிக்க அரசு உத்தேசித்துள்ளது. மின்னணுத் தொழில்கள்,
கணிப்பொறி தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் முழு
ஆதரவு அளிக்கப்பட உள்ளது.

2.6. வேளாண்மைக்கும் தொழில்களுக்கும் இடையே வலு
வான இணைப்பை உருவாக்கும் பொருட்டு ஊரக/பிற்பட்ட
பகுதிகளில் தொழில்கள் அமைவதை எளிதாக்கும் வகையில் ஒருங்
கிணைந்த அடிப்படை வளர்ச்சி (தொழில் நுட்ப வசதிகள்
உட்பட) பற்றிய புதிய திட்டமொன்று செயற்படுத்தப்படும்.
தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்து
வதற்காக, இத்திட்டப் பயிற்சி ஆசிரியர்களுக்கும்,
நோக்கங் கொண்டவர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. தொழில்
களுக்கென்றே நடத்தப்படவுள்ள சிறப்புப் பயிற்சித் திட்டங்கள்
மூலமாக பெண் தொழில் முனைவோருக்கு ஆதரவு அளிக்கப்
படும். தொழில் முனைவோர் உற்பத்தியிலும், விற்பனையிலும்
கவனஞ் செலுத்துவதற்கு இயலும் வகையில் விதிகளும், நடை
முறைகளும் எளிதாக்கப்படும்.

2.7. சிறு தொழில்களையும், மிகச் சிறு தொழில்களையும்,
கிராமத் தொழில்களையும் விரைவுபடுத்துவதன் மூலம் நகர்ப்
புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பெருமளவு வேலை வாய்ப்பை
உருவாக்க அரசு பெருமுயற்சி மேற்கொள்ளும். தொழில்கள்,
அதிக இடங்களில் தொடங்கப்படுவதால், உற்பத்தி பெருகும்
தொழில் துறையில் பிற்பட்ட பகுதிகளில் பொருளாதார நிலை
மேம்பாட்டையும், மேலும், மாநிலத்தின் ஏற்றுமதி முயற்சி
களுக்கும் பெரிதும் உதவும்.

3.1. தொழில் வணிக இயக்ககம், சிறு தொழில் வளர்ச்சிக்
கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு
தோல் தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சிறு தொழில்
கழகம் முதலியன போன்ற சிறு தொழில் துறை வளர்ச்சிக்கு
அரசு அமைத்துள்ள பல்வேறு நிறுவனங்கள் சிறுதொழில் வளர்ச்
சியை ஊக்குவிக்கும் முகவரமைப்புகளாக வடிவமைக்கப்பட்
டுள்ளன.

திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்நிறுவனங்களின் பங்கு
பற்றிய விவரம் வருமாறு :—

3.2. தொழில் வணிக இயக்ககம் :

தொழில் வணிக இயக்ககம், மாநில அரசின் முக்கியத் துறை
யாக விளங்குகிறது. பொதுவாகத் தொழில் வளர்ச்சிக்கும் குறிப்
பாக சிறுதொழில் வளர்ச்சிக்கும் திட்டங்களை வகுத்து செயற்



படுத்தும் பணியை இவ்வியக்ககம் மேற்கொள்கிறது. மாவட்டத்
தொழில் மைய அமைப்புகளைப் பயன்படுத்தி, தொழில் அனுமதி
களையும், ஒப்புதல்களையும் விரைந்து பெறுவதற்காக நட
வடிக்கை மேற்கொள்ளவும், நடைமுறைகளை எளிதாக்குவதன்
மூலமும், தொடர் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும், தனியார்
துறை வளர்ச்சிக்கு ஆதரவாக நிபந்தனைகள் உருவாக்க வலி
யுறுத்தப்படுகிறது. புதிய சிறுதொழில் பிரிவுகளுக்குப் பதிவுச்
சான்றிதழ் வழங்குதல், உதவித் தொகைத் திட்டங்களை அனு
மதித்தல், போன்ற பணிகளையும், மூலப் பொருள் மதிப்பீடு,
இறக்குமதி உரிமங்கள் வழங்குதலை மதிப்பிடுதல் போன்ற
முறைப்படுத்தும் பணிகளையும் செயற்படுத்தும் பொறுப்பும்
மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால்
தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கின்ற அமைப்பு என்ற வகை
யில், அண்மைக் காலங்களில் இம்மையங்களின் பணி பெரும்
முக்கியத்துவம் பெற்றுள்ளது.

3.3. மாவட்டத் தொழில் மையங்களின் மூலம் செயற்படுத்
தப்படும் நிதியுதவித் திட்டங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) மாநில மூலதன முதலீட்டு உதவித் தொகை.

(2) தெரிவு செய்யப்பட்ட வகை தொழிற்சாலைகளுக்கு
சிறப்பு உதவித் தொகை.

(3) வட்டியின்றி விற்பனை வரி செலுத்துவதற்கு கடன்
தள்ளி வைத்தல்/தள்ளிவிடுதல்.

(4) மின் உற்பத்திச் சாதனங்கள் வாங்குவதற்கு உதவித்
தொகை.

(5) குறைந்த மின்னழுத்த மின் கட்டண உதவித் தொகை.

(6) இந்திய தர செயலகத்திலிருந்து தரச் சான்றிதழ் பெறு
வதற்கான ரொக்க ஊக்கத் தொகை.

(7) மாவட்டத் தொழில் மையங்களின் கடன் தொடக்க
நிதியுதவித் தொகை.

3.4. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியின் முன்னேற்ற
வேகத்தை முடுக்கிவிடும் நோக்கில், மாவட்டத் தொழில் மையங்
கள் சிறு தொழில்களுக்கு உதவுகின்ற வகையில், மைய அமைப்பு
களாகச் செயல்படுவதற்கு மிகவும் தீவிரப்படுத்தப்படும்.
அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் செய்துதரும் குழுக்களின்
நடைமுறையை எளிதாக்கி, பல்வேறு தொழிற்சாலைகளைக்
கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளையும்

[1991 செப்டம்பர் 23

ஒரே இடத்தில் செய்துதரும் குழுக்கள் வலுப்படுத்தப்படும். எந்திரம்—தளவாடங்கள் வகையில் ரூ. 10.00 இலட்சம் வரையில் முதலீடு செய்யப்படுகின்ற சிறு தொழில்கள் (சுற்றுப்புறச் சூழலுக்கு ஊறு விளைவிக்காத தொழில்கள்)முன் அனுமதிகள் ஏது மின்றி தொடங்கப்படுவதற்கு வகை செய்யும் விதத்தில் எளிதாக விரைந்து அனுமதி பெறும் ஏற்பாடு (G.c n Chan; l Sys.em) கொண்டு வரப்பட்டுள்ளது.

3.5. மாவட்டத் தொழில் மையங்களின் செயற்பாடுகள், அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் செய்துதரும் குழுவின் பணிகள் எளிதாக விரைந்து அனுமதியளிக்கும் ஏற்பாடு ஆகியவை குறித்து செயல் திட்டக்குழு குறித்த காலத்திற்கொருமுறை கூட்டும் கூட்டத்தில் ஆய்வு செய்கிறது. அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் செய்து தரும் மாநில அளவிலான குழு அரசின் தலைமை செயலாளர் தலைமையில் உள்ளது. இடர் பாடுகளுடன் இயங்கும் தொழில் பிரிவுகளுக்கு அனுமதிகள் அளிப்பதில் கணிசமான அளவு மேம்பாடு அடைந்துள்ளதை இச்செயற்பாடுகள் காட்டுகின்றன.

சிறு தொழில்கள் பதிவு செய்தலும், வளர்ச்சியும் :

3.6. 31—7—1991 அன்றுள்ளபடி, 1,30,486 சிறு தொழில் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டில், 14,000 தொழில் பிரிவுகள் என்று இலக்கு நிர்ணயித்திருக்க, 14,914 தொழில் பிரிவுகளுக்கு நிரந்தரச் சிறு தொழில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் இவ்வாண்டில் பின்தங்கிய, மிகவும் பின் தங்கிய 107 வட்டங்களில் 9,143-க்கும் அதிகமான தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன. இவை களுக்கு ரூ. 150.86 இலட்சம் மாநில மூலதன உதவித் தொகையும், ரூ. 5,24.38 இலட்சத்திற்கு வட்டியின்றி விற்பனை வரி செலுத்துவதை தள்ளி வைக்கும்/தள்ளிவிடும் சலுகைகளும், கிடைத்தன. 1991-92ஆம் ஆண்டில் நிரந்தரமாகப் பதிவு செய்யும் தொழில் பிரிவுகள் 15,400 என்று இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இவற்றில், 10,200 புதிய தொழில் பிரிவுகள் 20 அம்சத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும்.

3.7. தற்போது சிறு தொழில் துறை ரூ. 5,000-க்கும் மேற் பட்டப் பொருள்களை உற்பத்தி செய்து, பிளாஸ்டிக் ரப்பர் பொருட்கள், உலோகத் தகடுப் பொருட்கள், வீட்டுப் பயனுக்கான பாத்திரங்கள் முதலியவை போன்ற பெருமளவில் பயன்படும் இனங்களை உற்பத்தி செய்து, மிகப் பெரிய அளவில் உற்பத்தி செய்து வழங்கும் அமைப்பாக உருவெடுத்துள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி, மின்னணுக் கட்டுப்பாட்டு ஏற்பாடு ( El:ctronics Contrcl System ) மின் மருத்துவசாதனங்கள் (Electro Medical equipments) எண்களில் காட்டும் அளவைக்



1991 செப்டம்பர் 23]

கருவிகள் ( Digital measuring instruments ) [illegible] சிறுதொழில் துறையில் அடங்கும். இத்துறை, இறக்கு மதிப் பொருட்களுக்கான துணைப் பொருட்களின் இனங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து அந்நியச் செலவாணியை மிச்சப் படுத்துவதும் கவனிக்கத்தக்கது. சிறு தொழில் துறையின் ஏற்று மதிப் பொருட்களுக்கான உற்பத்தி முயற்சிகளைப் பொறுத்த வரையில், நாட்டின் நேரடியான மொத்த ஏற்றுமதியில் [illegible] சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பதும் முக்கியமான தாகும்.

3.8. மின்னணுத் தொழில் ;

மின்னணுத் தொழில் வளர்ச்சி, வாழ்க்கையின் அனைத்துத் துறைகளையும் மேம்படுத்தியுள்ளது. குறிப்பாக நவீனத் தொழில் உற்பத்தியில், மின்னணுத் தொழில் நுட்பம் செயற்படுத்தப் படுகிறது. வேறு வகையில் சொன்னால், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டும் கருவியாக மின்னணு [illegible] தொழிலின் வளர்ச்சி விளங்குகிறது.

இந்த மாநிலத்தில் மின்னணுத் தொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கு [illegible] அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

3.9. மின்னணுத் தொழில் வளர்ச்சியை [illegible] தொழில் வணிகத் துறை பின்வரும் அடிப்படை வசதி களையும் பணிகளையும் செய்துள்ளது.

(அ) மின்னணுவியலுக்கும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களுக்காகவே தெரிவு செய்யப்பட்ட வளர்ச்சி மையங் களில் தொழில் பேட்டைகளுக்கும் வகை செய்தல்.

(ஆ) அனைத்துச் சாதனங்களுடன் கூடிய ஆய்வுக்கூடங் களில் மிகக் குறைந்த செலவில் சோதனை தரக்கட்டுப்பாட்டு வசதிகளுக்கு வகை செய்தல்.

(இ) உற்பத்தி பொருளுக்கும், மனித ஆற்றல் வள மேம் பாட்டு வசதிகளுக்கும் வகை செய்தல்.

(ஈ) மின் மருத்துவச் சாதனங்களின் [illegible] மேம்பாட்டு மையங்கள் [illegible] சோதனை உற்பத்தி [illegible] மூலம் மின் மருத்துவச் சாதனங்களைப் பழுது பார்க்கும் வசதிகளுக்கு வகை செய்தல்.

3.10. இரசாயனப் பிரிவு :

குறிப்பாக சிறு தொழில் துறையின், பல்வேறு வகையான தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட் களின் தரத்தை உறுதி செய்யும் வகையில், இந்த இரசாயனப் பிரிவு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங் களிலுள்ள ஆய்வுக் கூடங்களின் மூலம் விரிவான ஆய்விற்கு வகை செய்துள்ளது. அடுத்த இரு ஆண்டுகளில் நவீன பகுப்பாய்வுக் கருவிகளை வாங்கி வழங்குவதன் மூலம் இந்த ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை வசதிகளை நவீனப்படுத்தக் கருதப்படுகிறது.

3.11. தொழில் நுட்பத் தகவல் திட்ட விவரம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம், இரசாயனத் சிறுதொழில் தொடங்குவதற்கு தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், தொழில் முனைவோர்க்கும் இரசாயனப் பிரிவு வழிகாட்டுவதுடன், உதவியும் அளிக்கிறது. நடப்பாண்டில், உணவு பதப்படுத்தல், மருத்துவப் பொருட்கள், பெட்ரோ இரசாயனப் பொருட்கள், சாயங்கள், சாய இடை நிலைப் பொருள்கள் போன்ற முக்கிய தொழில்களின் வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தக் கருதப்படுகிறது. ரூ. 2.50 இலட்சம் செலவில், புள்ளி விவர மையத்தை நவீனப்படுத்துவதற்கான பகுதி II திட்டம் 1991–92 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

3.12. இந்த இயக்ககத்தின் தொழில் கூட்டுறவுகள் பிரிவு தீப்பெட்டி, தேயிலை, சவ்வரிசி, நார்ப் பொருள்கள், பாலிதீன், மின்னணுவியல், தோல் முதலிய துறைகள் அடங்கிய தொழில் கூட்டுறவு அமைப்புகளைக் கவனிக்கிறது. சில ஊரகத் தொழில் களை மேம்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பை உருவாக்குவதற் கும்; தொழில் கூட்டுறவுத் துறைகளை ஒரு கருவியாக மாநில அரசு பயன்படுத்தி வந்துள்ளது. அரசு, தொழில் கூட்டுறவு அமைப்புகளுக்கு தொழில் நுட்ப, நிதி, நிருவாக உதவிகளை நீட்டித்துள்ளது.

3.13. தொழில் கூட்டுறவு அமைப்புகளின் சாதனை வரு மாறு :—

| ஆண்டு. (1) | உற்பத்தி (2) | விற்பனை. (3) |
|---|---|---|
| | (ரூ. கோடியில்) | |
| 1977–78 .. .. .. | 15.09 | 17.68 |
| 1987–88 .. .. .. | 87.12 | 113.09 |
| 1988–89 .. .. .. | 80.95 | 103.57 |
| 1989–90 .. .. .. | 108.72 | 127.39 |
| 1990–91 .. .. .. | 111.09 | 139.00 |
| 1991–92 .. .. .. | 20.00 | 43.21 |
| (ஏப்ரல் முதல் ஜூலை வரை). | | |



[stamp]

3.14. தொழில் கூட்டுறவு அமைப்புகளுக்கு பங்கு மூலதன உதவி:

இவ்வாண்டில், குறிப்பாக சமுதாயத்தில் நலிவுற்ற பிற்படுத் தப்பட்ட பிரிவினருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்கு வதற்காக பல்வேறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி யிடமிருந்தும் கூடுதலாகக் கடன் வாங்குவதற்கான அதிகாரத்தை அவற்றுக்கு அளிக்கும் வகையில் அவற்றின் பங்கு மூலதன அமைப்பு வலுப்படுத்தக் கருதப்பட்டிருக்கிறது. நார்ப் பொருள் சங்கங்களுக்கு, 1991–92ஆம் ஆண்டில் அரசு பங்கு மூலதனமாக பகுதி II திட்டத்தின் கீழ் ரூ. 5 இலட்சம் பங்கு மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சங்கங்கள் கூடுத லாக வேலை வாய்ப்பை அளிப்பதற்கு நடைமுறை மூலதனம் பெறும் நிலையில் இருக்கும்.

3.15. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்குப் பங்கு மூலதன உதவி.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் அளித்துள்ளது. மறு நிதியுதவி அளிக்கும் வசதிகள் இவ்வங்கியிடம் உள்ளன. எனவே, பகுதி-II திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ரூ. 20 இலட்சம் அரசு பங்கு மூலதன உதவியுடன், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி தக்க மறுநிதி உதவி வசதிகளைப் பெறமுடியும். இதனால் இவ் வங்கி, வேலைவாய்ப்பை உருவாக்குவதில் நேரடித் தொடர்பு கொண்ட புதிய தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் அளிக்க இயலும்.

3.16. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய/மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு சலுகைகள்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய/மிகவும் பின்தங்கியவை என அறிவிக்கப்பட்டுள்ள 107 வட்டங்கள் (பின்தங்கிய வட்டங் கள் 76, மிகவும் பின்தங்கிய வட்டங்கள் 31) அனைத்து தொழில் பிரிவுகளையும் பொறுத்தமட்டில் சிறப்பு சலுகைகள் பெறத் தகுதியானவையாகும். இவ்வட்டங்களில் அமைந்துள்ள தொழிற் பிரிவுகள் தங்கள் மொத்த முதலீட்டில் 15 சதவீதம் மாநில மூலதன உதவித் தொகை பெறத் தகுதியானவையாகும். இத னுடன், மின்னணு, தோல், ஆட்டோமோபைல், மருந்துப் பொருள்கள், உணவைப் பதப்படுத்துதல், விளையாட்டுப் பொருள் கள், சூரிய ஒளி சாதனங்கள், பாலிவினைல் குளோரைடு கட்டிடப் பொருள்கள் முதலியன போன்ற சிலவகை தொழிற் சாலைகள் மாநிலத்தில் எங்கு அமைக்கப்பட்டிருப்பினும் அவற் றுக்கு சிறப்பு மூலதன முதலீட்டு உதவித் தொகை கிடைக்கும்.

[1991 செப்டம்பர் 23

3.17. உதவித்தொகை என்பதன்கீழ், 1988–89, 1989–90 ஆகிய ஆண்டுகளில், ஏற்பட்ட செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 60 இலட்சம் மட்டுமேயாகும். 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 361 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் வழங்குவதற்காக ரூ. 8 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 3 கோடி ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய வட்டங்களிலுள்ள புதிய தொழில் பிரிவுகள் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி முழுவதையும் தள்ளுபடி பெறுவதற்கும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டங்களிலும், அரசு தொழில் தொகுதிகளிலும் உள்ள புதிய தொழில் பிரிவுகள், மொத்த முதலீட்டு உச்ச வரம்புவரை 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரியை ஒத்தி வைப்புச் சலுகையை பெறுவதற்கும் தகுதியானவையாகும்.

இச் சலுகைகளும், ஊக்க உதவிகளும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மிகவும் பின்தங்கிய வட்டங்களில் உள்ள தொழில் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும் பல்திறப்படுத்துவதற்கும், குறைந்த வீதத்தில் கிடைக்கும். இச்சலுகை மற்றப் பகுதிகளில் அமைக்கப்பட்ட புதிய தொழில் பிரிவுகளுக்கும், அவற்றின் மொத்த முதலீட்டில் 60 சதவீதம் வரை தற்போது கிடைக்கப் பெறுகிறது.

3.18 மாசுக் கட்டுப்பாடு:

(அ) மாசுக் கட்டுப்பாடு வாரியம், சிறுதொழில் துறையில் 117 தொழிற்சாலைகளை மாசுக் கட்டுப்பாட்டு வரம்பிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளது.

(ஆ) அமைப்புமுறையிலான அடிப்படையில் முறையான, வாலாயமான விவாதங்கள் நடத்த இயலும் வகையில் சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியோர் அடங்கிய இணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால், வாரியத்திற்கும், சிறு தொழில்களுக்குமிடையே நிலையாக தொடர்பு இருப்பதுடன், பிரச்சினைகளையும் உடனுக்குடன் தீர்க்க முடியும்.

(இ) மிகவும் மாசு ஏற்படுத்தும் தன்மையுள்ள, தொழிற்சாலைகள் தவிர ஏனைய சிறுதொழில் பிரிவுகளிடமிருந்து சிறு செயல்திறன் உத்தரவாத வைப்பீடு வசூலிக்க வேண்டாமென ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், முதுநிலை சுற்றுச் சூழல் பொறியாளரின் பொறுப்பின்கீழ் தொழில் நுட்ப பணிக் கொட்டத்தை அமைத்துள்ளது. சிறு தொழிற்சாலைகள்



1991 செப்டம்பர் 23]

யாதொரு பிரச்சினைக்காகவும் இக்கோட்டத்துடன் தொடர்பு கொள்ளலாம். அனைத்து தொழில் நுட்ப பணிகளும் இலவசமாக அளிக்கப்படும்.

3.19. மின்சக்தி வழங்கல் :

(அ) அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்து புதிய தொழில் பிரிவுகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரே சீராக மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எக்கால அளவிற்குள் மின் இணைப்பு அளிக்கப்படும் என்ற தகவலை தமிழ்நாடு மின்வாரியம், சிறு தொழில் பிரிவு களின் தொழில் முனைவோர்க்கு அவர்கள் விண்ணப்பம் அனுப்பிய நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அனுப்பிவைக்கிறது.

(இ) தொழில் தொகுதிகளிலுள்ள சிறு தொழிற்சாலை களுக்கென தமிழ்நாடு மின் வாரியம் தனி முன்னுரிமை நிர்ணயித்துள்ளது. இதனால் அவர்களுக்கு விரைவில் மின் இணைப்பு கிடைக்கும்.

(ஈ) 20 பரித்திறன்வரை மின் சுமை உள்ள குறைவழுத்த தொழில் பிரிவுகளுக்கும், மின் அழுத்தமாற்றி நிறுவுவது தேவைப் படாத இணைப்புகளுக்கும் மின் சுமை 20 பரித்திறனுக்கு அதிகமாக இருந்தபோதிலும்கூட விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்ட நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

(உ) மின் அழுத்தமாற்றி நிறுவ வேண்டிய அவசியம் உள்ள இடங்களில் விண்ணப்பம் செய்துகொள்ளப்படும் நாளி லிருந்து 6 மாதத்திற்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

(ஊ) முன்னரே அறிவிக்கப்படாமல் மின் அழுத்த சுமை குறைவது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு மின்வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகளுடனும், மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர் களுடனும் காலாண்டு ஆய்வுக் கூட்டங்கள் நடத்துமாறு ஆணை யிடப்பட்டுள்ளது.

3.20. மூலப்பொருட்கள் :

(அ) உருளைப் பிரிவுகள், உருக்குத் தகடுகள் மென் இரும்பு போன்ற இனங்களில் முக்கிய உருக்குத் தயாரிப்பாளர்களின் உற்பத்திக் குறைவாக இருப்பதாலும், தேவைக்கேற்ப ஒதுக்கீடு

இல்லாததாலும் முறைப்படுத்தப்பட்ட ஆதாரங்களிலிருந்து உண்மையில் பொருட்கள் தேவைப்படாத தொழில் பிரிவுகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களின் மேலாளர் ''தொழிற் பிரிவுகள் உண்மை யிலேயே செயற்படுகின்றன'' என்று சான்றிதழ் வழங்கும்போது தான், அளிக்கப்பட்ட படிவத்தின்படி பொருள்களை வழங்கு மாறு சிட்கோ கேட்டுக் கொள்ளப்படும். சிட்கோவுக்கு வழங்கப் படும் திறன் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பரிந்துரையில் ஒவ் வொரு வகைப் பொருளையும் பயன்படுத்துவதில் தொழிற் பிரிவின் திறன், பொருளின் அளவு ஆகியவை அப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(ஆ) தற்போது செயல்படாத தொழில் பிரிவுகளை நீக்கும் பொருட்டு அரிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் அனைத்து தொழில் பிரிவுகளையும் 100 சதவீதம் சரிபார்க்கும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் தங்கள் ஒதுக்கீட்டைத் தவறாக பயன்படும் தொழில் பிரிவுகளும் அடங்கும். இம்முறை ஏற்கனவே கணிசமான அளவுக்கு பயனைத் தந்துள்ளது. தற் போதில்லாத அல்லது பொருட்களை உரியவாறு பயன்படுத்தாத பல தொழில் பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன.

(இ) முறைப்படுத்தப்பட்ட இனங்களையும், இறக்குமதி செய்யப்பட்ட இனங்களையும் சிறு தொழிற்சாலைகளுக்கு வழங் கிய பின்னர் சரிபார்க்கும் முறை தீவிரமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. கள ஆய்வுகளை இயக்கம் நுணுக்கமாகக் கண் காணிக்கிறது.

(ஈ) அதே சமயத்தில், இம்மாநிலம் தன் பங்கு மூலப் பொரு ளினைப் பெற இயலும் வகையில் இவ்வரசு மென் இரும்பு உருக்கு ஆகியவற்றை அதிகமாக ஒதுக்குவது குறித்த பிரச்சினையை கல்கத்தா மேம்பாட்டு ஆணையாளருக்கும், புதுடில்லி உருக்கு சுரங்கங்கள் அமைச்சகத்திற்கும் எடுத்துரைத்துள்ளது. 1991–92 ஆம் ஆண்டிற்கு மேற்கொண்டும் 12,000 டன் மென் இரும்பு ஒதுக்கீடு பெற்றுள்ளது.

(உ) சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக மிகச் சிறிய தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு மட்டுமே ஒதுக்குவதற் காக, 25,000 மெட்ரிக் டன் உருளையாக்கப்பட்ட தகடுகளையும் இலேசான ரக அமைப்புகளையும் தனியாக ஒதுக்கீடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஊ) பாரபின் மெழுகு, தீக்குச்சி, மெழுகு ஆகியவற்றை பொருத்தமட்டில், மாநிலத்திற்கு அளிக்கப்படும் தற்போதைய ஒதுக்கீடு, சிறு தொழிற்சாலைகளின் தேவை முழுவதையும் நிறைவு செய்வதற்குப் போதாது. மெழுகு ஒதுக்கீட்டை அதிகரிக்க செய்வது





குறித்த பிரச்சினை மாண்புமிகு பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை மத்திய அமைச்சருக்கு நேரடியாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. உண்மையில் மெழுகைப் பயன்படுத்தாத தொழிற் பிரிவுகளை நீக்கும் பொருட்டு பாரபின் மெழுகைப் பயன் படுத்தும் அனைத்து தொழிற் பிரிவுகளைப் பற்றி ஆய்வு எடுக்கப்பட்டு வருகிறது.

3.21. நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளித்தல் :

மாநில அளவிலான நிறுவனங்கள் குழு, விற்பனை வரி ஒத்தி வைப்புக்கு அனுமதியளிக்கவும், மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக் கவும் முதன்முறையாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்குழு தன்னுடைய கூட்டத்தில் சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகள் நலிவடைந்த தொழிற் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட தொழில் முனை வோர் கூறுவதைக் கேட்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இது சிறு தொழிற் பிரிவுகளில் குறைகளைக் களைந்து தொழிலை புதுப்பிக்க உதவுவதற்கு வலுவான அமைப்பாகச் செயல்படும்.

3.22. புதுமையான அணுகுமுறையாக, திருப்பூருக்கு அருகே முதலிப்பாளையத்தில் தனியார் தொழில் முனைவோர்கள் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திய உள்ளாடை தொழிற்பேட்டையில் இந்த உதவித் தொகை பெறத் தகுதியானதாக ஆக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் மேம்பாட்டு நிறுவனம் நிலத்தை மேம்படுத்தி, பணிக் கொட்டகைகள் கட்டுகிறது. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை கள் தவிர்க்கப்பட்டுள்ளதால், குறிப்பிட்டுள்ள காலத்தில் இத் தொழிற்பேட்டை அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது திருப்பூரில் ஏற்றுமதியையே முற்றிலும் நோக்கமாகக் கொண்ட உள்ளாடைத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

3.23. விசையேற்றங்கள், மோட்டார்கள், டீசல் என்ஜின்கள் ஆகியவற்றுக்காக கோயம்புத்தூரில் ஏற்படுத்தக் கருதியுள்ள வகைப்படுத்தல் பொருள்மேம்பாடு மையத்திற்கு நிலம், கட்டிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

3.24. ஆடைகள் தயாரிப்பதற்காகச் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த கக்கலூரில் தொழிற்பேட்டை அமைத்தல்.

ஆயத்த ஆடைகளும், கைத்தறி துணிகளும் தயாரிப்பதற் காகச் செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த கக்கலூரில் தொழிற்பேட்டை அமைக்கப்படவுள்ளது. இத் தொழிற்பேட்டையை ஏற்படுத்துவதற்காக ஆயத்த ஆடை— கைத்தறி ஏற்றுமதியாளர் சங்கத்திற்கு நிலம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்திற்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்படியாகச் செயற்படுத்தப்படும் திட்டமாக முதல் நிலை மேம்பாட்டில் 50 ஏக்கர் நிலம் எடுத்துக்கொள்ளப்படும். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கொட்டகைகள் கட்டும் பணியை விரைவில் மேற்கொள்ளும். இத் தொழிற்பேட்டை தொடர்பாக, ஆயத்த ஆடைகள்—கைத்தறி ஏற்றுமதியாளர் சங்கம், சங்க உறுப்பினர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், மழைநீர் வடிகால்கள், சிறு பாலங்கள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், பணிமனைச் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் குழந்தைகள் காப்பகம் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுக்கும் வகை செய்யும். தொழில் முனைவோர், மாநில மூலதன உதவித்தொகையில் 15 சதவீதத் தொகையைப் பயன்படுத்தலாம்.

3.25. சென்னைக்கு அருகில் தோல் தொழிற்பேட்டையைத் தொடங்குதல்.

தோல் பொருள்களின் விற்பனையை மேம்படுத்தவும் சென்னையிலிருந்து அயல்நாட்டு பெருமளவுக்கு ஏற்றுமதி செய்யவும் வேண்டுமாயின், தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பது இன்றியமையாத ஒன்றாகும் என்பதால், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக சென்னைக்கு அருகில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளைப் பயன்படுத்தி, தோல் உற்பத்திப் பொருட்களையும் தோல் ஆடைகளையும் தயாரிப்பதற்காகத் தொழிற்பேட்டை ஒன்று ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.26. மாவட்டத் தொழில் மையங்களில் அலுவலகச் செயல்களை சீரமைத்தல்.

அடிப்படை நிலையில் உதவித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதால், அவை திறமையாகச் செயல்படுவதை மேம் படுத்தும் பொருட்டு அவற்றின் அலுவலக நடைமுறைகள் சீரமைக்கப்பட்டு உள்ளன. இது தொடர்பாக இசைவுகளையும் ஒப்புதல்களையும் அளிப்பதற்கான காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. சிறு தொழில்கள் தற்காலிகச் சான்றிதழ்கள். | 7 நாட்களுக்குள் |
| 2. நிலையான பதிவேட்டுச் சான்றிதழ் | 30 நாட்களுக்குள் |
| 3. மாநில மூலதன உதவித்தொகை. | 60 நாட்களுக்குள். |





| | |
|---|---|
| 4. குறைவழுத்த மின்சக்தி உதவித் தொகை. | 30 நாட்களுக்குள். |
| 5. வட்டியில்லா விற்பனை வரியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல் ஒத்திப்போடுதல். | 60 நாட்களுக்குள். |
| 6. மின் ஆக்கி (ஜெனரேட்டர்) ஆதரவு உதவி. | 60 நாட்களுக்குள். |
| 7. மாவட்டத் தொழில் நிலையங்கள்/ கடன்கள் தொடக்க நிதியுதவி. | 60 நாட்களுக்குள். |
| 8. படித்தேறி வேலைவாய்ப்பில்லாமல் உள்ள இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம். | (அ) விண்ணப்பம் 30 நாட்களுக்குள் வங்கிக்கு அனுப்ப வேண்டும். (ஆ) 90 நாட்களுக்கு முன்பு அனுமதிக்கப் படவேண்டும். (இ) 180 நாட்களுக்கு முன் வழங்க வேண்டும். |
| 9. ஊக்கமளிக்கும் இயக்கம். | இது ஆண்டில் 15 நாட்களுக்கு ஒரு முறை ஒரு வட்டாரத்தில் நடத்தப் பட வேண்டும்; மேலும் அந்த ஆண்டில் அனைத்து வட்டாரங்களிலும் ஊக்கமளிக்கும் இயக்கம் நடத்தி முடித்திட வேண்டும். |
| 10. தொழில் முனைவோர் மேம்பாட்டுச் செயற் திட்டம். | ஆண்டுக்கொரு முறை நடத்தப்பட வேண்டும். |
| 11. அரிதான மூலப்பொருட்கள் பயன்படுத்துதல். | 30 நாட்களுக்குள் விநியோக முகவரமைப்புகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 12. | இறக்குமதி விண்ணப்பங்கள் | 15 நாட்களுக்குள் ஆதரவு அளிக்கப்பட வேண்டும். |
| 13. | பொதுமக்கள் குறைகள் குறித்த விண்ணப்பங்கள். | இவற்றுக்கு 25 நாட்களுக்குள் முடிவு கண்டு பதில் அளிக்க வேண்டும். |

மாவட்ட தொழில் மையங்கள் செயல்பாட்டு முறை ஒவ்வொரு மாதமும் அரசு மட்டத்தில் மறு ஆய்வு செய்யப்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்களின் சாதனைக்குரிய மறு ஆய்வுப் பணியானது கணிப்பொறி மயமாக்கப்பட்ட அறிக்கை படிவத்தின் அடிப்படையில் செய்யப்படுகிறது.

3.27. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஊக்கம் அளிக்கும் இயக்கம்;

புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக, மாவட்ட அளவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 4.00 இலட்சம் ரூபாய்க்கும் இம் மாநிலத்தில் சென்னை மாநகரம் நீங்கலாக மாநிலத்தின் அனைத்து வட்டார அளவிலும் ஊக்கமளிக்கும் இயக்கத்தைச் செயல் படுத்துவதற்காக 1.00 இலட்சம் ரூபாய்க்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டுச் செயல் திட்டம், கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

3.28. மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்;

நமது நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 50 சதவீதத்தினர் மகளிர் ஆவர். வசதிவாய்ப்பு மிக்க மற்றும் திறமை மிக்க மகளிர் பலர் இம்மாநிலத்தில் இருந்தபோதிலும், ஊக்கமளிப்பு/பயிற்சி வசதிகள் இல்லாததால் ஒரு சிலரே தொழில் துறையில் ஈடுபட்டுள்ளனர். மகளிருக்கு வாய்ப்புகள் கிடைக்கப் பெறுமாயின், எவ்வித பணிகளையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளனர். நெடுங்காலமாக இருந்துவரும் சமுதாய மரபு ஏற்றுக் கொள்ளத்தக்க வகையான பணிகளில் மட்டுமின்றி, நாட்டில் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்வதிலும் அவர்களைத் தனித் தொழில் முனைவர்களாக்கச் செய்யும் முயற்சிகள் தீவிரமாக்கப்படும். எனவே, தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் துறைகளில் கருத்தியல் மற்றும் நடைமுறை சார்ந்த (செயல்முறை) அவசியமான பயிற்சி ஒரு மாதத்



திற்கு அவர்களுக்கு மட்டும் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. அவ்வாறு அளிக்கப்படுவதால் அவர்கள், தனித்தியங்கும் திறமையைப் பெற்று முழு நம்பிக்கையுடன் தனது தொழில் நிறுவனங்களை நடத்த இயலும். தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில் மகளிரை ஊக்குவிக்கும் வகையில், தொழில் நடவடிக்கைகளைக் கண்டறிவதிலும் அவர்களுடைய தேவைகளுக்கேற்பப் பொருத்தமான முறையில் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதிலும் அவர்களுக்கு உதவும் பொருட்டு, தீவிர பயிற்சித் திட்டம் அவசியமாகிறது. எனவே, 1991–92 ஆம் ஆண்டிற்குரிய பகுதி—2 திட்டத்தின் கீழ் பெண்களுக்கான தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.29. மாவட்ட அளவிலான தொழில் கருத்தரங்குகள்:

தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநிலத்தில் சிறிய, நடுத்தர, பெரிய தொழில்களை மேம்படுத்தும் அவசியத்தை மாநில அரசு வலியுறுத்திவருவதால், தொழில் முனைவோர்கள் ஒன்றாகக் கூடி, புதிய தொழிற் சாலைகள் அமைத்தல், தற்போதுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், விரிவாக்குதல், பல்திறப்படுத்துதல் போன்ற தொழில் சம்பந்தமான பிரச்சினைகளைக் கலந்து பேசும் வகையில், மாவட்ட அளவிலான தொழில் கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வதன் மூலம், மாவட்ட அளவில் தொழில்களை மேற்கொண்டும் மேம்படுத்துவதற்குத் திறம்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருதப்பட்டுள்ளது. இக்கருத்தரங்குகள், மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்குரிய புதிய வாய்ப்புகளைக் கண்டறியும் ஒரு பயனுள்ள அமைப்பாக விளங்கும். தமிழ்நாடு சிறு தொழிலாக்கக் கழகம், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வணிக வங்கிகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து, மாவட்டங்களில் தொழில் கருத்தரங்குகள் நடத்த ஏற்பாடு செய்யுமாறு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்டத் தொழில் மையங்களின் அனைத்துப் பொது மேலாளர்களும், தொழில் ஆணையாளர் தொழில்-வணிகத் துறை இயக்குநரும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

4.1. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்:

சிறு தொழில் துறையில் தொழில்களை முன்னேற்றி, மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றும் திட்டவட்டமான நோக்குடன், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் நடவடிக்கைகள் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளிலும், வளர்ச்சி அடையாத பகுதிகளிலும் பரவலாக்கப்படும், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்

இம்மாநிலத்தில் சிறு தொழில்களை மேம்படுத்துவதற்குரிய விரிவான திட்டத்துடன், 1971 ஆம் ஆண்டு தன்னுடைய நடவடிக்கைகளைத் தொடங்கியது.

4.2. சிறு தொழில்களை அரசு சார்பில் மேம்படுத்துவதற்குக் குறிப்பாகச் சிறு தொழில் துறைகளில் தொழில் நுட்ப வல்லுநர்களிடையே சுய வேலை வாய்ப்பைப் பெருக்கும் பொருட்டு, எண்ணற்ற திட்டங்களைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் செயல்படுத்தி வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இக்கழகம் தான் பெற்றுள்ள அனுபவங்களைக் கொண்டு தமிழ்நாட்டில் சிறு தொழில்களைப் பெருமளவில் முன்னேற்றி வருகிறது.

4.3. சிறு தொழில் துறையில் தொழில்களை மேம்படுத்துவது இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். இதில் பின்வருவனவும் அடங்கும்.

(அ) அடிப்படை வசதிகளை உருவாக்குதல்:

தொழில் வளர்ச்சி மையங்களுக்கு ஆதாரமாக விளங்கும் தொழில் பேட்டைகளை மேம்படுத்துதல், பல்வேறு தொழில்களுக்குரிய பணிக் கொட்டகைகளுக்கும், சிறு தொழில் பிரிவுகளை அமைப்பதற்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட பண்ணைகளுக்கும் வகை செய்தல்.

(ஆ) ஊக்க உதவித் திட்டங்கள்:

அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணைகளுக்கேற்ப உதவித் தொகையைக் கொடுத்துத் தீர்த்தல், பாதுகாப்புப் பணிகள் போன்ற முகவர் பணிகளை மேற்கொள்ளுதல்.

(இ) அடிப்படை/பற்றாக்குறை மூலப் பொருட்களைப் பங்கீடு செய்தல்;

சிறு தொழில் பிரிவுகள் தங்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களையும், பற்றாக் குறையாகவுள்ள மூலப் பொருட்களையும் கட்டுப்பாட்டு விலை வீதத்தில் தங்களுடைய பணிமனைகளிலிருந்து பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். அடிப்படை மூலப்பொருட்கள் கிடைப்பதில் அக்கறை காட்டுவதோடு, பணிமனைகளை அதிக அளவில் திறப்பதும் இக்கழகத்தின் கொள்கையாகும்.



(ஈ) விற்பனை உதவித் திட்டங்கள்:

விலை முன்னுரிமை, அரசுக் கொள் முதலில் முன்னுரிமை, தேவைக் குறிப்புகளுக்கு முன பணம் வழங்குதல் போன்ற ஊக்க உதவித் திட்டங்களுக்கு இக்கழகம் வகை செய்து, சிறு தொழில் பிரிவுகள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக்கு உதவி செய்கிறது.

எதிர்காலத் திட்டங்கள்.

4.4. பணிக் கொட்டகைகளுக்கு வகை செய்தல்:

இக்கழகம், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக குறைந்த அளவு 200 பணி கொட்டகைகளைக் கட்ட திட்டமிட்டுள்ளது. அதற்கிணங்க, 1991–92 ஆம் ஆண்டில் 8 கோடி ரூபாய் செலவில் 200 பணிக் கொட்டகைகளைக் கட்டவும், மேம்படுத்தப்பட்ட 50 மனைகளை 1 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து ஏற்படக்கூடிய கிராக்கி அதிகரித்தால் கொட்டகைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கழகம் திட்டமிட்டுள்ளது.

4.5. புதிய சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் தொழிற்பேட்டைகள், குறிப்பிட்ட தொழிலுக்கான தொழிற்பேட்டைகள்:

பெரியார் மாவட்டத்தில் பெருந்துறைக்கு அருகில் வடமுகம் காங்கேயம் பாளையத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழ் நாகச்சியில் குறிப்பிட்ட தொழிலுக்கான தொழிற்பேட்டையையும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இக்கழகம் ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்காக கக்கலூரில் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் குறிப்பிட்ட தொழிலுக்கான தொழிற்பேட்டைகளையும், செம்பரம்பாக்கத்தில் தோல் பொருட்களுக்கான தொழிற் பேட்டையையும் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

4.6, தனியார் தொழிற்பேட்டைகள்:

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில், சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் அருகில் முதல்பாளையத்தில் உள்ளாடைகளுக்கான தனியார் தொழிற் பேட்டை ஒன்றை ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. 85 ஏக்கர் பரப்பில் மொத்தம் 13.09 கோடி ரூபாய் செலவில் 155 கொட்டகைகளுக்கான தொழிற் பேட்டையைச் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் வடிவமைத்துள்ளது. இது, இவ்வகையில் இந்தியாவிலேயே முதலாவதாக இருக்கும். 1991 பிப்ரவரித்

திங்களில் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. இப்பணி 1992 ஜனவரித் திங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

4.7. ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ள தனியார் தொழிற் பேட்டை கள்:

சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிட்கோ) நாமக்கல்லில் மோட்டார் வண்டி தயாரிப்புப் பொருட்களுக்காக ''நாமக்கல் ஆட்டோ நகர்'' என்ற பெயரில் தனியார் தொழிற்பேட்டை களை உருவாக்கும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளது. சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் மதுரையில் உள்ளாடைகளுக் கான தனியார் தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்குவதற்கு வடிவமைத்துள்ளது.

4.8. முக்கியமான மூலப் பொருட்கள்/அரிதாகக் கிடைக்கும் மூலப் பொருட்களை வழங்குதல்:

1991-92 ஆம் ஆண்டுக்கான இலக்கு கழகம், சிறு தொழில்கள், சிறு தொழில் பிரிவுகள், சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட விலை வீதங்களில் தங் களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் அரிதாகக் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பெறுவதை உறுதி செய்ய பெரும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் அடிப்படை மூலப் பொருட்களின் வழங்கலை அதிகரிப்பதும் சிறு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் கொள்கையாகும்.

1991-92 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள 81,120 மெட்ரிக் டன் எடையுள்ள பல்வேறு மூலப் பொருட் களை வழங்க வேண்டும் என்ற இலக்கை எய்த சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் திட்டமிட்டுள்ளது.

4.9. புதிய மூலப் பொருட்களை வழங்குதல்:

சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் புதிய மூலப் பொருட்களை அறிமுகப்படுத்தக் கருதியுள்ளது. காகிதத்தை அச்சிடு வதற்காக சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாடு செய்தித்தாள் காகிதம் மற்றும் காகிதங்கள் நிறுவனத்தின் தேவைக் குறிப்பு அனுப்பும் அமைப்பாக ஏற்கெனவே நியமிக்கப் பட்டுள்ளது.

சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம்:

திருவாளர்கள் இந்துஸ்தான் அல்லாய்ஸ் நிறுவனம் தயாரித்த தகரம்.



திருவாளர்கள் இந்துஸ்தான் காப்பர் நிறுவனம் தயாரித்த செம்பு.

திருவாளர்கள் கேரளா மினரல்ஸ் அண்டு மெட்டல்ஸ் நிறு வனம் தயாரித்த 'ருட்டில்' தரத்தைச் சேர்ந்த டைட் டானியம்-டை-ஆக்ஸைடு போன்ற புதிய மூலப் பொருட் களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

4.10. புதிய மூலப் பொருட்களுக்கான கிடங்கு:

பேட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ள மூலப் பொருட் கள் கிடங்கிலிருந்து பாரபின் மெழுகின் விநியோகம் தொடங்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட் டத்திலுள்ள சிவகங்கையில் புதிய மூலப் பொருட்களுக்கான கிடங்கு ஒன்று ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

4.11. தமிழ்நாட்டிற்கு மூலப் பொருட்களை அதிக அளவில் பெற, அரசு எடுத்துள்ள முயற்சிகள்:

''ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா'' (SAIL) நிறு வனத்திடமிருந்து, இரும்பையும் உருக்கையும் அதிக அளவில் பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாட்டிற்கு உருக்கைக் ''குறைவாக ஒதுக்கீடு'' செய்வதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பற்றி மத்திய உருக்குத்துறை இணை அமைச்சரின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது குறித்து கவனிப்பதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

4.12. தற்போதுள்ள கல்கரி பற்றாக் குறைக்குத் தீர்வு கான, தமிழ்நாடு அரசு, மத்திய நிலக்கரித்துறை, இணை அமைச் சரை நேரடியாக அணுகி தமிழ்நாட்டின் முழுத் தேவையள வான 30,000 மெட்ரிக் டன் கல்கரியை உடனடியாக ஒதுக்கீடு செய்யும்படிக் கேட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்கரி யின் முழு அளவையும் தமிழ்நாட்டிற்கு சாலை வழியாகவும், இரயில் வழியாகவும், அனுப்பி வைக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. கல்கரி ஏற்றப்படும் இடமான லாயபாத்தில் போதிய சரக்கு இரயில் பெட்டிகளை அளிக்கும்படியும் தமிழ் நாடு அரசு மத்திய இரயில்வே அமைச்சகத்தைக் கேட்டுக்கொண் டுள்ளது. கல்கரியைக் கப்பல் வழியாகச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

6. ஓட்டல்கள்.

7. பதிவுபெற்ற மருத்துவர்கள்.

8. போக்குவரத்து வாகனங்கள்-பேருந்து உரிமையாளர்கள்.

9. ஒருங்கிணைந்த குறித்த காலக்கடன்கள்.

10. மீன்பிடி இழு படகுகள்-விசைப் படகுகள்.

11. சிறு மருத்துவ மனைகள்.

12. நவீனப்படுத்தும் திட்டம்.

13. சாதனங்கள் வாங்க பற நிதி உதவியளிக்கும் திட்டம்.

14. நலிந்த தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரளித்தல்

15. தொடக்க நிதியுதவியளிக்கும் புதிய திட்டம்.

16. முன்னாள் இராணுத்தினருக்கான திட்டம்.

17. மகளிர் தொழில் முனைவோர்.

18. ஏடிபி வகையிலான கடன் வழங்கும் திட்டம்.

19. ஒரே இடத்தில் அனைத்து நடைமுறைப் பணிகளையும் நிறைவேற்றக்கூடிய திட்டம்.

20. மகளிர் நிதியுதவித் திட்டம் (மகிளா உதயம் நிதி).

5.3. துணித் தொழில் இராசாயனப் பொருட்கள் இரசாயன
தயாரிட்புப் பொருட்கள் உணவு காகிதம் காகித தயாரிப்புப்
பொருட்கள் உலோக தயாரிப்புப் பொருள்கள் தோல்
தோல் உற்பத்திப் பொருள்கள் உலோகமல்லாத கனிமப்
பொருள்கள் போன்ற தொழில்களைத் தமிழ்நாட்டில் மேம்
படுத்தும் பணியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
குறிப்பிடத்தக்க வகையில் செயலாற்றி வருகிறது. நமது
மாநிலத்தின் சில பகுதிகளில் தொழில்களை மேம்படுத்துவதற்
காகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் முக்கிய பங்காற்று
வதின் பயனாக திருப்பூரில் உள்ளாடைகள் தயாரிப்புத்
தொழில் கோயம்புத்தூரில் துணித் தொழில் வார்ப்படத்
தொழில் சேலம் தருமபுரி ஆகிய இடங்களில் பட்டுப்புழு
வளர்ப்புத் தொழில் சவ்வரிசித் தயாரிப்பு தொழில் சிவகாசியில்
"ஆஃப்செட்" முறையில் அச்சிடும் தொழில் தீப்பெட்டித்
தொழில் ஆகியவை தனித்தன்மை பெற்று விளங்குகின்றன.

6.1. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) :

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில்
வணிகத் துறையால் முதற்கண் ஏற்படுத்தப்பட்ட 64 சிறு தொழில்
களை ஏற்றெடுத்துக் கொண்டதன் மூலம் "டான்சி" 1965-ல்
ஏற்படுத்தப்பட்டது; சிறு தொழிற் பிரிவுகள் தங்களுடைய
உற்பத்தி-விற்பனையைக் கணிசமாகப் பெருக்கிக் கொண்ட



1991 செப்டம்பர் 23] நடத்தக்கூடிய அளவிற்கு அத்தொழில்
தோடு வணிக முறையில் நடத்தக்கூடிய அளவிற்கு அத்தொழில்
பிரிவுகள் ஒரு நிலையை அடைந்து விட்டதால் தொழில்
வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்
பதன் மூலம் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்குகின்ற நோக்கத்
துடனும் பயிற்சி-கட்டுல விளக்க மையங்கள் அமைத்து பணி
யாற்றுகின்ற நோக்கங்களுடனும் "டான்சி" அமைக்கப்பட்டது

6.2. இவ்வாறு ஏற்றெடுத்துக் கொள்ளப்பட்ட தொழில்
பிரிவுகளில்— சில பிரிவுகள் அதன துணை அமைப்புக்களான
தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் ("டாசெல்")
தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் தமிழ்நாடு கனிம
நிறுவனம் (டாமின்) தமிழ்நாடு தோல் பொருட்கள் வளர்ச்சிக்
கழகம் (டால்கோ) போன்றவற்றிற்கு மாற்றப்பட்டன. சாரா
விலை அடிப்படையாகக் கொண்ட தொழில்பிரிவுகள் கடிகாரங்
களைத் தயாரிக்கும் பிரிவுகள் எந்திரக் கருவிகள் பைப் பம்புகள்
தயாரிப்பு முதலியவை போன்ற புதிய தொழில் பிரிவுகளை
"டான்சி" தொடங்கியுள்ளது. தற்போது "டான்சி"யிடம்
அதன் நிர்வாக அமைப்பில் திட்டப் பணிகள் சிலவற்றுடன்
47 உற்பத்திப் பிரிவுகளும் 7 விற்பனை நிலையங்களும் உள்ளன.

6.3. "டான்சி"யின் தயாரிப்புப் பணிகளைப் பின்வருமாறு
விரிவாக வகைபடுத்தலாம் :—

1. தொழிற்சாலைக் கட்டிடங்கள், மின் நிலையங்கள் கட்டு
வதற்காகவும் ஏற்படுத்துவதற்கும் தேவையான எஃகு கட்டு
மானப் பொருட்களைத் தயாரித்தல்;

2. உயரழுத்த மின் அனுப்புகைக் கம்பித் தொடர் நுண்ணை
லைக் கோபுரங்கள் ஆகியவற்றுக்குரிய துத்தநாகப்பூச்சு பூசப்
பட்ட துணை பாகங்கள் தயாரித்தல் ;

3. மின்வாரியத்திற்குத் தேவையான எடை குறைவான
கட்டுமானப் பொருள்கள் உலோகத் தகடுகளினால் தயாரிக்கப்
பட்ட பொருள்கள் மின்கம்பித் தொடர் பயன்பொருட்கள
தயாரித்தல்.

4. நுண்கருவிகள், வார்ப்பு அச்சுகள் கைக்கருவிகளைக்
கொண்டு உருவாக்கும் பொருளை நிறுத்திப் பிடிப்பதற்குப் பயன்
படும் துணைச் சாதனம் (Jigs) பொருத்திகள் (Fixtures)
தயாரித்தல்.

5. பாதுகாப்புத் துறை, விண்வெளி ஆராய்ச்சி அமைப்புக்
களுக்குத் தேவையான உயர் தொழில்நுட்பத் துணைப் பாகங்
கள் தயாரித்தல்

## 4.13. விற்பனைப் பிரிவு :

இத்திட்டத்தின்கீழ் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO)
1991–92-ல் ரூ. 600 இலட்சம் என்கிற இலக்கை அடையத்
திட்டமிட்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சியில் பிரிவுகள் அவற்
றின் உற்பத்திப் பொருளைப் புதிய துறைகளுக்கு விற்பனை
செய்ய வழி வகுப்பதன் வாயிலாக, சிறு தொழில் பிரிவுகளுக்கு
அளிக்கப்படும் விற்பனை வசதிகளை விரிவு படுத்தக் கருதப்
பட்டுள்ளது. சிறு தொழில் பிரிவுகள், தமக்கு சிறு தொழில்
வளர்ச்சிக் கழகம் அளிக்கும் விற்பனை உதவியைப் பெற இயலும்
வகையில், சிறு தொழில் பிரிவுகள் சிறு தொழில் வளர்ச்சிக்
கழகத்திடம் பதிவு செய்து கொள்ளுமாறு ஆலோசனை கூறப்
பட்டுள்ளது. அரசு கோரும் ஒப்பந்தப் புள்ளிகளில் பெருமள
வில் பங்கேற்று ஒப்பந்தப் புள்ளிகளை எடுக்க இயலும் வகையில்
தரமான உற்பத்திப் பொருட்கள் என்று உறுதி செய்வதற்கும்
விற்பனையில் போட்டியிடும் நிலைக்கும் ஏதுவாக இந்தியத்
தரக் குறியீடுகளைப் (ஐ.எஸ்.ஐ. குறியீடு) பெறுமாறு சிறு
தொழில் பிரிவுகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

4.14. போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவைப்படும் சிறு
தொழில் பிரிவுகளின் தயாரிப்புப் பொருட்களை வழங்குவதற்
காக, கிடைக்கின்ற நிதி ஆதாரங்களைப் பெற இயலும்
பொருட்டு, சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தொழில் வணிகத்
துறை, ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்ட ''நிலைக்
குழுக்கள்'' அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் அமைக்
கப்பட்டுள்ளன. இந்த நிலைக் குழுக்கள் குறித்த காலத்திற்
கொருமுறை கூட்டங்கள் நடத்துவது குறித்து போக்குவரத்துக்
கழகங்களுடன் இணைந்து திட்டமிடுகின்றன.

4.15. சிறு தொழில் தயாரிப்புப் பொருட்களை அரசுத்
துறைகளுக்கு விற்பனை செய்வது குறித்த வாய்ப்பு பற்றி,
சிறு தொழில் பிரிவுகள் அறியும் பொருட்டு, சம்பந்தப்பட்ட
அரசுத் துறைகள், சிறு தொழில் பிரிவுகளை நடத்துவோர்
ஆகியோருடன் ''வாங்குவோர்–விற்போர் கூட்டங்கள்'' குறித்த
காலத்திற்கொருமுறை நடத்தப்படுகின்றன. இத்தகைய
''வாங்குவோர் - விற்போர் கூட்டங்கள்'' சிறு தொழில் பிரிவு
களுக்கும், அரசுத் துறைகளுக்குமிடையே கருத்தொற்றுமை
வளர்வதற்கும், பயனுள்ள நல்வாழ்வு ஏற்படுவதற்கும் பெரி
தும் உதவுகின்றன ; இவ்வாறாக, தேவைப்படுகின்ற விற்பனை
வசதிகளை அளிப்பதன் மூலம் சிறு தொழில் பிரிவுகளின் ஒளி
மயமான வளர்ச்சிக்கு உறுதியளிக்கப்படுகிறது.

4.16. பொருள் வழங்கல் - விற்பனை தலைமை இயக்ககம்
(DGST) கோருகின்ற ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்பது
குறித்த விவரங்களை சிறு தொழில் பிரிவுகள் நன்கு அறிய
செய்யும் பொருட்டு, சிறு தொழிற்பிரிவுகள், பொருள் வழங்





கல் - விற்பனை தலைமை இயக்கப் பணியாளர்கள் பங்கு
கொள்ளும் மாவட்ட அளவிலான கூட்டங்களை சிறு தொழில்
வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது.

4.17. சிறு தொழில் பிரிவுகளின் தயாரிப்புப் பொருட்கள்
அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்யப்படுவதை மேலும் அதி
கரிக்கும் பொருட்டு, விற்பனைப் பணிகள் பிரிவு அளவிற்கு
(மாவட்ட அளவிற்குப்) பரவலாக்கப்பட்டுள்ளன.

## 5.1. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் :

மாநில அளவில் முதன்மை நிதியுதவி நிறுவனமான, தமிழ்
நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) கம்பெனிகள், சட்டத்தின்
கீழ் ஒரு நிறுவனமாக 1949-ல் அமைக்கப்பட்டது. இக்கழகம்,
இந் நாட்டிலுள்ள ஏனைய அரசு நிதியுதவிக் கழகங்கள் போன்று
மாநில அரசு நிதியுதவிக் கழகமாகச் செயல்பட்டு வருகிறது.
இக் கழகம், புதிய தொழில்கள் தொடங்குவதற்கு மட்டுமின்றி,
தற்போதுள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும்
நவீனப் படுத்துவதற்கும் பல்திறப்படுத்துவதற்கும்
நிலம், கட்டிடம், தளவாடம், எந்திரம், சாதனம்
போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் ரூ. 90
இலட்சம் வரையில் குறித்த காலக் கடன் வழங்குகிறது. சிறிய,
மிகச் சிறிய தொழிற் பிரிவுகளுக்கும், பின் தங்கிய பகுதிகளில்
தொழிற் பிரிவுகளை அமைப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்
படுகிறது. இக் கழகம் அனுமதித்த மொத்தத் தொகையில்
90 சதவீதத்திற்கு மேல் சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்
பட்டது. ஒரு குடும்பத்தில முதன் முறையாகத் தொழிலைத்
தொடங்கும் தொழில் முனைவோர், தொழில் நுட்ப வல்லுநர்
கள், பெண் தொழில் முனைவோர், சமுதாயத்தில் நலிந்த
பிரிவினர் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதில் தற்போது
தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. ஆதி திராவிடர் பழங்
குடியினர் வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர் உடல்
ஊனமுற்றோர், முன்னாள் இராணுவ வீரர்கள் முதலானோருக்கு
பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் தொழில் தொடங்கும்
வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

5.2. இக்கழகம் செயற்படுத்தி வரும் திட்டங்கள் வருமாறு

1. சிறு தொழில் பிரிவுகள்.
2. நடுத்தர தொழில் பிரிவுகள்.
3. தொழில் நுட்ப வல்லுநர்கள்.
4. குறைந்த வட்டிக்கடன்:தொடக்க மூலதன நிதியுதவி.
5. மின் உற்பத்தி எந்திரங்கள்.

[1991 செப்டம்பர் 23

6. வார்ப்பட இரும்புக் குழாய்கள் குழாய் இணைப்புக்கள் தயாரித்தல்.

7. மேசை நாற்கால் போன்ற மரச் சாமான்கள் உள்ளலங் கார இணைட்புகள் தயாரித்தல்.

8. விட்டுப்பயன் அலுவலகப்பயன் மருத்துவமனைப் பயனுக்கான உருக்கு மேசை நாற்காலிகள் தயாரித்தல்.

9. வார்ப்பட விச்சுப் பொருள்கள் துணைப் பாகங்கள் தயாரித்தல்.

10. சாராவியை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புப் பொருள்கள் தாயரித்தல்.

11. எந்திரக் கருவிகள் எந்திரச் சாதனங்கள் பூட்டுகள் கடிகாரப் பாகங்கள் தயாரித்தல் போன்ற பணிகள்.

6.4. 1991-92-ல் இந் நிறுவனம் நல்ல சாதனை புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து கணிசமாக தேவைக் குறிப்பாணைகள் பெற்றதாலும் கணிசமான அளவிற்குத தேவையானவைகள் வரப் பெற்றுள்ளதாலும் மேற் சொன்ன வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உபரியாக உள்ள பணி யாளர்கள் அதிகாரிகள் ஆகியோரைக் குறைத்தல் இயலாத தொழிற் பிரிவுகளை மூடிவிடுதல் போன்ற அனைத்து வகையிலான முன்னேற்ற நடவடிக்கைத் திட்டத்தைச் (Turnaro- vind plan) செயல்படுதுவதன் மூலம் செலவைக்குறைக்கவும் எதிர் பார்க்கப்படுகிறது.

7.1. தமிழ்நாடு தோல் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் ''டால்கோ''.

தமிழ்நாடு தோல் பொருட்கள் வளர்ச்சிக் கழகம் (டால்கோ) ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 21-3-1983-ல் அரசு நிறுவனமாக அமைக்கப்பட்டது. நாளதுவரை அரசின் சமபங்கு மூலதனம் ரூ. 250 இலட்சமாகும்.

இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

1. தோல் பொருட்கள் தயாரிப்பு தொழில் வளர்ச்சிக்கு உதவுதல்.

2. கச்சாப் பொருட்கள் இரசாயனப் பொருட்கள் முதலிய வற்றை நியாயவிலைக்கு வழங்குவதன்மூலம் சிறு அளவில் தோல் பதனிடுவோருக்கு உதவுதல்.



1991 செப்டம்பர் 23]

3. காலணிகள் தோல் பொருட்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு அங்காடி வசதிகள் செய்து கொடுப்பதின் மூலம் அவர்களுக்கு உதவுதல்.

4. காலணிகள் ஏனைய தோல் பொருட்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் தேர்ச்சியையும் திறமையையும் உயர்த்துவதற்கு உதவுதல்.

5. தோல் பொருட்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத் தல்.

6. தமிழ்நாட்டின் மண் வளத்தையும், சுற்றுச் சூழலையும் கெடுக்கின்ற தோல் பதனிடு தொழில் பிரிவுகளின் கழிவுநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்டதற்காகப் பொதுவான தோல் பதனீட்டுக் கழிவுநீர் சுத்திகரிப்பாலைகளை ஏற்படுத்துதல்;

மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுடன் ''டான்சி''யிட மிருந்து 4 தோல் பொருட்கள் தயாரிபபு தொழிற்பிரிவுகளையும் ''சிட்கோ''விடமிருந்து பாதவரததிலுள்ள தொழில்பேட்டை ஒன்றையும் இயங்கி வரும் நிறுவனங்களாக ''டால்கோ'' நிறு வனம் 1986-ல் எடுத்துக் கொண்டுள்ளது.

வாணியம்பாடி, வாணியம்பாடி (தொகுதி), இராணிப் பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சிராப் பள்ளி ஆகிய 7 இடங்களில் மொத்தம் ரூ. 15.76 கோடி செலவில் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் ஏழு நிறுவும் திட்டப் பணிகளை ''டால்கோ'' எடுத்துக் கொண்டுள்ளது; மேலும் மாநில மத்திய அரசுகளின பங்குத் தொகையாக ரூ. 7.69 கோடி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசக் காலணி வழங்கும் அரசுத் திட்டத்தின் கீழ் காலணிகள் தயாரித்து வழங்கும் பணி ''டால்கோ'' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது; 1987-88 ஆம் ஆண்டு முதல் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் முக்கிய முகவரமைப் பாக ''டால்கோ'' நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக ''டால்கோ'' நிறுவனம் காலணித் தயாரிப்புப் பணியிலுள்ள பலருக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

8. செயலாக்க ஆய்வு :

1990-91 ஆம் ஆண்டில் மேற்சொன்ன முகவரமைப்புகள் மூலம் செயல்டடுத்தப்பட்ட பல்வேறு திட்டப்பணிகள் அவற்றின் சாதனைகள் ஆகியவற்றின் விவரங்கள் சாதனை ஆய்வு அறிக்கை யில் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

9. முடிவுரை :

மேற்சொன்னவற்றிலிருந்து சிறிய, மிகச்சிறிய, அளவிலான தொழில்களுக்கு உதவுவதற்காக இந்த ஆண்டில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அறியலாம். சிறு தொழில் முனைவோருடன் நடத்தப்பட்ட பல்வேறு கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அவற்றின் காரணமாக தொழில் வளர்ச்சிக்கான தேவைகள் நிறைவுபெற்றுள்ளன என்பதையும் இவை காட்டுகின்றன.

இவ்வாறு தொழில் மயமாக்கும் முயற்சியில் இந்நாட்டிலேயே தமிழ்நாடு மாநிலம் தலையாய இடத்தை அடைய வேண்டுமென்ற நோக்குடன் அரசின் பல்வேறு நிலைகளிலும் அயராத விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

158327